# Panchatantram

(In Tamil Prose)

By Vidwan Thandavaraya Mudaliar



The General Supplies Co.
Mylapore, Madras.



# பஞ்சதந்திரம்

விந்துவான் தாண்டவராய முதலியார்

செய்தது

சென்னை, பச்சையப்பன் [illegible] ஹைஸ்கூல் முதல்

[illegible] ஆ. ஸ்ரீ கஸ்தூரி ரங்கய்யர்,

பி. ஏ., எல். டி., [illegible]

[illegible] முதலியவைகளோடு [illegible]

[illegible]

[illegible]

MAHAMAHOPADHYAYA
Dr. U. V. S. IYER LIBRARY,
BESANT NAGAR, MADRAS 90.

[illegible] கம்பெனி,
மயிலாப்பூர், மதராஸ்.
1913.

காப்பிரைட்]

விலை அணு 5.

COMMERCIAL PRESS, MADRAS, S E

# இப்பதிப்பின் குறிப்பு

இப்பதிப்பில் சிற்சில ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

1. ஐந்தாம் தந்திரம் நடைக்கடினம் குறைத்துப் பதிப்பிக்கப்பட்டிருந்த பதிப்பிலிருந்து எடுத்து அமைக்கப்பட்டுள்ளது.

2. இதில் நீளமாக அமைந்திருந்த வாக்கியங்கள் சிறு வாக்கியங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன.

3. இக்கால கற்பனைக் கதைகள் அச்சிடுவதில் ஏற்பட்டிருக்கும் ஒழுங்கின்படி மேற்கோள் தொகுதிகள் தனித்தனியாகவும், பேசுபவர் பெயர் தடித்த எழுத்திலும் ஒவ்வொருவர் வார்த்தைகளும் தனித்தனித் தொகுதியாகவும் அமைக்கப்பட்டுள்ளது.

4. ஒற்றைப் படையான பக்கங்களில் அடங்கிய முக்கிய விஷயங்கள் அவ்வப் பக்கங்களின் தலைப்பில் காட்டப்பட்டிருக்கின்றன.

5. விஷயபாகங்கள், கதைகள், கிளைக்கதைகள் ஆகிய இவைகளுக்குப் பொருத்தமான பெயர்களும் தகுந்த எண்களும் அமைக்கப்பட்டு இவைகளின் ஸம்பந்தத்தை நன்றாகக் காட்டியிருக்கிறது. கதைகள் கருத்துக்களையும், பழமொழிகளையும் தடித்த எழுத்தில் அமைக்கப்பட்டுள்ளது.

6. பஞ்சதந்திரப் பெயரகராதி, விஷய அகராதி, அரும்பதவிளக்க அகராதி, விவரமான அட்டவணை, ஆகிய இவைகள் வாசிப்போர் நன்மைக்காக அமைக்கப்பட்டிருக்கின்றன.

7. பஞ்சதந்திர வசன நூலாசிரியர் சரித்திரம் சுருக்கமாக அமைக்கப்பட்டிருக்கிறது.

8. இதில் இரண்டு மஹாபாரதக் கதையும் அமைந்து கிடக்கிறது. அவைகளுக்கு முன் அட்டவணையில் நட்சத்திரக் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

9. இதில் தந்திரம் ஒன்றுக்கு ஒரு படமும், முகப்புப் படம் ஒன்றும் ஆக ஆறு சித்திரப்படங்களும் அமைக்கப்பட்டிருக்கின்றன.

# விவர அட்டவணை


இந்நூலாசிரியர் வரலாறு (1)

பஞ்சதந்திரம் வரலாறு (1-3)

முதலாவது: மித்திரபேதம் (5-49.)

I. *சுருக்கம்* 5

II. *சிங்கம் எருதின் ஒலிகேட்டு மயங்கியது* (5-7)

III. *கரடக தமனக ஸமவாதம்* (7-12)

(1) **குரங்கு ஆப்பைப் பிடுங்கின கதை** 7
*(கரடகன் தமனகனுக்குச் சொல்வது)*

IV. *சிங்க தமனக ஸமவாதம்* (12-14)

(1) **தோலுங் கோலும் வெறுட்டிய கதை** 14
*(தமனகன் சிங்கத்திற்குச் சொல்வது)*

V. *சிங்கமும் எருதும் நட்பாயிருத்தல்* (14-15)

VI. *கரடக தமனகர் சதியாலோசனை* (15-24)

(1) **நம்பி மோசம்போன கதை** *அல்லது*
**ஸந்யாஸியும் ஆஷாடபூதியும்** 16
*(தமனகன் கரடகனுக்குச் சொல்வது)*

(2) **காகம் தந்திரத்தால் பாம்பைக் கொன்ற கதை** 19-22
*(தமனகன் கரடகனுக்கு சொல்வது)*

(i) **நண்டு கொக்கை ஆசைகாட்டிக் கொன்ற கதை** 19
*(நரி காகத்திற்குச் சொல்வது)*

(3) **முயல் சிங்கத்தைக் கொன்ற கதை** 22
*(தமனகன் கரடகனுக்குச் சொல்வது)*

VII. தமனகன் கோட்சொல்வது (24-28)

(1) சீலைப்பேன் மூட்டைப்பூச்சியால் மாண்டகதை 27

(தமனகன் சிங்கத்திற்குச் சொல்வது)

VIII. தமனகன் சண்டை மூட்டல் (28-40)

(1) காகம் முதலானவை ஒட்டகத்தை வஞ்சனையால் கொன்ற கதை 30

(ஸஞ்ஜீவகன் தமனகனுக்குச் சொல்வது)

(2) சிட்டுக்குருவியால் ஸமுத்ரம் அவமானம் அடைந்த கதை 34-39

(தமனகன் ஸஞ்ஜீவகனுக்குச் சொல்வது)

(i) ஆமை பிடிப்புவிட்டு மாண்டகதை 35

(பெண்சிட்டு ஆண்சிட்டுக்குச் சொல்வது)

(ii) வந்தபின் காப்போன் கதை 37

(பெண்சிட்டு ஆண்சிட்டுக்குச் சொல்வது)

IX காடகன் புத்திகூறத் தமனகன் துக்கித்தது (40-48)

(1) மூடர்களுக்குப் புத்திகூறியவன் மாண்டகதை 41

(கரடகன் தமனகனுக்குச் சொல்வது)

(2) துஷ்டபுத்தி திண்டாடிய கதை 42-46

(கரடகன் தமனகனுக்குச் சொல்வது)

(i) தீமையால் தீமை விளைந்த கதை 44

(பிதா துஷ்டபுத்திக்குச் சொல்வது)

(3) இரும்பை எலிதின்ற கதை 46

(கரடகன் தமனகனுக்குச் சொல்வது)

X. தமனகன் சிங்கத்தைத் தேற்றியது (48-49)

## இரண்டாவது: ஸுஹ்ருல்லாபம் (50-76.)

I. சுருக்கம் 50

II. காகம் புறாக்களை மூலமாக எலியைக் காணுதல் (50-58)

(1) பிராம்மணன் காப்புக்கு ஆசைப்பட்டு இறந்த கதை 51

(சித்திரக்ரீவன் புறாக்களுக்குச் சொல்வது)

III. காகம் எலியை சிநேகித்தல் (58-67)

(1) மான் நரியின் சிநேகத்தால் வருந்திய கதை (58-65)

(ஹிரண்யகன் லகுபதனனுக்குச் சொல்வது)

(1) பூனைக்கு இடங்கொடுத்துக் கழுகு மாண்ட கதை 60

(ஸுபுத்தி மானுக்குச் சொல்வது)

IV. காகமும், எலியும், ஆமையும் மானும் நட்பாக இருத்தல் (67-73)

ஹிரண்யகன் வரலாறு 68

(ஹிரண்யகன் மந்தரனுக்குச் சொல்வது)

V. மானுக்கும் ஆமைக்கும் வந்த ஆபத்தைத் தோழமை நீக்கல் (73-76)

மானின் வரலாறு 73

(சித்ராங்கன் தோழர்களுக்குச் சொல்வது)

## மூன்றாவது: ஸந்திவிக்ரஹம். (77-118)

I. சுருக்கம் 77

II. காகங்களுக்கு வந்த ஆபத்து மந்திராலோசனை 77-83

III. காக்கைகளுக்கும் கோட்டான்களுக்கும் பகைவந்த கதை 83-94

(சிரஞ்ஜீவி மேகவர்ணனுக்குச் சொல்வது)
(1) பெரியோர் பெயரால் ஸுகம் வந்த கதை 85
(காகம் பறவைகளுக்குச் சொல்வது)
(2) துஷ்ட ஸஹவாஸத்தால் ப்ராணஸங்கடம் வந்த கதை 89
(காகம் பறவைகளுக்குச் சொல்வது)
IV. மந்திராலோசனை தொடர்ச்சி (94-97)
(1) வஞ்சனையால் காரியம் ஸாதித்த கதை 95
(சிரஞ்ஜீவி மேகவர்ணனுக்குச் சொல்வது)
V. கோட்டான்கள் காக மந்திரியைச் சேர்த்துக்கொள்ளுதல் (97-110)
(1). எதிரிகள் ஹிதம் செய்த கதை 100
(கொடுங்கண்ணன் உருமர்த்தனுக்குச் சொல்வது)
(2). ரஹஸ்யம் வெளிப்படக் கேடுவிளைந்தகதை 103
(கொள்ளிக்கண்ணன் உருமர்த்தனுக்குச் சொல்வது)
(3). விரோதிக்கும் விருந்திட்ட கதை 106
(பிரகாரநாசன் உருமர்த்தனனுக்குச் சொல்வது)
VI புத்திமானை குரூரநாசன் விலகிப் போனது (110-113)
(1) தீர ஆலோசியாததால் மூடர்களானகதை 110
(குரூரநாசன் உருமர்த்தனனுக்குச் சொல்வது)
(2) முன்யோசனையால் ஸுகம் வந்த கதை 112
(குரூரநாசன் உருமர்த்தனனுக்குச் சொல்வது)
VII. காகமந்திரி கோட்டான்களை சுட்டுக் கொன்றது (113-114)
VIII. காகங்கள் ஸுகமாக வாழத்தொடங்கியது (114-118)
(1) பாம்பு தவளைகளை அடுத்துக் கேடுத்தகதை 115
(சிரஞ்ஜீவி மேகவர்ணனுக்குச் சொல்வது)

## நான்காவது: லப்தஹானி (119-147.)

I. *சுருக்கம்* 119

II. *குரங்கு முதலையிடமிருந்து தந்திரத்தால் பிழைததது* (119-123)

III. *முதலை வானரத்தை வஞ்சிக்க யத்தனிப்பது* (123-139)

(1) தவளை பசித்த பாம்பை நம்பாதிருந்த கதை 124
*(ஸுமுகன் முதலைக்குச் சொல்வது)*

(2) கழுதை மூடத்தனத்தால் மாண்ட கதை 128
*(ஸுமுகன் முதலைக்குச் சொல்வது)*

(3) உண்மையை வெளியிடடுப் பாடுபட்டகதை (130-133)
*(முதலை ஸுமுகனுக்குச் சொல்வது)*

(i) நரிக்குட்டி துள்ளிய கதை 132
*(அரசன் உதிஷ்டிரனுக்குச் சொல்வது)*

(4) ஸ்திரீயின் மாயம் வெளிவந்தகதை 133
*(ஸுமுகன் முதலைக்குச் சொல்வது)*

(5) ஸ்திரீயால் அவமானம் விளைந்தகதை 137
*(ஸுமுகன் முதலைக்குச் சொல்வது)*

(6) கழுதை புலித்தோல் போர்த்த கதை 138
*(ஸுமுகன் முதலைக்குச் சொல்வது)*

IV. *முதலைக்கு வந்த துக்கங்கள்* (139-147)

(1) சோரனை நம்பிப் புருஷனைக் கைவிட்டகதை 140
*(ஸுமுகன் முதலைக்குச் சொல்வது)*

(2) மூடனுக்கு உபதேசித்த குருவிவருந்தியகதை 143
*(ஸுமுகன் முதலைக்குச் சொல்வது)*

(3) ஆளுக்குத்தக்கபடி நடந்து காரியம் முடித்த கதை 144
*(ஸுமுகன் முதலைக்குச் சொல்வது)*

(4) பரதேசம்போய் பாடுபட்ட கதை 146

(ஸுமுகன் முதலைக்குச் சொல்வது)

ஐந்தாவது: அஸம்பிரேக்ஷிய காரித்வம் (148-174)

I சருக்கம் (148)

II அம்பட்டன் பிரவிசாரியாது செய்தகால் பட்ட பாடு (148-150)

III அரசன் உபதேசம் (151-152)

(1) ஆத்திரக்காரி அலமந்த கதை 151

(அரசன் ஜனங்களுக்குச் சொல்வது)

IV ஆத்திரக்காரி செய்த உபஹாஸம் (152-174)

(1) பேராசைக்காரன் தலையிற் சக்கரம் சுழன்ற கதை (154-174)

(மனைவி வேதியனானவனுக்குச் சொல்வது)

(i) கற்றறிமூடர் கதை 156

(ஸுவர்ணஸித்தி சக்கரத்தலையனுக்குச் சொல்வது)

(ii) மிருகத்தை அறிவு விதியால் திண்டாடிய கதை 158

(சக்கரத்தலையன் ஸுவர்ணஸித்திக்குச் சொல்வது)

(iii) ஹிதோபதேசம் மீறித் திண்டாடிய கதை 159

(ஸுவர்ணஸித்தி சக்கரத்தலையனுக்குச் சொல்வது)

(iv) அதிர்ஷ்டக்குறைவால் மாண்ட கதை 160

(சக்கரத்தலையன் ஸுவர்ணஸித்திக்குச் சொல்வது)

(v) வீண் மனோராஜ்ய விஷயகதை 162

(சக்கரத்தலையன் ஸுவர்ணஸித்திக்குச் சொல்வது)

(vi) பேராசை பெருஙகேடு விளைததகதை 163
(ஸுவாணஸிததி சககாததலையனுககுச சொலவது)

(vii) ஒருவன ஆபதது வேறு ஒருவனைப பறறியகதை 168
(ஸுவாணஸிததி சககாததலையனுககுச சொலவது)

(viii) விதிபால தீமை நலலவையான கதை (170-172)
(சககாததலையன ஸுவாணஸிததிககுச சொலவது)

[illegible] 170
(சோதிடன அரசனுககுச சொலவது)

(ix) வழிததுணை பயனபட்ட கதை 173
(சககாததலையன ஸுவாணஸிததிககுச சொலவது)

பெயரகராதி .. ... 1
விஷய அகராதி .. ... 4
அரும்பதவிளக்க அகராதி... ... 7

# சித்திரப்படங்கள் அட்டவணை


1. குரங்கு ஆப்பைப் பிடுங்குவது—முகப்புப்படம்

2. எருதும் சிங்கமும் நரியின் ஸஹாயத்தால் ஸந்திப்பது 5

3. புறாக்கள் வலையைத் தூக்கிக்கொண்டு பறப்பது 50

4. காகங்களைக் கோட்டான்கள் தாக்கல் ... 77

5. முதலை குரங்கை ஈரலெடுத்துவரக் கொண்டு
வருவது ... ... ... 119

6. பார்ப்பினி கீரியை தண்ணீர்க்குடத்தால்
கொல்வது ... ... ... 148

# இந்நூலாசிரியர் சரித்திரம்

இந்தப் பஞ்சதந்திர வசனத்தை எழுதியவர் வித்வான் தாண்டவராய முதலியார் என்பவர். இவர் ஸுமார் 100 வருஷங்களுக்கு முன்பாக புதுச்சேரிக் கடுத்த வில்லியம்பாக்கம் என்னும் ஊரில் பிறந்தவர். இவர் இளமைப் பருவத்திலேயே இவர் தகப்பனார் கந்தஸாமி முதலியார் இறந்து விட்ட படியால் இவர் பொன் விளைந்த களத்தூரில் இவர் மாமன் குமாரஸாமி உபாத்தியாயரிடம் வளர்ந்து கல்வி பயின்று வந்தார். இவர் அக்கம் பக்கத்திலுள்ள அநேக வித்வான்களை அடுத்துத் தமது கல்வியை விசாலப்படுத்திக் கொண்டார். இவருக்கு தமிழன்றி வடமொழி தெலுங்கு கன்னடம் ஹிந்துஸ்தானி, மஹாராஷ்டிரம், ஆங்கலம் முதலிய பாஷைகளிலும் ஞானம் ஏற்பட்டது.

இவர் கல்வியில் தேர்ந்ததும் ராஜதானி ராஜாங்க கலாசாலையில் தமிழ் தலைமைப் பண்டிதராக அமர்ந்து கொஞ்சகாலம் வேலை பார்த்து வந்து, பின்னர் செங்கல் பட்டில் ஸ்வதேசநியாயாதிபதி வேலையும் பார்த்தார். இவர் செய்த மற்றைய நூல்கள் திருத்தணிகைமாலை, திருப்போரூர் திருப்பதிகம், கதாமஞ்சரி, இலக்கண விஞவிடை முதலியன. இவர் நூல்களில் முதலிரண்டி லிருந்தும், இவர் பெயரி லிருந்தும் இவர் சைவர் என் பதுவெளியாகும். இவர் சில பழைய நூல்களையும் பரிசோதித்துப் பதிப்பித்தார். அவைகளுள்சில: திருக்குறள் பரிமேலழகர் உறை, நாலடியார், சீவக சிந்தாமணி, தொல்காப்பியம் முதலியவைகளே. இவர் அகப்

பொருளைப் பற்றிய சில நூல்களும் சில தனிப் பாடல்களும் செய்தனராம். அவைகள் இப்பொழுதும் சிற்சில விடங்களில் படிக்கப்பட்டு வருகின்றனவாம். இவர் வேலை பார்த்து வந்த காலத்தில் சிலரோடு வாதப்போர் முதலிய கல்வித்திறன் வெளிப்படும் காரியங்களும் செய்தனராம்.

இவர் இந்தப் பஞ்சதந்திர வசனம் எழுதி வெளியிட்ட விஷயத்தைத் தமது நூல் பாயிரத்தில் பின்வருமாறு தாமே வெளியிட்டிருக்கின்றார். "தமிழ்கற்கப் புக்கோர் தமிழில் எழுதி வழங்குகின்ற பஞ்சதந்திரக் கதையை கற்கப் புகுந்தால் குளிக்கப்புகக்கோச் சேற்றைப் பூசிக்கொண்டாற்போல வழுக்களையே கற்றுத் தடுமாற்ற முறுதலால், சென்னைச் சங்கத்துத் தலைவராகிய ம-ள-ள-ஸ்ரீ ரிச்சர்ட்டு கிளார்க்குத் துரையவர்கள் உத்தரவினால், மஹாராஷ்டிரத்தில் அச்சுப்பதித்திருக்கின்ற பஞ்சதந்திர கதையைத் தமிழில் மொழிபெயர்த்துச், சொற்பொருளழகுறப் பல விடத்துச் சில கூட்டியும், கற்போர் உலக நடையும் சில செய்யுள் நடையுமான தமிழ் நன்குணரவும், சுவையுற இம்மொழிபெயர்ப்புப் பஞ்சதந்திரக்கதை சாலிவாஹன சக வருஷம், 1746 மேல் செல்லாநின்ற பார்த்திவ வருஷத்துக்குச் சரியான கிறிஸ்து 1825-ம் வருஷம் செய்து முற்றுப் பெற்றது." இதன்பின் ஒருவருஷம் கழித்து இந்நூல் பதிப்பிக்கப்பட்டது. தமது குழந்தைகளும் தம்மைச் சேர்ந்தவர்களும் நல்ல தமிழ் நடை பயின்று தேறுவதற்காகவே இவ் வித்வான் இந்த பஞ்சதந்திரக் கதையை ஒழுங்காக எளிய நடையில் தொடங்கி கடின நடையில் முடித்தனர் என்றும் சிலர் கூறுவர்.

MAHAMAHOPADHYAYA
DR. U. V. S. IYER LIBRARY,
BESANT NAGAR, MADRAS-90.



# பஞ்சதந்திரம்

## வரலாறு

கல்வியிலும் செல்வத்திலும் குறைவில்லாதவர்களுக்கு உறைவிடமான பாடலிபுரம் என்னும் ஒரு பட்டணத்தில் ஸகல ஸுகுணங்களோடுங்கூடின ஸுதரிசனன் என்னும் அரசனொருவன் இருந்தான். தன்பிள்ளைகள்படியாமல் மூடர்களாயிருப்பதைக்கண்டு, அவன் வெகு வியசனத்தோடு ஆலோசிக்கத் தொடங்கினான்.

கல்வியும் நல்ல குணமும் இல்லாத பிள்ளைகளிருந்தாவதென்ன? பால்கொடாத எருமைகளைக் காப்பாற்றினால் பலனுண்டா? வேத சாஸ்திரம் அறிந்தவனாய் ஒரே பிள்ளை இருந்தாலும் அவனாலே குடும்பமெல்லாம் ஸுகமடையும். இப்படிக்கில்லாத பிள்ளைகள் கர்ப்பத்திலே அழிந்தானாலும், அழியாவிட்டாற் பிறந்தவுடனே இறந்தானாலும் போகிறது நல்லது. குலத்தில் அயோக்கியமான பிள்ளை இருக்கலாகாது. ஜன்மாந்தர புண்ணியத்தினாலே, இம்மையிலும் மறுமையிலும் ஸுகங்கொடுக்கிற புத்திரன் பிறக்கிறான். பாபத்தினால் குலத்

தைக் கெடுக்கிற புத்திரன் பிறக்கிறான். மேலும், இந்தப்பிள்ளையைப் பெற்றவர்கள் என்ன தவம் செய் தார்களோ என்று கண்டோர் சொல்லும்படி நடக்கிறவ னல்லவோ பிள்ளை, என்று தனக்குள்ளே ஆலோசித் துப் பெருமூச்சுவிட்டு, பின்பு சபையைப்பார்த்துச் சொல்லுகிறான்.

"இளமையும் செல்வமும் யௌவனமும் அறிவில்லா மையுமாகிய இந்தநான்கினுள் ஒன்றொன்றுமேகேட்டுக் கெல்லாம் வேறதுவாகும். இந்த நான்கும் ஒருவனிடத்தி லிருந்தால் அவனென்ன பாடுபடான்? துன்மார்க்கர் களாயிருக்கிற என் பிள்ளைகளுக்கு நீதிசாஸ்திரோப தேசத்தினால் எந்த மகாபுருஷன் மறுஜனனம் வரப் பண்ணுவான்?" என்றார்.

அப்போது ஸகல நீதிசாஸ்திரங்களிலும் வல்லவ னாகிய ஸோமசர்மா என்பவனெழுந்து, "இவர்களுக்கு ஸமானமான அறிவையுடையவர்கள் இவ்வுலகத்தி லில்லை என்று சொல்லும்படி நான் ஆறுமாதத்தில் செய்யவல்லேன். அதுவரையிலும், நீர் நாளை எண்ணிக் கொண்டிரும்" என்று சபதம்பண்ணினான்.

அதைக்கேட்டு, நடுக்கடலில் திசைதப்பி மயங் கும் மாலுமிக்கு ஒரு துறை தோற்றினாற்போல, அர சன் மிகவும் மனமகிழ்ந்து அவனுக்கு உபசாரஞ் செய்து, தன்னுடைய புத்திரர்களை அவன் வசத்தில் ஒப்பிவித்தான். ஸோமசர்மா உடனே அந்தப்பிள்ளை களைத் தன் வீட்டுக்கு அழைத்துக்கொண்டுபோய்க் கருப்பஞ்சாற்றைக் காய்ச்சி ஒரு சர்க்கரைக்கட்டியாகத் திரட்டினாற்போல, நீதிசாஸ்திரங்களைப் பஞ்சதந்திர

கதையாகக் கற்பித்து ராஜகுமாரர்களுக்குச் சொல்லத் தொடங்கினன்.

ஸோமசர்மா.—" ஓ ராஜ குமாரர்களே, உங்களுக்கு வேடிக்கையாகச் சில கதைகள் சொல்லுகிறேன், கேளுங்கள்" என்று சொல்ல, அவர்கள் " அதென்ன கதைகள்" என்றார்கள். அதற்கு அவன் " பஞ்சதந்திர கதை" என்று சொன்னன். அவர்கள் "பஞ்சதந்திரமென்பதென்ன ? தெரியச்சொல்லவேண்டும்" என்றார்கள். அதற்கவன், "அவை மித்திரபேதம், ஸுஹிர்ல்லாபம், ஸந்திவிக்கிரகம் ,அர்த்தநாசம் அல்லது லப்தஹானி, அசம்பிரேக்ஷிய காரித்துவம் என்னுமைந்தாம். அவற்றுள் :—

மித்திரபேதமாவது : சிநேகத்தைக் கெடுத்துப் பகையுண்டாக்கல் ;


ஸுஹிர்ல்லாபமாவது: தங்களுக்கு ஸமானமானவர்களோடுகூடிப் பகையில்லாமல் வாழ்ந்திருத்தல் ;

ஸந்திவிக்கிரகமாவது : பகைவரை யடுத்து உறவு செய்து வெல்லுதல் ;

அர்த்தநாசமாவது: தன் கையிற் கிடைத்த பொருளை அழித்தல் ;

அஸம்பிரேக்ஷியகாரித்துவமாவது : காரியத்தைத் தேறவிசாரியாமற் செய்தல்"

என்று சொன்னன். ராஜ குமாரர்கள், " ஐயா, அந்தக் கதைகளை எங்களுக்கு விளங்கச் சொல்லவேண்டும்" என்று கேட்க, " உங்களுக்கு மங்களமுண்டாகுக" என்றாசீர்வதித்து ஸோமசர்மா, பின்வருங்கதைகளை சொல்லத் தொடங்கினன்.


THE GENERAL SUPPLIES CO.
MADRAS
MYLAPORE

எருதும் சிங்கமும் நரியின் ஸஹாயத்தால் ஸந்திப்பது.

—15-ம் பக்கம் பார்க்க.

MAHAMAHOPADHYAYA
DR. U. V. S. IYER LIBRARY.
BESANT NAGAR, MADRAS-90,



# பஞ்சதந்திரம்

முதலாவது

## மித்திர பேதம் அல்லது நட்புப் பிரித்தல்

### I சுருக்கம்

ஒரு காட்டில் ஒரு சிங்கமும் எருதுங்கூடி மிகவும் ஒற்றுமையாக வாழ்ந்திருந்தன. அந்தச் சிநேகத்தைக் கோட்சொல்லுதலும் உலோபகுணமுமுள்ள ஒரு நரிவந்து கெடுத்தது" என்று ஸோமசர்மா சொல்ல, ராஜகுமாரர்கள் "அதெப்படி" என, அவன் சொல்லத் தொடங்கினன்.

### II சிங்கம் எருதின் ஒலிகேட்டு மயங்கியது

"தென்னாட்டிலே மகிழாருப்பிய மென்னும் பட்டணத்தில் வர்த்தமானன் என்றொரு வர்த்தகனிருந்தான். அவனுக்கு வெகுபணமிருந்தும் இன்னும் ஸம்பாதிக்க வேண்டும் என்கிற ஆசையினால் பின்வருமாறு ஆலோசிக்கலானான்.

யாதொன்று ஸம்பாதிப்பது அருமையோ அதை ஸம்பாதிக்கவேண்டும். ஸம்பாதித்ததைக் காப்பாற்றவேண்டும்; காப்பாற்றினதை விருத்திபண்ணவேண்டும். விருத்தி பண்ணினதைத் தானுமனுபவித்து தக்கவர்களுக்குங்கொடுத்துச் செலவழிக்கவேண்டும். காப்பாற்றாத திரவியம் நாசமாகும், விருத்திபண்ணாதது குறையும்,



எருதும் சிங்கமும் நரியின் ஸஹாயத்தால் ஸந்திப்பது.

—15-ம் பக்கம் பார்க்க

MAHAMAHOPADHYAYA
DR. U. V. S. IYER LIBRARY
BESANT NAGAR, MADRAS-90,

உ

# பஞ்சதந்திரம்

முதலாவது

## மித்திர பேதம் அல்லது நட்புப் பிரித்தல்

### I சுருக்கம்

ரு காட்டில் ஒரு சிங்கமும் எருதுங்கூடி மிக ம் ஒற்றுமையாக வாழ்ந்திருந்தன. அந்தச் சிநேகத் தைக் கோட்சொல்லுதலும் உலோபகுணமுமுள்ள ஒரு நரிவந்து கெடுத்தது" என்று ஸோமசர்மா சொல்ல, ராஜகுமாரர்கள் "அதெப்படி" என, அவன் சொல்லத் தொடங்கினான்.

### II சிங்கம் எருதின் ஒலிகேட்டு மயங்கியது

"தென்னாட்டிலே மகிழாருப்பியமென்னும் பட் டணத்தில் வர்த்தமானன் என்றொரு வர்த்தகனிருந் தான். அவனுக்கு வெகுபணமிருந்தும் இன்னும் ஸம்பாதிக்க வேண்டும் என்கிற ஆசையினால் பின்வரு மாறு ஆலோசிக்கலானான்.

யாதொன்று ஸம்பாதிப்பது அருமையோ அதை ஸம்பாதிக்கவேண்டும். ஸம்பாதித்ததைக் காப்பாற்ற வேண்டும்; காப்பாற்றினதை விருத்திபண்ணவேண்டும். விருத்தி பண்ணினதைத் தானுமனுபவித்து தக்கவர் களுக்குங்கொடுத்துச் செலவழிக்கவேண்டும். காப்பாற் றாத திரவியம் நாசமாகும், விருத்திபண்ணாதது குறையும்,

தானுமனுபவித்து ஸத்பாத்திரத்திலுஞ் செலவழியாதது வீணுகுமெனச் சாஸ்திர மிருக்கிறது. மேலும் இன்பமும் புண்ணியமும் கீர்த்தியும் மனிதருக்குள்ளே பெருமையும் உறவும் நினைத்தது முடித்தலும் யாருக்குண்டு? திரளாகப் பணங்குவித்த வர்களுக்கே உண்டு; இல்லாதவர்கள் உலகத்திலே நடைப்பிண மாவார்கள். ஆகையினுல், மேன்மேலும் ஸம்பாதிப்பதே போக்கியமென்று ஆலோசித்து, தன்னிடத்திலிருந்த சாக்குகளை வண்டியிலேற்றி, அதில் ஸஞ்ஜீவகன், நந்தகனென்னும் பெயரையுடைய இரண்டெருதுகளைப் பூட்டி நடத்திக்கொண்டு தேசாந்திரம் போனுன்.

போகும்போது ஒருநாள் நெருங்கிய காட்டிலே மிகுந்த பாரத்தினுல் ஸஞ்ஜீவகனென்ற எருது காலி டறிவிழுந்து நொண்டியாயிற்று. அப்போது வர்த்தமானன் அந்த எருதுக்குப்பதிலாக வேறோர் எருதை வண்டியிற்கட்டி ஓட்டிக்கொண்டு அவ்வெருதுக்கு ஒ ராளைக் காவல் வைத்துப்போனுன். பிறகு அந்த ஸேவகன் இரண்டொரு நாட்கழித்து வர்த்தகனிடத்துப் போய் "அந்த எருது செத்துப் போயிற்று" என்று பொய்சொன்னுன்.

காட்டில் விடப்பட்ட எருதோ, ஆயுஸுபலத்தினுற் பிழைத்துப் புல்முதலிய மேய்ச்சலாலே மிகவும் பருத்துக் கொழுத்து ஒடிந்தகாலுங்கூடி அந்தக் காட்டிலே யதேச்சையாகத் திரிந்துகொண்டிருந்தது.

அப்படியிருக்கையில், ராஜ்யபட்டாபிஷேகச் சடங்குகளில்லாமல் காட்டில் ஸஞ்சரிக்கிற பிராணிகளுக்கெல்லாம் தன்வல்லமையினுல் இராஜத்துவத்தை அடைந்

திருந்த பிங்களன் என்ற ஒரு சிங்கமானது, தன் பராக்கிரமத்தாற் ஸம்பாதிக்கப்பட்ட ராஜ்யத்தை ஸுகமாக அனுபவித்துக் கொண்டிருக்கையில் ஒருநாள் தாகமெடுத்து தண்ணீர் குடிக்க யமுனை ஆற்றங்கரைக்குப் போகும் போது அங்கே திடீரென்று என்றைக்கும் கேட்டறியாத பேரிடிமுழக்கம் போலும் அந்த ரிஷபம் முக்காரம் போட்ட தொனியைக் கேட்டுத் திடுக்கிட்டு 'இதேது புதிதாயிருக்கிறது' என்று பயந்து நடுநடுங்கித் தண்ணீர் குடியாமல் சும்மா அசைவற நின்றது.

## III கரடக தமனக ஸம்வாதம்.

அப்போது அவ்விடத்திலிருந்த சிங்கத்தினுடைய பிரதானமந்திரி குமாரர்களாகிய கரடகன், தமனகன் என்ற நரிகளிரண்டும் இந்த அதிசயத்தைப் பார்த்து ஒன்றுக்கொன்று பேசத் தொடங்கின :—

தமனகன் கரடகனைப்பார்த்து, "நம்முடைய அரசன் தண்ணீர் குடிக்கப்போய் குடியாமல் ஏன் சும்மா நிற்கின்றான்?" என்றது.

கரடகன் "அதை விசாரிக்கிறதனால் நமக்காவதென்ன? இரையகப்படுமா? பெருமை உண்டாகுமா? கிணற்றுத் தவளைக்கு நாட்டு வளப்பமேன்? சும்மாயிரு. தனக்குத்தகாத காரியத்தைச் செய்கிறவன், கடாவியஆப்பைப் பிடுங்கின குரங்கு பட்டபாடு படுவான்" என்று சொல்ல, "அதென்ன?" என்று தமனகன் கேட்க,

கரடகன் சொல்லுகிறது:—

### III (1) குரங்கு ஆப்பை பிடுங்கின கதை.

"மகததேசத்தில் ஸுதத்தன் என்றொருவன் கோயிற்றிருப்பணிக்காகக் கொண்டுவந்து அறுக்கவிட்ட

மரங்களில், வாட்காரன் பிளக்கும்படி முளைகளடித்து விட்டுப்போன ஒரு மரத்தின்மேல் அந்தக் கோயில் நந்தவனத்திலிருந்த குரங்குகளிலொன்று வந்துட்கார்ந்தது. அது அம்மரப்பிளப்பிலடித்த முளையை அசைத்தசைத்து பிடுங்கின வுடனே பிளப்பு நெருங்கி உடல் நசுங்கி இறந்தது.

ஆதலால் தனக்குத் தகாத காரியத்தில் பிரவேசித்தால் எவர்க்கும் பிராணச்சேதம் வரும்" என்று சொல்லி; "நேற்று நாம் தின்று மிகுந்திருக்கின்ற இரையைத் தின்று ஸுகமே இருப்போம் வா" என்று கரடகன் அழைத்தது.

தமனகன் கரடகனைப்பார்த்து "ராஜ காரியஞ் செய்யாமல் இரை தேடுகிறதையே பெரிதாக நினைக்கலாமா? ஒருவன் மித்திரர்களுக்கு உபகாரமும் சத்துருக்களுக்கு அபகாரமும் பண்ணவேண்டும். அதற்கு ராஜஸேவையே தக்கது. மேலும் ராஜாவை அடுத்திருக்கையில் வெகு ஜனங்களுக்கு நன்மைசெய்வதே ராஜ ஸேவைக்கு பிரயோஜனமாம். நன்மைசெய்வதற்கு இடமில்லா விட்டால் உயிர் பிழைத்திருப்பதனால் என்ன பயன்? காக்கையும் காகபலியையும் எச்சிலையும் மலத்தையுந் தின்று ஆயிர வருஷம் ஜீவித்திருக்கிறது. நாயும் பசையில்லாத வெற்றெலும்பைக் கவ்விக் கடித்துக்கடித்துப் பல்லசைந்தும் பசி தீராமல் ஸந்தோஷத்தை அடைகிறது. மேலும், அது தன் யஜமானன் கையிலிருக்கிற ஒரு கவளம் எச்சிலைப்பார்த்துக் காலில் விழுந்து, வயிற்றை ஒடுக்கிக்கொண்டு எளிய முகத்தைக் காட்டி முகத்தைப்பார்த்து வாலைக்குழைத்துக்

கெஞ்சிக் காத்துக்கிடந்து கொஞ்ச மெச்சிலை வாங்கித் தின்னும். யானையோ பாகனைப்பாராமலும் அடுக்காமலும் அவன் வேண்டி வேண்டி வலியக்கொடுக்கக் கர்வத்தோடு வாங்கி நாயைக்காட்டிலு மாயிரம்பங்கு அதிகம் சாப்பிடும். சிங்கம் பசியினால் ஸங்கடப்படும் போது நரி ஸமீபத்திலிருந்தாலும் அதை அசட்டை பண்ணி யானையையேகொன்று தின்னும். ஆதலால் உலகத்தில் யார் புகழோடு ஜீவிக்கிறார்களோ அவர்களே பாக்கியவான்கள். சிறுகுழிகள் கொஞ்சம் தண்ணீரால் நிறையும். எலியின் சேரங்கை சில தானியத்தால் நிரம்பும். அப்படிப் போல மூடன் ஹிதாஹிதம் தெரியாமல் அல்பஜீவனம் பண்ணுவான். அவனுக்கும் பசுவுக்கும் என்னபேதம்? ஆகையால் ராஜகாரியம் பார்த்துப் பெருமையுடனே ஜீவிக்கிறதே நல்லது" என்று இப்படிச் சொலலிற்று.

கரடகன் இதைக்கேட்டு, தமனகனைப்பார்த்து, நல்லது, இந்தயோசனைகளுக்கும் இந்தப் பேச்சுக்களுக்கும் இப்போது நாம் ராஜகாரியத்தில் இருக்கவில்லை, இரை தேடுகிற காரியத்திலிருக்கிறோம். அப்படியிருக்க, நீ ஏன் வீணை மனோராசசியம் பண்ணுகிறாய்? முடவன் கொம்புத்தேனுக்கு ஆசைப்பட்டாற் கிட்டுமோ?'' என்று இகழ்ந்தது.

தமனகன் "நல்லதிருக்கட்டும்; பிரதானியுங் காலத்தினால் அப்பிரதானி யாகிறான். தன் முயற்சியாலுங் குணத்தினாலும், ஸாமானியமானவனும் ஸமர்த்தனாகிறான். யாரும் மேலான காரியத்தையே யோசிக்கவேண்டும். அது கைகூடாவிட்டாலும்

பெருமை வரும். புத்திசாலிகள் அருமையான காரி யங்களைச் செய்வார்கள். புத்தியீனர்கள் எளிமை யான காரியங்களைச் செய்வார்கள். மலையுச்சியிலொரு பெருங்கல்லையேற்றுதல் அரிது; அங்கிருந்து அதைத் தள்ளுவது எளிது. ஏரியின் நீரைக் கட்டுதல் அரிது; உடைத்தலெளிது. பெருமையும் சிறுமையும் அவரவரா லேயே வரும். முயற்சியுடையார் இகழ்ச்சியடையார் என்னும் பழமொழியைக் கேட்டிலையா?'' என்றது.

கரடகன் தமனகனைப் பார்த்து, "நல்லது நீ போய்ச சிங்கத்தினிடத்தில் எதைக் குறித்துப் பேசு வாய்?'' என்று கேட்டது.

தமனகன் "நம்முடைய ராஜா அறிவீனத்தால் பயந்திருக்கிறார். அதை நீ எப்படி யறிந்தாய் என்று கேட்கிறையோ? சொன்ன பொருளைப், பக்ஷி மிரு கங்களும் அறிந்து கொள்ளும்: சொல்லாமல் அறிகிற வனே பண்டிதன். அப்படி அறியாவிட்டால் புத்தி யாற் பிரயோஜனம் என்ன? நான் இங்கேயிருந்த படியே அறிந்தேன். இப்போது நான் இதை முன் னிட்டுக்கொண்டுபோய்ச் சிங்கத்தைச் சிநேகம் செய்து கொள்ளுகிறேன்'' என்றது.

கரடகன், தமனகனைப் பார்த்து "நம்முடைய அர சர்கள் மோந்துகொள்வதுபோற் கடிக்கிறவர்கள். அர சரும், நெருப்பும், பாம்புஞ்சரி. அப்படியானால் பழக்க மில்லாமலிருக்கையில் அவனை எப்படிச் சிநேகம்பண் ணிக்கொள்வாய்?'' என்று கேட்டது.

தமனகன், அப்போது "நான் பேசுவதிற் சதுர னென்று அறியாயா? ஸமர்த்தனுக்கு எது பெரிது?

பறக்கிற பறவைகளுக்கு எது தூரம்? வித்துவானுக்கு எது பரதேசம்? பிரியமாகப் பேசுகிறவர்களுக்கு எவன் சத்துரு?" என்றது.

கரடகன், "அப்படியானாலும ராஜாக்களிடத்தில் அகாலத்தில் போனால் அவமானம் நேரிடும்" என்றது.

அதற்குத் தமனகன், "அவமானம வந்தாலும் யஜமானன் ஸமீபத்திலேயே இருக்கவேண்டும். எவன் ஸமீபத்திலிருக்கிறானோ அவனிடத்தில் அரசர்கள் தங்கள் காரியங்களைச சொல்லுகிறார்கள். கொடிகள் கிட்டவிருக்கிற மரத்திலேயே படரும். அரசர்களும் ஸ்திரிகளும் தங்களைக் காத்து இங்கிதம் பேசுகிறவர்களிடத்தில் மனமிரங்குவார்கள்" என்றது.

கரடகன் "நல்லது; நீ அவரிடத்தில் எப்படிப பேசுவாய்?" என்று கேட்டது.

தமனகன் "நல்லமழை பெய்திருக்கையில், எபபடி விரையினின்று முளைகள் புறபபடுமோ, அப்படி ராஜாவின் கேள்விக்கேற்க என் வாக்கினின்றும உத்தரம் புறப்படும். ஆயினும் ஒருவேளை பிருஹஸ்பதியும் பேசசில் தவறுவானானால் மற்றவர்களுக்குக் கேட்பானேன்? எப்படியும் காலமறிந்து பேசினால் யாதோ ரவமானமும் வாது. அரசர்கள் தங்கள் காரியம் எவனாலே றதோ, அவனிடத்தில் ஒருவேளை சிறிது குற்றம் நேரிட்டாலும் அதைப் பாராட்டாமல், அவனைப் பரிபாலித்து விருத்தியடையப் பண்ணுவார்கள்" என்றது.

கரடகன் "அரசர்கள் மலையைப்போல் அநுசரிக்கிறதற்குக் கடினமா யிருக்கிறார்கள்" என்றது.

தமனகன் "ஆயினும் அவரவர்கள் சுபாவமறிந்து

பேசித் தனக்கு ஹிதம் பண்ணிக்கொள்ள வேண்டும்" என்று சொல்லி கரடகனிடத்திற் செலவு பெற்றுக் கொண்டு, சிங்கத்தினிடத்திற்குப் போய்த் தூரத்திலே நின்று தண்டனிட்டு, அரசனுத்தரவினால் உட்கார்ந்தது.

## IV. சிங்க தமனக ஸம்வாதம்.

உடனே, சிங்கம் "நெடுநாளாய் உன்னைக் காணோமே" என்று கேட்டது.

தமனகன் "இப்போது தேவரீரிடத்திற்கு வரத் தக்க காரியம் நேரிட்டதனால் தங்களிடம் வரலானேன். இல்லாவிட்டால் வந்ததற்குப் பிரயோஜனமென்ன? ராஜாக்களுக்கு ஒருவராலும் பயனில்லாவிட்டாலும், ஒரு வேளை சிறுதுரும்பும் பல்லுக்குத்த உதவும், மற்றவை களுக்குக் கேட்பானேன்? மேலும் ஒருவேளை அரசர் கள் குணவானை அசட்டைபண்ணித் தள்ளிவிட்டாலும் அவன் ஸத்குணம் போய்விடுமா? நெருப்பைத் தலை கீழாகப பிடித்தாலும் அதன் ஜ்வாலை கீழாகுமா? ஆத லால் அரசர்கள் பரிசோதித்தறிந்து யோக்கியனை நல்ல காரியத்தில் வைத்தால் அவன் ராஜாவுக்குக் கீர்த்தியைப் பெருகப்பண்ணுவான். ஆகையால் என்னைத் தாங் கள் சிறுநரியென்று அவமானம்பண்ணலாகாது. மஹா விஷ்ணு எடுத்திருந்த வராகவடிவை உலகத்தில் பூசிக்க வில்லையா? ரூபத்தைப் பாராமற் குணத்தைப் பார்க்க வேண்டும். மலைபோலிருக்கிற தேர் சிறு சுள்ளாணி யால் நிலைபெறும். நானோ தங்கள் காரியத்தில் பற் றுள்ளவன். கருவியுங் காலமும் அறிந்து கருமமுடிக் கும் ஆற்றலுள்ளவன். இந்த வல்லமையெல்லாம் உமது சார்பிருந்தால் பிரகாசிக்கும். வாள் முதலிய ஆயுதங்க

ளும், வீணை முதலிய வாத்தியங்களும், பூமியும், ஸ்திரீ களும், யோக்கியர்களும், சாஸ்திரங்களுமாகிய இவை யெல்லாம், பரிபாலனம் பண்ணுகிறவர்களாற் பிரகாசிக் கும். அண்டையில் ஸமர்த்தனில்லாத ராஜாவுக்கு அப கீர்த்தி வரும்" என்றிப்படிச் சொல்லி வந்தது.

இதைக் கேட்டு, சிங்கம் "தமனகா! நீ என் பிர தானி புத்திரன் அல்லவா" என்று கேட்டது.

தமனகன் "சுவாமி" என்று வணங்கிச் சும்மா இருந்தது.

சிங்கம் "ஏதாவது சொல்லவேண்டுவ திருந்தாற் சொல்" என்று உத்தரவு செய்தது.

தமனகன் "தேவரீர் தண்ணீருக்குவந்து குடியா மல் மெய்ம்மறந்து சும்மா நிற்கிறீர்களே" என்றது.

சிங்கம் "மெய்தான், நானிந்தக் காட்டில் வெகு நாளாய்ச் சுகமாக இருந்தேன். இப்போது இதை விட்டுவிடத் தக்கதாக ஸம்பவித்திருக்கிறது. என்றைக் குங் கேளாத மேக முழக்கம்போன்ற ஒரு தொனி இன்றைக்குக் கேட்டேன்; அந்த முழக்கத்தைப் போ லவே இருக்குமல்லவோ அந்தப்பிராணியும். ஆதலா லிதைக் குறித்து நீ என்ன சொல்லுகிறாயோ அதுவே எனக்குப் பிரமாணம்; இப்போது நீ, வழுக்கி விழுகை யில் ஊன்று கோல்போற் கிடைத்தாய்" என்றது.

தமனகன் "சுவாமி, தொனியினாலே பயப்பட லாகாது. முன்னொருவன் ஒரு தொனியைக் கேட்டுப் பயந்து பிறகு நெருங்கிப் பார்த்தவுடனே அங்கே தோலுங் கோலும் இருக்கக்கண்டான்" என, சிங்கம் "அதென்ன" என்று கேட்க,

தமனகன் சொல்லுகிறது :—

## IV (1) தோலும் கோலும் வெருட்டிய கதை

"ஒரு நரி பசியால் வருந்தி இரைக்காகத் திரிந்து திரிந்து ஒரு போர்க்களத்தில் வரும்போது அங்கே அசதியிலுண்டான ஒரு பெரிய சத்தத்தைக் கேட்டு மிகவும் பயந்து நான் செத்தேனென்று திடுக்கிட்டது. பிறகு சற்று முன்னே போனவுடன் அங்கு ஒரு பெரிய பேரிகையைப்பார்த்து, அருகிலிருந்த மரத்தின் கிளை காற்றிலசைந்து அதிலடிக்கத் தொனி உண்டாயிற றென்று அறிந்துகொண்டு, அதனருகே போய்ப் பார்த்து, அங்கே பேரிகையின் தோலும் கோலுமே அன்றி வேறொன்று மில்லையெனத் தெளிந்து ஸந்தோஷமடைந்தது.

ஆகலால சத்தத்(த)லே மாத்திரம பயப்படலாகாது. "தாங்கள் உத்தரவு கொடுத்தால இந்தச் சத்தத் தின் காரணத்தை அறிந்து வருவேன்" என, சிங்கம் அப்படியே செலவு கொடுத்தது.

## V சிங்கமும் எருதும் நட்பாயிருத்தல்

பிறகு தமனகன், ஸஞ்ஜீவகனென்னும் எருதி னிடத்திற்போய்ப் பேசி அதைச சிநேகம் பண்ணிக் கொண்டு, சிங்கத்தண்டை வந்து தண்டம்பண்ணி முன்னே நின்றது.

சிங்கம் "நீ அந்தப் பிராணியை இன்னதென்று அறிந்து வந்தாயா?" என்று கேட்டது.

தமனகன் "தங்கள் கட்டளைப்படியே போய்ப் பார்த்தேன். முன் தாங்கள் எப்படி நினைத்தீர்களோ

அப்படியே புஷ்டியாயிருக்கிறான். ஆனால், அவன் தங்கள் நட்பை விரும்புகிறான். உத்தரவானால் திரும் பிப்போய் அழைத்துக்கொண்டு வருகிறேன்" என் றது.

சிங்கம் "நல்லது, அப்படியே ஆகட்டும்" என் றது.

மறுபடியும் தமனகன் எருதினிடத்துப் போய் உபசாரத்தோ டழைத்துவந்து ராஜாவைத் தரிசனம் பண்ணுவித்தது. பிறகு பிங்களனுக்கும் ஸஞ்ஜீவக னுக்கும் வெகு சிநேகமுண்டாய் ராஜாவுக்கு மற்றயா ருமவசியமில்லாமல் இப்படி வெகுகாலங் கழிந்தது. அப்போது, பிரதானி புத்திரராகிய கரடகன் தமன கன் என்னும் இரண்டு நரிகளும் இரையொன்றும் அகப் படாமையால் ஆலோசிக்கத் தொடங்கின :

## VI கரடக தமனகர் சதியாலோசனை

தமனகன்—"நாம காட்டிலே தனித்திருந்த சிங் கத்துடனே இந்த எருதைச் சிநேகம் பண்ணுவித் தது, யானையானது தன் மத்தகத்தைக் கொத்துகிற தற்கு அங்குசத்தைத் தானே யெடுத்துப் பாகன் கையிற் கொடுக்கிறதுபோலாயிற்று. மேலும் முன்னால் ஆட்டுக்கடாச் சண்டையில் நரி செத்ததும், ஆஷாட பூதியின் கூட்டுறவால் ஸந்நியாஸி பொருளிழந்ததும் எப் படிஅவரவர்கள் குற்றத்தினாலேயே ஸம்பவித்தனவோ, அப்படியே நம்முடைய தோஷத்தினாலேயே நமக்கு இரை கிட்டாமற் போயிற்று" என, கரடகன் "அதெப் படிச்சொல்" என,

தமனகன் சொல்லுகின்றது :—

## VI (1) நம்பி மோசம் போனகதை

"ஒரு தேசத்தில் தேவசர்மாவென்ற ஒரு ஸந்நியாஸி, தான் பிச்சையெடுத்து ஸம்பாதித்த திரவியத்தைக் கந்தைக்குள் வைத்து யார்க்குந்தெரியாமல் தைத்துப் போர்த்துக்கொண்டு பின்னும் பிச்சையெடுத்துச் சாப்பிட்டுக்கொண்டு திரிய, அச்சூதையறிந்த ஆஷாடபூதி என்னுமொரு திருட்டுப் பிராமணன், "இந்தக் கந்தையை மாத்திரம் எப்படியாயினும் திருடிக்கொண்டால், பிறகு எப்போதும் திருட்டு வேலை செய்யவேண்டுவதில்லை, நம்முடைய தாஸிக்கும் வெகு நாளைக்குப் போதும்" என்றாலோசித்து ஒரு பிரமசாரியைப்போல வேஷம் போட்டுக்கொண்டு அந்த ஸந்நியாஸியினிடத்திற்போய் அவன் காலில்விழுந்து "அய்யனுக்கு ஞானோபதேசம் செய்து இந்த நிஸ்ஸாரமாகிய ஸம்ஸார ஸாகரத்தில் நான் இன்னும அலையாமல், சிறிது கடைக்கண்ணாற் பார்த்து என்னைக் கடைத்தேறப் பண்ணும்; ஓ மஹானுபாவா! பாதுக்கம் ஸஹியாத ஓ பரம புருஷா! என்றிப்படி அழுதகண்ணும் சிந்திய மூக்குமாகக் கலங்கி நின்றான்.

அதைப் பாசாங் கென்றறியாத அந்த ஸந்நியாஸி, இவன் தலைமேற் கையை வைத்துப் 'பயப்படாதே' என்றான். அன்று முதல் ஆஷாடபூதி வெகு பயபக்தியுடனே அவன் காலாலிட்ட வேலையைக் கையாற் செய்துகொண்டு, கந்தைக்கு ஸமயம் பார்த்துக்கொண்டிருக்கு நாளில், ஒருநாள் ஒரு பிராமணன் வீட்டில் இருவரும் விலாப்புறம் வீங்கப் பிக்ஷைபண்ணிக்கொண்டு வெகு தூரம் வந்தபிறகு, ஆஷாடபூதி

ஒருவரும் அறியாமல் ஒரு துரும்பை யெடுத்துத் தன் தலைமேலே வைத்துக் கொண்டு, அந்தத் துரும்பைக் குருவுக் கெடுத்துக்காட்டி, "ஐயோ ! நமக்குப் பிக்ஷை கொடுத்த பிராமணன் வீட்டுத் துரும்பு என் தலையி லொட்டி வந்துவிட்டதே, அன்னமிட்ட வீட்டில் கன்ன மிடலாமா? உப்பிட்டவரை உள்ளளவும் நினை என்று பழமொழியும் இருக்கின்றதே" என வாய்பதற நடு நடுங்கி "இதை அந்த அன்னதாதா வீட்டில் போட்டு விட்டு நொடியளவில் வருகிறேன்" என்றுசொல்லி, குரு பார்க்கும்படி பரபரப்பாகச் சிறிது தூரம் காலடி பிட் டத்திற் படும்படியோடி ஒரு செடிமறைவி லுட்கார்ந் திருந்துவிட்டான்.

பின்பு இரைக்கவிரைக்க ஓடிவந்து ஆசாரியன் காலில் விழுந்து எழுந்து, "சுவாமி, உம்முடைய அநுக் கிரஹத்தினால் இந்தப் பாபத்திற்குத் தப்பினேன்" என்றான். இதைப்பார்த்து அந்த ஏழை ஸந்நியாஸி ஆச் சரியப்பட்டு இவன் பரஸொத்துக் காசைப்படாத பர மாத்துமா என்று நம்பி, தன் உயிர்க்கு ஸமானமாக நினைத்திருந்த கந்தையை அவன் கையிற்கொடுத்து, ஒரு குளக்கரையில் இருக்கச்சொல்லித் தான் காலலம் பப்போனான்.

அவிடத்தில் இரண்டு ஆட்டுக்கடாக்கள் ஒன்றோ டொன்று முட்டிச் சண்டைசெய்ய, அவைகளின் மண்டையிலிருந் தொழுகும் உதிரத்தை உண்ணலா மென்று ஒரு நரிபோய் இரண்டுக்கும் நடுவிலகப்பட்டு இறந்தது. அந்த அனர்த்தத்தைப் பார்த்துக்கொண்டு ஸந்நியாஸி சிறிது நேரமிருந்தார்.

அப்போதந்தச் சிஷ்ன் "இது தான் நல்ல ஸமயம், இது தவறினு லினிக்கிட்டாது, காற்றுள்ள போதே தூற்றிக்கொள்ள வேண்டும்" என்று நினைத்துக் கந்தையைச் சுருட்டிக்கொண்டு ஓடிப்போனான்.

உடனே ஸந்நியாஸி வந்துபார்த்துச் சிஷ்னைக்காணுமல் "ஒஹோ! நம்மை ஆஷாடபூதி ஏமாற்றிவிட்டானே, நாம் மோசம் போனேமே" என்று திகிற்பட்டு உப்புக்கண்டம் பறிகொடுத்த பார்ப்பாத்தியைப் போல் ஒருவருடனும் சொல்லாமல் இருந்துவிட்டார்" என்று சொல்லிற்று.

---

இதைக்கேட்டுக் கரடகன் "இதற்கு நாம் செய்யத் தக்கதென்ன?" என்று கேட்டது.

தமனகன் "யாதொன்று போயிற்றே அதை மறுபடியும் சேகரிக்கவேண்டும், எது கிடைக்கவில்லையோ அதை ஸம்பாதிக்கவேண்டும், எதிராகவரும் விக்கினங்களைத் தடுக்கவேண்டும், என்றிவ்வாறு ஆலோசித்துச் செய்கிறவனல்லவோ மந்திரி. இப்போது நமக்குப் பிங்கள ஸஞ்ஜீவகர்களுடைய சிநேஹத்தால் எல்லா ஸங்கடமும் நேரிட்டது. இவர்களுடைய நட்பைப் பிரித்தாற்றான் நமக்கு இவ்வளவன்னம் கிடைக்கும்" என்று சொல்லிற்று.

கரடகன் "அந்தப் பிங்கள ஸஞ்ஜீவகர்களுடைய உறவைக்கெடுக்க யாராலாகும்? மணியினின்றும் ஒளி பிரிக்கப்படுமோ? இது முடியாத காரியமல்லவா?" என்றது.

தமனகன் "என்ன சொல்லுகிறாய்? உபாயத்தா

லாகிறது பராக்கிரமத்தாலாகுமா? ஒரு காகம் ஸுவர்ண மாலையால் ஒரு கிருஷ்ணஸர்ப்பத்தைக் கொன்றது அறியாயோ ?" என்றது.

கரடகன் "அதெப்படி ?" என்று ஆவலோடு கேட்க,

தமனகன் சொல்லத் தொடங்கிற்று :—

## VI (2) காகம் தந்திரத்தால் பாம்பைக் கொன்ற கதை

"ஒரு பெரியமரத்தில் கூடுகட்டிக்கொண்டு ஆணும் பெண்ணுமாகிய இரண்டு காக்கைகள் நெடு நாள் வாழ்ந்திருக்கும்போது, அம்மரப்பொந்தில் ஒரு நாகம்வந்து அந்தக் காக்கை இடும் முட்டைகளையெல்லாம் குடிக்கக்கண்டு, இதற்கு என்னசெய்யலாமென்று மிகவும் வியசனப்பட்டுத் தனக்குச் சிநேஹமாகிய நரியிடத்திற்போய் நடந்த சங்கதிகளைச் சொல்லி "இனியாகிலும் முட்டைகளைக் காப்பாற்றுகிறதற்கு என்ன செய்யலாம் ?" என்றது.

நரி "ஒரு நண்டானது, வெகு நண்டாசையைக் காட்டிக் கொக்கைக் கொன்றாற்போல அதை ஒரு உபாயத்தால் கொல்லவேண்டும்" என்றது.

காகம் "நண்டு கொக்கை எப்படிக் கொன்றது ? சொல்லுமையா" என,

நரி சொல்லுகின்றது :—

## VI (2) (i) நண்டு கொக்கை ஆசைகாட்டிக் கொன்ற கதை.

"மீன்களையே மிகுதியுந்தின்று வளர்ந்த ஒரு கிழக் கொக்கானது குளக்கரையில் வந்து விசனமாய் நின்றுகொண்டிருந்தது; அப்போது அதிலிருந்த மீன்

கள் கொக்கைப்பார்த்து, "நீ உன்னுகாரத்தைவிட்டுச் சும்மா இருப்பானேன், சொல்" என, கொக்கு "நான் மீன்தின்பது மெய்தான். ஆயினும் இன்றைக்கிங்கே செம்படவன்வந்து எல்லா மீன்களையும் பிடிக்க இருக்கிறதினுல் என்னுடைய இரைகளெல்லாம் நிர்மூலமாய்ப் போகுமேயென்று ஏங்கிச் சும்மாவிருக்கிறேன்" என்றது.

இதைக்கேட்டு மீன்களெல்லாம் கூட்டங்கூடி எவன் நமக்கபாயஞ் சொன்னுனே அவனே உபாயஞ் சொல்லு வானென்று ஆலோசித்துப் பிறகு கொக்கைப்பார்த்து, "நீயே எங்களை இப்போது இரக்ஷி" என, கொக்கு "நான் செம்படவனேடு சண்டை பண்ண ஸமர்த்தனல்லேன்; மேலும் நான் கிழவன் ஆனுல் உங்களை வேறேரிடத்திற்குக் கொண்டுபோவேன்; அதனுல் எனக்கும் இந்தத் தள்ளாமையான காலத்தில் பரோபகாரியென்ற பெயரும் வரும்; நீங்களும் வெகுகாலம் பிழைத்திருப்பீர்கள்" என்றது.

அப்போது அந்தப் பேதை மீன்களெல்லாம் பிராணனைக்காப்பாற்றும் ஆசையால் அதன் பேச்சை நம்பி, "நல்லது அப்படியே கொண்டு போகவேண்டும்" என்றுகெஞ்ச, அந்தவஞ்சனையுள்ள கொக்கு, நடைக்கு ஒன்றுகக் குளத்திலிருந்த மீன்களை யெல்லாம் மூக்கிளுற் கவ்விக்கொண்டுபோய்ச் சில மீன்களைத்தின்று, மற்றவைகளை ஒரு பெரிய பாறையின்மேல் உலரவைத்தது.

பிறகு அந்தக் குளத்திலிருந்த ஒருநண்டு அந்தக் கொக்கைப்பார்த்து "ஓ ஜீவகாருணியனே! என்னை

யும் அவ்விடத்திற்குக் கொண்டு போக வேண்டும்" என்று வேண்டிக்கொள்ள, கொக்கு, "வருங்காலத்தில் எதுவும் வலியவரும்" என்று உள்ளுக்குள்ளே ஸந்தோஷித்து அப்படியே நண்டையும் கவ்விக்கொண்டு போகும்போது நண்டு, வழியில் மீன்கள்செத்துக் கிடக்கிறதையும், மீன் முட்கள் சிந்திக்கிடக்கிறதையும், மீன்கள் பாறையின்மேலுலருகிறதையும் பார்த்து, ஐயோ! பலமீன்களையுங் கொன்று, இது நம்மையும் கொல்லவந்தது; இதுநம்மைக் கொல்வதற்கு முன்னமே நாமிதைக் கொல்ல வேண்டும் என்று ஒரு உபாயம் நினைத்துக் கொக்கைப்பார்த்து, "நீ என்னை வருத்தப்பட்டு எடுத்துக்கொண்டு வந்தாய், அங்கே என்னுடைய பரிவாரங்களிருக்கின்றன. அங்கே என்னை நீ மறுபடியும் கொண்டு போனால் அவைகளையும் காண்பிப்பேன்" என்றது.

அதைக்கேட்டுக் கொக்கு பேராசையால் திரும்பி அந்தக் குளத்திற்கு நேரே வருகையில், நண்டு கொடுக்கினால் அந்தக் கொக்கின் கழுத்தை இரண்டு துண்டாக நறுக்கித் தான் குளத்தில் வீழ்ந்து ஸுகமாய் வாழ்ந்தது.

---

ஆகையால் அந்தக் கொக்கைப்போலப பாம்பையும் கொல்லவேண்டும்" என்றது.

காகம் "அப்படிப் பாம்பைக் கொல்ல நான் செய்யத்தக்க உபாயமென்ன?" என்று கேட்டது.

நரி "இப்பட்டணத்து இராஜகுமாரி குளிக்கிற மஞ்சனச் சாலைக்குபோய் அவள் ஸ்நானம் பண்ணும்

போது கழற்றிவைத்திருக்கும் ஆபரணங்களில் ஒன்றை யெடுத்து ஜனங்கள்பார்க்கும்படி கொண்டுவந்து அந்த மரப்பொந்திற்போடு" என்று சொல்லிற்று.

காக்கையும் அப்படியே செய்தது. உடனே அந்த இராஜனுடைய வேலைக்காரர்கள் போய் அம்மரத்தின் பொந்தைப் பிளக்க நாகம் சீறிவந்தது; வரவே அதை அவர்கள் இரண்டு துண்டாக வெட்டி எறிந்தார்கள். இப்படிக் காகத்தின் காரியம் நிறைவேறிற்று.

---

ஆகையால் உபாயத்தால் எல்லாம் கைவசப்படும். எவன் புத்திமானோ அவன் பலவான். எவனுக்குப் புத்தியில்லையோ அவனுக்குப பலமேது? முன் புத்தி பலத்தினால் ஒரு முயல் ஒரு சிங்கத்தைக் கொன்றது" என்றது.

கரடகன் "அதெப்படி!" என்று கேட்க, தமனகன் சொல்லுகின்றது :—

### VI. (3) முயல் சிங்கத்தைக் கொன்ற கதை

"ஒரு நெருங்கிய காட்டில் மதோன்மத்தன் என்னும் சிங்கமானது அக்காட்டிலுள்ள மிருகங்களை யெல்லாம் கொன்று தின்று கொழுத்து வெறிகொண்டு திரியும்நாளில், மிருகங்களெல்லாம் ஒன்றாகத்திரண்டு போய், "ஓமிருகேந்திரா! உம்முடைய காட்டிலிருக்கிற மிருகங்களையெல்லாம் இப்படிக் கொன்றால் மிருகங்கள் நிர்மூலமாய்ப்போம். ஆதலால் நாங்கள் தினமொவ்வொன்று உமக்கு இரையாகக் கொடுத்துக்கொண்டு வருகிறோம். அதை நீர் பக்ஷித்துக் கொண்டிருக்கலாம்" என்று பிரார்த்திக்க, சிங்கம் "அப்படியே செய்

கிறேன்" என்று ஸத்தியம் செய்து கொடுத்தது.

இவ்வாறு தினம் ஒவ்வொன்றாகத் தின்றுகொண்டு வருநாளில், ஒருநாள் ஒரு கிழமுயலினுடைய முறை வந்தது. அப்போது விலங்குகளெல்லாம்கூடி "இன்றைக்கு உன்முறை போ" என்றுசொல்ல, முயலானது "இன்று நமக்கு மரணகாலம் வந்து விட்டபடியால் இதற்கோர் உபாயம் யோசிக்கவேண்டும். புத்திமானுக்கெதுதான் கைகூடாது! ஆகையால் நாமிப்போதுஉபாயத்தால் சிங்கத்தைக் கொல்வோம் என்று ஆலோசித்து, மெள்ள மெள்ள அந்தச் சிங்கத்தின் பசிவேளை தப்பி வந்தது.

சிங்கம் அதைப் பார்த்து, "முயலே! யானையானாலும் என்னுடைய பசிவேளை தப்பிவருகிறதில்லையே, நீ எவ்வளவு பிராணி? இப்படித் தாமஸமாய் ஏன் வந்தாய்?" என்று மிகுந்த கோபத்தோடு கையைத் தரையிலே அறைந்து கேட்டது.

முயல் "ஐயனே! இது என் குற்றம் அன்று; உம்முடைய பசிவேளைக்கே வநதேன்; வரும் வழியில் ஒரு கொடிய சிங்கத்தைக் கண்டு பயந்து ஒளித்திருந்து அந்தச் சிங்கம் போனபின்பு இங்கே வந்தேன்" என்று சொல்லிற்று.

சிங்கம் "என்னை யல்லாமல் இந்தக்காட்டில் வேறே சிங்கம் நீ பார்த்தாயா? காட்டுவா" என்றழைத்தது.

முயல் அதை அழைத்துக்கொண்டு போய்ச் சேறும் நீரும் நிறைந்த ஒரு பாழ்ங்கிணற்றைக் காட்டி, "இதிலே இருக்கிறது" என்று காட்ட, சிங்கம் முயலின் சொல்லை நம்பிக் கிணற்றில் எட்டிப்பார்த்து அதில் தோன்றின தன் பிரதிபிம்பத்தை அந்தச்சிங்கம் அதுதா

னென்று எண்ணிக் கோபத்தோடு அதை கொல்ல வேண்டுமென்று அதிற் பாய்ந்து சேற்றிலழுந்தி இறந்தது.

---

ஆகையால் எவன் புத்திமானோ அவன் பலவானென்று உனக்குச் சொன்னேன்" என்றது.

கரடகன் "சிங்கத்தினிடத்திற்கு ஸுகமாய்ப் போ உனக்கு மங்களம் உண்டாகட்டும்" என்றது.

## VII. தமனகன் கோட் சொல்வது

பிறகு தமனகன் அந்தச் சிங்கம் தனித்திருக்கும் ஸமயம் பார்த்துப்போய்த் தண்டம் பண்ணி, "சுவாமி! உமக்கின்றைக்கு ஒரு பொல்லாங்கு நேரிட்டது, அதை நானறிந்து தங்களனுமதியின்றி விண்ணப்பம் செய்து கொள்ளலானேன்" என்றது.

சிங்கம் "அது என்ன சொல்" என்றது.

தமனகன் "உம்முடைய மித்திரனாகிய ஸஞ்ஜீவகன் உம்மிடத்தில் விசுவாசம் காண்பித்து உம்முடைய இராஜ்யத்தைப் பற்றிக்கொள்ள யோசித்திருக்கிறான். இதை நீர் பொய்யென்று நினைத்துக் கோபித்தாலும், அல்லது தண்டித்தாலும், ராஜனுக்கு ஒரு துன்பம் வரும்போது தந்நலத்தைப் பாராமல் ராஜனுக்கு நல்ல உபாயங்களைப் போதித்துச் செய்யத்தக்க காரியங்களைச் செய்வித்தல் மந்திரிகளுக்கு நீதித் தொழிலாகையால் உமக்கிதைத் தெரிவித்தேன்" எனறது.

பிங்களன் இதைக்கேட்டு ஆச்சரியப்பட்டுச் சும்மாவிருந்தது.

பின்பு தமனகன் "நீர் அவனை முக்கியப் பிரதானியாக்கினீர்; அப்படியே யிருக்கட்டும், எனக்கென்ன?

ராஜாவும் பிரதானியும் ஸமானமாயிருந்தால், ராஜலட்சுமி அவ்விருவரிலொருவனைக் கைவிடுவாள். மேலும் எப்போது இராஜா ஒருவனையே பிரதானியாக்குகிறானோ அப்போது அந்தப் பிரதானிக்குக் கர்வம் உண்டாகிறது. அவன் இராஜ்ய ஆசையால் ராஜாவைக் கொன்று சுதந்தரனாக உத்தேசிக்கிறான். ஆகையால் இப்படிப்பட்ட மந்திரியை வேரோடு களையவேண்டும். இல்லாவிட்டால் அவனால் தீங்குநேரிடும். இது தங்களுக்குச் சொல்ல வேண்டுமா ? தாங்கள் எல்லாம் அறிந்திருக்கிறீர்கள். உலகத்தில் செல்வத்தை விரும்பாதவன் அபூர்வம்" என்றிப்படியெல்லாம் சொல்லிற்று.

சிங்கம் நகைத்து "ஸஞ்ஜீவகனுக்கும் எனக்குமுள்ள சிநேஹம் போகாது ; மித்திரர்கள் என்ன அநியாயம் பண்ணினாலும் அதைப் பிரியமாகவே நினைக்க வேண்டும்" என்றது.

தமனகன் "இதுதான் புத்திக்குத் தோஷம், இதனால் உமக்கு அபாயம் வரும் ; எவன் ஒருவன் ஸாதுக்கள் புத்தியைக் கேளாமல் துஷ்டர்கள் புத்தியைக் கேட்கிறானோ அவன் மருந்து தின்னாத ரோகியைப் போல விபத்தையடைவான். காதுக்கினிமையாயும் ஹிதம்பண்ணுகிறதாயும் இருக்கிற வசனம் துர்லபம். காதகனுடையவசனம் செவிக்கினிமையாயினும அதைக் கேட்கலாகாது" என்றது.

சிங்கம் "நான் அபயம் கொடுத்து இரக்ஷித்தவன் எனக்குத் துரோகம் பண்ணுவானோ ? என்ன பேச்சுப் பேசுகிறாய் ? போ" என்றது.

மறுபடியும் தமனகன் "துஷ்டர்கள் குணம்

மாறுமா? நாயின் வாலைக் குணக்கெடுக்கலாமா? எட்ட மரத்துக்கு அமுதம்வார்த்து வளர்த்தாலும் அதற்கு தித்திப்புண்டாகுமா? எப்படியும் பிறர்க்கிதம் பண்ணு வது ஸாதுவுக்கு முக்கிய தருமம். ஆகையால் தா கள் கேளாமலிருந்தும் இநத விர்த்தாந்தத்தைச் சொ னேன். இனிமேல் என்மேல் குற்றமில்லை. ஒ வேளை ராஜா பாமரர்களுடைய புத்தியைக்கேட் ஸங்கடப்படும்போது வேலைக்காரர்மேல் குற்றம் சும துகிறன்; ஆதலால் நான் சொன்னேன்!" என்றிப் டிச் சொல்லிச் சும்மா இருந்தது.

அதற்குச் சிங்கம் "இதை நான் ஸஞ்ஜீவகனுக்கு சொல்லவேண்டும்" என்றது.

தமனகன் "அவனுக்கிதைச் சொன்னல் அவ ஜாக்கிரதைப்பட்டு வேறொருபாயத்தால் பொல்லாங் தேடுவான். ஆகையால் இதை அவனுடன் சொல் திருப்பதே யோக்கியம். ராஜாவின் மந்திராலோசனை இரஹஸியமாகவே இருக்கவேண்டும்" என்றது.

இதைக்கேட்டு மறுபடியும் சிங்கம் "அந்த ஸஞ் வகன் விரோதப்பட்டு என்ன செய்யக்கூடும்? அவ ஸாமர்த்தியம் எவ்வளவு?" என்று கேட்டது.

ஙரி "நாம் அவனை அறியமாட்டோம். அவ பாராக்கிரமமும் சுபாவமும் எங்களுக்கெப்படித் தெ யும்? ஒருவன் குணத்தை அறியாமல் அவனைச் சேர்க் லாகாது. சேர்ந்தால், ஒரு சீலைப்பேன் மூட்டைப்பூச யைச் சேர்த்து தான் நாசமடைந்தாற்போலாகும் என்றது.

சிங்கம் "அதெப்படிச் சொல்" என,

தமனகன் சொல்லுகிறது :—

VII (1) சீலேப்பேன் மூட்டப்பூச்சியால் மாண்ட கதை.

"ஒருராஜாவின் பஞ்சணையில் மந்தவிஸர்ப்பணி யென்னும் ஒரு சீலேப்பேன் நெடுநாளாக வாஸம்பண்ணிக்கொண்டிருக்கையில், ஒருநாள் அதன் வீட்டுக்கு டிண்டிபன் என்னு மூட்டுப்பூச்சி வந்தது. அதைப் பார்த்து சீலேப்பேன், "அப்பா நீ பொல்லாதவன்; முட்களைப்போன்ற பற்களினலே தூங்குகிறதற்கு முன்னமே துடுக்காய்க் கடிப்பாய்; நீ ஸமயம் தெரியாதவனுகலால் ராஜசயனத்திலிருக்கத் தக்கவனில்லை, இவ்விடம் விட்டு ஒடிப்போ" என்று கடுகடுத்துச் சொல்லிற்று. மூடு "நானப்படிச் செய்யவில்லை; நீ சொன்னபடியே கேட்கிறேன்" என்று காலில்விழுந்து பிரார்த்தித்தது. சீலேபபேன் மனமிரங்கி, "நல்லது, நீ வெடுக்கென்று கடியாமல் நித்திரை செய்யப்பார்த்து மெத்தெனக் கடித்துச் சிறிது ரத்தம் குடித்திரு" என்று சொல்ல, அப்போதந்த மூட்டுப்பூச்சி நல்லதென்றிருந்தது.

பிறகு ராஜா விழித்திருக்கும்போதே சுறுக்கென்று கடிக்க, ராஜா திடுக்கென்றெழுந்து 'என்னமோ கடித்தது' என்று சோதனைக்காரருடனே சொல்ல, அவர்கள் விளக்கைக்கொண்டு சோதித்தார்கள். மூடு கட்டிற்சந்தி லொளித்துக்கொண்டது. அதற்கு இடங்கொடுத்த சீலேப்பேன் அகப்பட்டது. அவர்கள் அதை "நீயல்லவா எங்கள் அரசனைக் கடித்தாய்!" என்று நசுக்கிக் கொன்ருர்கள். ஐயோ! அது வகை தெரியாமல் இறந்தது.

ஆகையால் ஒருவன் குணத்தை அறிவதற்கு முன்னமே அவனுடனே ஸஹவாசம் பண்ணலாகாது" என்றது.

சிங்கம் கேட்டு, அந்த ஸஞ்ஜீவகனுடைய துஷ்ட சுபாவம் இன்னபடியென்று எனக்குத் தெரிந்தால் அப்போது நிஜம்" என்று சொல்லிற்று.

தமனகன் "அந்த எருது உம்மைக்கொல்ல நினைத்துத் தன் கொம்புகளை முன்னிட்டுக்கொண்டு உம்முடைய ஸந்நிதியிலே வரும்போது தங்களுக்குத் தெரியவரும்" என்று சொல்லிவிட்டு, எருதினிடத்திற்குப் போய்த் தன் மனதில் மிகவும் விசனமிருப்பது போலத் தோற்றுவித்தது.

## VIII. தமனகன் சண்டை மூட்டல்

அப்போது ஸஞ்ஜீவகன், "மித்திரா! ஸுகமா!" என்று கேட்டது.

தமனகன் "ஸேவகனுக்கு ஸுகமெங்கே யிருந்து வரும்? ஸம்பத்தும் விபத்தும் கூடவே இருக்கின்றன; ராஜாவுக்குப் பிரியமாக யாரிருக்கிறார்கள்? யாசகன் ஸம்மானத்தை அடைவானே? இந்தக்காலமேது? தனக்கு மித்திரன் யார், தன் வலி எவ்வளவு என்றெப்போதும் விசாரித்துக் கொண்டிருக்க வேண்டும்" என்றது.

இதைக்கேட்டு ஸஞ்ஜீவகன் "இப்படி ஏன் சொல்லுகிறாய்?" என்று கேட்டது.

தமனகன் "ராஜகாரியத்தில்உண்டாகும் வஞ்சகத்தை மற்றொருவரோடு சொல்லலாமோ! ராஜா அறிந்தாற் கொல்லுவான். ஆனாலும் நீ என்னை நம்பிச் சிங்கத்தோடு சிநேஹம் பண்ணினதினால் உனக்குச்

சொல்லுகிறேன். அந்தச் சிங்கம் உன்மேல் மிகக் கோபங்கொண்டு உன்னைக் கொன்று தன்னுடைய ஸேனைகளுக்கெல்லாம் நல்ல விருந்திட நினைத்திருக்கிறது" என்று சொல்லிற்று.

அதைக் கேட்டவுடனே ஸஞ்ஜீவகன் வருத்தத்தோடும் ஆலோசித்துக்கொண்டிருந்தது.

அப்போது தமனகன், "வேறு ஆலோசனையென்ன? எது ஸம்பவித்ததோ அதற்குத் தக்கபடி நடக்கவேண்டும்" என்றுசொல்லிற்று.

ஸஞ்ஜீவகன் "நீ சொன்னதெல்லாம் ஸரிதான். உலகத்திலும் அப்படியே இருக்கிறது. ஸாதாரணமாய் ஸ்திரீகள் துர்ஜனர்களுக்கு வசமாயிருக்கிறார்கள். ராஜாக்கள் துஷ்டர்களைப் பரிபாலிக்கிறார்கள். துஷ்டனுடனே மிகவும் சிநேஹித்தால் அவன் விபரீதமாக நினைக்கிறான். குருடனுக்குக் கண்ணாடியைக் காண்பித்தாலும் செவிடன் காதிலுபதேசித்தாலும் அவர்கள் விபரீதமாகவே நினைப்பார்கள்; துஷ்டனுமப்படியே விபரீதமாக நினைக்கிறான். எப்படிச் சந்தனமரம் பாம்போடு கூடி இருக்கிறதோ, எவ்வாறு தாழை முட்களோடு கூடி இருக்கிறதோ, அப்படியே பெரும்பாலும் ராஜாக்கள் துஷ்டர்களால் சூழப்பட்டிருக்கிறார்கள். ஆகையால் இப்படிப்பட்ட பொல்லாங்கு நமக்கு நேரிட்டது" என்றது.

இதைக்கேட்டுத் தமனகன், "அந்தச் சிங்கத்துக்கு வாய்ப்பேச்சுமாத்திரம் தித்திப்பேயல்லாமல் மனது மிகவும் கடினந்தான். பூர்வம் பிரம்மா கடலைக் கடக்கிறதற்குக் கப்பலை உண்டாக்கினான்; இருட்டைப்

போக்கடிக்க விளக்கைச் சிருஷ்டித்தான் ; யானையை யடக்க அங்குசத்தை நிருமித்தான்; துஷ்டர்களுடைய மனதை அடக்க யாதொன்றும் செய்யாமற்போனான்" என்றது.

இவற்றையெல்லாம் கேட்டு ஸஞ்ஜீவகன், பெருமூச்செறிந்து, "எனக்கு பெரிய பொல்லாங்கு நேரிட்டிருக்கிறது, இதிலிருந்து தப்பித்துக்கொள்ள எனக்கு ஸாமர்த்தியமில்லை. யமனுடைய வாயிலகப்பட்டவன் எப்படிப் பிழைப்பான் ? எப்படி ஒரு குற்றமுமில்லாத ஒட்டகத்தைக் காகமுதலானவை கூடிக் கொலை செய்தனவோ அப்படியே வஞ்சனையோடு கூடிய துஷ்டர்கள் குற்றமில்லாமலே ஒருவனைக் கொன்று விடுவார்கள்" என்றது.

"அதெப்படி சொல்லவேண்டும்" என்றுதமனகன் கேட்க,

ஸஞ்ஜீவகன் சொல்லுகிறது:—

## VIII. (1) காகம் முதலானவை ஒட்டகத்தை வஞ்சனையால் கொன்ற கதை.

"ஒரு காட்டில் மதோற்கடன் என்ற ஒரு சிங்கம் நரியையும் புலியையும் காக்கையையும் தனக்கு மந்திரிகளாக வைத்துக்கொண்டு அரசாண்டுவருகிற காலத்தில் ஒருநாள் அந்தக்காட்டில் ஒட்டகமொன்று வழிதப்பி வந்துவிட்டது. மந்திரியாகிய காக்கை அதைக் கண்டு "நீ யார்" என்று கேட்டது.

அந்த ஒட்டகம் "நான் வழிதப்பி வந்துவிட்டேன்" என்று சொல்லிற்று.

காக்கை அதைச் சிங்கத்தினிடத்தில் அழைத்துக்

கொண்டுபோய் நடந்தகாரியத்தைச் சொல்லிற்று.

அதைச் சிங்கங் கேட்டு "பயப்படாதே! நம்முடைய மந்திரிகளுடனே நீயுமொரு மந்திரியாயிரு" என்று அதற்கு அபயங்கொடுத்து, மந்தானகனென்று பெயரிட்டுத் அதைத் தன்னிடத்தில் வைத்துக்கொண்டது.

இப்படி வெகுகாலம் செல்லுகையில் ஒருநாள் சிங்கத்துக்குச் சரீரம் அசவுக்கியமா யிருந்தபடியினால் அம்மூன்றையும் அழைப்பித்து "இன்றைக்கு என்னால் இரை ஸம்பாதிக்கமுடியாது. நீங்கள்போய் எனக்கேதாவது இரை கொண்டுவரவேண்டும். பிறகு நான் தின்று மிகுந்ததை நீங்கள் தின்னலாம்" என்றது. இம்மூன்றும், சிங்கத்தின் கட்டளைப்படி அந்தக் காட்டிற்போய் இரை தேடிப் பார்த்து அகப்படாமையால் அப்போது தங்களோடுகூட இருந்த மந்தானகனை ஒரு வேலையிட்டுத் தூரத்திற் போகும்படி செய்தது.

காகம் மற்றை இருவரையும் பார்த்து, "இன்று நாம் மநதானகனைக் கொல்லவேண்டும். புல்லுந் தழையும் தின்னுகிறவனால் நமக்குப் பிரயோஜனம் என்ன?" என்றது.

மற்றிரண்டும் "ஸரிதான், அவனுக்கு நம்முடைய ராஜா அபயங்கொடுத்திருக்கிறதினால் அவனை நாமெப்படிக் கொல்லலாம்? கூடாது" என்றது.

காகம் "நாம் இன்றைக்கு தப்பாமல் சிங்கத்தின் கையால் மரண மடைவோம், பசியெடுத்தால் தாயும் பிள்ளையை விட்டுவிடுகிறாள்; பாம்புந்தானிட்ட முட்டைகளைக் குடிக்கிறது; ஆகையால் பசியால் பீடிக்கப்படுகிற

வன் எந்தப் பாதகந்தான் பண்ண மாட்டான்? இது உங்களுக்குத் தெரியாதா?" என்று சொல்லிற்று.

உடனே சிங்கத்தினிடம் போய்க் காகம் "சுவாமி! இன்றைக்கு ஒன்றும் கிடைக்கவில்லை" என்றது.

"இதற்கென்ன உபாயம் பண்ணலாம்?" என்று சிங்கம் கேட்டது.

காகம் "தங்கள் சுவாதீனத்தில் இரையிருக்கையில் வேறு ஆலோசனை ஏன்? வெண்ணெயை வைத்துக் கொண்டு நெய் தேடலாமா?" என்றது.

சிங்கம் "என்னிடத்தில் ஆகாரம் எங்கேயிருக்கிறது?" என்று கேட்டது.

காகம் "மந்தானகனென்னும் ஒட்டகம் இருக்கிறதே" என்றது.

அதைக் கேட்டுச் சிங்கம் பூமியைக் கையால் தொட்டு 'சிவசிவா' என்று காதின்மேல் கையை வைத்து, "நான் அவனுக்கு அபயம் கொடுத்திருக்கையில் நீங்களிப்படி விபரீத வார்த்தை சொல்லலாமா? அடைக்கலம் புகுந்தவர்களைக் கைவிடலாமா? பசு, பூமி, தானியம் இவற்றின் தானத்தைக் காட்டிலும் அபயதானம் மேலானது. அசுவமேத புண்ணியத்தைக் காட்டிலும் இந்தப் புண்ணியம் அதிகமென்று சாஸ்திரமும் இருக்கிறதே" என்றது.

இதைக் கேட்டுக் காகம் "ஐயாவே! என்னொரு விண்ணப்பத்தைக் கேட்டருளும். ஒரு குலத்துக்காக ஒருவனை விட்டுவிடலாம்; ஒரு கிராம ரக்ஷணைக்காக ஒரு குடும்பத்தைத் துறக்கலாம்; ஒரு தேசபாலனத்தின்பொருட்டு ஒரு கிராமத்தைக் கைவிடலாம்; தன்

னிமித்தம் பூமியை விடலாமா? ஆகையால் இது தப்பன்று. ஆகிலும் அவனைத் தாங்கள் கொல்லவேண்டாம்; நாங்களே கொல்லுகிறோம்; இல்லாவிட்டால் அவன் தானாகவே சாக வுடன்படும்படி செய்து, பிறகு நாங்கள் அவனைக் கொல்லுகிறோம்" என்று சொல்லச் சிங்கம் சும்மா இருந்தது.

பிறகு காகம் அதுவே கட்டளையாக நினைத்துக் கொண்டுபோய், மற்றை மூன்றையும் கூட்டிக்கொண்டு சிங்கத்தின் கிட்டவந்தது.

காகம் "சுவாமீ! இன்றைக் கொன்றும் ஆகாரம் அகப்படவில்லை, அதனால் தாங்கள் இன்றைக்குப் பட்டினி யிருக்கலாயிற்று; அப்படியிராமல் என்னைப் புஜிக்கலாம்" என்றது.

சிங்கம் "நீ எவ்வளவு? உன்னை உண்பதினால் என் பசி தீருமா? உன்னுடல் என் கடைவாய்ப் பல்லுக்குப் போதுமா!" என்று கேட்டது.

நரி "அப்படியானால் என்னைத் தின்னும்" என்று நின்றது.

"நீயும் அப்படித்தான், நீ அதிகமல்ல" என்று சிங்கம் மறுத்தது.

புலி "இவ்விருவரிலும் நான் பருத்திருக்கிறதினால் என்னைப் பக்ஷித்துப் பசி தீரும்" என்றது.

சிங்கம் "நீதான் எனக்கு எவ்வளவிரை? உன்னைப் பெரிதாக நினைத்துக் கொண்டிருக்கிறையோ?" என்று சொல்லிவிட்டது.

ஒட்டகம் இதைப் பார்த்து "சுவாமி! நான் இவர்களைக் காட்டிலும் பெருத்திருக்கவில்லையா? ஸித்தமா

*னல் என்னைக் கொள்ளலாம்" என்றது.*

*இதைக் கேட்டவுடனே புலியும் நரியும் பாய்ந்து விழுந்து அந்தக்ஷணமே, ஐயோ! அதைக்கொன்று எல்லாம் புஜித்தன.*

---

ஆகையால் எங்கே கீழ்மக்கள்களிருக்கிறார்களோ அங்கே ஸுகமிராது: பிராணனுக்கு நாசம் வருமென்றே நினைக்கவேண்டும்.

*இவ்விடத்திலும் அப்படியே இருக்கிறது. துஷ்டர்கள் கையிலகப்பட்டுச் சும்மா இறப்பதைக்காட்டிலும் சண்டைசெய்வதே யோக்கியம். ஒருவன் சண்டை முனையிற் செத்தால் சொர்க்கமடைகிறான். சத்துருவை ஜயித்தால் இராஜ்யமடைகின்றான். ஆதலால் சூரர்களுக்குச் சாவும் பிழைப்பும் ஸமானம்" என்றது.*

*அதைக்கேட்டுத் தமனகன் " பகைவர்களுடைய பராக்கிரமத்தை அறியாமல் எவன் பகைத்துக் கொள்ளுகிறானோ அவன் ஸமுத்திரம் சிட்டுக்குருவியினால் எப்படி அவமானம் அடைந்ததோ அப்படியே அவமானமடைவான்" என்றது.*

*அப்போது, "தம்பீ! அதெப்படி?" என்று ஸஞ்ஜீவகன் கேட்க,*

*தமனகன் சொல்லுகின்றது:—*

## VIII (2) சிட்டுக்குருவியால் ஸமுத்திரம் அவமானம் அடைந்த கதை

*" ஒரு ஸமுத்திரக்கரையில் இரண்டு சிட்டுக்கள் ஆணும் பெண்ணுமாய் ஒரு செடியின்கீழ்க் கூடுகட்டிக் கொண்டிருக்கும் போது, பெட்டை ஆண்பறவை*

யைப் பார்த்து "எங்கே முட்டையிடலாம்" என்று கேட்க, ஆண் "இதுவே நல்லவிடம்" என்று சொல்லிற்று. பெண் "இந்தக் கடற்கரையில் ஒருவேளை அபாயம் நேரிடும்" என, ஆண்சிட்டு "ஸமுத்திரத்திற்கு என்னுடனே பகைத்துக்கொள்ள ஸாமர்த்திய மில்லை" என, பெண் "உனக்கும் ஸமுத்திரத்திற்கும் வெகு தார தம்மியம் இருக்கிறதே. எவன் தன்வலியும் பிறன்வலியும் பார்க்கிறதில்லையோ, அவன் விபத்தையடைவான்; எவன்பார்க்கிறானோ அவன்ஸுகமடைவான். மேலும் தனக்கு ஹிதம்பண்ணுகிற மித்திரன் பேச்சைக் கேளாதவன், ஆமை எப்படிக் கழியின் பிடிப்பைவிட்டு மரணம் அடைந்ததோ அப்படியே மரணமடைவான்" என்றது.

ஆண் "அதெப்படிப் பெண்ணே! சொல்" என, பெட்டைக் குருவி சொல்லுகின்றது :—

## VIII. (2) (i) ஆமை பிடிப்புவிட்டு மாண்ட கதை.

"விகடம் ஸங்கடம் என்னும் இரண்டன்னங்களும் கம்புக்கிரீவனென்னும் ஆமையும் சிநேஹமாய் ஒரு குளத்தில் வாழ்ந்துகொண்டிருக்கையில், அன்னங்கள், மழை பெய்யாமையால் குளம் வற்றிப்போமாகையால் இனி வேறொரு குளத்திற்குப் போய்ச்சேர்வது தகுதியென்று நினைத்து இதை நம்முடைய சிநேஹிதனுக்கும் சொல்லவேண்டுமென்று ஆலோசித்து அப்படியே அதற்குச் சொல்லிவிட்டன. அப்போது கம்புக்கிரீவன் "நீங்கள் சிறகினாற் பறந்துபோவீர்கள். நான் வேறோரிடத்திற்கு எப்படிப் போவேன்" என, விகட ஸங்கடர்கள் "எங்கள் வார்த்தையில் நம்பிக்கைவைத்து

ஸ்திரமாய் இருப்பையானால் உன்னையும் கொண்டு போவோம். போகும்வழியில் நீ யாதொன்றும் பேசாமல் இருந்தால் பிழைக்கக்கூடும்" என்றன. பின்னர், ஒரு கழியைக்கொண்டுவந்து ஆமையைப்பார்த்து "இந்தக் கழியைப் பல்லினாலே பலமாய்க்கடித்துப் பிடித்துக் கொள்; விட்டுவிடாதே. நாங்களிருவரும் இதை இரு புறத்திலும் மூக்காற்கௌவிக்கொண்டு ஆகாசமார்க்கமாய்ப் போகிறோம்" என்று சொல்லி அந்தக் கொம்பை இரண்டும் பற்றிக்கொண்டு எழும்பிப் பறந்து போயின.

இதைக் கீழிருந்த ஓரூரிலுள்ள ஜனங்கள் பார்த்து அதிசயித்து நகைத்து எல்லோருமொருமிக்க 'இதென்ன! ஒரு கழியை இரண்டு பறவைகள் தூக்கிக் கொண்டு அதில் ஒரு ஆமையையும் தூக்கிக்கொண்டு போகின்றன' என்றிப்படிப் பேரிரைச்சலிட்டுப் பேசினார்கள். அதைக்கேட்டுக் கம்புக்கிரீவன் இந்த இரைசசல் எங்கிருந்துண்டாகிறதென்று கேட்பதற்கு வாய் திறந்தவுடன் கழியினின்று விடுபட்டுப் பூமியில் விழுந்தது. உடனே அங்கேயிருந்த மாமிசபக்ஷிணிகள் அதைக் கொன்று தின்றார்கள்.

ஆகையால் தனக்கு ஹிதம் சொல்லுகிறவர்கள் பேச்சை அசட்டை பண்ணலாகாது.

மேலும் யாதொரு காரியம் நேரிடுவதற்கு முன்னமேயே ஆலோசிக்கிறவனும், வருகிறபோது ஆராய்கிறவனும் ஸுகமடைவார்கள். இதைவிட்டுயாதொன்று வரத்தக்கதோ அது வரட்டுமென்று எவன் சும்மாவிருக்கிறானோ, அவன் வந்தபின் காப்போனென்னும்

மீனைப்போல் நாசமடைவான்" என்றது.

சேவல் "அதெப்படி" என,

பெட்டைச்சிட்டுச் சொல்லுகின்றது:—

VIII. (2) (ii) வந்தபின் காப்போன் கதை.

"ஒரு பெரிய குளத்தில் வருமுன் காப்போனென்றும், வருங்காற் காப்பவனென்றும், வந்தபின் காப்பவனென்றும் மூன்று மீன்கள் அநேக நாளாய் வாழ்ந்துகொண்டிருந்தன. ஒருநாள் வலைக்காரர் வந்து இதில் தண்ணீர் கொஞ்சமாயிருக்கிறபடியால் நாளை வந்து இதிலுள்ள மீன்களையெல்லாம் பிடிப்போமென்று பேசிக்கொண்டதை வருமுன் காப்பவன் கேட்டுத் தன் சிநேகிதரிடத்திற்குப் போய் "நாமிவ்விடம் விட்டுச் சீக்கிரமாகப் புறப்பட வேண்டும், இனி இங்கே ஒரு நிமிஷநேரமும் தங்கலாகாது" என்றது. அதைக்கேட்டு வருங்காற் காப்பவன் "நமக்கு விபத்து வரும்போது பார்த்துக்கொள்வோம், காரியம் நேரிடும்போது அதற்குத் தக்கதாகப் புத்தியுண்டாகும்" என்றது. பிறகு வந்தபின் காப்பவன் "தன்னிடத்தை விட்டுவிடுகிறது மிகவும் மூடத்தனம். எது வரத்தக்கதோ அது வந்தேதீரும்; யாதொன்று வரத்தகாததோ, அதை நாம் வருந்தி அழைத்தாலும் வாராது. ஆதலால் நான் வரமாட்டேன்" என்று சொல்லி அந்தக்குளத்திலேயே இருந்தது. பிறகு வருமுன் காப்பவன் வேறிடத்துக்குப் போய்விட்டது.

மறுநாளுதயத்தில் செம்படவர் வந்து வலையெறிந்து மீன்களைப் பிடித்தார்கள். அதில் வருங்காற் காப்பவன் அகப்பட்டுச் செத்தாற்போலப் பாசாங்கு

பண்ணிக் கொண்டிருந்தது. அதைப்பார்த்து இது செத்ததென்றெண்ணிச் செம்படவர்கள் அதைக் கரையின்மேல் போட்டுவைத்தார்கள். உடனே அது அவர்கள் கண்ணுக்குத்தப்பித் தண்ணீரில் புகுந்து ஒளித்துக்கொண்டது. பிறகு வந்தபின் காப்பவன் வலைக்குள்ளகப்பட்டு இப்போதென்ன செய்யலாமென்று அங்குமிங்குமோட, இதை அவர்கள் பார்த்துத் தடியாலடித்துக் கொன்றார்கள் மற்றிரண்டும் ஸுகமடைந்தன.

---

ஆகையால் எதையும் ஆலோசித்துச் செய்யவேண்டும் என்று சொல்லிற்று.

பிறகு புருஷன் சொற்படி அவ்விடத்திலேயே முட்டையிட்டது.

அப்பொழுது ஸமுத்திரம் அதன் வல்லமையை அறியாமல் முட்டைகளை அடித்துக்கொண்டு போயிற்று. அதைப்பார்த்துப் பெண் சிட்டு வெகு துக்கமாய்ச் சேவலுடன், சுவாமீ! நமக்குப் பெரிய ஸங்கடம் நேரிட்டிருக்கிறது; முட்டைகளை ஸமுத்திரம் கொண்டுபோயிற்று; இப்போது என்ன செய்யலாம்? என, சேவல் "நீ பயப்படாதே, நான் முட்டைகளைக் கொண்டுவருகிறேன், என் வல்லமையைப பார்" என்று சொல்லி, எல்லாப்பறவைகளையும் கூட்டிக்கொண்டுபோய் கருடனைச் சரணம் அடைந்தது.

கருடன் அதை விஷ்ணுவுக்கு அறிவித்து "இப்பறவை மிகவும் வருத்தப்படுகிறது; ஆகையால் இதன் முட்டைகளைக் கொடுப்பிக்கவேண்டும்" என, மஹாவிஷ்ணு ஸமுத்திரத்தைப் பார்த்து "இதன் முட்டை

களைச் சீக்கிரமாய்க் கொடு" என்று கட்டளை இட்ட வுடனே, ஸமுத்திரம முட்டைகளைக் கொண்டு வந்து கொடுத்தது.

ஆகையால் சத்துருக்களுடைய பராக்கிரமத்தை அறியாமல் பகைத்துக்கொள்ளலாகாது.

"அது அந்தச சிங்கத்திற்கு அகங்காரத்தினுல் தெரியவில்லை" என்றது.

இதைககேட்டு ஸஞ்ஜீவகன் தமனகனைபபார்த்து "நல்லது, அந்தச சிஙகத்தின் சண்டைக்குறிப்பு எப படியிருககும சொல ?" என்றது.

தமனகன் "எபபோது அவன் காதுகளை நெரித் துக்கொண்டு வாலைத தூககுவானே அபபோதுகொல்ல நினைததானெனறு அறியவேண்டும. அககாலததிலப படியே நீயும அவனுககு முன்னே இருக்கவேண்டும; சுதத வீரனுகிய உனககுததெரியாதா ? எலலாநதெரிநத வாகளுககுச சொலவானேனை?" எனச சொலலிவிட்டுத தமனகன மறுபடியும கரடகனிடத்திறகுப போயிறறு.

அபபோது கரடகன் "என்னநடநதது சொல" என்று கேட்டது.

தமனகன் "காரியமமுடிநதது, இவருடைய சிநே ஹத்தின் வாயில மண்விழுநதது. இபபோது நான் சிஙகத்தின் கோபக்குறி இபபடியிருக்குமென்று ஸஞ்ஜீ வகனுக்குச சொன்னபடியே செய்விக்கிறேனென்று பிஙகளனிடத்திற்குபபோய் அபபடியே அதைசசெய் வித்தது.

பிறகு ஸஞ்ஜீவகன் சிஙகமிருக்கும இடத்திறகு

வந்து பார்க்கும்போது, தனக்குத் தமனகன் முன் சொன்னபடியே இருக்கக்கண்டு, மிகவும் விபசனமடைந்து, பராக்கிரமத்தினாலேயே பிராணனை விட வேண்டுமென்று நிச்சயித்து யுத்தத்திற்காரம்பிக்கவே இரண்டுக்கும் பெரிய சண்டை விளைந்தது.

## IX· கரடகன் புத்திகூறத் தமனகன் துக்கித்தது

கரடகன் அதைப்பார்த்து, "தமனகா! துஷ்டா! உன் சேர்க்கையால் ராஜாவுக்கும் சிநேஹிதனுக்கும் சண்டையுண்டாயிற்று. ராஜநீதியில், ஸாம தான பேத தண்டமென்னும் நான்கு உபாயங்கள் இருக்கின்றன. அவைகளில் ஸாமமென்னும் உபாயம் முக்கியமானது. அதனால் காரியஸித்தி உண்டாகிறதுபோல மற்றவைகளால் உண்டாகாது. பகையிருந்தாலும் ஸாமவுபாயத்தாலேயே போம். இப்படியிருக்கையில் நீ ராஜாவைப் பெரிய பொல்லாப்பில் வீழ்வித்தாய். ராஜாக்களில் சிலர் ஹீனர்களுடைய புத்தியைக் கேட்டு ஸங்கடம் அடைகிறார்கள். ஆகையால் குணவந்தர்களுடைய கூட்டுறவு ராஜாக்களுக்கிருக்கவேண்டும். கபடியாக விருக்கிற பிரதானி புத்திசாலியானாலும் அவன் ஒருபோதும் ராஜாவண்டையில் இருக்கலாகாது. மற்றும், தானே ஸம்பத்தை அடையவேண்டுமென்று நினைத்து, ராஜாவினிடத்தில் வேறொருவன் சேரலாகாதென்று நினைக்கிறவனும், ராஜாவுக்கு உபயோகியாகான். பலஸமர்த்தர்கள் ராஜாவிடத்திலிருந்தால், ராஜா பிரகாசிப்பான். ஆசைக்காரரும் துஷ்டருமாகிய இவர்களுடைய கூட்டுறவால் ராஜா பிரகாசிக்க மாட்டான். தன்னைத்தவிர ராஜாவினிடத்தில் வேறொ

ருவன் இருக்கலாகாதென்று எவன் எண்ணுகிறானோ அவனை ராஜாவுக்குச் சத்துருவென்று நினைக்கவேண்டும். அப்படியே நீ இந்தத் தீங்கு விளைத்தாய். யஜமானனுடைய தயை கிடைத்தால் ஸேவகர்கள் கர்வியாமல் மிகவும் அடக்கமாக இருக்கவேண்டும். நீ அதை விட்டு விபரீதமாக நடக்கிறாய். 'பிதாவைப்போல் இருப்பான் புத்திரன்' என்பதை நீ பொய்யாக்கினாய். இப்போது உனக்கு நானென்ன சொல்வேன்? கொக்கு குரங்குக்கு உபதேசம்பண்ணி எப்படி இறந்ததோ அப்படி உன்னாலே நான் மரணமடைவேனென்று எனக்குத் தோன்றுகிறது" என்று சொன்னது.

இதைக்கேட்டுத் தமனகன் "அதெப்படிச்சொல்" என,

கரடகன் சொல்லுகிறது:—

IX. (i) மூடர்களுக்கு புத்திகூறியவன் மாண்ட கதை

"ஒருநாள் குளிரால் வருத்தப்படும் குரங்குக் கூட்டம் மின்மினிப்பூச்சிக் கூட்டத்தைப்பார்த்து இது நெருப்பென்று நினைத்துக் குளிர்காய்வதற்காக அதன் அருகே போயிற்று. அப்போதங்கே ஒரு மரத்தின் மேலிருந்த ஸூசீமுகனென்னும் ஒரு கொக்கு இதைப் பார்த்துக் குரங்கினருகே வந்து, "இது மின்மினிப் பூச்சி, நெருப்பன்று" என்று சொன்னவுடனே அந்தக் குரங்குக்கூட்டத்தில் ஒன்று கோபித்து அந்தப் பக்ஷியைப்பிடித்து "நீ எனக்குப் புத்திசொல்லுகிறவனா?" என்று கல்லிலறைந்து கொன்றது.

ஆகையால் “ துஷ்டர்களுக்கு உபதேசம் பண்ண லாகாது” என்றது.

தமனகன் ஒன்றும் பேசாமல் மௌனமாயிருந்தது. மனதில் மிகவும் விசனமடைந்து “ நான் இந்தப் பாதகம் பண்ணினேன்” என்று சொல்லிற்று.

மறுபடியும் கரடகன் “ அடா தமனகா! இப்படிப்பட்ட நடத்தையினாலே துஷ்டபுத்தியைப்போல் நீயும் நாசமடைவாய்” என்றது.

தமனகன் “ துஷ்டபுத்தி எப்படிக் கெட்டான் சொல்” என,

கரடகன் சொல்லத் தொடங்கினது.—

## IX. (2) துஷ்டபுத்தி திண்டாடிய கதை

“ துஷ்டபுத்தி, ஸுபுத்தி என்றிரண்டு செட்டிப் பிள்ளைகள் திரவியம் ஸம்பாதிப்பதற்காகத் தேசாந்தரம் போனார்கள். அவ்விடத்தில் ஸுபுத்திக்குப் பூமியில் ஒரு பணப்புதையல் அகப்பட்டது. அதைச் சிநேஹத்தினாலே துஷ்டபுத்திக்குடனே சொல்ல, துஷ்டபுத்தி “ அந்தத் திரவியத்தை இங்கேயே புதைத்து வைத்துக் கொஞ்சம் பணமெடுத்துக்கொண்டுபோவோம்” என ஸுபுத்தி சிநேஹிதத்தினால் அதற்கு ஸம்மதித்தான். பிறகு அதிற் கொஞ்சம பணமெடுத்துக்கொண்டு மற்றைப்பணத்தை ஒரு மரத்தடியில் பள்ளந்தோண்டி அதிலே புதைத்துவைத்துப் பின்பு வீடுக்குப்போய் பழையபடி சிநேஹமாயிருந்தார்கள்.

ஒருநாள் துஷ்டபுத்தி தனியேபோய் அந்தப் பொருளையெல்லாம் எடுத்துக்கொண்டு வீட்டுக்குவந்து விட்டான். பிறகு சில நாட்கழித்துத் துஷ்டபுத்தி

ஸுபுத்தியைப் பார்த்து "அந்த திரவியத்தைக் கொண்டு வருவோம் வா" என்றான். இருவரும்போய் அந்தவிடத்தில் பார்க்குமளவில் அங்கு ஒன்றுமில்லாமையால் துஷ்டபுத்தி மிகவும் வருத்தத்தோடு ஸுபுத்தியைப் பார்த்து "இங்கிருந்த பணத்தை நீயே கொண்டு போனாய், மேலும் கபடமாய் வருத்தப்படுகிறாய்" என்று சொல்லிக் கலஹப்பட்டு, இதை ராஜாவுக்கு அறிவித்தான்.

பிறகு ராஜா நியாயாதிபதியை அழைப்பித்து "இதைப் பஞ்சாயத்தில் தீர்க்கவேண்டும்" எனக்கட்டளையிட, அவன் "ஐந்து நாளைக்குள்ளே தீர்த்துப் போடுகிறேன்" என்று ராஜாவின் முன்னே கெடுவைத்துக்கொண்டு வந்து பஞ்சாயத்துக்கு ஆரம்பித்தான். அப்போது துஷ்டபுத்தி "எனக்குச் சாக்ஷியிருக்கிறது அந்தச் சாக்ஷியை இப்போதே கேட்கலாம்" என, பஞ்சாயத்தார் "உன் ஸாக்ஷியைக்கொண்டுவா" என்றார்கள்.

பின்பு துஷ்டபுத்தி தன் வீட்டுக்குப்போய்த் தன் தகப்பனுடனே சொல்லுகிறான், "அப்பா உன்னுடைய ஒருபேச்சால் எனக்குப் பதினாயிரம் வராகன் வரைக்கும் கிடைக்கும்" என்றான்.

கிழவன் "எப்படிக்கிடைக்கும் சொல்" என்று கேட்டான்.

துஷ்டபுத்தி 'நீர் மரப்பொந்தில் இராத்திரிக்குப் போய் உட்கார்ந்திருக்கவேண்டும்; அங்கே நியாயாதிபதி முதலானோர் வந்து அங்கிருந்த பணத்தை யார் கொண்டு போனார்களென்னும்போது, நீர் ஸுபுத்தி

கொண்டு போனுனென்ருல் என் காரியமாகும்" என்ருன்.

இதைக்கேட்டுப் பிதா "பொல்லாங்கு நேரிடக் கூடிய காரியத்தைச்செய்து ஸுகமடைய வேண்டு மென்று இச்சிக்கிறது கொக்கைபோல் மூடத்தனமாயிருக்கிறது" என்ருர்.

துஷ்டபுத்தி "அதெப்படி?" என,

பிதா சொல்லுகிறுன் :—

## IX. (2) (i) தீமையால் தீமை விளைந்த கதை

"தான் பொரிக்கும் குஞ்சுகளையெல்லாம் ஒரு பாம்பு தின்னப் பறிகொடுத்துக்கொண்டு வந்த ஒரு மூடக்கொக்கு அப்போது பொரித்த தன் குஞ்சுகளைக் காப்பாற்றுகிறதைக் குறித்து என்ன செய்யலாமென்று பெண்கொக்கோடு ஏரிகரையிலுட்கார்ந்து ஆலோசனை செய்துக்கொண்டிருந்தது. அப்போது அக்கொக்கின் சிநேஹிதனை குளிரனென்றும் பெயரையுடைய நண்டானது கொக்குகளைப் பார்த்து "இன்றைக்கேன் நீங்கள் வியாகுலமாய் இருக்கிறீர்கள்', என, அவைகள் தங்கள் விருத்தாந்தமெல்லாம் சொல்லிவிட்டன. குளிரன் அதைக்கேட்டு ஆண்கொக்கைப் பார்த்து, "நல்லது உனக்குப் பாம்பைக்கொல்லுகிற உபாய மொன்று சொல்லுகிறேன்; கீரிப்பிள்ளையின் வளை முதற்கொண்டு பாம்பிருக்குமிடமட்டும் மீன்களை இறைத்துவைத்தால் காரிய ஸித்தியாகும்" என்றது.

பிறகு கொக்கு அப்படியே செய்யக் கீரிபிள்ளை தன் வளையினின்றும் புறப்பட்டு மீன்களைத் தின் கொண்டேபோய் பாம்பையுங்கடித்து எறிந்துவிட்

கொக்கின் குஞ்சுகளையும் தின்றுவிட்டது.

---

ஆகையால் கெட்ட ஆலோசனை பண்ணலாகாது எனத் துஷ்டபுத்தி பிதா சொன்னான்.

இதைக்கேளாமல் அவனை வலுவிலிழுத்துக்கொண்டு போய்,மரப்பொந்தில் உட்காருவித்து,விடியற்காலத்தில் நியாயாதிபதி முதலானபேர்களையும் ஸுபுத்தி முதலியோரையும் அவ்விடத்திற்குக் கொண்டுபோய் "ஸாக்ஷி இந்த மரத்தைக் கேளுங்கள்" என்றான். அப்போது அந்த மரத்திலிருந்து 'இங்கிருந்த பணமுழுதும் ஸுபுத்தியே கொண்டுபோனான்' என்றொரு சத்தம் புறப்பட்டது.

ஸுபுத்தி, இதென்ன மோசமாயிருக்கிறது; இங்கே ஒரு பிராணியுமில்லாமலிருக்கத் தொனி எங்கிருந்து புறப்பட்டது? இது தெய்வீகமாக இருந்தால் மெய்யல்லவோ சொல்லவேண்டும் என்றிப்படித் தனக்குள் எண்ணிக்கொண்டு அந்த மரத்தின்மேல் ஏறிச் சோதிக்கையில்அதிலொரு பொந்துகாணப்பட்டது. உடனே இங்கே கிருத்திரமமிருக்குமென்று எண்ணி அங்கே நெருப்பை மூட்டிப் பற்றுவித்தான். உள்ளேயிருந்த கிழவன் பாதி வேகிறமட்டும் பல்லைக் கடித்துக்கொண்டிருந்து, பொறுக்கமுடியாமல் அலறிக்கொண்டு வெளியே வந்து விழுந்தான். அப்போது அங்கிருந்தோரெல்லோரும் இதென்ன இதென்ன என்று கேட்கக் கிழவன் "என் பிள்ளை துஷ்டபுத்தி கபடத்தினால் என்னைப் பலாத்காரமாகக் கொண்டுவந்திங்கே வைத்தான்" என்று சொல்லி இறந்து போனான்.

நியாயாதிபதி இதைப்பார்த்து, ராஜாவுக்கு விண்ணப்பம் பண்ணப் பிறகு துஷ்டபுத்தி வாயினாலேயே ராஜா எல்லாம் அறிந்துகொண்டு அவனைக் கழுவிலேற்றினான் என்று சொல்லிற்று.

கரடகன் தமனகனைப்பார்த்து "பாம்பை வெகு நாள் வளர்த்தாலும், அதெப்படியும் வளர்த்தவனையே கடிக்கும்; ஆகையால் எனக்கு உன்னிடத்தில் பயம் தோன்றுகின்றது. இனிமேல் உன்னிடத்தில் தேவதத்தனைப்போல் நடந்துகொள்ளவேண்டும்" என்றது.

இதைக்கேட்டுத் தமனகன் "தேவதத்தன் எப்படி நடந்துகொண்டான் சொல்" என

கரடகன் சொல்லுகிறது:—

## IX (3) இரும்பை எலி தின்ற கதை.

"ஒரு பட்டணத்தில் தேவதத்தன் என்னுமொரு ஸாவகாரி தான் திரவியஹீனனாய்ப் போனதினால் மறுபடியும் திரவியம் ஸம்பாதிக்க நினைத்துத் தேசாந்தரம் போகப் புறப்படும்போது, தன்வசத்திலிருந்த ஆயிரம் இருப்புக்கம்பிகளையும் அவ்விடத்திலிருந்த தன் சிநேஹிதனிடத்தில் வைத்துவிட்டுப் போனான். போனவிடத்தில் திரவிய ஸம்பாத்தியத்தைக் குறித்து அநேக உபாயம் பண்ணியும், பண மகப்படாமையால் மீண்டும் வீட்டுக்குவந்து சிநேஹிதனிடம் தான் வைத்துவிட்டுப் போன தன்னுடைய இருப்புக்கம்பிகளைக் கேட்டான். அவன் மிகுந்த துராசையினால் ' இருப்புக்கம்பிகளை எலிகள் தின்றுவிட்டன ' என்றான். இந்த அஸம்பவிதத்தைக் கேட்டு "நல்லது, இருக்கட்டும் என்று

சொல்லி வீட்டுக்குப்போனான்.

பிறகு ஒருநாள் சிநேஹிதன் பிள்ளையை விளை பாடுகிறதற்காக அவனிடத்திலிருந்து அழைத்துக் கொண்டுபோய் வேறொருவீட்டில் ஒளித்து வைத்துப் பின்பு சிநேஹிதனிடத்தில் வந்து உட்கார்ந்தான். அவன் 'உன்னிடத்திலிருந்த என்பிள்ளை எங்கே?' என, ஸாவகாரி 'உன் பிள்ளையைப் பறவை தூக்கிக் கொண்டுபோயிற்று' என்றான். இதை அவன் கேட்டு மிகவும் கிலேசப்பட்டு அவனை இழுத்துக்கொண்டு ஊரதிகாரியிடத்துக்குப் போய், 'இந்தத்துஷ்டன் என் பிள்ளையைக் கொண்டுபோய் ஒளித்துவைத்து விட்டுப் பிள்ளையைப் பக்ஷி எடுத்துக்கொண்டு போயிற்று என்கிறான்; ஆகையால் என் பிள்ளையை எனக்குக் கொடுப்பிக்கவேண்டும்' என்றான்

அதிகாரி இதைக் கேட்டு ஸாவகாரியை அழைத்து இவன் பிள்ளை எங்கேயிருக்கிறது சொல்' என, அவன் 'இவன் பிள்ளையைப் பக்ஷி கொண்டுபோயிற்று' என்றான்.

அதிகாரி இதைக் கேட்டு குலுங்க நகைத்து, இந்த அஸம்பவம் இதுவரைக்கும் உலகத்திலில்லை, அப்படி இருக்க, நீ எப்படிச் சொல்லுகிறாய்?' என, அப்போது அவன் 'இது ஓராச்சரியமா? எப்படி இருப்புக்கம்பிகளை எலிகள் தின்றுவிட்டனவோ அப் படியே இதுவும் ஸம்பவித்தது ஆண்டவனே' என் றான். இதைக்கேட்டு நியாயாதிபதி முன்நடந்தவைகளை விசாரித்தறிந்துகொண்டு "அவனுடைய இருப்புக்கம்பி களை நீ கொண்டுவந்துகொடுத்தால் அவன் உன் பிள்

ளையைக் கொண்டுவந்துகொடுப்பான்" என்றவுடனே அவ்விருவரும் அப்படியேசெய்து தங்கள் வீட்டுக்குப் போனார்கள்" என்று இப்படிப்பட்ட கதைகளைச் சொல்லிற்று.

---

பின்னும் தமனகனுக்குக் கரடகன். "சொன்ன பொருளைத் தெரிந்து கொள்ளாதவன் கல்லுக்கு ஸமானம்; அவனுக்கு உபதேசித்தும் பலனில்லை" என்று சொல்லி முடித்தது.

கரடக தமனக நரிகளிரண்டும் பிங்களனிடத்திற்குப் போகும்போது, சிங்கம் ஸஞ்ஜீவகனோடுகூடச் சண்டைசெய்து அதைகொன்று விட்டு வியசனமாய் உட்கார்ந்திருந்தது.

## தமனகன் சிங்கத்தைத் தேற்றியது.

இதைக்கண்டு தமனகன் ராஜாவைப்பார்த்து. "சுவாமீ! தாங்கள் சத்துருவைக்கொன்று துக்கப்படுகிறீர்கள். இது நியாயமல்லவே, சத்துருவைக் கொல்ல வேண்டும் என்று சாஸ்திரம் நக்கிறது. பிதாவானாலும் பந்துவானாலும், புத்திரனானாலும், மித்திரனானாலும் இவர்களில் எவன் தன்னைக்கொல்லப் பிரவர்த்திக்கிறானோ அவனை ராஜா கொல்லவேண்டும்; ஸ்வதந்தரமாய் நடக்கிற பெண்சாதியும் துஷ்ட சிநேகிதனும் விபரீத சேவகனும் அஜாக்கிரதையான மந்திரியும் நன்றியறியாதவனும் இருக்கலாகாது. மேலும் மெய் பொய், கடுமை, மென்மை, கொலை, தயை. உதாரத்துவம், பலவழியாகத் திரவியம் ஸம்பாதித்தல், பலருடைய சிநேகமும் இப்படிப்பட்ட பலகுணங்கள் ராஜா

வுக்கு இருக்கவேண்டும் என்று ராஜநீதியில் இருக்கின்றன ; அப்படியே தாங்கள் இது செய்தீர்கள்" என்று சொல்லித் தமனகன் சிங்கத்தை ஸந்தோஷிப்பித்தது.

பிறகு சிங்கம் அந்தக் காட்டில் முன்போலத் தன் இராஜ்ஜியத்தை அநுபவித்துக்கொண்டு ஸுகமாயிருந்தது."

மித்திரபேதம் முற்றிற்று.

இரண்டாவது

## சுகிர்ல்லாபம் அல்லது நட்புப்பேறு.

### I. சுருக்கம்

"புத்திசாலிகளா யிருக்கிற சிநேஹிதர்கள் திரவி யம் இல்லாதிருந்தாலும், வேறே ஸாதனங்கள் இல்லா விட்டாலும் காகமும் எலியும் ஆமையும் மானும் நட்பி னால் ஒன்றையொன்று காப்பாற்றினாற்போல ஒருவர்க் கொருவர் உதவுவார்கள் என்று ஸோமசர்மா சொல்ல, ராஜகுமாரர்கள் "அதெப்படி?" என்று கேட்க அவன் சொல்லத் தொடங்கினான்:—

### II காகம் புறாக்கள் மூலமாக எலியைக் காணுதல்

"கோதாவரிக் கரையில் ஒரு பெரிய வன்னிமரத் தில் லகுபதனன் என்னும் காகம் வாஸஞ்செய்து கொண்டிருக்கையில் ஒருநாள் விடியற்காலத்தில் அங்கே யமனைப்போல மிகவும் பயங்கரமான ஒரு வேடன் வந் தான். லகுபதனன் அவனைப்பார்த்துப் பயந்து இந் தத் துராத்மா என்ன செய்வானோ தெரியவில்லை; ஆகையால், இதைச் சோதிக்கவேண்டும் என்று இரை தேடுகிற யத்தனத்தை விட்டிருந்தது. இதற்குள்ளே அவ்வேடன் வலையை விரித்துப் பலவகைத் தானியத் தைத் தெளித்து அங்கே ஓர் செடிமறைவில் பதுங் கிக்கொண்டிருந்தான்.



புறாக்கள் வலையைத் தூக்கிக்கொண்டு பறப்பது

—55-ம் பக்கம் பார்க்க

அப்போது தன் பரிவாரத்தோடு அந்த மரத்தில் வந்திறங்கின சித்திரக்கிரீவனென்னும் புறாவரசு அங்கே இறைத்திருந்த தானியத்தைப் பார்த்துத் தன் பரிவாரப் புறாக்களை நோக்கி "இந்த நிர்மானுஷியமான காட்டில் தானியம் எப்படி வரும்? யாராகிலும் கொண்டுவந்து போட்டிருக்கவேண்டும்; இது நமக்குத் தெரிந்தாலன்றி நாம் இதைப்பக்ஷிக்கலாகாது. ஒருபிராமணன் பொற்காப்புக்கு ஆசைபட்டுப் புலியினலெப்படி மாணமடைந்தானே அப்படியே நாமும் ஒரு விபரீதமான துன்பமடைவோ மெனத் தோற்றுகிறது" என்றது.

புறாக்களதைக் கேட்டு "அதெப்படி மஹாராஜாவே" என,

சித்திரக்கிரீவன் சொல்லுகிறது :—

II. (1) பிராமணன் காப்புக்கு ஆசைப்பட்டு இறந்த கதை

"நான் தென்காட்டில் மேய்ந்துகொண்டிருக்கையிற் பார்த்தேன்; அதைக் கேளுங்கள்.

ஒருகிழப்புலி பலவீனத்தால் ஆஹாரம் ஸம்பாதிக்கக் கூடாமல் ஓர் ஏரிகரையில் நீராடிக் கையில்தருப்பை வைத்துக்கொண்டு உட்கார்ந்திருக்கையில் ஒரு பிராமணன் அந்த வழியில் வந்தான்.

புலி அவனைப்பார்த்து, ஓ பிராமணா! இந்தப பொற்காப்பைத் தருகிறேன் வா' என்றது.

இதைக்கேட்டு அந்தப பிராமணன் அப்புலியைப் பார்த்து இந்தக்காப்பு நமக்கு வலியக் கிடைக்கிறது, மாணத்துக்கிடமாகிய புலியின்கிட்டப் போகலாகாது, ஆகையால் இந்தக் காப்பிலாசை வைக்கலாகாது என்போமானல், மாணத்துக்கு நாலண்டையும் வழியாகை

யால், இதை அடையப் பிரயத்தனம் அவசியம் பண்ண வேண்டுமென்று தன் துராசைக்கேற்பத் தனக்குள்ளே ஆலோசித்து நிச்சயித்துக்கொண்டு புலியைப்பார்த்து. "ஐயா புலியாரே! காப்பு எங்கே இருக்கிறது?" என்றான்.

புலி கையில் வைத்துக்கொண்டு 'இதோ பாரும் பிராமணோத்தமா' எனக் காண்பித்தது.

பிராமணன் 'உன்னிடத்தில் எனக்கு எப்படி நம்பிக்கை?' என்றான்.

புலி 'நான் வைகறையில் மூழ்கி நித்தியதானம் பண்ணிக் கொண்டிருக்கிறேன். நகமும் பல்லும் போன கிழவனாயிருக்கிறேன். இப்போதும் என்னிடத்தில் நம்பிக்கை இல்லையா? வேட்டல், ஓதல், கொடுத்தல், தவம், ஸத்தியம், உறுதி, பொறுமை, ஆசையின்மை என்னும் இவ்வெட்டுக் கருமங்களையும் நான் அறிந்திருக்கிறதனால் இந்த அபூர்வ வஸ்துவை யாருக்காகிலும் கொடுக்க இச்சிக்கிறேன். இதனாலே என்னிடத்தில் நற்குண மிருக்கிற தென்றும் எவ்வளவானாலும் துற்குண மில்லையென்றும் அறியவில்லையா? என்றது.

அப்போது பிராமணன் "இது மெய்தான்: ஆனாலும் புலி மனிதனை அடித்துத் தின்னுகிற தென்று மிகவும் லோகாபவாத மிருக்கிறது" என்றான்.

புலி "நான் தருமசாஸ்திரமும் அறிந்திருக்கிறேன். தம் பிராணன் தமக்கு எப்படித் தித்திப்போ, அப்படியே எல்லார்க்கும் இருக்குமென்று அறிந்து ஸாதுக்கள் பிராணிகளிடத்தில் தயையாயிருக்கிறார்கள்

தன்னைப்போல ஸகல ஜந்துக்களைப் பிறரிடத்தில் நினைக்கிறார்கள். நீ மிகவும் தரித்திரனாகையால் உனக்குக்கொடுக்க யத்தனிக்கிறேன். சாஸ்திரமும்இப்படியேயிருக்கிறது. எப்படியும் ஏழைக்கே கொடுக்கவேண்டும், செல்வமுள்ளவனுக்குக் கொடுக்கலாகாது. மருந்து நோயாளிக்கு எப்படி குணம் செய்யுமோ அப்படி நோயில்லாதவனுக்கு ஆகுமா? நீ இந்த ஏரியிலே முழுகி வந்து காப்பை வாங்கிக்கொண்டு வீட்டுக்குப்போ" என்றது.

ஐயோ! பிராமணனுக்குப் பின்புத்தியாகையால், பிராமணன் புலியின் பேச்சை நம்பி ஸ்நானம்பண்ணுகிறதற்கு ஏரியிலிறங்கினவுடனே, உளையிற்புதைந்து காலைப்பிடுங்கிக்கொண்டு வரக்கூடாமல் திகைத்தான்.

புலி அதைப்பார்த்து, "பிராமணா பயப்படாதே, நானுன்னைச் சேற்றினின்றும் விடுவிக்கிறேன், சற்றிரு" என்று சொல்லிக்கொண்டு மெள்ளப்போய் அவனைப் பிடித்துக்கொண்டது.

அப்போது பிராமணன் எண்ணமிடுகிறான்: துஷ்டர்கள் வேதாத்தியயனம் பண்ணியிருந்தாலும் தருமசாஸ்திரம் அறிந்திருந்தாலும் அவர்கள் வார்த்தையில் நம்பிக்கை வைக்கலாகாது. அவன் சுபாவம் எப்படியோ அதெப்போதும் போகாது. இப்படியிருக்கையில் எனக்கு இயல்பாயிருக்கிற பேராசையால் நான் இந்தத் துஷ்டனிடத்தில் நம்பிக்கை வைத்து மோசம் போனேன் என்று, இப்படிப் பச்சாத்தாபப்பட்டுக்கொண்டு இருக்கையில், அந்தப்புலி அவனைக்கொன்று தின்றது.

ஆகையால் மிகவும் ஆலோசனைபண்ணி யாதொன்று செய்யத்தக்கதோ அதைச் செய்யவேண்டும்.

அப்படிச்செய்தால் யாதொரு தீங்கும் நேரிடாது என்று சித்திரக்கிரீவன் சொன்னது.

இந்த வார்த்தையைக் கேட்டு ஒரு புறு கர்வத்தோடு "இப்படி ஆலோசித்தால் ஆகாரமும் நமக்குகப் படாது. மேலும் வெட்கப்படுகிறவன், பொறுமையுள்ளவன், ஸந்தோஷப் படாதவன், குரோதமுள்ளவன், நீரா ஸந்தேகமுள்ளவன், பிறர் பொருளால் ஜீவிக்கிறவன், இவ்வறுவரும் துக்கத்தையே அனுபவிப்பார்கள்" என்றது.

இதைக் கேட்டுப் புறுக்களெல்லாம் தானியத்தைத் தின்னும் பொருட்டுப் போய் நிலத்திலிறங்கி வலையிலகப்பட்டன.

புறுவரசன் அதைப்பார்த்து "எல்லாரும் என் சொல்லைக் கேளாமல் போனார்கள். இப்போது நான் ஒன்றியாயிருந்து பலனில்லை" என்றுசொல்லி அதுவும் வலையில் வந்து அகப்பட்டது.

பிறகு வேடன் பக்ஷிகளெல்லாம் வலையில் சிக்கிக்கொண்டதைப் பார்த்து அதனிடத்திற்கு வரத்தொடங்கினான்.

அதைப் புறுக்கள் கண்டு, சித்திரக்கிரீவனைப் பார்த்து, "நாங்கள் நீசன்புத்தியைக்கேட்டு உன்னை அவமானம் பண்ணினோம். அதன் பலன் பிராப்தியாயிற்று" என்றன.

அப்போது சித்திரக்கிரீவன் "இப்போது இதைச் சொல்லிப் பயனென்ன? இதற்கு ஓர் உபாயம் இருக்

றது. எல்லோரும் வலையோடுகூட ஒருமிக்கப்பறந்து வேறிடத்திற்குப் போகவேண்டும்; அப்படிச்செய்தால் ன் பிராணனைக் காப்பாற்றலாம்" என்றது.

இதைக் கேட்டவுடனே எல்லாப் பறவைகளும் வலையோடுகூட ஜடிதியிற் பறந்துபோயின. அதை வேடன் தூரத்திலிருந்து பார்த்து ஆச்சரியப்பட்டு, றவைகள் ஒரேமனதாய் வலையைக் கொண்டுபோயின. னாலும் இவைகளுக்கு ஒன்றுக்கொன்று சண்டை நேரிடும், அப்போது தன்கையிலகப் படுமென நினைத் துக்கொண்டு அவைகளின் பின்னே ஓடும்போது புறாக் ள் கண்ணுக்கு மறைந்துபோய்விட்டன.

பிறகு அவன் வருத்தப்பட்டுத் திரும்பி வந்துவிட் ான்.

இவ்வாச்சரியமெல்லாம் பார்த்திருந்த லகுபதன னென்னும் காகம் அந்தப் புறாக்களின் பின்னே தானும் போயிற்று. கபோதராஜா தன் கூட்டத்தைப் பார்த் துக் "கண்டகி நதிதீரத்திலிருக்கும் சித்திரவனத்தில் என் சிநேகிதனை ஹிரணியகன் என்னும் ஓர் எலியரா சன் இருக்கிறான். அவன் பல்லினாலே நம்முடைய வலையை அறுப்பான். அங்கே போங்கள்" என, அதைக்கேட்டு அப்படியே எலியரசன் வளையண்டை இறங்கின. அப்போது ஏதாவது ஆபத்து நேரிடுமென் பதைக் குறித்துத் தன் வளைக்கு நூறுவழி செய்து கொண்டு உள்ளேயிருந்த எலியரசன் புறாக்களிறங்கின சத்தத்தைக்கேட்டுப் பயந்து அடங்கியிருந்தது.

சித்திரக்கிரீவன், "சிநேகிதா! ஹிரணியகா! என் னோடு ஏன் பேசாமலிருக்கிறாய்?" என்றது.

இதைத் தன் சிநேஹிதனுடைய தீங்குரலென்று அறிந்து ஸந்தோஷத்தோடு சீக்கிரமாக வளையினின்றும் வந்து, "நான் புண்ணியவானானபடியால் சித்திரக்கிரீவ னென்னும் மித்திரன் என்வீட்டுக்கு வந்தான். இவ் வுலகத்தில் மனமொத்த மித்திரனோடு ஸம்பாஷிக்கிறதி லும் வேறே ஆனந்தம் ஏது என்று உபசாரஞ்சொல் லிற்று.

பிறகு அதனுடைய அவஸ்தையைப் பார்த்து மிக வும் துக்கித்து "மித்திரா! நீ எல்லாரைக்காட்டிலும் ஸமர்த்தனுச்சே, உனக்கு இப்படிப்பட்ட விபத்து எப் படி நேரிட்டது?" என்றது.

புறா "எந்தக்காலத்தில் எது நடக்குமோ அது நடக்கும், விதி வலிது. அதன் முன் யாருடைய உபா யம் நடக்கும்? கடல்பெருகி மேலிட்டால் அதற்குக் கரை யேது?" என்றது.

ஹிரணியகன் "இந்தப்பேச்சு மெய்யே; நூறு நாழிகை தூரத்திலிருந்து வஸ்துக்களைத் தெரிந்து கொண்டுபோகிற நீ இன்றைக்கு வேடன்வலையில் பாரா மல் சிக்கிக்கொண்டையே பார்; சந்திரர் ஸூரியர் களுக்கு ராகுகேதுக்களால் பீடை வருதலும், யானை யும் பறவையும் பாம்பும் கட்டுப்படுதலும், புத்திசாலி களுக்கு வறுமை வருதலும், தெய்வத்தின் மஹிமையே அல்லாமல் வேறல்ல" என்று சொல்லிச் சித்திரக்கிரீ வன் கட்டுண்டிருந்த வலையின் கயிற்றை அறுக்கத் தொடங்கிற்று.

அப்போது சித்திரக்கிரீவன் "மித்திரா! முன்னே என் பரிவாரத்தினுடைய கயிற்றை அறு; பிறகு என்

கட்டைத் துணி" என்றது.

இதைக்கேட்டு எலி "என் பல் மிகவும் மிருதுவானது, அதற்குப் பலமும் கொஞ்சம்! இவ்வெல்லாக் கட்டுக்களையும் நான் எப்படி அறுக்கக்கூடும். உன் தளையை அறுத்துப் பின்பு என் ஸாமர்த்தியத்துக்குத் தக்கதாக அவர்களுடைய தளையையும் அறுப்பேன்" என்றது.

சித்திரக்கிரீவன் "நல்லது முன்பு இவர்களுடைய பாசத்தை அறு" என்றது.

ஹிரணியகன் "தன்னைக் காப்பாற்றிக்கொண்டு பிறகு தன்பரிவாரங்களைக் காப்பாற்றவேண்டும். அறம் பொருள் இன்பம் வீடாகிய இவைகளுக்குப் பிராணன் முக்கிய ஸாதனமாகையால் அதைக் காப்பாற்றினால் எல்லாவற்றையும் காப்பாற்றினதுபோலாகிறது" என்றது.

சித்திரக்கிரீவன் "இந்த நீதி ஸரிதான்; ஆயினும் இப்படிப்பட்ட வேதனையினின்றும் பாலனம் பண்ணுகிறதற்கல்லவோ என்னை இவர்கள் ராஜாவாக நியமித்திருக்கிறார்கள்? ஆகையால் என் உயிரைக்காக்கும் இச்சையைவிட்டு இவர்களைப் பிழைப்பி" என்றது.

அதைக்கேட்டு எலி "நீ பரம ஸாது, அடுத்தவர்களை ஆதரிக்கிறவனாயிருக்கிறாய். யஜமானனிடத்தில் விசுவாஸமாயிருக்கிற ஸேவகனும், ஸேவகனிடத்தில் பிரீதியாயிருக்கிற யஜமானனும் ஸுகமடைவார்கள்" என்று சொல்லி, எல்லாவற்றின் பாசங்களையும் அறுத்து சித்திரக்கிரீவனுடைய கட்டையும் சேதித்தது.

பிறகு ஒன்றை ஒன்று தழுவிக்கொண்டு பிரிய வார்த்தைகள் சொல்லின. சித்திரக்கிரீவன் பரிவாரத்

தோடுகூடத் தன்னிடத்திற்குப் போயிற்று.

### III. காகம் எலியை சிநேஹித்தல்.

லகுபதனன் என்னும் காகம் இவைகளையெல்லாம் பார்த்து ஆச்சரியமுற்று ஹிரணியகனை நோக்கி, "நீ பாக்கியவானாயிருக்கிறாய். ஆகையால் நானும் உன் சிநேஹத்தை விரும்புகிறேன், நீ தயைசெய்து எனக்குச் சிநேஹிதனாகவேண்டும்" என்றது.

அப்போது ஹிரணியகன் "நீ யார்?" என்றுகேட்டது.

காகம் "நான் லகுபதனன் என்கிற காக்கை" என்றது.

அதைக்கேட்டு எலி "உனக்கும் எனக்கும் வெகு தூரம், உலகத்தில் ஸமானஸ்தர்களுக்கே சிநேஹமுண்டாகிறது; நான் உனக்கு இரை, நீ என்னைத் தின்கிறவன்; இப்படியிருக்கையில் இதெப்படியாகும்? ஆபத்துக்கே முகாந்தரமாகும், நரியின் சிநேஹத்தினால் ஒருமான் வலையில் அகப்பட்டதுபோல உன்னால் எனக்குப் பொல்லாங்கு நேரிடும்" என்றது.

லகுபதனன் அதைக்கேட்டு "மான் எப்படி வலையிற் சிக்கிக்கொண்டது" என,

எலி சொல்லத் தொடங்கிற்று:—

### III. (1) மான் நரியின் சிநேஹத்தால் வருந்திய கதை.

"மகததேசத்தில் சண்பகவனத்தில் ஒரு மானும் காகமும் ஒன்றுக்கொன்று நட்பாயிருந்தன. அப்படியிருக்கையில், அந்தமான் இஷ்டப்படி புல் முதலானவைகளை மேய்ந்து கொழுத்திருப்பதை ஒருநரி பார்க்

துத் தனக்குள்ளே ஆலோசித்து இவன் நமக்கு அஸாத்தியனாய் இருக்கிறானாகையால் இவனை வஞ்சனையால் கொல்லவேண்டும், என்று நிச்சயித்துக்கொண்டு அதன் ஸமீபத்திற்போய், "சிநேஹிதா! ஸௌக்யமா" என்றது. அதைக்கேட்டு மான், "நீ யார்?" என, நரி "நான் க்ஷுத்திரபுத்தி என்கிற நரி, இந்தக் காட்டில் யாருமற்ற பாவியாய் ஒருவனாகத் திரிந்துகொண்டிருந்தேன்; இன்றைக்கு உன்னைப்பார்த்து மிகுந்த ஸந்தோஷத்தையடைந்தேன்; இப்போது உனக்கு வேலைசெய்துகொண்டு உன்னிடத்திலிருக்க இச்சிக்கிறேன்" என்றது.

அதைக்கேட்டு மான் "நல்லது" என்றது.

பிறகு பொழுதுபோனவுடனே இரண்டும் ஒரு சண்பக மரத்தின் கீழே வந்தன. அம்மரத்தின்மேல் வாஸம் பண்ணிக்கொண்டிருந்த மானின் சிநேஹிதனாகிய ஸுபுத்தி என்னும் காகம் இவர்களைப்பார்த்து, மானை நோக்கி "ஓ மித்திரா! உன்னோடுகூட இருக்கிறவன் யார்?" என்றுகேட்டது.

மான் "இந்த ஜம்புகன் என்னுடன் சிநேஹிக்க விரும்புகிறான்" என்றது.

அப்போது காகம் "மித்திரனே! ஜடிதியில் வந்த வழக்கமில்லாதவனை நம்பலாகாது. ஒருவன் குலமும் நடத்தையும் தெரியாமல் அவனுக்கு இடங்கொடுத்தால் ஒரு பூனைக்குச் சரற்கவனென்னும் கழுகு இடங்கொடுத்து இறந்தாற்போல் நேரிடும்" என்றது.

அதைக்கேட்டு மான் "சரத்கவன் எப்படி இறந்தான்?" என,

காகம் சொல்லுகிறது:—

ஸாதுக்கள் எல்லாரிடத்திலும் தயை செலுத்துகிறார்கள். சந்திரன் சண்டாளன்வீட்டிலும் பிரகாசிக்கிறான்'' என்றது.

இதைக்கேட்டுக் கழுகு ''பூனை இறைச்சியைத் தின்கிறது; மேலும் கொலை செய்கிறதென்று நினைத்து இப்படி நான் சொன்னேன்'' என்றது.

அதைக்கேட்டு நெடுஞ்செவியன் பூமியைத்தொட்டுச் சிவசிவவென்றுசொல்லிக் காதின்மேல் கையைவைத்து, ''நான் தருமசாஸ்திரங்கள் கேட்டு மிகுந்த வைராக்கியமடைந்து கெட்ட கருமங்களையெல்லாம் விட்டு விட்டேன். அநேக சாஸ்திரங்களில் கொலைசெய்வதைப்போல வேறொரு பாதகமுமில்லையென்று சொல்லியிருக்கின்றது. எவர்கள் மற்றொருவரைக்கொன்று தங்களுக்கு ஸௌக்கியத்தை விரும்புகிறார்களோ அவர்கள் நரகத்தை அடைகிறார்கள். ஆகையால் கொலை செய்யாமலிருப்பதுபோல வேறொரு தருமம் இல்லையென்று நினைத்துக் காட்டிலிருந்துகொண்டு காய் கனி கிழங்குகளைச் சாப்பிடுகிறவர்கள் பாதகம் எப்படிப் பண்ணுவார்கள்?'' என்று சொல்லிக் கழுகுக்கு நம்பிக்கை வரப்பண்ணி அதன் வீட்டில் இருந்தது.

பிறகு அந்த ருத்திராக்ஷப் பூனை பட்சிகளின் குஞ்சுகளை நாடோறும் அங்கே கொண்டுவந்து தின்றுகொண்டிருக்கத் தலைப்பட்டது. அப்போது குஞ்சிழந்த பறவைகளெல்லாம் விசனப்பட்டு ஒன்றாய்க் கூடித் தங்கள் குஞ்சுகளைச் சோதிக்கத் தொடங்கின. பூனை இதையறிந்து அவ்விடம்விட்டு ஓடிப்போயிற்று. அப்பக்ஷிகள் அதைப் பார்த்துக்கொண்டே கழுகின்

பொந்தண்டைவந்து பார்க்கையில் குஞ்சுகளுடைய எலும்புகளும் சிறகுகளும் விழுந்து கிடக்கக்கண்டு, நம்முடைய குஞ்சுகளை இந்தத் துரோஹிக் கழுகே பக்ஷித்ததென்று நிச்சயித்து அந்தக் கழுகைக் கொத்திக் கொன்றன.

---

ஆகையால் ஒருவனுடைய குணம் தெரியாமல் அவனுக்கு இடங்கொடுக்கலாகாது என்றது.

அப்போது நரி "ஒருவன் ஸ்வபாவம் சிநேஹிக்கிறதற்கு முன்னே தெரியுமா? நல்லோர்களுக்குச் சுபாவத்தினாலே காரியமில்லை. அவர்களுடைய சிநேஹம் கண்டமாத்திரத்திலேயே உண்டாகிறது" என்றது.

மான் அதைக்கேட்டுக் காகத்தை பார்த்து, "எப்படி நீ எனக்கு மித்திரனோ அப்படியே இவனுமிருக்கட்டும். நீ ஒன்றுக்கும் தடைசொல்லாதே" என்று சொல்லி நரியைத் தன்னிடத்தில் வைத்துக்கொண்டது.

பிறகு மூன்றும் தங்கள் மார்க்கத்தின்படி வயிற்றை நிரப்பிக்கொண்டு இரவில் அந்த இடத்தில் வந்து கொண்டிருந்தன.

இப்படி யிருக்கையில் ஒருநாள் நரி மானைப்பார்த்து மித்திரா! இந்தக்காட்டில் இளவிளைஎன்று நேர்த்தியான பயிரிருக்கிறதை உனக்குக் காண்பிக்கிறேன்" என்று சொல்லி, அதை அழைத்துக்கொண்டுபோய்க் காட்டிற்று. அன்று முதல் அந்தமான் போய்த் தினந்தோறும் பயிரை மேய்ந்துகொண்டிருக்கையில் அதைக் கொல்லைக்காரன் பார்த்து அங்கே வலைகட்டினான். பின்பு மானங்கே வழக்கப்படி மேயப்போய் அதிற்

MAHAMAHOPADHYAYA
DR. U. V. S. IYER LIBRARY,
BESANT NAGAR, MADRAS-90.

சிக்கிக்கொண்டு, இப்போது என்னை, மித்திரனைத் தவிர யார் விடுவிப்பார் என்று மனதில் எண்ணிக்கொண்டிருந்தது.

அங்கே நரிவந்து, 'என்னுடைய மனோரதம் நிறைவேறிற்று: இப்போது நான் இதன் எலும்பையும் மாம்சத்தையும் நிரம்பத் தின்னுவேன்' என்று வாயூற மனதில் எண்ணிக்கொண்டு சும்மாவிருந்தது.

அதைக்கண்டு மான் "மித்திரா! ஏன் சும்மாவிருக்கிறாய்? என்னுடைய வலையைச் சீக்கிரமாய் அறுத்து என்னை விடுவி, ஸங்கட காலத்தில் சிநேஹிதர்கள் உடை யிழந்தவன் கைபோல் உதவுவார்கள்" என்றது.

ஜம்புகன், "ஆம், நீ சொல்வதெல்லாம் மெய்யே" ஆயினும் எனக்கு இன்றைக்கு விரத தினமாகையால் நான் இந்தத் தோல்வலையைத் தீண்டமாட்டேன்; நாளைக்கு என்ன சொன்னாலும் கேட்பேன்; சிநேஹிதனுக்காக நான் பிராணனை விடத்தக்கவன்" என்று சொல்லி, அதன் கண்ணுக்குத் தெரியாமல் ஸமீபத்தில் ஓரிடத்தில் ஒளித்துக்கொண்டிருந்தது.

காகம் இரவில் மான் வரவில்லையென்று அதைத் தேடிக்கொண்டு அங்குமிங்கும் திரிந்துகொண்டு அங்கேவருகையில் அந்தமானின் அவஸ்தையைப் பார்த்துச் "சிநேஹிதா! உனக்கிந்த அவஸ்தை ஏன் வந்தது? என்றது.

மான் "இது நான் உன் வார்த்தையைக் கேளாததால் வந்த பயன்" என்றது.

காகம் "உன் கூட்டாளியான ஜம்புகன் எங்கே போனான்?" என்றது.

மான் "என்னுடைய இறைச்சியைத் தின்பதற்காக இங்கெங்கேயாவது ஒளித்துக்கொண்டிருப்பான்," என்றது.

அதைக்கேட்டுக் காகம் "தனக்கு ஹிதம்பண்ணுகிற மித்திரன் பேச்சைக் கேளாதவனுக்கு விபத்துச் சீக்கிரமாக வரும். மேலும் அவன் சத்துருவுக்கு ஸந்தோஷம் வருவிக்கிறான்" என்று சொல்லிக்கொண்டிருக்கையில் கொல்லைக்காரன் கையில் ஒரு தடியை எடுத்துக்கொண்டு வந்துவிட்டான்.

இதைப்பார்த்துக் காகம் மானுக்கு "மித்திரா! நீ இப்போது மூசசை அடக்கிக்கொண்டு செத்தவனைப்போலக் கிடந்தால் அவன் உன்னைப் பார்த்து நீ செத்தாயென்று எண்ணிக்கொண்டு கட்டிய வலையை அவிழ்த்துச் சுருட்டி வேறோரிடத்தில் வைக்கப்போவான். அப்போது நான் கத்துகிறேன் அதைக் கேட்டமாத்திரத்தில் நீ மிகவும் விரைவாய் ஓட்டம் பிடி" என்று சொல்லித் தானப்படியே பொய்யாக மானின் கண்ணைக் குத்திக்கொண்டிருந்தது.

இதற்குள்ளே கொல்லைக்காரன் வந்து மானைப் பார்த்துச் செத்ததென்று எண்ணிக் கட்டியிருந்த வலையை அவிழ்த்து ஓரிடத்தில் ஒன்றாகக் கட்டிவைக்கப் போனான். காகம் அதைப்பார்த்து ஸங்கேதப்படி கத்த, மான் அதைக் கேட்டவுடனே ஓட்டம்பிடித்தது. அதைக் கொல்ல நினைத்த அந்தக் குடியானவன் தடியை விசிறி எறிய, அது அங்கிருந்த நரிமேற்பட்டு அது இறந்தது.

ஆகையால் " புண்ணியமாவது பாவமாவது மிகுதி யானுல் அதன் பலன் உடனே உண்டாகிறது" என்று சொல்லி முடித்தது.

பின்னும் எலி " இப்படி மானுக்கு நரியின் சிநேஹம்போல் உன்னுறவும் உபயோகப்படாது" என்றது.

காகம் " உன்னைத் தின்றுலெனக்குப் போதுமா? நீ பிழைத்திருந்தால் நான் சித்திரக்கிரீவனைப் போல ஸுகமடைவேனென்று உன்நட்பை விரும்புகிறேன்" என்றது.

பின்னும் ஹிரணியகன், "நீ எனக்குப் பகைவன் உனனுடனே நான் சிநேஹம் பண்ணுகிறதில்லை. சத்துரு தனக்கனுகூலமாயிருந்தாலும் அவனுேடே சிநேஹிக்கலாகாது தண்ணீர் வெந்நீரானுலும் நெருப்பை அவிக்கும். எது தக்கதோ அதைச் செய்யவேண்டும். தண்ணீரில் வண்டியும் பூமியின்மேல கப்பலும் செல்லுமா? ஆகையால் சத்துருக்களிடத்திலும் விபசாரியிடத்திலும் நம்பிக்கை வைக்கலாது" என்று இவ்வாறு பலவிதமாகச் சொலலிறறு.

காகம் "நான்உன்னுடனே சிநேஹிப்பேன்; இல்லாவிட்டால் பட்டினியிருந்து இங்கேயே என் பிராணனை விடுவேன். நெருப்பின் வெப்பத்திஞல் பொன் முதலானவை உருகி ஒன்றுகின்றன யாதேனும் ஒரு நிமித்தத்தினுலே விலங்கு பறவைகள் மித்திரத்துவத்தை அடைகின்றன. பயத்தினுலாகிலும் யாதோ ராசையினுலாகிலும் மூடர்களுக்குச் சிநேஹமுண்டாகிறது. ஸாதுக்களுடைய சிநேஹமோ கண்ட மாத்திரத்தில் உண்டாகிறது. மண்பானை சீக்கிரமாயுடைகிறது, பிறகு

பொருந்துகிறதில்லை. பொன்குடம் சீக்கிரத்தில் உடையாது, உடைந்தாலும் ஒன்றும். இப்படியே துர்ஜன ஸத்ஜனர்களுடைய சினேஹமும் இருக்கிறது" என்றது.

இதைக் கேட்டு ஹிரண்யகன் "உன் வார்த்தையால நான் ஸந்தோஷமடைந்தேன்; இனி உனக்கும் எனக்கும் சிநேஹத்துவம் இருக்கட்டும்; இன்று முதல் நாமிருவரும் ஒரு மனதாய் இருக்கவேண்டும். உபகாரம் பண்ணுகிறவன் மித்திரனென்றும், அபகாரம் பண்ணுகிறவன் சத்துருவென்றும் அறிந்து மனக்கலக்கம் இல்லாமல் நடக்கவேண்டும்" என்று இப்படிப் பேசி நிச்சயித்து ஹிரண்யகன் லகுபதனனுக்குச் சிறிது ஆகாரங்கொடுத்துத் தன் வளைக்குள் போயிற்று. சிநேஹலாபம் பெற்ற காகமும் அதனிடத்தில் செலவு பெற்றுக்கொண்டு தன்னிடத்திற்குப் போயிற்று.

## IV காகமும், எலியும், ஆமையும், மானும், நட்பாக இருத்தல்

அதுமுதல இவைகள் அந்நியோந்ய சிநேஹமாய் ஒன்றுக்கொன்று ஆஹாரம் கொடுத்துக்கொண்டு பலவாறு ஸம்பாஷணை செய்துகொண்டிருந்தன.

ஒருநாள், லகுபதனன் எலியைப்பார்த்து, "மித்திரா! இப்போது இங்கே இரை அகப்படாமையால் வேறேரிடத்திற்குப் போக நினைக்கிறேன்" என்றது.

அதைக்கேட்டு ஹிரண்யகன் "எங்கே போகிறாய்?" என்றது.

அப்போது காகம் தண்டகாரணியத்தில் கர்ப்பூரகௌரம் என்கிற தடாகத்தில் இருக்கும் மந்தரனென்

னும் ஆமை எனக்குச் சினேஹிதன். அவன் எனக்கு விதவிதமான பலமீன்களைக் கொடுத்துப் போஷிப்பான். ஆகையால் நான் அவனிடத்திற்குப் போகிறேன்" என்றது.

ஹிரணியகன் "மித்திரா! அவ்விடத்திற்கு என்னையும் அழைத்துப்போக வேண்டும். நான் தேசாந்தரம் போக விரும்புகிறேன்" என்றது.

அப்போது காக்கை "நீ அப்படி விரும்புவானேன்?" என்றது.

ஹிரணியகன் "அங்கே போன பின்பு சொல்வேன்," என்றது.

லகுபதனன் ஹிரணியகனை தூக்கிக்கொண்டு அந்த இடத்துக்குப் போயிற்று. அவைகளைப் பார்த்து மந்தரன் அவ்விரண்டுக்கும் உபசாரம் பண்ணிற்று.

அப்போது லகுபதனன் மந்தரனைப் பார்த்து, "இந்த ஹிரணியகன் மிகவும் பரோபகாரி; இவன் சித்திரக்கிரீவனை அவன் கூட்டத்தோடுகூட வலையினின்றும் விடுவித்தவன்; அப்போது இவனது நட்புநிலைமையைப் பார்த்து நானும் இவனுடனே நட்புக்கொண்டேன்" என்றது.

அதைக்கேட்டுக் கூர்மம் ஸந்தோஷப்பட்டு ஹிரணியகனைப் பார்த்து, "மித்திரா! நீ இந்த மனிதஸஞ்சாரமில்லாக் காட்டில் வருவானேன்?" என்றது.

அப்போது எலி சொல்லுகிறது.

## ஹிரணியகன் வரலாறு

"ஜம்பகாவதி என்னும் பட்டணத்தில் சூடாகர்ணன் என்னுமொரு ஸந்நியாஸி இருந்தான். உண்டு

மிகுந்த சோற்றைக் கப்பறையிற்போட்டு உறியின்மேல் வைத்துவிட்டு அவன் நித்திரை பண்ணிக்கொண்டிருப்பான். பின்பு அந்தச் சோற்றை நான் தின்றுகொண்டு ஸுகமாயிருக்கும் நாளில் அங்கே வீணாகர்ணனென்னும் ஒரு ஸந்நியாஸிவந்து அவனோடுகூட அநேக கதாப்பிரஸங்கம் பண்ணிக்கொண்டிருக்கையில் அந்தச் சூடாகர்ணன் கையிலொரு தடியைவைத்து அதனாலே பூமியைத் தட்டிக்கொண்டு சோற்றைக் காப்பாற்றிக் கொண்டிருந்தான். அப்போது வீணாகர்ணன் "என்னுடைய கதையை அலக்ஷியம்பண்ணி நடுவே வேறே என்ன வியாபாரத்தில் இருக்கிறாய்?" என, சூடாகர்ணன் "உன் வார்த்தையை அநாதரவு பண்ணவில்லை. இவ்வெலி என் பாத்திரத்திலிருக்கிற அன்னத்தை நாடோறும் தின்னுகிறது, அதை ஓட்டுகிறேன்" என்றான். வீணாகர்ணன் அப்போது உறியைப் பார்த்து, "கொஞ்ச பலமுள்ள இந்த எலி இவ்வளவு உயரம் எப்படித் தாவுகிறது? இதற்கொருகாரணம் இருக்கவேண்டும். அதுதான் எதுவாயிருக்கலாமென்று ஆலோசித்துப் பார்த்தால் இங்கே மிகுதியான திரவியம் இருக்கவேண்டும். உலகத்தில் திரவியமுள்ளவர்கள் பலமுள்ளவர்களாய் இருக்கிறார்கள்; அஸாத்தியமான காரியங்களை ஸாதிக்கிறார்கள்; ராஜத்துவத்திற்கும் இதுவே காரணமாகும்; எல்லாம இதினாலாகின்றன" என்று சொன்னான். அந்த ஸந்நியாஸி இதைக்கேட்டு மெய்தானென்று நம்பிப் பூமியை வெட்டி, ஐயோ! என் திரவியத்தை எடுத்துக்கொண்டான்.

அன்று முதல் நான் இளைத்துப்போனேன்; பின்பு

எனக்கு இரையும் கிடையாததினல் மெள்ள மெள்ள நடந்துகொண்டிருக்கையில் அந்த ஸந்நியாஸி பார்த்து "பார், இந்தஎலி இப்போதுதான் தன்னுடைய ஜாதித தன்மையை அடைந்திருக்கிறது. முன்னிருந்த அதன் மதம் போய்விட்டது. ஆகையால பணமில்லாதவர்களை எல்லோரும அறபமாய் நினைக்கிறார்கள்" என்றான். இதைக்கேட்டு "நானினி இங்கே இருக்கிறது ஸரியன்று. இதை வேறொருவரோடும் சொல்லலாகாது. பொருளழிவு, கிருகச்சித்திரம, தானம், மானம, அவமானம், ஆயுள், தனம் இவைகளைப் புத்திமான் வெளிப்படுத்தலாகாது. தன்விதி பிரதிகூலமாயிருக்கும் காலத்தில ஒருவன் பராக்கிரமமும முயறசியும வீணுகின்றன. பணமில்லாதவனுக்கு வனவாஸத்தைக் காட்டிலும் வேறு ஸுகமில்லை. எந்தவிடத்தில் நாம பணக்காரராயிருந்தோமோ அந்த இடத்தில் ஏழையாயிருக்கிறது உத்தமமன்று" என்று மறுபடியும இழந்த பணத்தை மீட்டுக்கொள்ளப் பிரயத்தனப்பட்டேன். அப்போது ஸந்நியாஸி என்னைத் தடியாலடித்தான். அதனலேயே மிகவும் துன்பப்பட்டு உன் சிநேஹிதனுடனே நான் இங்கே வந்தேன்" என்றது.

மந்தரன் "மித்திரா! நீ இதனல் அதைரியப்பட்டு உறைவிடம துறந்தோமென்று வருத்தப்பட வேண்டாம. ஸாதுக்கள் எங்கேபோனலும மரியாதை பெறுகிறார்கள். சிங்கம் வேறொரு காட்டுக்குப் போனலும் புல்லைத் தின்கிறதில்லை, யானையையே தின்னும். உத்ஸாஹமுள்ளவன், ஸந்தோஷமுள்ள

வன், தைரியசாலி, சூரன், களங்கமில்லாதவன் என்னும இவர்களிடத்திலே லக்ஷ்மி தானே வருகிறாள். நீ பணத்தையிழந்தும எப்போதும் ஸந்தோஷத்தோடே கூடியிருக்கிறய். ஆகையால உனக்கிருக்கும ஸுகம பணத்தாசையால மயங்குகிறவர்களுக்கு இல்லை. இன்னுங்கேள; மேகச்சாயை, துஷ்டனுடைய தயை, இளம்புல, யௌவனம, தனம இவைகள வெகு நாளைக்கு நிலலா ஆகையால இவற்றை இழந்தால அழுது கொண்டு ஆஹாரத்தை ஒழித்து ஏங்கியிருக்க லாகாது எவன் காப்பத்திலிருக்கிருனே அவன் பிறக்கிறதற்கு முன்னே தானே தாயிடத்தில பாலை யமைத்து வைக்கிறன். அப்படிச் செய்கிறவன ஆயுசுள்ளவரைக்கும காப்பாற்ற மாட்டானே? நீ நலல விவேகியாயிருக்கிறதினுல் இவைகள எல்லாம உனக்குத் தெரிந்தேயிருக்கும. இனிச சிநேஹமாய எனனிடத்தில ஸுகமாயிரு" என்றது.

இதையெல்லாங்கேட்டு, லகுபதனன் "மந்தரா, நீ ஸகலகுண ஸம்பன்னன, மேலும் ஸத்குணன்! ஸாதுக்களுக்கு வந்த ஆபத்தை ஸாதுக்களே நிவிருத்தி பண்ணுகிறர்கள் என்றறிந்து நாங்கள உன்னை நாடி வந்தோம" என்று சொலலி முடித்தது

பின்னாகாகம் நீண்டபெரிய மாத்தின்மேல் போயுட்கார்ந்து தன் சுபாவப்படியே இங்கும அங்கும பாாத்துக்கொண்டிருக்கையில, ஏதோவொரு பய முகாந்தரத்தை அறிந்து, "நீங்களிருவரும் உங்களிடத்தில் ஒளித்துக் கொண்டிருங்கள்" என்று சொல்ல, மந்தரன் தண்ணீருக்குள் போயிற்று; எலி வளையினுள் நுழைந்தது.

காகம் விருக்ஷத்தின் நுனியிலிருந்து பார்க்கையில் யாதொன்றும் காணப்படாமையால் பின்பு அம்மூன்றும்வெளிப்பட்டுப் பேசிக்கொண்டிருந்தன.

அப்பொழுது அவைகளின் ஸமீபத்தில் சித்திராங்கனென்னும் ஒரு கலைமான் வந்து, "நான் வேடர் பயத்தால் உங்களிடத்தில் இருக்கலாமென்று வந்தேன்" என்றது.

அதைக்கேட்டு மந்தரன் அதற்கு ஸம்மானம் பண்ணி, " இது உன் வீடு, நான் உன்ஸேவகன் என்று எண்ணிக்கொண்டு ஸுகமாயிரு" என்று முகமலர்ந்து சொல்ல, அதுவும் இவைகளுடன் நட்புக்கொண்டிருந்தது.

அப்படியிருக்கையில் ஒருநாள் சித்திராங்க னென்னும் மான், புல்மேய வேறோரிடத்திற்குப்போய் மீண்டு சாயங்காலம் வாராமையால், 'மேயப்போன மான் இன்று ஏன் வரவில்லை' என்று ஆமை விசனப்பட, அதை அறிந்து எல்லாம் விசனமடைந்தன.

மறுநாள் விடியற்காலத்தில் காக்கை பறந்து நாலு பக்கத்திலும் பார்த்துக்கொண்டு போகையில் சித்திராங்கன் தோல் வலையில் அகப்பட்டிருப்பதைக்கண்டு அதன் அருகிற் போய், "மித்திரா! உனக்கிந்த அவஸ்தை எப்படி நேரிட்டது?" என்றது. மான் "இப்போது இதைக்கேட்டுப் பிரயோசனமில்லை, நீ போய் ஹிரண்யகனைச் சீக்கிரமாய் அழைத்துக்கொண்டு வந்தால் அவன் வேடன் வருவதற்குள், என் பாசத்தை யறுத்து என்னை விடுவிப்பான். வேடன்வந்தால் ஒரு பாயமும் நடவாது" என்றது.

## V. மானுக்கும் ஆமைக்கும் வந்த ஆபத்தைத் தோழர் நீக்கல்.

இதைக் கேட்டவுடனே காகம் விரைவாகப்போய் அவைகளுடனே நடந்த காரியத்தைச் சொல்லி ஹிரண்யகனை அழைத்துக்கொண்டு வந்தது. அந்த ஹிரண்யகன் மானைப்பார்த்து "நீ ஸமர்த்தனாயிருந்தும் வலையில் எப்படியகப்பட்டாய்?" என, மான "வல்லமையிருந்தாலும் வருவது வரும்; இப்போது என்னைச் சீக்கிரமாய் விடுவி, எனக்குப் பழைய பயமிருக்கின்றது.

### மானின் வரலாறு.

முன் நான் குட்டியாயிருக்கையில் வேடன் வலை கட்டி என் கூட்டத்தை வளைத்தான். மற்றவைகள் பெரிய மான்களாயிருந்தபடியால் குதித்து வலையைத் தாண்டிப்போயின. எனக்குக் குதித்தோடச் சக்தியில்லாததினால் வேடன் என்னைப் பிடித்து இராஜனிடம் கொண்டுபோனான். ராஜா வாங்கித் தன் பிள்ளை கையிற்கொடுக்க, அங்கே நான் வெகுநாளிருக்கையில் ஒருநாள் மேக கர்ச்சனையைக் கேட்டு மிகவும் சஞ்சலத்தோடு காற்று மழையாற் பீடிக்கப்பட்டு மான் கூட்டங்கள் ஓடும்போது 'அவற்றின் பின் நான் ஓடுவேனோ' என்று மனுஷபாஷையினால் எனக்குள்ளே சொன்னேன்.

ராஜகுமாரன் அதைக்கேட்டு நாற்றிசையும் பார்த்து என்னையும் பார்த்தான். பின்பு சற்றுநேரம் சும்மா இருந்து இது மனுஷனைப்போல் எப்படிப் பேசிற்று. ஆகையால் இது ஒரு விசித்திரப் பிராணியாயிருக்க வேண்டுமென்று நினைத்துப் பயத்தினால் ஜுரத்தில்

குள்ளே நான் ஆமையின் கடடைச சேதிபபேன், உடனே அவ்வாமை தண்ணீரில் ஓடிபபோம" என, இதைககேட்டு எலலாம் அவ்வாறே செய்து மநதரனை விடுவித்தன.

பிறகு அநதவேடன் வாய்த் தவிடும்போய் அடுப்பு நெருப்பும் இழந்தவள் போல வெடகி மிகவும வருத்தமடைநது கைக்குவாராத பெரிய லாபததை இசசிததுக கைககுவநத சிறிய லாபததையும இழந தேனே, யாககும் அதிகஆசை அதிகநஷ்டம். கிடைத தமடடும் போதுமென்று நினைககிறவனே மஹா புருஷன், என்று இவ்வாறு சொலலிககொண்டு தன் வீடடுக்குப போனான்.

உடனே அநதக் காகமும் ஆமையும மானும் எலி யும மிகவும ஸநதோஷமடைநது தஙகளிடத்தில முன் போல ஸுகமாய் வாழ்நதிருந்தன."

ஸுகிர்ல்லாபம் முற்றிற்று



காகங்களைக் கோட்டான்கள் தாக்கல்—77-ம் பக்கம் பார்க்க.

மூன்றாவது.

# ஸந்திவிக்கிரகம் அல்லது அடுத்துக் கெடுத்தல்.

---

## I. சுருக்கம்.

"முன்னே பகையாளிகளாய் இருந்தவர்களுடைய விசுவாஸத்தில் நம்பிக்கை வைக்கலாகாது. நம்பினால் எப்படிக் காகம் கோட்டான்களின் குகையைக் கொளுத்தி நாசம் செய்ததோ அப்படி நேரிடும்" என, அதைக்கேட்டு இராஜ குமாரர் "அஃதெப்படி சொல்லும்" என, ஸோமசர்மா சொல்லுகிறான்.:—

## II. காகங்களுக்கு வந்த ஆபத்து : மந்திராலோசனை.

"தென்தேசத்தில் மயிலை நகரத்தின் ஸமீபத்தில் ஒரு பெரி ஆலமரத்தில் மேகவர்ணன் என்னும் காக ராஜன் தன் கூட்டங்களோடு வஸித்துக் கொண்டிருக்கையில் அங்கே உருமர்த்தனன் என்னும் ராஜக் கோட்டான் தன் கூட்டத்தோடு மலைக்குகையிலிருந்து வந்து அந்த ஆலமரத்தை வளைத்துக்கொண்டு இரவில் அகப்பட்ட காகங்களையெல்லாம் கொன்றுவிட்டு நாடோறும் போய்க்கொண்டிருந்தது. அதனால் அவ்விடத்தைக் காகங்கள் விட்டுவிடும்படி நேரிட்டதனால், மேகவர்ணன் தன் மந்திரிகளை அழைத்து "நம் பகைவர் நாடோறும் இங்கிரவில் வந்து காக்கைகளைக் கொல்லுகிறார்கள்; நமக்கோ இரவில் கண் தெரிகிறதில்லை; மேலும் அவர்கள் இருப்பிடமும் அறியோம்; அறிந்தால்

அங்கேபோய் அவர்களைக் கொல்லலாம்; பகைவரை அசட்டைபண்ணினால் அது நோய்போலப் பெருகிப பெருந்தீங்கை விளைக்கும்; ஆதலால் இப்பொழுது ஸந்தி விக்கிரகம், பேதம, கலஹம் என்பவற்றுள் நாம செய்யத் தக்கது யாவதென்று சொல்லுங்கள்" என்றது.

அதைக்கேட்டு மந்திரிகள் "அரசன் கேட்பதற்கு முந்தியே மந்திரிகள் ஹிதம்சொல்லவேண்டும், இல்லாவிடில் கேட்ட பிறகாயினும் விரைவாய்ச் சொல்லவேண்டும, அப்படிச செய்யாமல் வீண் விசகம பேசுகிறவனை அரசனுக்குச் சத்துருவென்று நினைக்கவேண்டும" என்றிவ்வாறுசொல்லிப்பின்பு மந்திரிகள்ஐந்தும் என்ன செய்பலாமென்று தங்களுக்குள் ஆலோசிக்கத் தொடங்கின.

அப்போது அவைகளில் உத்தமஜீவி என்பது அரசனை நோக்கி "மஹாராஜாவே! வலியவர்களுடனே பகைத்தல் தகாது, ஸமாதானமே தகுநதது. பகைவர்களை வணங்கிக் காலம் பார்தது மோசம் பண்ணுகிறவர்கள ஸுகமடைகிறார்கள். ஆற்றில் தண்ணீர் நிரமபிப் பெருகிவருகையில் வணங்குப செடி நாசமடையாமல பின்பு முன்போல் நிமிர்நதிருக்கிறதல்லவா. ஆபததுக் காலத்தில் துஷ்டர்களுடனே ஸமாதானம பண்ணிக் கொண்டு உயிரைக் காப்பாற்றினால் பின்பு எல்லாச் செல்வமும ஸம்பாதிக்கலாம். மேலும் தனக்குப் பல பகைவர்கள் இருந்தால் அவர்களில் ஒருவனோடு உறவு கொண்டு மற்றெல்லோரையும கெடுக்கவேண்டும. நிலமும் நட்பும் பொருளுமாகிய இவற்றின் இருப்பைத் தன்

னிடத்திலும் மாற்றானிடத்திலும் இவ்வளவென்று ஆராய்ந்துகொண்டு, கூடுமானால் பின்பு அவனுடன் எதிர்க்கவேண்டும். இல்லாவிட்டால் கூர்ம விர்த்தியை அநுசரித்துத் தனக்குப் பலமுள்ள காலத்தில் கிருஷ்ண ஸர்ப்பத்தின் வியாபாரத்தை அநுஸரிக்க வேண்டும். ஜயமும் தோல்வியும் ஒருவன் பங்கல்ல, ஆகலால் மாற்றானுடைய வலிமையும் வலியின்மையையும் அறிந்து எதுசெய்யத்தக்கதோ அதைச் செய்யவேண்டும் கொக்கைப்போல உறங்கியிருந்து சமயத்தில் குத்தவேண்டுமென்று பெரியோர்கள் சொல்லியிருக்கிறார்களே" என்றது.

அதைக்கேட்டு இராஜன் இரண்டாம் பிரதானியைப் பார்த்து 'உன் கருத்து என்ன சொல்' என, அது "இவன் சொன்னவற்றால் சிறிதும் நன்மையுண்டாகாது, பெரிய சத்துருக்களோடு போர்செய்து பகைவருடனே ஸந்தி பண்ணலாகாது நெருப்பினால் காய்ச்சின நீர் அந்த நெருப்பை அவியாதா? கோபமானகால் வந்த துகின்றனவென்று அவைகளோடு சந்திபண்ணினால் சமமை அவைகள் கொன்றுவிடும் விஷஜ்வரம் அப்பியங்கனத்தால் வளர்கிறது போலும் நெய்யினால் நெருப்பு விருத்தியாகிறது போலும் பொல்லாங்கு ஸம்பவிக்கும். சத்துரு வலியவனாம் எளியோம் என்பதினால் அதற்குச் சிந்தையில்லை பாம்பு பெரிதாயிருந்தாலும் அதைச் சிங்கந் தட்டிக் கொல்லும், ஆதலால் மனோபலத்தினால் பகைவரைக் கொல்லவேண்டும் அரசனுடைய கொடுங் கண்டத்தைப்பார்த்து வைரிகள் இயல்பாயப் பயமடைகிறார்கள் எங்கும் கீர்த்தி பெற்றிருக்கிற பராக்கிரம

சாலியாயும் எல்லாராலும் அறியப்பட்டவனாயும் இருக்கிறவன் எவனோ அவனே பாக்கியவான். இல்லாவிடில் தாயின் யௌவனத்தைக் கெடுத்துப் பயனென்ன? பராக்கிரமத்தால் உயிர்த்திருக்கிறவனே உயிருள்ளவன்; மற்றவர்கள் பிணத்துக்கு ஒப்பானவர்கள் என்றது.

இப்படி அது சொன்னவற்றையெல்லாம் அரசன் கேட்டு, மூன்றாம் பிரதானியைப் பார்த்து, "உன்னுடைய கருத்து என்ன" என்று கேட்டது. அது "அரசனே! கேள், பகைவன் தன்னிலும் வலியனாயிருந்தால் அவனோடு பொருந்தலாவது பொருதலாவது ஒன்றும் செய்யாமல் தன்னிடத்தைவிட்டு வேறிடத்திற்குப் போய்விடவேண்டும்; இதுவேநல்லது. இச்சமயம் சண்டைசெய்யல் ஆகாதென்று வைரியின் பலத்தைப்பார்த்து எவன் தன்தேசத்தைத் துறந்து போகிறானோ அவன் பாண்டவர்களைப்போல ஸுகமடைவான். இதைவிட்டு எவன் செருக்குடனே யுத்தம் செய்கிறானோ அவன் குலமுதலறக் கெடுகிறான்" என்றது.

இதைக்கேட்டு அரசன், நான்காவது மந்திரியைக் கேட்க, அது "தன்னிடம் விட்டுப் பெயர்தல் உசிதமாகக் காணவில்லை. முதலை தன்னிடத்திலிருந்தால் மலைபோன்ற யானையையும் இழுத்துக்கொண்டு போகும். அதுவே தன்னிடம்விட்டுப் பெயர்ந்தால் அதை நாய்களும் இழுத்துக்கொண்டு போய்விடும். ஆகையால் தன்னிடத்திலிருந்தே நட்புள்ளவர்களை உதவியாக அழைத்துக்கொண்டு பகைவர்களை அழிக்கவேண்டும் எவன் சத்துரு வருகிறானென்று பயந்து தன்னிடப்

விட்டுப் போகிருனே அவன் மறுபடியும் அவ்விடத்திற்கு வருகிறதில்லை. பல்லைப்பிடுங்கின பாம்பும், மதமில்லாத யானையும், இடம்விட்டுப் பெயர்ந்த அரசும் எல்லாராலும் அவமானம் அடையும். மேலும் தன்னிடத்திலிருந்தால் ஒருவனே நூறுபேருடன் யுத்தம் பண்ணுகிறுன். ஆதலால் துர்க்கத்தையும் மதிலையும் ஏற்படுத்திக்கொண்டு அவற்றின் சார்பால் பகைவருடனே யுத்தம் பண்ணவேண்டும். அதனுல் வெற்றிபெற்ருல் லக்ஷ்மியை அடையலாம்; இறந்தால் சொர்க்கம் பெறலாம்; ஆகையால் அவ்விரண்டையும் துறக்கலாகாது. நிலத்தில் பலமாயூன்றிய வேரையுடைய மரம் காற்றினுல் விழாது; அந்த மரமே தன்னிடத்தில் இராவிட்டால் காறறு அதைத் தள்ளிவிடும். ஆகையால் யாதொன்று செய்யத்தக்கதோ அதை இங்கேயிருந்து கொண்டே செய்யவேண்டும்" என்றது.

அதன் கருததை அரசன் இப்படி அறிந்துகொண்டு ஐநதாம்மநதிரியை நோக்கி "உன்னபிப்பிராயம்என்ன" என, அது " சுவாமி, என் ஆலோசனையும் இப்படியே இருக்கிறது. சார்பைவிட்டால் ஸமர்த்தர்களும் பலக்குறைவு அடைகிருர்கள். ஆதலால் யாரையாகிலும் உதவிக்குச் சேகரித்துக் கொள்ளவேண்டும். அதுவும் இருப்பிடத்திலிருந்தே ஸம்பாதிக்கவேண்டும். உறைவிடம் விட்டுப் பிறிநதவனுக்கு ஒருவரும் வாய்ப்பேச்சினுலும் ஸஹாயம்பண்ணுர்கள். எப்போது அக்கினிக்குப் புல் சருகு முதலியவற்றின் சேர்க்கையால் காட்டைக் கொளுத்தும் வலியுண்டாகிறதோ அப்போது வாயு மித்திரத்தனமாய் உதவி பண்ணுகிறது. அந்த

நெருப்பே விளக்குவடிவாய் அந்தரமாய் நிற்கும்போது அந்தக்காறமே அதை அணைக்கிறது மேலும் வலிய வர்களுடைய சார்பிருந்தால் எல்லோருக்கும் பெருமை யுண்டாகிறது. தாமரையிலைமை சார்ந்த நீர்த்துளி முத்தினொளியை அடைகிறது. சார்பில்லாமல் யாதொரு காரியமும் ஆகிறதில்லை. ஆகையால் மற்றொருவனை அனுஸரிக்கவேண்டும். இதுவே என் கருத்து" என்றது.

பிறகு மேகவர்ணராஜன், தன் பிதாவின் மந்திரியாகிய சிரஞ்ஜீவியைப் பார்த்துக் கும்பிட்டு, "உமமுன்னிலையில் எல்லோரையும் கேட்டு அவரவர்கள் சொன்ன உத்தரங்களை கேட்டீர்கள். இவற்றில் எது தக்கதோ அதை நீர் சொல்லும்" என்று ராஜா கேட்டது.

அக்கிழமந்திரி, "எல்லோரும சாஸ்திரத்தை அனுஸரித்தே சொன்னமையால் சொன்னவைகள் மிக யுக்தமாகவே இருக்கின்றன. சத்துரு பலவானயிருந்தாலும் அவனுக்கு விசுவாஸம் காண்பித்து அவனைக் கெடுக்கவேண்டும். இல்லாவிட்டால் தூக்கம் முதலிய வற்றிலிருந்து தனக்கும் சத்துருவுக்கும் இருக்கிற பலா பலங்களையறிந்து பிறகு செய்யத்தக்கதைச் செய்ய வேண்டும். இது விஹிதமாம். ஸ்திரீகள், முக நட புள்ளவர்கள், பகைவர்கள், சூதாடுகிறவர்கள் இவர்களிடத்தில் மெய் முன்னுக்கு வராது. தெய்வம், குரு இவர்களிடத்தில் மெய்யாகவே நடக்கவேண்டும்" என்றது.

இப்படிப் பெரிய மந்திரி சொன்னதைக்கேட்டு

மேகவர்ணன் "பிறனுடைய புரைசல்களை எப்படி அறி யலாம்?" என்று கேட்டது.

சிரஞ்ஜீவி "மறைந்த பொருள்களைப் பிராமணர் கள் வேதத்தினுலேயும் பசுவாசனையினுலேயும், அரசர் கள் வேலைக்காரருதவியாலும், மற்றவர்கள் தங்கள் கண் களாலும் அறிகிருர்கள்" என்றது.

மேகவர்ணன் "நல்லது, இந்தப்பிராணிகள் ஏன் வெவ்வேறு விதமாய்ச் சொன்னுர்கள்?" என்றது.

சிரஞ்ஜீவி "நாரதர் தருமராஜனுக்குச் சொன்ன தைக்கேளும். அரசன் தனக்குபயோகமானவற்றைக் குறித்து ஒருநாழிகை விசாரியாமலிருந்தாலும் உடனே கெடுதிவரும். உடையவன் கண்ணேடாப் பயிர் அழி யாதா? ஆதலால் மந்திரி முதலானவர்கள் சொல்லும் ஸமாசாரங்களைக் கணந்தோறுந் தெரிந்து கொண்டு எப்போதும் தான் எச்சரிக்கையாய் இருக்கவேண் டும்?" என்றது.

மேகவர்ணன் "காகங்களுக்கும் கோட்டான்களுக் கும் விரோதம் எப்படி வந்தது சொல்லும் என,

காலங்கண்ட கிழமந்திரி சொல்லத்தொடங்கிற்று.—

## III. காக்கைகளுக்கும் கோட்டான்களுக்கும் பகைவந்த கதை.

"முன்னொரு காலத்தில் மயில்முதலிய பறவைக ளெல்லாம் கூடியிருந்து, தங்களுக்கு கருடன் அரசனு. யிருந்தும் தங்களைக் கொல்லுகிற வேடர்களினின்று தங்களைக் காப்பாற்ருமல் ஹிதாஹிதம் தெரியாமலிருக் கிறுன் இத்தன்மையனை இறைவனிருந்து பய னென்ன? நமக்கு அரசனே வேண்டாம் என்போ

மானால் மீகானில்லாமற் கப்பல் கரைசேராததுபோல், அரசனில்லாவிட்டால் நிலைகெட்டுப்போவோம், ஆகையால் தங்களுக்கு அரசனாகக் கோட்டானை நியமிக்க வேண்டுமென நிச்சயித்தன.

இராஜ பட்டாபிஷேகத்துக்கு வேண்டிய பதார்த்தங்களைச் சேகரித்துப் பின்பு பலவாத்தியங்களை முழக்கிக் கோட்டானைச் சிங்காஸனத்தின்மேல் உட்காருவிக்க உத்தேசித்துக் கொண்டிருக்கையில், ஒருகாகம் வந்து, அவற்றைப் பார்த்து, "இதென்ன காரியம் இதென்ன காரியம்?" என்று கேட்டது.

அப்போது எல்லாப் பறவைகளும், பறவைகளில் காகமும், மனிதரில் நாவிதனும், விலங்குகளில் நரியும், மாதர்களில் பணிப்பெண்ணும் சதுரர்களாய் இருக்கிறார்கள். ஆதலால் இச்செய்தியை இதற்குச் சொல்லி இதனுடைய அனுமதியையும் பெறவேண்டும் என்று தீர்மானித்து அதைப்பார்த்து 'கருடனை விலக்கி இக் கூகையை நமக்கு அரசனாக்கிக் கொள்ளத் தீர்மானித்திருக்கிறோம், இதற்கு உன்னிஷ்டம் என்ன' என்றன.

அதைக்கேட்டு அக் காகம் குலுக்கென்று நகைத்து 'ஓ! ஓ! இது முழுதும் கெட்ட காரியம். அழகும் வல்லமையும் உடைய மயில் முதலிய அநேகம் பறவைகளிருக்க இந்தப் பகற்குருடாகிய குரூபி அரசுக்குத் தக்கவனா? குளிக்கப்போய்ச் சேற்றை பூசிக்கொள்ளலாமா? இதற்கு நான் உடன்படேன். கருடாசனிருக்கையில் மிகவும் பயங்கர ஸ்வபாவமும் வலியற்றதுமான இக்கூகையை அரசனாக்கி உங்கட்குப் பயனென்ன?

ஒருவன் அரசனுயிருக்க வேறொருவன் குணசாலி யாய் அகப்பட்டாலும் அவனுபயோகியாகான். பராக் கிரமமும் குணமுமுள்ள அரசன் உலகத்தில் ஒருவனே போதும். பல அரசர்களானல் மனிதர்கள் துன்ப மடைகிறார்கள். கருடன் பெயரினலேயே எல்லா வரங்களையும் பெற்று மனிதர்கள் நம்மிடத்தில் மதிப் போடு இருக்கிறார்கள். வலியவர்களுடைய பெயரி னலேயே எளியவர்களுக்குக் காரியமாகின்றது. முன் னொரு முயல் சந்திர பிம்பத்தைக் காட்டி ஸுகமடைந் ததை அறியீர்களா? என்றது.

அதைக்கேட்ட பறவைகள் 'முயல் எப்படி ஸுகமடைநதது? சொல்லவேண்டும்' என,

காகம் சொல்லலுற்றது :—

### III. (1) பேரியோர் பெயரால் ஸுகம்வந்த கதை.

"ஒரு காட்டில் சதுரதந்தன் என்னும் அரச யானை பல யானைகளோடு வஸித்துக்கொண்டிருக்கும் போது அங்கே மழை பெய்யாமையால் ஆறு, ஏரி, குளம், குட்டை, இவைகளெல்லாம் வற்றிப்போயின அப் போது யானைகளெல்லாம் தாஹித்துச சதுரதந்தனைப் பார்த்து, "சுவாமீ! நாங்களெல்லாம் தாஹத்தினல் செத்தாற்போலானோம். சிலர் தண்ணீரில்லாமல் இற ந்து விட்டார்கள்: ஆகையால் மிகவும் தண்ணீருள்ள இடந்தேடிப் போயிருப்போமானல் ஸுகமடைவோம்" என்றன அதைக்கேட்டுத் தன்மனதில்யோசித்து இத ற்கு ஐந்துநாளைப் பயணதூரத்தில் ஒரு பெரிய மடு பா தாளகங்கையினல் நிறைந்திருக்கிறது: அங்கே போனல் எல்லோருக்கும் மிகவும் தண்ணீர்கிடைக்குமென்று நிச்

சயித்து, எல்லாரையும் அழைத்துக்கொண்டு, அங்கே போய்த் தெளிநத நீரைக்கண்டு அந்திவரைக்கும் ஜலக்கிரீடை செய்து, பின்பு கரையில் வந்திருந்தது.

அப்போது அங்கே வாஸம் பண்ணிக்கொண்டிருந்த முயல்களில் சில யானைகளின் காலின்கீழ் அகப்பட்டு இறந்தன; சிலவற்றிற்குக் கால்கைகள் ஒடிந்தன; சிலவற்றிற்கு உடல்கள் நொறுங்கின, சிலவற்றிற்குக் குடல்கள் சரிந்தன. இதையெல்லாம் பார்த்துச் சில முயல்கள் ஒன்றாய்க்கூடி, 'இன்றைக்கு, யானைக்கூட்டம் வந்து நம்மையழித்தது; இப்படியே தினமும நேரிடும்; இங்கே வேறு நீர்நிலை இல்லை, ஆகையால் நமக்கு பிராணஸங்கடம் நேரிட்டது. யானை தொட்டாலும், பாம்பு மோந்தாலும், அரசன் நகைத்தாலும, துர்ச்சனன் மரியாதை பண்ணினாலும் உயிர்சசேதம் வரும். ஆதலால் இதற்கு ஏதாவது உபாயம யோசிக்க வேண்டும்' என்றன. அப்போது சில முயல்கள் 'உயிரைக் காப்பாற்றும் பொருட்டுச் சுயபூமியை விட்டுவிடலாம் என்றிருக்கிறதினால், இவ்விடத்தை விட்டுவிலக வேண்டும்' என்றன. அதைக்கேட்டு வேறுசில முயல்கள் நம்முடைய பெரியோர்கள் வாழ்ந்த இடத்தை விட்டு வேறிடத்திற்குப் போகாமல் யானைகள் அஞ்சத் தக்க தந்திரம் செய்யவேண்டும். நஞ்சில்லாப்பாம்பும் படமெடுத்தால், நஞ்சில்லாதிருந்தும் பயங்கரமான அநதப் படத்தின் வடிவைப்பார்த்து மனிதர்கள் பயப்படுகிறார்கள்' என்றன.

அதைக்கேட்டு ஒரு முயல் 'யானைகள் பயப்படும்படி ஒருபாயம் சொல்லுகிறேன்; விஜயதந்தன் என்

னும் நம்மரசன் சந்திரமண்டலத்திலிருக்கிறன். அவன் தூதனுப்பினனென்று சொல்லி ஒரு பொய்த்தூதனை அவர்களிடத்து அனுப்பினல் நம்முடைய காரிய மாகும்' என்றது.

இதைக் கேட்டவுடனே எல்லாம் அப்படியே ஸரி யென்று நிசசயித்து நெட்டைக்காதனைப் பார்த்து, 'நீ சாதுர்யவான், எதிரிகளை ஸமாதானம் பண்ணுகிறவன், ஆதலால் தூதகாரியத்தில் நிபுணனயிருக்கிறய்; மௌட்டியமில்லாமை, சோம்பலின்மை, பொய்யாமை ஊஹித்தறிதல் என்னும் தூதலக்ஷணங்களுக்கு நீயே வாஸஸ்தானமென்று நினைக்கிறோம். ஆகையால் நீ போனல் நம்முடையகாரியம் கைகூடும். மூடத்தூதனை யனுப்பினல் காரியம் கெட்டுப்போம்' என்றுசொல்லி அதையனுப்பின.

அதுபோய் யானைகள் வரும்வழியில் ஒருயர்ந்த மேடுடில் உடகாாநதிருநது, யூதபதியைப் பார்த்து, 'அடா துஷ்டயானையே! வெடகத்தை விட்டு இந்த மடுவில் வநது பலவகையான விளையாட்டு விளையாடுகி றய். ஆதலால் நானெல்லாரையும் அடித்தெரிநதுவிடு வேன்' என்றது.

இதைக்கேட்டு யானை 'உன் பேச்சைக் கேட்டு நான் மிகவும் ஆச்சரியப்படுகிறேன், நீ யார்' என்றது. முயல் 'விஜயதந்தராஜனுடைய தூதன், அவன் கட் டளையை உனக்குச் சொன்னேன்; அவன் சந்திரமண் டலத்திலிருக்கிறபடியால், சந்திரன் என்னை உன்னிடத் திற்கு அனுப்பினன்' என்றது. இதைக்கேட்டு இவன் வலியவனுடைய தூதன் என்றெண்ணி அதைப்பார்த்து

'சந்திரனுடைய கட்டளை என்ன' என, அது 'நீ இங்கேவந்து நாணமில்லாமல் கிரீடைசெய்து வெகு முயல்களைக்கொன்றாய்; ஆகிலும் நாணொருதரம் பொருத்தேன். இப்போது உனக்கு உயிர்மேல் ஆசையிருந்தால் இனி இங்கே வரவேண்டாமென்று சந்திரன் சொல்லச் சொன்னதை உனக்கு நான் தெரிவித்தேன். இதற்குப் பிரதியுத்தரவுசொன்னால் அதைச் சந்திரனுக்கு அறிவிப்பேன்' என்றது. யானை 'அவனிடத்திற்கு என்னை அழைத்துக்கொண்டுபோ; நானும் யஜமானனைக்கண்டு நமஸ்கரித்துவிட்டு வேறொரு குளத்திற்குப் போய்விடுகிறேன்' என்றது. இதைக் கேட்டு முயல் 'நீ தனியாய் என்னோடு கூடவா; உனக்குச் சந்திரனை காண்பிக்கிறேன்' என்று, அழைத்துப் போகையில் ஓரேரியின் அருகேசென்று முயல் யானையைப்பார்த்து, 'சந்திரன் இந்தத் தண்ணீருக்குள்ளே வந்திருக்கிறான், அவனை நமஸ்கரித்துவிட்டு சீக்கிரம் போய்விடு, இல்லாவிட்டால் அவனுடைய ஸமாதிக்குப் பங்கம்வந்தால் அவற்கு வெகுகோபம் வரும்' என்றது. அப்போது யானை பயந்து சந்திரபிம்பத்துக்கு நமஸ்காரம் பண்ணிவிட்டுப்போயிற்று. அதுமுதல் முயல்கள் அங்கே ஸுகமுற்றிருந்தன.

இப்படிப் பெரியோர்களை அடுத்திருந்தால் மலைபோல் வந்தவினை சூரியன் முன் பனிபோல் நீங்கும். கொல்லையில் குற்றியைச் சார்ந்த புல், உழவர் உழு படைக்கு அகப்படுமோ? துஷ்டர்களுடைய கூட்டுறவு கணப்போதிருந்தாலும் கெடுதிவரும். முன் ஒரு

முயலும் ஆந்தையும் சண்டையிட்டுக் கூர்ம்பல்லன் அருகே போனவுடனே இரண்டையும்அது கொன்றதை அறியீரோ?'' என்றது.

இதைக்கேட்டுப் பறவைகள் காகத்தைப் பார்த்து "அதெப்படி ?" என,

காகம் சொல்லத் தொடங்கிற்று :—

## III. (2) துஷ்ட ஸஹவாஸத்தால் பிராண ஸங்கடம் வந்தகதை.

"முற்காலத்தில் நான் குடியிருந்த முதுமரப் பொந்தில் இருந்த கபிஞ்சலன் என்னும் ஆந்தையும் நானும் மாலைக்காலத்தில் பற்பல பேச்சுகள் பேசிக் கொண்டு ஸுகித்திருந்தோம் ஒரு நாள் அவன் வேறொரு பக்ஷியோடு போய் மீண்டு வாராமையால் நான், ஐயோ அவன் வலையிற்பட்டானோ, யாராவது கொன்றார்களோ தெரியவில்லை ; எப்போதும் வேறோரிடத்தில் தங்குகிறவனல்லவே என்று வியசனப்பட்டு வழிபார்த்துக்கொண்டிருந்தேன். அப்போது, மூன்று நாள் கழித்து ஒரு முயல் வந்து, நான் பலபலவிதமாய்த் தடுத்துச் சொல்லியும் கேளாமல் முரட்டுத்தனமாய் அந்தப்பொந்தில் குடிபுகுந்தது ; எங்கேயோ சிலநாள் கபிஞ்சலன் இஷ்டப்படியே நெற்களைத் தின்றுகொண்டிருந்து, பிறகு தன்னிடத்திற்கு வந்து பார்க்கையில் தன் வீட்டில் முயலிருக்கக்கண்டு அதைப்பார்த்து, 'அடா சசமே, நீ என்னுடைய வீட்டிலிருத்தல் ஸரியன்று, புறப்பட்டுப்போ' என்றது.

இதைக்கேட்டு முயல் 'அடா பேதாய்! இது உன் வீடன்று என்வீடே ; வீணைகப் பொய்சொல்லிப்

விட்டு நான் அறத்தை அநுசரித்து கொண்டிருக்கிறேன். மேலும் கொலைசெய்கிற புலி முதலானவற்றைக் கொல்லுகிறவர்களும் நரகத்திற்குப் போகிறார்களென்று ஸாதுக்கள் சொல்லுகிறார்கள், அப்படியானால் மற்றவர்களுக்குக் கொலையினால் நரகம் வருமென்பதில் ஸந்தேஹம் என்ன? யாக கருமத்தில் பசுவைக் கொல்லுகிறவர்கள் வேதத்திலுள்ள பொருளை அறியாதவர்கள்; அந்த விஷயத்தில் ஏழுவருடத்தின் நெல்லைக்கொண்டு வந்து ஹோமம் பண்ணவேண்டுமென்று சொல்லியிருக்கிறது. பசுக்களைக் கொன்று மரங்களை வெட்டி ஹோமம் பண்ணி ஸ்வர்க்கம் கிடைக்கிறதானால் நரகத்துக்கு ஏன் போகிறார்கள? ஆதலால் இவை எல்லாம் வஞ்சகர்களுடைய காரியம் என்று அறிந்திருக்கின்றமையால் உங்களை நான் கொல்லேன்; உங்களுடைய வழக்கை மாத்திரம் தீர்ப்பேன்; நான் கிழவனானதினால் எனக்குத் தூரத்திலிருந்து சொன்னால் கேளாது; நீங்கள் கிட்டவந்து உங்களுக்குள்ள வழக்கென்னவோ அதைச் சொன்னால் கேட்டு, இம்மைக்கு நலந்தருவதாகிய நடுவு நிலைமையாய்ச் சொல்லுவேன்; ஆசையினாலாயினும் கோபத்தாலாயினும் அநியாயத்தீர்ப்புச் சொல்லுகிறவன் நரகத்துக்குப் போவான், ஆதலால் நீங்கள் என் காதினருகே வந்து உங்கள் வழக்கைத் தெரிவியுங்கள்' என்றது.

அவைகள் இப்படிப்பட்ட வார்த்தையினால் அதினிடத்தின் நம்பிக்கை வைத்துக் கிட்டவர, உடனே அவற்

றைத் தன் கைகளினால் வலியப்பிடித்து வழக்கற இரண்டையும் தின்றது.

ஆதலால் தீயோரைச் சேர்ந்தால் இப்படிக்கொத்த தீங்கு நேரிடுமென்று அறிந்து, செய்யத்தக்கது எதுவோ அதைச் செய்யவேண்டும் என்றது.

இவ்வாறு காகம் சொன்னதைப பறவைகளெல்லாம் கேட்டு, இவன் சொன்னது யுக்தமென்றெண்ணித் தாங்கள் சேகரித்த பொருள்களை எல்லாம் அப்படியே வைத்து வேறொருவனை அரசனாக்குவதைக் குறித்து, மீண்டும் கூடியோசிபபோமென்று உறுதி செய்துகொண்டு எல்லாம் தத்தமிடத்திற்குப் போயின.

அப்போது சிங்காதனத்தினருகே மனையாளோடு கூட உட்கார்ந்திருந்த கோட்டான் தன் பெட்டையைப் பார்த்து, 'பெண்ணே! மங்கள ஸ்நானமாகியும் இராஜ்ஜியாபிஷேகம ஏன் பண்ணாமலிருக்கிறார்கள்?" என்றது.

பேடு 'உன் இராஜ்ஜியாபிஷேகத்துக்குக் காகம் இடையூறு செய்தபடியால் பறவைகளெல்லாம் தங்கள் வீட்டுக்குப்போயின; காகமாத்திரம் இருக்கிறது' என்று சொல்லிற்று.

அதைக்கேட்டுக் கோட்டான் காகத்தைநோக்கி, 'அடா துஷ்டா! நானுனக்கு என்ன செய்தேனென்று என்காரியத்தைக் கெடுத்தாய்? இதனால் இன்றுமுதல் உன் குலத்துக்கும் என்குலத்துக்கும் தீராப்பகை யிருக்கட்டும்; வாளினால் வெட்டினாலும், பாணத்தினால் எய்

தாலும் உண்டாகுங்காயம் ஆறிக் குணப்படும்; சொல்லி ஞலாய காயம் அப்படி மாறாது' என்றுசொல்லித் தன் பெட்டையோடு கூடத் தன்னிடத்துக்குப் போயிற்று

பின்பு அக்காகம் மனதில் மிகத்திகிற்பட்டு நுணல் தன்வாயாற் கெடுவதுபோல இந்த வார்த்தை சொல்லி நான் வீண்பகை ஸம்பாதித்தேன். ஸமர்த்த ஞயிருக்கிறவன் ஸபையில் பிறரை நிந்திக்கலாகாது. மேலும் யாதொன்று செய்வதை மனமொத்த நட்பினரைக் கேட்டுச் செய்யவேண்டும். அப்படிச் செய்யாமல் இப்போது ஸங்கடத்தில் அகப்பட்டேனென்று பச்சாதாபப்பட்டு அதுவும் தன்வீட்டிற்குப் போயிற்று. அது முதல் கோட்டான்களுக்கும் நமக்கும் பகையுண்டாகித் தலைமுறை தலைமுறையாக விடாமற்ருெடர்ந்து வருகிறது' என்று அக்கிழமந்திரி சொன்ஞன்.

IV. மந்திரா லோசனை. (தொடர்ச்சி.)

இதைக்கேட்டு மேகவர்ணராஜன் மறுபடியும் அதைப்பார்த்து, 'ஐயா! இப்போது என்னசெய்யலாம்?' என்றது.

சிரஞ்சீவி 'பார்ப்பானிடத்திலிருந்து ஆட்டைச் சில வஞ்சகர்களெப்படி வஞ்சித்துக் கொண்டுபோஞர்களோ அப்படி நான் கோட்டான்களிடத்திற்குப்போய் அவைகளை வஞ்சனைபண்ணிக் கொல்லுகிறேன்' என்றது.

அதைக்கேட்டு இராஜன் 'அவர்கள் ஆட்டை எப்படிக் கொண்டு போஞர்கள் சொல்லும்' என,

மந்திரி சொல்லுகிருன்.—

## IV. (1) வஞ்சனையால் காரியம் ஸாதித்தகதை.

'ஒரு தேசத்திலே மித்திரசர்மா என்னும் பிராமணன் மாசிமாதத்தில் யாகம் செய்யவேண்டிப் பசு ஸம்பாதிப்பதற்காக வேறோர் ஊருக்குப்போய் ஒருவனைப் பசுகேட்க, அவன் இவன் நற்காரியத்தைக் குறித்துக் கேட்கின்றான் என்று அதற்குடன்பட்டு நேர்த்தியான ஒரு பெரிய ஆட்டைக் கொடுத்தான். வாங்கிக்கொண்டு வருகையில் அவ்வாடு இங்குமங்கும் ஓடத்தொடங்கியதினால் அதைத் தோளின்மேல் போட்டுக்கொண்டு போகையில், அதைச் சில மோசக்காரர்கள் தூரத்திலிருந்து பார்த்தார்கள்.

பார்ப்பானை வஞ்சித்து அந்த ஆட்டுக்கடாவைக் கொண்டுபோனால் தங்கள் பசியைத் தீர்த்துக்கொள்ளலாமென்று ஆலோசித்து அவர்களிலொரு தூர்த்தன் வந்து, 'ஓ நித்தியாக்கினி வளர்க்கின்ற பிராமணா! நீ சீலனாயிருந்தும் இப்படிப்பட்ட பாபகாரியத்தை ஏன் பண்ணுகிறாய்? மிகவும் ஹீனமான நாயைத் தோள்மேல் ஏன் ஏற்றிக் கொண்டு வருகிறாய்? நாய், கோழி, சண்டாளன் கழுதை ஆகிய இவைகளைத் தொடலாகாதென்று சாஸ்திரம் இருக்கிறதே' என்று சொன்னான்.

இதைக்கேட்டுப் பிராமணன் கோபித்துக்கொண்டு 'நீ யாகப்பசுவை நாயென்று எப்படிச் சொல்லுகிறாய்? உன்கண் பொட்டையா என்ன? என்றான்.

தூர்த்தன் 'பிராமணா! கோபித்துக்கொள்ளாதே, ஸுகமாய்ப்போ' என்றான்.

பிறகு பிராமணன் சற்றுதூரம் நடந்து, போனான். அப்பொழுது இரண்டாவது தூர்த்தன் வந்து,

' ஓ அந்தணு ! இக்கன்றின்மேல் உனக்கு என்ன பக்ஷமிருந்தாலும் செத்தபிறகு அதைத் தோள்மேலெடுத் தூக்கொண்டு போவது ஸரியன்று. செத்தமிருகங்களை தொட்டால் சாந்திராயணத்தாலும் பஞ்சகவ்வியத்தாலுமன்றி அந்தத் தீட்டுப்போகாது. இப்படிப்பட்ட நிஷித்தத்தைத் தோள்மேல் ஏன் சுமந்து போகவேண்டும ?' என்முன். அப்போது அப்பிராமணன் முன் சொன்னபடியே சொல்லிவிட்டுப் போகத் தொடங்கினுன்.

உடனே மூன்றுங் கபடி முன்வந்து, ' ஐயா ! கழுதையைத் தீண்டுகிறவனுக்குச் சசேலஸ்நானம் சொல்லியிருக்க நீ இதை எப்படித் தூக்கிக்கொண்டு போகத் துணிந்தாய் ?" என்முன்.

அந்தணன் இந்த ஆட்டைப்பார்த்து மனிதர்கள் பலவிதமாகத் தர்க்கிக்கிறபடியால் இது ஒரு ராக்ஷஸனுயிருக்குமென்று எண்ணி அதைப் பூமியில் போட்டுவிட்டுத் தன் வீட்டுக்குப்போய்விட்டான். பின்பு அவ்வஞ்சகர்கள் அதைக் கொன்று தின்றார்கள்.

---

ஆகையால் நான் சத்துருவை வஞ்சித்து உன் கருமத்தை முடிப்பேன். நான் என்ன உபாயம் சொல்லுகிறேனே அப்படியே செய். நீ சத்துருபக்ஷத்திலிருக்கிறய் என்று என்னை நிந்தித்து வேறொன்றன் இரத்தத்தை என்மேலெல்லாம் பூசி ஆலமரத்தின்கீழே விட்டுவிட்டு, நீ கூட்டங்களோடுகூட மலையின்மேல் போயிருந்தால் கோட்டான்கள் என்னைத் தங்கள் பகைவர்களுக்கு விரோதியென்று எண்ணிக்கொள்ளுவார்கள்.

பிறகு நான் அவர்களுக்கு என்னிடத்தில் நம்பிக்கை உண்டாக்கித் துர்க்க முதலானவற்றின் உளவறிந்து அவர்களை நாசம் பண்ணுவேன். அதுவரைக்கும் நீ அங்கே இரு. இவ்வாலோசனை நான் முன்னமே செய்து இப்போது உனக்குச் சொன்னேன்' என்றது.

இந்த அதனுள்ளுருமையைக் கேட்டு மேகவர்ணன் 'அத்தியந்தம் பிரியமான பிராணனை நீ துரும்பு போல் நினைத்தாய்,' என்றது.

பிரதானி 'ராஜகாரியத்தில் சேவகர்கள் இப்படியே செய்யவேண்டும். ஆபத்துக் காலத்தில் சேவகர்கள் உதவுவார்களென்று நம்பித்தான் அரசர்கள் அபிமானத்தோடு அவர்களைப் பரிபாலிக்கிறார்கள். அப்படி உதவாவிட்டால் அந்த பரிபாலனத்துக்குப் பயனென்ன'? என்று சொல்லிப்போய்க் கலஹத்துக் காரம்பித்தது.

இந்த ரஹஸ்யம் இரண்டாம் பேருக்குத் தெரியாது. ஆகையால் மற்றைப் பறவைகள் அதைக்கொல்லத் தீர்மானிக்க, அப்போது மேகவர்ணன் 'நீங்கள் அவனைத் தண்டிக்கவேண்டாம். இவன் பகையாளிக்கு நன்மை பண்ணுகிற துஷ்டனாகையால் இவனை நானே சிக்ஷித்துக் கோபமாறுவேன்' என்றுசொல்லி எழும்பி யெழும்பி மூக்குமுனையால் அதைப் பொய்யாகக்குத்திச் சங்கேதப்படி ஆலமரத்தின் கீழ் எறிந்து, தன் கூட்டத்தோடு கூட வேறிடத்திற்குச் சென்றது.

## V. கோட்டான்கள் காகமந்திரியை சேர்த்துக் கொள்ளுதல்.

பிறகு பொழுதுபோனவுடனே ராஜகோட்டான்

அவ்விடத்திற்கு வந்து மரத்தைச் சுற்றி முற்றுகை போட்டுக்கொண்டு காகங்களைப் பார்க்கும்போது ஒன்று மங்கே இல்லாமையால் தன்கூட்டத்தைப் பார்த்துக், 'காகங்கள் எவ்வழியாய்ப்போயின? உங்களுக்குத்தெரிந்திருந்தால் இப்போதே அவர்களைக் கொல்லுவோம். பகைவர்கள் துர்க்கம் முதலியவற்றைச் சேர்வதற்கு முன்னமே அவர்களை வெல்லலாம்; பின்பு வெல்ல முடியாது' என்றிப்படிச் சொல்லிக்கொண்டிருக்கையில் சிரஞ்ஜீவி மெல்லெனக் கத்திற்று.

அதைககேட்ட மாத்திரத்தில் கோட்டான்கள் போய் அதைக் கொல்ல யத்தனிக்கையில், சிரஞ்ஜீவி 'நான் மேகவர்ணனுடைய மந்திரி, என்பெயர் சிரஞ்ஜீவி; அக்கொடியவன் எனக்கு இப்படிபபட்ட அவஸ்தை வரப்பண்ணினன். ஆகையால் நான் உங்கள் அரசனைச் சரணமாக அடைகிறேன்' என்றது.

இதைக்கேட்டுச் சேவகர்கள் உருமர்த்தனனுக்குச் சொல்ல, அவனதைக்கேட்டு ஆசசரியத்தோடு அதனருகே போய், 'ஓ சிரஞ்ஜீவி! உனக்கிந்த ஸ்திதி ஏன் நேரிட்டது? என்றுகேட்டது.

சிரஞ்ஜீவி கைகூப்பிக்கொண்டு, முன்னாள் நீர் காகங்களை அடித்தீரென்று கோபமாய் அநதக்கொடிய மேகவர்ணன் உம்முடனே போர்செய்ய ஆயத்தப்பட, அபபோதுநான், ராஜனே! இது உனக்குத் தக்கதன்று; வலியவனுடனே எளியவன் போர்செய்தால், விளக்கை அவிக்க விட்டில் போய் விழுவதுபோல் கெடுதியுண்டாகும்; ஆதலால் அவனுடனே ஸமாதானம்பேசி அவன் கேட்பதைக் கொடுத்துப புத்

திமானவன் உயிரைக் காப்பாற்ற வேண்டும் பணம் எப்போதும் ஈட்டிக்கொள்ளலாம்; உயிரிழ., தால் மீளவும் பெறமுடியாது, என்று நான் சொல்ல, என்னைப் பகைவர் பக்கமாய்ப் பேசுகிறவனெ ன்று வைது இவ்வாறுசெய்தான். இப்போது எனக்கு உம்முடைய திருவடிகளே துணை; இந்தக் காயங்கள் குணப்பட்டால் காகங்கள் முழுமையும் கொன்று உமக் குக் கீழ்ப்பட்டிருப்பேன்' என்று சொல்லிற்று.

அதைக்கேட்டு உலூகராசன், குருதிக்கண்ணன், கோடுங்கண்ணன், கொள்ளிக்கண்ணன், குரூரநாசன், பிர காரநாசன் என்னும் தன்னுடைய ஐந்து மந்திரிகளையும் பார்த்து, சத்துரு மந்திரியாகிய இவன், நமக்குக் கைவச மானான்; இவனை என்ன செய்பலாம்? ' என்றது.

அப்போது குருதிக்கண்ணன் 'இவன் அவனுக்கு முதன் மந்திரி, காலவித்திபாஸத்தால் அவனுக்கு இவன் பிரதிகூலமாய்த் தோற்றப்பட்டான். அவன் ஒரு நாளும இவன் வார்த்தைக்கு வேறாக நடக்கிறவ னல்லன்; ஆதலால் இவனை நம்மிடத்தில் வைத்துக் கொண்டு இவன்கையாலே சத்துருவோடு ஸந்திசெய்ய வேண்டும்; இதுவே தக்கது; ஸாமமுதலாகிய நான்கு உபாயங்களில் தண்டம் கடைப்பட்டது. ஆகையாலே அந்தப் பிரயோகம் கடைசியில் பண்ணவேண்டும். ஸாமத்தினால் செய்கிற காரியம் எப்போதும் கெடுகிற தில்லை. ஆகையால் அவர்களிடத்தில் தண்டத்தை ஆலோசிக்கலாகாது. சர்க்கரையைத்தின்று பித்தம் போமானால் கைப்பான மருந்தை ஏன் தின்னவேண்டும்?

ஆதலால் ஸாமோபாயமே என் ஸம்மதம். இதுவே நல்லது' என்றது.

இதைக்கேட்ட உருமர்த்தனன் இரண்டாம் அமைச்சனைப் பார்த்து, 'உன்னுள்ளுறை என்ன ? அதைச் சொல்' என்றான். கோடுங்கண்ணன் 'வேந்தனே! இக்காகங்கள் நமக்கு இயல்பான வைரிகள், ஆகையால் இவர்களோடு ஸமாதானம் தக்கதன்று, தண்டமே தகுந்தது. வெல்லக் கூடாத பகைவர்களிருந்தால் அவர்களுக்கு விரோதமாகிய தாயாதிகளை வருத்த வேண்டும். இல்லாவிட்டால் பணம் கொடுத்தாவது, பொய்ப்பத்திரம் பிறப்பித்தாவது அவர்களுள் ஒருவர்க்கொருவர் பகையெழுப்பவேண்டும். நடுவில் புரைசலுண்டானால் முத்துப் கட்டுப் படுகிறது. ஆதலால் இதைக்குறித்து என் சொல்லைக் கேட்டுச் சுவபக்ஷத்தை ரக்ஷித்துக்கொண்டு பரபக்ஷத்தைப் பேதிக்கவேண்டும். இக்காகம் வைரியாயினும் கொல்வது நன்றன்று. ஒருவேளை பகைவனும் நன்மை சொல்லுகிறான். ஒரு திருடன் ஒருவனைப் பிழைப்பித்ததும், ஒரு ராக்ஷஸன் இரண்டு பசுக்களைப் பிழைப்பித்ததும் அறியீரோ?' என்றது.

அரசன் 'அதெப்படி' என,

கோடுங்கண்ணன் சொல்லத் தொடங்கிற்று.—

## V. (1) எதிரிகள் ஹிதம் செய்த கதை.

"ஒருநகரத்தில் ஒரு ஏழைப்பார்ப்பான் தனக்கு ஒருவன் கொடுத்த பசுவின் கன்றிரண்டையும் புல் முதலானவைகள் போட்டு மிகவும் பருத்துக் கொழுக்க வளர்த்துவந்தான். அக்கடாரிகளைப் பார்த்து அவைகளைக்கொண்டுபோக ஒரு திருடன் தும்பெடுத்துக்

கொண்டு புறப்பட்டு வந்தான். வழியில், கோரப் பல்லும் நீண்ட மூக்கும் செம்பட்டமயிரும் சிவந்த கண்ணும் கறுத்த வுடம்புமாக இருந்த ஒரு ராக்ஷஸனைக் கண்டு பயந்து அவனைப் பார்த்து 'நீ யார்?' என, அவன் 'நான் சத்தியவசனனென்னும் ராக்ஷஸன், நீ யார் சொல்' என, இவன் 'நான் திருடன், ஒரு வறிய பிராமணன் வைத்துக்கொண்டிருக்கிற பசுக்களைத் திருடப் போகிறேன்' என்றான்.

ராக்ஷஸன் 'மித்திரா! அவ்வந்தணன் பரிசுத்தனைப்போல் நானும் அவனைத் தின்பேன், இவ்வாறு இருவர் காரியமும் ஆகும்' என்றான்.

இப்படிப் பேசிக்கொண்டு இருவரும் அங்கே போகும்போது, அந்தணன் தூங்கிக்கொண்டிருந்தமையால் அவனைத் தின்ன இராக்ஷஸன் போக, அவனைப் பார்த்துத் திருடன், 'மித்திரா! நான் பசு இரண்டையும் திருடின பிறகு நீ அவனைத் தின்' என, ராக்ஷஸன், 'சினேகிதனே! பசுக்கூச்சலால் பார்ப்பான் விழித்துக்கொண்டால் நம்முடைய காரியமெல்லாம் கெட்டுப்போம். ஆதலால் நான் முந்தி அவனைப் புசிக்கிறேன், பின்னர் நீ அச்சமில்லாமல் கோக்களைக் கொண்டுபோ' என்றான். கள்ளன் 'நீ அவனைத் தின்னத்தொடங்கும் அரவத்தால் வேறொருவன் வந்தால் அவனென்னைக் கொண்டுபோகவொட்டான். ஆதலால் பசுக்களிரண்டையும் நான் கொண்டுபோனபின்பு நீ அவனைத் தின்' என்றான். இப்படி இருவர்க்கும் வாதம் நடக்கையில் அவ்வேதியன் விழித்துக்கொண்டான்.

அப்போது கள்ளன், 'ஓ பிராமணா! இவ்வரக்கன்

உன்னைத் தின்பேனென்கிறான்' என, அதைக்கேட்டு ராக்ஷஸன் 'இக்கள்வன் உன் மாடுகளைக் களவாட வந்தான்' என்றான். இப்படியிருவர் பேசசையும் கேட்டுப் பார்ப்பான் தன் இஷ்டதேவதைத் தியானத்தால் ராக்ஷஸனினின்றும் தன்னைக் காப்பாற்றிக் கொண்டு, கையில் தடியெடுத்துவந்து கள்வனையும் அடித்துத் துரத்தினன்.

———

ஆதலால் மாற்றானுமோருகால் ஹிதம் சொல்லுகிறான் என்கிறேன்' என்றது.

இப்படி அவனுள்ளத்தையறிந்து உருமர்த்தனன் கொள்ளிக்கண்ணனைப் பார்த்து 'உன் மனதைச்சொல்வாய்' என, அவன் 'மஹாராஜனே! ஸாமமும் பேதமும் எனக்கு உடம்பாடல்ல. ஸமாதானத்தால் பகைவனுக்குச் செருக்குண்டாகும். மற்றும் உமது பேதத்தை அவனறிந்தால் ஒரு வேளை மோசமும் செய்வான்: ஆதலால் விவேகி கொடையால் பகைவனை வசம்பண்ணி அதை மேன் மேலும் பெருகச் செய்தால், பின்பு அவன் தனக்குத்தானே கைவசமாவான். மேலும் அவர்களோடு விரோதமாய் நம்மிடத்தில் வந்தமையால் விரோதிகளிடத்திலிருக்கிற குறைகளை அறிவித்து நமக்கு ஸந்தோஷம்வருவிப்பான். அதுபற்றி இவனைப்பாதுகாக்கவேண்டும். இங்ஙனம் செய்தால் ஒருவர்க்கொருவர் இன்சொற்களால் காலப்போக்கும் ஸம்பவிக்கும். மேலும், நம்முடைய மர்மங்களையும் வெளிவிடான். இங்ஙனமன்றி ஒருவர்க்கொருவர் ரஹஸியங்களை வெளிவிட்டால் அவர்கள், வயிற்றிலிருந்த பாம்பும், புற்றிலிருந்த பாம்பும் நாசமடைந்தாற்போல் கெடுவார்கள்' என்

றான் உலூகராஜன் அதெப்படி, என,

கோள்ளிக்கண்ணன் சொல்லுகிறான் :—

V. (2) ரஹஸ்யம் வெளிப்படக் கேடுவிளைந்த கதை

"விஷ்ணுவர்மனென்னும் ஒரு மன்னனுக்கு வயிற்றிலொரு நோயுண்டாகி நாளுக்குநாள் உடம்பு மெலிந்துபோனதினால் அவன் தேசாந்தரங்கட்குப் போய் ஒரு கோயிலில் இருந்தான். அவ்வூர் அரசன் பலி என்பவனுடைய குமாரிகளிருவரும் பலியினிடத்திற்கு வந்தபோது அவர்களிலொருத்தி அரசனை நோக்கி, "ராஜனே! வெற்றி அடைவாய்' என்றாள். மற்றவள் 'நல்ல போஜனம் பண்ணுவாய்' என்றாள். அதைக் கேட்டவுடனே அரசனுக்குக் கண்கள் சிவந்து அமைச்சர்களைப் பார்த்து 'இந்தக் கெட்டபேச்சுக்காரிமை நோயாளிக்குக் கொடுத்தால் இவள் நல்ல போஜனங்களை அனுபவிப்பாள்' என, அமைச்சர்கள் இராஜனுடைய கட்டளைப்படியே கோயிலிலிருந்த ராஜகுமாரனாகிய பிணியாளிக்கு அவளை மணஞ்செய்வித்தார்கள்.

பின்பு அவள் கணவனை ஈசுவரனாக எண்ணிப் பணிவிடைகள் செய்து அவனை அழைத்துக்கொண்டு வேறொரு தேசத்துக்குப் போகும்போது வழியில் ஓர் இடத்தில் இறங்கி, வேலைக்காரனைக் கூடஅழைத்துக் கொண்டு சமையலுக்கான கடைச சாக்குகள் வாங்கப் போனபோது வியாதியஸ்தனாகிய இராஜகுமாரன் நித்திரைபோனான். அவ்வேளையில் அங்கொரு புற்றிலிருந்த பாம்பு அவன் கிட்டவந்து பேச, அவ்வொலியைக்கேட்டு அவன் வயிற்றிலிருந்த பாம்பும் சத்தித்

தது. அப்போது இரண்டிக்கும் வாக்குவாதமுண்டாக, இதற்குள்ளே அவன் மனைவி வந்து மரத்தின் மறைவினின்று அவற்றின் பேச்சுகளைக் கேட்டுக் கொண்டிருந்தாள்.

புற்றுப்பாம்பு வயிற்றுப்பாம்பைப் பார்த்து, 'அடா துராத்மாவே! இந்த அழகிய இராஜபுத்திரனை ஏன் வருத்துகிறாய்?' என்றது.

வயிற்றிலிருந்த அரவு, ஆஹாரநிறைந்த குடத்திலிருக்கிற என்னை நீ ஏன் நிந்திக்கிறாய்?' என்றது.

புற்றரவு, 'துஷ்டா, அவன் கடுகு தின்றானால் நீ இறப்பாய், அவன் ஸௌக்யமடைவான்; ஆனால் இதொருவர்க்கும் தெரியாது' என்றது.

பின் அவ் வயிற்றரவு, 'வெந்நீரானுனக்கும் பயம் வரும்' என்றது.

இப்படி அவ்விரண்டும் சொன்ன ரஹஸியங்களை கேட்டு அவள் அவ்வண்ணமே செய்து அப்பாம்பு களைக் கொன்றாள். அதனால் மன்னவன் நோய்தீர்ந்து தன்னகரத்திற்கு மனைவியோடு கூடவரும்போது வழியில் அவள் தந்தையும் சுற்றமும் பார்த்து இருவருக்கும் உபசாரம்பண்ணி அவர்களை வழியனுப்ப, பின் இருவரும் தங்கள் தேசத்துக்குப் போய் அரசாண்டு கொண்டு இருந்தார்கள்.

---

ஆகையால் பரஸ்பரம் ரஹஸியங்களைக் காப்பாற்றுவிடின் இப்படி விபத்துக்கள் நேரிடும்' என்றது.

இதைக்கேட்டு இறைவன் குரூரநாசனைப் பார்த்து 'உன்னிஷ்டம் என்ன?' என, அது 'இம்மூவர் சொன்ன

தும் உசிதமாகத் தோன்றவில்லை. ஸாம தான பேத மென்னும் உபாயங்கள் வலியில்லாதவர்களைக் குறித்தி ருக்கின்றன. வலியுள்ளவர்கள் சத்துருக்களிடத்தில் தண் டமே செய்யவேண்டும். அதைத் துறந்து ஸாமமுதலா கிய தந்திரத்தை யோசிக்கிறவனைப் பகைவர் பயந்தவ னென்றெண்ணி அவன்மேல் வருவார்கள். ஆகையால் வேந்தன் தண்டத்தினாலேயே பாக்கியம் சேகரிக்க வேண்டும். பராக்கிரமம் இல்லாவிடில் எதுதெய்வத்தால் நேரிடுகிறதோ அதை அனுபவிக்கவேண்டும். மேலும் உலகத்தில் எல்லோரும் லக்ஷ்மியை விரும்புகிறார்கள். அப்படி விரும்பினாலும் மானத்தோடு தண்டத்தால் எதிரிகளை அவமானம் பண்ணுகிறவர்களுக்கே லக்ஷ்மி கைவசமாகிறாள். சோம்பலானவர்கள் அரு மையான பொருளைக் குறித்து லக்ஷ்மியைப் பிரார்த் திக்கிறார்கள். பராக்கிரமமுள்ளவனே தன் சௌரியத் தினால் லக்ஷ்மியைப் பலவிதமாக அநுபவிக்கிறான். ஆதலால் பலவான் பகைவனைக் கொல்லவேண்டும்' என் றது.

இதைக் கேட்டு அரசன், பிரகாரநாசனை நோக்கி, 'உன் மனதில் என்ன இருக்கிறது?' என, அவன் இரா ஜாவே இவன் தங்களை அடைக்கலமாக அடைந்தபடியி னால் இவனைத் தலைவனாக்கி, முற்காலத்தில் இராமன் விபீஷணனைத் தலைவனாக்கி இராவணாதிகளை எப்படி அழித்தானோ அப்படியே சத்துருக்களை அழிக்க வேண்டும். மேலும் சரணமடைந்தவனைக் கொல்லு கிறவன் இரௌரவ நரகத்தை அடைவானென்று சிபிச் சக்கரவர்த்தி தன் மாமிசத்தை வேடனுக்குக் கொடுத்

துப் புறவை விடுவித்தானென்று பாரதத்திற் சொல்லி யிருக்கிறது. அப்படியே ஒருவனிடத்தில் அவன் பகைவன் வந்து நடுக்குறும்போது அவனுக்கு ஆதித் தியம் செய்வதைக் குறித்து அவன் நெருப்பில் குதித் தான்' என்றது.

இதைக்கேட்டு உருமர்த்தனன் 'அதெப்படிச் சொல்' என,

பிரகாரநாசன் சொல்லுகிறது.—

V (3) விரோதிக்கும் விருந்திட்ட கதை.

"ஒரு வனத்தில் ஒருவேடன், கையில் குருவிக்கூடும் கண்ணியும தடி முதலான வேட்டைக் கருவிகளும் எடுத்துக்கொண்டு திரியாநின்றான். அசதியில பெரு மழைவந்து இருட்டிக்கொண்டு பிரளயகாலம்போல காற்றெழும்ப, அப்போது அவ்வனசரன் நடுக்கமெ டுத்து மரத்தின் சார்பினின்று, 'பகவானே! இந்த வேளையில் உமமைத்தவிர வேறொருவரும் காப்பாற்று வாரில்லை' என்றான்.

அவ்வேளையில் அம்மரத்தின்மேல் இருநத புறா, தன் பெட்டைவரவில்லை என்று விஸனமாய் 'இன்றைக்கு என்னுயிர் வரவில்லை. அவளை யாராயினும் பிடித்தார் களோ என்னவோ; அவளில்லாமல் இங்கெங்கும் பாழா கத் தோற்றுகிறது' மனையாளில்லாத வீடு சுடுகாட் டைப்போலிருக்கிறது. கணவன் இன்புறும்வகை செய் யும் கற்புடைய இல்லாளையுடையவன் எவனோ அவனே பாக்கியவான்' என்றிப்படி அது புலம்புகிறதைக்கேட்டு அவ்வேடன் கைக்கூட்டில் அகப்பட்டிருந்த பெண்புறாத் தூக்கித்து 'முன்பிறப்பில் தீவினை செய்தவர்களுக்குப்

பலவகைப்பட்ட தளையும் சிறையும் நோயும வறுமை யும் ஸம்பவிக்கின்றன. அஃதிருக்கட்டும், எச்சமயத்தில் எது நேரிடுமோ அது ஒருபோதும் பிசகுகிறதில்லை' என்று சொல்லிப் பிறகு தன்பதியைக் குறித்து, 'ஓ ஓ! என் பிராணநாதா! நமது வீட்டுக்கு வந்த இவ்வேடனுக் குக் குளிர் முதலாகிய துன்பத்தை நீக்கி உதவி செய்ய வேண்டும். வந்தவிருந்தை ஒம்பாவிட்டால் அவன் தன் பாதகத்தை இல்வாழ்வானுக்குக்கொடுத்து இல்வாழ்பவ னுடைய புண்ணியத்தைத தான் கொண்டுபோகிறான். ஆதலால் இவன் உட்முடைய பெண்டிரைப் பிடித்தா னென்னுட் துக்கத்தை மனதில் வையாமல் இவனை இயன்றவரையில உபசரிக்கவேண்டும்' என்றது.

பெண் புறுவின் வாக்கியததைக்கேட்டு, 'வேடா! உன்வரவு நல்வரவாகுக. நீ மனதில் சிறிதும் ஐயமில்லா மல் உன்வீடாக நினைத்து வேண்டுவதைக்கேள்' என் றது. வில்லி 'கபோதமே! என் குளிரை நீக்கு' என, கபோதம் காட்டிலிருந்து ஒரு கொள்ளியெடுத்துக் கொண்டுவந்து சருகுகளின்மேல்வைத்துத் தீ மூட் டிற்று. பின்னர் வேடனைப்பார்த்து 'நெருப்பு மூண்டு எரிகிறது இதில் நீ குளிர்காய். முன் தீவினையால் நான் பறவையாயிருக்கின்றமையால், என்னிடத்தில் உன் பசிக்கேற்ற பதார்த்தமில்லை. அநேக துன்பங்கட்கிட மாயும் பரோபகாரமாகாமலும் இருக்கிற இச்சரீரத்தை வைத்துக்கொண்டிருந்து பயனென்ன? இதனால் நீ உன் ஆத்மாவை ஸந்துஷ்டி செய்துகொள்' என்று அது சொல்லிக்கொண்டே பரோபகாரத்தின் பொருட்டு எரி கிறதழலில் ஆனந்தத்தோடு விழுந்தது.

அப்போது வேடன் ‘ஆ ஆ! என்பொருட்டு இது தன்னுடலைத் துறந்தது. மேலும் நான் தீயொழுக்கம் உள்ளவன்; வேறொன்றின் தசையினால் ஜீவனம் பண்ணுகிறவன். பரோபகாரமும் சிறிதாயினுந் தயையும் கனவிலுமறியேன்; ஆதலால் ஊனைத்தின்று ஊனை பெருக்கின பாவி; கோரநரகத்திற்குப் போவேன். இதை எனக்குத் திருஷ்டாந்தமாய் இந்தப்புறா காண்பித்ததனால் இது முதல் பசிதாஹம் குளிர் வெயில் பொறுத்தல் இவற்றால் உடம்பை உலர்த்தி நான் பாவமில்லாதவனாகக்கடவேன்’ என்று சொல்லி, பசசாத்தாபத்துடனே, தன் கூடு தடி கண்ணி முதலியவைகளை முறித்தெறிந்துவிட்டு, அந்தப் பெண்புறாவை விட்டுவிட்டான்.

அது உயிரினுஞ் சிறந்த தன்னுயகன் தருமத்தின் பொருட்டு உடலைக் கொடுத்தானென்றெண்ணி தானும் அந்தநெருப்பில் விழுந்திறந்தவுடனே அது ஒரு திவ்ய ஸ்திரீயாய்க் கணவனோடுகூடச் சொர்க்கத்துக்குப் போயிற்று.

வேடனும் இரக்கத்தினால்பரிசுத்தனாய் நெருப்பில் தேகத்தைப் போட்டுவிட்டு நற்கதியை அடைந்தான்.

ஆதலால் அபயமென்று அடைந்தவர்களைக் காக்க வேண்டும்’ என்றது.

இதைக்கேட்டு உருமர்த்தனன் ‘என்னுடைய அபிப்பிராயமும் இப்படியே இருக்கின்றது. இவன் ஸத்தியவானும் புத்திமானுமாய் இருக்கின்றான். கபடியல்லன்; இவற்றை அறியாமல் மேகவர்ணன் இவனை

மானபங்கம் செய்தான். இவனைக் கொன்றால் நான் விசுவாஸகாதகனுவேன். பிரமஹத்தி, கள்ளுண்டல், களவாடல் இவற்றிற்கும் பிராயச்சித்தமுண்டு, விசுவாஸ காதகத்துக்கு ஒன்றுமில்லை. ஆகையால் இவனுக்கு ஸமயமான பயமின்றி நாதனுக்கு அழைத்துக்கொண்டு போகவேண்டும்" என்று சொல்ல, இராஜன் சிரஞ்ஜீவியைப் பார்த்து 'நீ என் கோட்டையில் வந்து ஸுகமாயிரு, நானுன்னைப் பாது காப்பேன்' என்று சொல்லிற்று.

இதைக் கேட்டுச் சிரஞ்சீவி களிப்புற்று 'மஹாராஜாவே! நான் விஸ்தரித்துச் சொல்லுவதென்ன? என் குடியிருப்பு பிரபுவுக்கு ஸஹவாஸத்தால் வரவரத் தெரியும்' என்றது.

அப்போது குரூரநாசன் 'இப்போது கோட்டான் குலமெல்லாம் இராஜன் குற்றத்தால் பாழாகும். பிறர் குற்றங்களை அரசனுக்கு அறிவிக்கவேண்டும், அரசன் ஹிதத்தைக் கேளாவிடில் அதற்கென்ன உபாயம் இருக்கின்றது?' என்று சொலல, அரசனதைக் கேளாமல் சிரஞ்ஜீவியைத் தன்அரணிற் கொண்டுபோய் வைத்தது.

பின்னர்ச் சிரஞ்சீவி, என்னைக் கொல்லவேண்டுமென்றவன் எல்லாரிலும் புத்திசாலி, மேலும் யஜமானனுக்கு நன்மையே செய்பவன்; மற்றவர்கள் யஜமானனைப்போலவே மூடர்களாகையால் அவனொருவனில்லாவிடில் இவர்களை வெல்வது அருமையன்று என்று மனதுக்குள் குதுகுதுப்புடனே ஆலோசித்துக் கொண்டிருந்தது.

இப்படியிருக்கையில் உருமர்த்தனன் காரியக்காரர்களைப் பார்த்து 'இச் சிரஞ்சீவிக்குத் துர்க்கமெல்லாம் காட்டுங்கள்' என, அந்தப்படி எல்லாவற்றையும் பார்த்து, நாம் இதற்குளிருந்தால் நமதெண்ணம் முடியாது, பின்னும் நம்முடைய வஞ்சனைகளையும் தெரிந்துகொள்ளுவார்கள் ; ஆதலால் கோட்டைத் தலைவாசலிலிருந்து மனோபீஷ்டத்தை முடிக்க வேண்டுமென்று தனக்குள்ளே தீர்மானித்துக்கொண்டு உலூகராஜனை நோக்கி 'மஹாராஜனே! நான் காகம்; ஆதலால் உள்ளே யிருக்கத் தக்கவனல்லன். உமது கடைவாசலில் காத்திருந்து கபடமில்லாமல் ஸேவித்துக் காலம் தள்ளுகிறேன். அன்புள்ளவனும் மனத்தழுக்கு இல்லாதவனுமான ஸேவகன் எங்கிருந்தாலும் சிந்தையில்லை' என்று சொல்லிக் காகம் அங்கேயே யிருந்தது.

VI. புத்திமானை குரூரநாசன் விலகிப்போனது.

அப்போது குரூரநாசன் "இராஜா அமைச்சர் முதலிய நீங்களெல்லோரும் அறிவீனர்களாய் இருக்கிறீர்கள் என்றெண்ணுகிறேன் ; முற்காலத்தில் நடந்த ஒரு கதையும் இருக்கிறது ; முதல் மூடன் நான், இரண்டாவது வேடன், மூன்றாவது அரசன், நான்காவது அமைச்சன் என்று சொல்லி ஒரு பறவை பறந்து போயிற்று" என்றது.

அப்பொழுது அவர்கள் 'அதென்ன!' என,

குரூரநாசன் சொல்லுகின்றது.—

VI. (1) தீர ஆலோசியாததால் மூடர்களான கதை.

"பொன்னைக் எச்சமிடும் ஒரு பறவை ஒரு மலையின்மேல் வஸித்துக்கொண்டிருக்கையில், அங்கே ஒரு

நாள் ஒரு வேடன் அது பொன்னுக எச்சமிடுவதைப் பார்த்து மிகவும் ஆச்சரியமடைந்து, நான் பாலியமுத லாகத் திரிந்துள்ள பல காடுகளில் பார்த்த பலவகை பறவைகளிலும் இப்படி யொன்றைப் பார்த்ததில்லை. ஆதலால் இதை உயிருடனே பிடித்துக்கொண்டு போக வேண்டு மென்றெண்ணி மரத்தில் வலைகட்ட, அப்ப றவை வழக்கப்படி வந்து ஜடிதியில் அவ்வலையில் சிக் கிற்று. வேடன் அதைப்பிடித்துக் கூட்டிலடைத்துத் தன் குடிசைக்குக் கொண்டுபோய், இது நம்மிடத்தி லிருப்பதை அரசனறிந்தால் இப்பறவையைக் கொண்டு போவது மன்றி நம்முயிரையும் வாங்குவான். ஆதலால் இவ்வினோதப் பறவையை அரசனுக்குக் கொடுக்க வேண்டு மென்று நிச்சயித்துக் கொண்டுபோய் அரசனிடங்கொடுத்து நடந்த செய்தியைத் தெரிவிக்க, அரசன் அதைவாங்கி இரத்தினம் இழைத்த ஒரு கூட் டில் வைத்தான். அதை மந்திரி பார்த்து 'அஸம்பாவித மான இவ்வேடன் பேச்சைக்கேட்டு இதையேன் வாங் கினீர்? விட்டு விடும் என, அப்படியே அப்பறவையை மன்னன் விடுவித்தவுடனே அது அரண்மனைச் சிகரத்தி லுட்கார்ந்துகொண்டு, முதலில் நான் மூடன், இரண்டா வது வேடன், மூன்ருவது இராஜா, நான்காவது மந்திரி என்று சொல்லிப் பறந்து போய்விட்டது என்று இச் சங்கதியைச் சொல்லிற்று.

பின் இஷ்டமித்திரர்களைப் பார்த்து 'இன்று வரைக்கும் இவ்விராஜாவின் சார்பிலிருந்தேன்; இனி வேருெரு மலையைச் சார்ந்திருக்க வேண்டும். நரியா

னது குகையைபார்த்துக் கூப்பிட்டு ஸுகமடைந்தாற்போல வருவதற்குமுன் ஆலோசிக்கிறவன் ஸுகமடைவேன்' என்றது.

அப்போது அவைகள் அதெப்படி?'' என, குருராசன், சொல்லிற்று

VI. (2) முன்யோசனையால் ஸுகம் வந்த கதை.

ஒருவனத்தில் வஸித்திருந்த கிரகிரனென்னும் சிங்கம் ஒருநாள் இரைக்கு நெடுநேரம் திரிந்தும் யாதொன்றும் கிடைக்காமையினால் பொழுதுபோனவுடனே ஒரு பெருங்குகையைப் பார்த்து இதில் தங்குவதற்கு யாதானுமொரு பிராணிவரும்; அதைத்தின்று பசியாறலாம் என்று தனக்குள் தீர்மானித்து, அதில்ஒளிந்துகொண்டிருந்தது. அக்குகையில் வஸிக்கும் அவிபுச்சனென்னும் நரிவந்து அங்கே சிங்கத்தின் அடிச்சுவடுகளைக் கண்டு ஸந்தேஹித்து சிங்கம் அதற்குள் இருக்கிறதா இல்லையா என்று தெரிந்துகொண்டு பிறகு உள்ளே புக வேண்டுமென்றெண்ணித் தூரத்தில் நின்றுகொண்டு, "ஓ குகையே! குகையே! என்று இரண்டுதரம் கூவியழைத்தது. பின்னர், 'குகையே நீ என்னோடு பேசாமலிருப்பது ஏன்? உனக்கும் எனக்கும் பிரதிதினமும் ஸம்பாஷணை நடந்துகொண்டு இருந்ததே; இன்றைக்கேன் நீ பேசவில்லை? விரைவாய்ச் சொல், இல்லாவிட்டால் நான் வேறொரிடத்திற்குப் போய்விடுவேன் என்று சொல்லி மீண்டும் கூப்பிட்டது.

அப்போது சிங்கம், இக்குகை நாடோறும் பேசிக்கொண்டிருந்தது, இன்றைக்கு நமது பயத்தினால் அதனோடு பேசவில்லை. ஆகையால் அதற்குப் பதிலாக நாம்

உததாம கொடுககலா மெனறு ஆலோசிததது, பிரதித தொனியில அருகேயிருநத பிராணிகளெலலாம திடுக கிடுமபடி அநநரிமைபக கூவ, நரி 'அபபா! நான பிழைத தேனென்று வேறோ இடததிறகு ஓடிபபோய் விட டது.

———

ஆதலால எதையும் முன்னே ஆலோசித்துச் செய்ய வேண்டும் ' எனறு தன மிததிராகடகுச சொலலி அவாகளோடு குருநாச மநதிரி தேசாநதரம போ யிறறு

———

VII காகமந்திரி கோடடான்களை சுடடுககொன்றது

பினனாக காகமநதிரி 'இபபொழுது கோடடான் கூடடததைக கொலலவது வருகததமெனறு விவேகமில லாத மநதிரியையுடைய அரசன சீககிரததில கெடுவா ன். விவேகமநதிரி வஞசகமிகதிராகளை பகைவரெனறு அறிநதுகொளவான இபபடி அறிகிறவன இவனிடத திலஇபபோதுஒருவனுமஇலலை. ஆதலால நமகுலததின க்ஷேமததைககுறிதது வேணடிய பிரயததனம செய்ய வேணடுமெனறு நிசசயிதது, அனறுமுதல தினநதி னம ஒருவிறகு கொண்டுவநது வழியண்டை போடடுக கொண்டேவநதது இபபடி அவைகள போராகக கு விநத மாதகிரததில சூரியனுதிததவுடனே கோடடான் களெலலாம குருடாயிருககையில விறகுகளையும சுள ளிகளையும குகையின்வழியில முடடாகசசேர்ததுத தான் மெள்ள மேகவாணனிடததிறகு வநதது.

அபபோழுது மேகவாணராஜன 'எனன செய்தி?' என, சிரஞ்சீவி ' நான பகைவா குலததை வேரோடு

பிடுங்கத்தக்க உபாயஞ் செய்திருக்கிறேன். நீங்கள் ஒவ்வொருவரும் ஒவ்வோர் எரிகொள்ளி கொண்டுவந்து என் ஜாகையின்மேற்போட்டால் கோட்டான்களெல்லாம் இறக்கும்' என்றது. இதைக்கேட்டுக் காகராஜன் 'என்னவுபாயம் செய்தாய் சொல்,' என, மந்திரி மஹாராஜாவே! இது சொல்லத்தக்க ஸமயமன்று; நான் சொல்லுகிற செய்தியைப் பகைவரறிந்து வேறோரிடத்திற்கு ஓடிப்போனால் நம்முடைய இவ்வளவு முயற்சியும் வீணாய்ப்போம்; மேலும் கடிதிற்செய்யத்தக்க காரியத்தில் தாமஸம் செய்யலாகாது' என்றது.

இதைக்கேட்டுக் காகராஜன் தன்பரிவாரத்தோடு கூட எரிகொள்ளிகளைக் கொண்டுவந்து உலூகங்களிருக்குமகுகையின் வழியிற்போட, அந்தப் புகையினால் கோட்டான்கள் பயந்து கலக்கமுற்று கூச்சலிட்டுக் கொண்டு வெளியேவருகையில் வழி அடைபட்டிருக்கக் கண்டு அப்போது குரூரநாசன் சொன்னதை நினைத்து அவன் வார்த்தையைக் கேளாமையின் பலன் இதுதான் இதுதானென்று புலம்பிக்கொண்டிருக்கையில, நெருப்புச சுவாலை அதிகரித்துக் கோட்டான்கள் இறந்தன.

## VIII. காகங்கள் ஸுகமாகவாழத் தொடங்கியது.

பின்பு மேகவர்ணராஜன் முன்விட்டுப்போன தன் மாததில் குடிப்புகுந்து ஸுகமாய் இராஜ்யத்தை அனுபவித்துக் கொண்டிருக்கையில் சிரஞ்ஜீவியைப் பார்த்து, 'நீ பகையாளி வீட்டிலிருந்து எவ்வாறு காரியத்தை முடித்தாய்?' என்றது. சிரஞ்ஜீவி 'குரூரநாசன் தவிர மற்றவர்களெல்லாரும் மூடராயிருந்தமையால் அவர்

கள் அவன் புத்தியைக் கேளாமல் அவனை அவமானம் பண்ணி என்னைத் தங்கள் தூர்க்கத்தில் கொண்டுபோய் வைத்தார்கள். அதனால் அவன் தன் சிநேஹ பந்துக்களோடு வேறு தேசத்திற்குப் போய்விட்டான். மற்றைக் கோட்டான்கள் மூடராகையால் எரிந்திறந்தார்கள். இவ்வாறே முன்னோர்காலத்தில் சத்துரு நாசத்தின்பொருட்டு ஒரு கிருஷ்ண ஸர்ப்பம் தவளைகளைத் தோளிற்சுமந்து அழித்தது' என்றான். அதைக் கேட்டுக் காகராசன் நகைத்து, 'பாம்பு தவளைகளைத் தோளிற்சுமந்து கொன்றவிதம் என்ன? சொல்' என,

சிரஞ்ஜீவி சொல்லலுற்றது.—

## VIII (i). பாம்பு தவளைகளை அடுத்துக் கெடுத்த கதை.

"ஒரு தேசத்தில் மந்தவிஷனென்னும் பாம்பு இரைகிடையாமல் மிகவும் பசித்து ஓர் ஏரிகரையண்டை வரும்போது அதிலே தவளைகள் நிரம்ப இருப்பதைக் கண்டு யாதானுமொரு தந்திர வஞ்சனை செய்தாலொழியத்தனக்கு இரை கிடைக்காதென்று நிச்சயித்துக் கண்ணைவிழித்துக்கொண்டு உட்கார்ந்திருக்க, அதைப்பார்த்து ஒருதவளை 'பாம்பே! நீ இரைதேடும் முயற்சியை விட்டுச் சும்மா ஏன் உட்கார்ந்திருக்கிறாய்?' என்றது. அதைக்கேட்டு ஸர்ப்பம் 'அபாக்கியனாகிய எனக்கு ஆஹாரம் எங்கிருந்து கிடைக்கும்? இன்றைக்குப் பிரதோஷகாலத்தில் இரைக்காகத் திரிந்து கொண்டிருக்கையில் ஒரு தவளையைப் பார்த்து அதைப் பிடிக்கப் போகையில் அது அங்கிருந்த மிகவும் ஸத்பாத்திரனாகிய ஒரு பிராமணனிடம் ஓடிப்போயிற்று. அது

தெரியாமல் நான் அங்கும் இங்கும் பார்த்துக்கொண்டி ருக்கையில் அங்கே நீராடிக்கொண்டிருந்த ஒரு பிரா மணப்பிள்ளேயின் காலேத் தவளேயென்று நினைத்துக் கடித்தேன். அவன் அக்கணமே இறந்தான். அப் பிள்ளேயின் பிதா மிகவும் துக்கத்தால் என்னைப் பார்த்து, 'துஷ்டப் பாம்பே! யாதொரு குற்றமுஞ் செய்யாத என் பிள்ளையைக் கடித்ததினுல் நீ மண்டூ கங்களுக்கு வாகனமாகக்கடவாய்; மேலும் அவைகளு டைய உதவியால் நீ ஜீவனமும் பண்ணக்கடவாய்' என்று சபித்ததினுல் நான் உங்களுக்கு ஊழியம் செய்ய வந்தேன்' என்று பாம்பு சொன்னது.

இதைக்கேட்டு எல்லாத் தவளேக்கும் இதைச் சொல்லத் தவளேகளெல்லாம் தங்களரசனுடனே வெளியேவந்து மிகவும் களிப்புடனே மந்தவிஷ ஸர்ப பத்தின்மேல் உட்கார்ந்தன. அது அவைகளுக்குப பலவித கதிகளேக் காண்பிக்கும்போது, தவளேகள் யானே குதிரை தேர்களிலும் இவ்வாகனம் நன்றுயிருக் கிறதென்று மெச்சி ஸந்தோஷித்தன.

பின்பு அந்தப் பாம்பு இரண்டுமூன்று நாள்வரைக் கும் அப்படியே நடந்து பிறகு மந்தகதியாய்ப் போகத் தொடங்கிற்று. அப்போது அவைகள் 'இன்றைக்கு மெள்ள ஏன் நடக்கிறுய்' என, அப்பாம்பு 'நான் இப் போது பசித்திருக்கிறதினுல் நடக்கக்கூடவில்லே' என் றது. மண்டூகராசன் 'நீ சிறு தவளேயாய்ப் பார்த்து தின் று கொண்டிரு' என்றது. அதைக்கேட்டு ஸர்ப்பம் 'எனக்கு இவ்வண்ணமே அந்தணன் சாபமிருக்கிறது, அப்படியே தாமும் கட்டளேயிட்டீர்' என்று சொல்லி

நாடோறும் தவளைகளைத் தின்றுகொண்டு இருந்தது.

அப்போது, அங்கே வேறோர் அரவுவந்து இதன் நடத்தையைப் பார்த்து, 'நம்முடைய ஆஹாரமான இப்பிராணிகளை நீ ஏன் சுமக்கிறாய்? இது மிகவும் வருத்தம், உனக்கு இது யோக்கியமன்று' என, அதற்கு மந்தவிஷன் 'நான் இவையெல்லாம் அறிவேன்; சில நாளில் என் கருத்து நிறைவேறும்; அக்காலத்தை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன்' என்று சொல்லிப் புன்சிரிப்புடனே முன்போலவே நடந்து கொண்டிருந்தது.

இப்படி எல்லா மண்டூகங்களையுந் தின்று கடைசியில் அவற்றின் அரசனையும் பக்ஷித்தது.

எந்த ஸமயத்தில் எது செய்யவேண்டுமோ அதைச் செய்து சத்துருக்களை வேரோடு நாசம் பண்ணவேண்டும்.

நெருப்பு தன் பராக்கிரமத்தால் காடு முழுவதையும் தஹிக்கிறது: மரவேர்கள் பூமியில் இருக்கின்றன. மிருதுத் தன்மையினால் தண்ணீரும் காற்றும் செடி மரங்களை வேரோடு பிடுங்குகின்றன' என்றது.

அது சொன்ன வாக்கியங்களைக்கேட்டு மேகவர்ணன் 'கடையானவர்கள் இடையூறு வருமென்று பயந்து காரியங்களைத் தொடங்குகிறதில்லை; இடையானவர்கள் காரியங்களைத் தொடங்கி விக்கினம்வந்தால் விட்டுவிடுகிறார்கள்; ஆயிரம் இடையூறுகள் வந்தாலும் எடுத்த கருமத்தை முடிக்கிறவர்கள் தலையானவர்கள். ஆதலால் நீ பலவாறு கஷ்டப்பட்டுப் புத்தியினாலே வெகு பகைவர்களைக் கொன்றாய். இது யோக்கிய



முதலை குரங்கை, ஈரல் எடுத்துவரக், கொண்டுவருவது—122-ம் பக்கம் பார்க்க.

நான்காவது.

## லப்தஹானி அல்லது அர்த்தநாசம்.

### I. சுருக்கம்.

சோமசர்மா அரசகுமாரரை நோக்கி 'இடருற்ற காலையில் அறிவு குன்றாதவன் குரங்கு முதலைகளி னின்று விடுபட்டாற்போல் பெருந் துன்பத்தினின்று மீளுவான்' என, சிறுவர்கள் அது எப்படி என்று கேட்க ஆசிரியன் சொல்லுகின்றான்:—

### II. குரங்கு முதலையிடமிருந்து தந்திரத்தால் பிழைத்தது.

"கங்கைக் கரையில் ஒரு நாவல் மரத்தின்மேல் ஸுமுகனென்னும் ஒரு வானரம் சிலகாலம் வாஸம்பண் ணிக் கொண்டிருந்தது. அங்கேவந்த ஒரிளைத்தமுதலை யைப்பார்த்து 'நீ என் கிருஹத்துக்கு விருந்தாக வந்த மையால் உனக்கு நாவற்பழம் தருகிறேன்' என்று சில பழங்கொடுத்தது. அது தின்று அத்தியந்த ஸந்தோஷத் துடனே தன்னிடத்திற்குப் போய் அன்று தொடங்கித் தினந்தினம் வந்து பலவாறு ஸம்பாஷித்துக் கொண்டு இரண்டும் அந்நியோந்நியமாய் இருந்தன.

ஒருநாள் முதலை சிலகனிகளைக் கொண்டுபோய்த் தன் மனைவிக்குக் கொடுக்க, அது தின்று அக்கனி அமிர்தம் போலிருக்கக் கண்டு தன் நாயகனைப்பார்த்து பிராணநாதா! இந்த மிகவினிய கனிகளை எங்கிருந்து கொண்டுவந்தாய்?' என்று வினவிற்று.

ஆண்முதலை, 'ஸுமுகனென்னும் என் வானர

நண்பன் எனக்கு நாடோறுங் கொடுக்க நானங்கே தானே அவற்றைத் தின்று கொண்டிருந்தேன்; இன்றைக்குத் தின்று மிகுந்ததை உனக்குக் கொணர்ந்தேன்' என்றது.

அதைக்கேட்டுப் பெண்முதலை, 'இத்தீங்கனி தின்பவன் ஈரல் அமிர்தத்திற்கு ஒப்பாயிருக்கும், அதைக் கொணர்ந்து எனக்குக் கொடு. கொடுத்தால் நான் மூப்புச்சாவுகள் ஒன்றும் இல்லாமல் உன்னோடு நெடுங் காலம் ஸுகித் திருப்பேன்' என்றது.

இதைக்கேட்டு முதலை 'உயிர்க்குயிரான என்னன்பனுகிய வானரத்துக்கு நீயேன் இந்தத்தீங்கு நினைக்கிறாய்?' என்றது.

பெண்முதலை 'நான்உனக்கு முக்கியமா யிருந்தால் அதனீரலைக் கொணர்ந்துகொடு, இல்லாவிட்டால் நானுயிர் தரியேன்' என்றது.

ஆண்முதலை, 'காதலியே! ஸகோதரனினும் மித்திரன் விசேஷமாதலால் இதைக்குறித்து நீ ஹடம் பண்ணவேண்டாம்' என்று கெஞ்சி வேண்டிக் கொண்டது.

பெண்முதலை, 'நீ என்றைக்கும் என் வார்த்தைக்கு அன்னிதா சொன்னதில்லை; இன்றைக்கு எனக்குக் குறைவு பண்ணுகிறாய்; ஆதலால் இப்பொழுதே உயிரை விடுகிறேன்' எனப் பிடிவாதமாய்ச் சொல்லிற்று.

ஆண்முதலை பெண்ணின் பிடிவாதத்தை அறிந்து 'அந்த ஸுமுகன் நான் கொல்லக் கூடாதவனாய் இருக்கிறான், நீயோ பிடித்ததைவிடாமல் இருக்கிறாய்,

ஆதலால் நான் இருதலைக்கொள்ளி எறும்புபோல் ஆனேன்' என்று சொல்லி ஸுமுகனிடத்திற்குப் போயிற்று.

அப்போது ஸுமுகன், 'நண்பனே! இன்றைக் கேன் வியசனமாயிருக்கிறாய்?' என்றது.

முதலை 'வேறொன்றுமில்லை; உன் மைத்துனி என்னைப்பார்த்து, 'துஷ்டா! நன்றிகெட்டவனே! நீ எவனாலே ஜீவனம் பண்ணுகிறாயோ அவனை ஒருநாளைக் காயினும் நமது வீட்டிற்கு அழைத்துவந்து விருந்திட வேண்டாமா? அவன் வீட்டுக்குமாத்திரம் வெட்கமில் லாமல் தினந்தினம் போய் பழங்களை வாங்கித் தின்கி றாயே' என்று என்னைக் கோபித்தாள். ஆதலால் நீ என் வீட்டுக்கு வரவேண்டும். உனக்காகப் பற்பல பதார்த்தங்கள் தேடிவைத்துக்கொண்டு உன் வரவை எதிர்பார்த்து காத்துக்கொண்டிருக்கிறாள்' என்றது.

வானரம், 'நண்பனே! எனக்குத் தண்ணீரில் வர முடியாது. நீ என் பிரியமுள்ள மசசனியை இங்கே அழைத்துக்கொண்டுவா' என்றது.

மகரம், 'ஸுமுகனே! நான் கங்கைக்கரையிலிருக் கிறேன், நீ என் முதுகின்மேல் உட்கார்ந்துகொள், நான் நோவாமல் கொண்டுபோகிறேன்' என்றது.

அதின் வார்த்தையை நம்பிக் குரங்கு அப்படியே உட்கார்ந்துகொண்ட மாத்திரத்தில் முதலை தண்ணீரிற் குதித்துப்போயிற்று.

வானரம் 'எனக்கு அச்சமாயிருக்கின்றது; மெள்ள மெள்ள நட' என்றது.

அதைக்கேட்டு முதலை, இப்போது ஸுமுகன்

நம்முடைய ஸ்வாதீனத்தில் இருக்கிறான், இனி இவனுக்கு நம்கருத்தை வெளியிடுவதில் என்ன கெடுதி இருக்கிறது? உரலிலகப்பட்டது உலக்கைக்குத் தப்புமா? என்று தனக்குள் தீர்மானித்துக்கொண்டு, 'மித்திரா! உன்னிஷ்ட தேவதையை நினை. என் பெண்சாதியின் பிடிவாதத்தால் அவளுக்கிரையாக உன்னைக் கொண்டு போகிறேன்' என்றது.

குரங்கு 'நானென்ன பிழை செய்தேன்?' என்றது. முதலை 'நீ நேற்றுக்கொடுத்த நறுங்கனியை என் மனைவி தின்று இத்தன்மையான தீங்கனியைத் தினந் தின்னுகின்ற பாக்கியவானுடைய ஈரல், அமிர்தத்தை யொத்திருக்கும்; ஆதலால் நீ அவனீரலை எனக்குக் கொணர்ந்து கொடாவிடில் நான் பிராணனை விட்டுவிடுவேன் என்றாள். அதற்காகத்தான் உன்னைக் கொண்டு போகிறேன்' என்றது.

அதைக்கேட்டு, வானரம் 'ஓஹோ! இப்படியென்று முன்னமே எனக்குத் தெரிவித்திருந்தால் அந்த மரத்தின்மேல் ஒளித்து வைத்திருக்கிற என் ஈரலை உனக்கங்கேயே கொடுத்திருப்பேனே; வெறும் ஹிருதயத்தோடு இருக்கையில் என்னை வீணாக அழைத்துவந்தாய்' என்று கிலேசப்பட்டது.

அப்போது முதலை 'என் பிராண மித்திரா! அதைக் கொடுத்தால் அவள் ஸந்தோஷமடைவாள் என்று சொல்லி வானரத்தை அதிசீக்கிரத்தில் அதனிடத்தில் கொண்டுபோய் விட்டது. உடனே, வானரம் குதித்து மரத்தின்மேல் ஏறிக்கொண்டு இன்றைக்குக் காலன்

கையிலிருந்து விடுபட்டேனென்று எண்ணிக் கொண்டிருந்தது.

முதலை 'மித்திரா! ஈரலைச் சீக்கிரம் கொடு; உன் மச்சனிக்குக் கொடுத்துவிட்டு வருகிறேன்' என்று சொல்லிற்று.

வானரம்நகைத்து 'மூடா! துஷ்டா! ஈரல் உடம்பை விட்டுத் தனியாயிருக்குமா? அஃதிருக்கட்டும், நீ விசுவாஸகாதக னாதலால் இங்கிருக்கவேண்டாம், சீக்கிரத்தில் போய்விடு. உன்னைப் பார்க்க என் கண் நாணுகின்றது' என்றது.

III. முதலை வானரத்தை வஞ்சிக்க யத்தனிப்பது.

ஸுமுகன் இப்படிச் சொன்னவுடனே முதலை பசசாத்தாபப்பட்டு, நான் இவனுக்கு வழியில் உண்மையைச் சொல்லி காரியத்தை இழந்தேன். இப்போது மறுபடியும் விசுவாஸம் வரப் பேசி இவனைக் கொண்டு போகவேண்டுமென்று உத்தேசித்தது, 'மித்திரா! நான் உன்னைப் பரிக்ஷிக்க எண்ணி இவ்வாறு சொன்னேன். அஸம்பாவிதமான உன் பேசசை உண்மையென்றெண்ணித் திருப்பிக்கொண்டு வரவில்லை. ஈரல் சரீரத்தை விட்டு வேறிடத்தில் இராதென்பது சிறுபிள்ளைக்கும் தெரிந்த விஷயம். நான் இது விளையாட்டுக்குச் சொன்னேன். ஆதலால் நீ என் வீட்டுக்குக் கிலேசமும் பயமும் இல்லாமல் வா. உன் பொருட்டு என் மனைவி வழி நோக்கிக் கண்பூத்துப்போகப் பார்த்துக்கொண்டிருக்கிறாள்' என்றது.

ஸுமுகன் 'பசித்தவனது விசுவாஸத்தில் நம்பிக்கை வைக்கலாகாது என்று பிரியதரிசனனைக் கங்கா

தத்தன் அஞ்சி மீண்டும் அவனைப் பார்க்கவில்லை என்றது.

அப்போது முதலை 'பிரியதரிசனனுக்கு ஏன் அவன் அஞ்சினான்' என,

வானரம் சொல்லலுற்றது,—

III. (1) தவளை பசித்த பாம்பை நம்பாதிருந்த கதை

"ஒரு கிணற்றிலிருந்தகங்காதத்தன் என்னுமொரு பெருந்தவளையை மற்றைத் தவளைகள் மிகவும் வருத்தப்படுத்திக்கொண்டு இருந்தன. அதினால் அது ராட்டினத்தின் வழியே வெளியில் வந்து 'தன் தாயாதிகள் வலியவரும் பலருமாய் இருக்கிறார்கள்: இதற்கென்ன செய்யலா' மென்று எண்ணிக்கொண் டிருக்கையில், ஒரு பாம்பின் புற்றைப்பார்த்து, 'இந்தப் பாம்பை நமது வீட்டுக்கு அழைத்துக் கொண்டுபோய்ப் பங்காளிகளைக் கொல்லவேண்டு' மென நிசசயித்து, வளையின்கிட்டப் போய் பாம்பைக் கூப்பிட்டது.

பாம்பு, கூப்பிடுகிறவன் நம்மைக்கொல்ல வந்தவனோ, மாந்திரிகனோ இன்னானென்று தெரியவில்லை; ஆதலால் இங்கிருந்தே கேட்கவேண்டும் என்று தீர்மானித்து, 'நீ யார்' என்றது.

மண்டூகம் 'நான் கங்காதத்தன் என்னும் மண்டூகராஜன், உன்னைச் சரணமாக அடைந்தேன்' என்றது.

இதைக்கேட்டுப் பிரியதரிசனன் நெருப்பும் துரும்பும் சேர்ந்திருத்தல் போல உன் பரம சத்துருவாகிய நானும் நீயும் எப்படிச் சிநேகமாயிருக்கத்தகும்? ஏன் இந்த விபரீத வார்த்தை பேசுகிறாய்?' என்றது.

கங்காதத்தன் 'என்னை மாற்றார் வருத்துகிறார்க

ளென்று உன்னிடத்திற்கு வந்தேன். நீ எங்கள் ஜன்ம சத்துரு என்பது மெய்யே. ஆனாலும், வலிய பகைவர் களை வைரிகளைக்கொண்டே அழிக்கவேண்டுமென நீதி நூலிருக்கிறது' என்று சொல்லிற்று.

ஸர்ப்பம் 'நான் அங்கே எப்படி வருகிறது?' என்றது.

மண்டூகம் 'உன்னை நான் சிரமமில்லாமல் அழைத்துக்கொண்டு போகிறேன்' என்றது.

அதைக் கேட்டு ப்ரியதரிசனன் 'நாம் இரையைக் குறித்து என்றைக்கும் விசாரப்பட்டுக்கொண்டு இருக்கின்றோம். அவ்வாஹாரம் தானே வந்து இன்றைக்கு நம்மை அழைத்துக்கொண்டு போக இருக்கையில் ஏன் ஆலஸியம் பண்ணவேண்டும்? வலியவந்த ஸ்ரீதேவியை வேண்டாமென்று தள்ளலாகாது' என்று ஆலோசித்துக்கொண்டு தவளையின் பின்னேபோக, தவளை அதை ஏற்றமரத்தின் வழியாய்த் தன்வீட்டிற்கு அழைத்துக்கொண்டுபோயிற்று. அந்தப் பாம்பு அங்கிருந்த தவளைகளை எல்லாம் தின்றது.

பிறகு கங்காதத்தனைப் பார்த்து, 'மித்திரா! உன் சத்துருக்களை எல்லாம் கொன்றபடியினால் எனக்கு ஏதாவது ஆஹாரம் கொடு' என்றது.

தவளை 'நீ உன் சிநேஹிதன் காரியத்தைச் செய்தாய். இனி வந்தவழியே வீட்டுக்குப்போகலாம்' என்றது.

அதைக்கேட்டுப் பாம்பு 'கங்காதத்தா! என் புற்றில் இப்பொழுது வேறேயேதாவது வந்து தங்கியிருக்கும், நான் அங்கேபோய் என்னசெய்வேன்; நான்

கேயே இருக்கிறேன். நீ எனக்குத் தினம் ஒரு தவளை கொடுத்துக்கொண்டுவா, இல்லாவிட்டால் நானெல்லா ரையும் ஒருங்கே கொல்லுவேன்' என்றது.

இவ்வுத்தரவைக் கேட்டுச் கங்காதத்தன் பயந்து தினமொரு தவளை விழுங்காடு கொடுத்துக்கொண்டு வர, அவ்வாறே தின்று கடைசியில் ஒருநாள் கங்காதத் தன் புத்திரனையுந் தின்றது.

அதைக் கங்காதத்தன் மனைவி பார்த்து மிகவும வருத்த முற்று கங்காதத்தரே' நீர் இக்கொடியோனைக் கொண்டு வந்து குலத்தை நாசம் பண்ணினீர். இனி இவ்விடம் விட்டுப புறப்படும். இல்லாவிடில் இவனைக் கொலைசெய்யச் சூழ்ச்சி செய்யும' என்றது.

இதைக்கேட்டு என்ன செய்யலாமென்று யோஜித் துக் கொண்டிருக்கையில் பாம்பு 'எனக்கேதாயினும தின்னக்கொடு' என்றது.

கங்காதத்தன் 'மித்திரா! பானி நக்கையில் நீயேன் இனிக்கு விசாரப்படுகிறாய்? இப்போது என் மனைவியை அனுப்பி வேறுகிணறுகளிலிருந்து தவளைகளை அழைப பிக்கிறேன். அதுவரையில் நீ சும்மாவிரு' என்றது.

இதைக்கேட்டுப் பிரியதரிசனன் 'நீ எனக்கு அன்னை எனக்குப் பிதாவாக இருக்கிறாய்; உடனே தவளைகளை அழைப்பி' என்றது.

அவ்வாறே முந்தித் தன் மனைவியை வேறொரு கூபத்திற்குப் போக்கி, 'போனவள் இன்னும் வரவில்லை நானேபோய் அநேகம் தவளைகளைக் கொண்டுவருகி றேன். நீ இங்கே ஸுகமாக இரு' என்று சொல்லித் தானும் இராட்டின வழியே ஏறிப்போய் விட்டது.

பின்பு பிரியதரிசனன் தவளைகளைக் குறித்து வெகு நாள் வழிபார்த்துக்கொண்டு இருந்து பிறகு, மற்றொரு வளையிலிருந்த ஒரு பல்லியைப்பார்த்துப் பிரார்த்தித்து, ' ஓ பல்லியே ! நீயும் கங்காதத்தனும் மிகவுஞ் சிநேஹமாகையால் அவனிருக்கிற இடத்திற்குப்போய்ப் பிரிய தரிசனன் உன்னை அழைக்கிறான் ; இனி உனக்குத் துரோஹம் பண்ணுகிறதில்லை என்று சத்தியம் செய்கிறான் ; நீ மனதிற் சிறிதும் ஐயபபடவேண்டாமென்று சொல்' என்றது. அவ்வுத்தரவைப் பெற்றுக்கொண்டு அப்பல்லி கங்காதத்தனிடம்போய் எல்லாச்செய்தியையும் சொல்லக் கங்காதத்தன் ' பசித்தவன் விசுவாஸத்தை நம்பலாகாது. நீ போய் பிரியதரிசனனுடனே, 'துஷ்டா ! இனிக் கங்காதத்தன் வரமாட்டானென்று சொல்' என்றது. கவுளி போய்ப் பாம்புக்கு இவற்றையெல்லாம் சொல்லிற்று.

அதுபோலவே, நானும் மீண்டும் உன் வீட்டுக்கு வரேன் ' என்றது.

இதைக்கேட்டுமுதலை ' நீ வராவிடில் எனக்குநன்றி மறந்த தோஷம் ஸம்பவிக்கும். ஆதலால் நான் உன்னைக்குறித்துப் பட்டினியிருந்து இங்கேயே பிராணனை விடுவேன் ' என்றது.

அப்போது வானரமானது நரி நெடுஞ்செவியனுக்கு நம்பிக்கை வருவித்து எபபடிக் கொன்றதோ அப்படியே நீயுமென்னைக் கொலைசெய்ய விரும்புகிறாய்' என்றது.

முதலை அதைக்கேட்டு ' அஃதெப்படி '? என

யிருக்கின்ற அவன் முத்திரையை அவமானம் பண்ணு இறவர்களைச் சடைச்சாம்பலாண்டியாக்கிக் காமதேவன் காட்டில் அனுப்புவான்' என்று சொன்னது.

இதைக்கேட்டுக் குண்டுக்கழுதை அதன்பின்னே போகச் சிங்கம் தக்ஷணமே அதை அடித்து 'நண்டைச் சுட்டு நரியைக் காவல் வைத்தாற்போல' அதற்கு நரியைக் காவல்வைத்துவிட்டுத் தான் நீராடப்போயிற்று. திரும்பி வருவதற்குள்ளே நரி அதனீரலையும் காதையும் தின்றது. பின் சிங்கம் வந்து பார்க்கையில் ஈரலுங் காதும் இல்லாமையால் ஜம்புகத்தைப் பார்த்து, 'இதை யார் தின்றது?' என்றது.

நரி 'இக்கழுதைக்கு ஈரலும் காதுமில்லை; இருந்தால் மறுபடியும் அது உன்னண்டை வருமா?' என்றது.

அதை உண்மையென்று நம்பி, நரிக்கு ஒரு பாகம் கொடுத்துப் பாக்கியைத் தான் தின்றது.

---

அவ்வாறே நீ என்னைக் கொல்ல விரும்புகிறாய்' என்றது.

முதலை 'எவன் தன் பிரயோசனத்தை விட்டு உள்ளதைச் சொல்லுகிறானோ அவன் உதிஷ்டிரன் என்னும் குசவனைப்போல் துன்பமடைவான்' என்றது.

வானரம் 'அதெப்படி' என்று கேட்க,

முதலை சொல்லுகின்றது:—

III. (3) உண்மையை வெளியிட்டு பாடுபட்ட கவை.

"ஒரு குப்பத்தில் உதிஷ்டிரன் என்னும் குயவன் பானைகளை எடுக்கையில் ஓட்டுத்துண்டு ஒன்று கபா

ல்த்தில் தாக்கிக் கத்தி வெட்டுப்போல் காயம்பட்டது. பிறகு சிலநாள் கழித்து அத்தேசத்தில் பஞ்சம் வந்த மையால் அவன் மறுதேசத்திற்குப் போய் இராஜனி டத்தில் ஸேவகத்திலமர, அவ்வரசன் அவ்வடுவைக் கண்டு இவன் போர்க்களத்தில் காயமடைந்த சூரனென் றெண்ணி அவனை மிகவும் உபசரித்து அவனிடத்தில் விசுவாசமாயிருந்தான். அது முதல் மற்றை ஸேவகர் கள் அவனிடத்தில் பொறுமை அடைந்து இராஜன் தய விருந்தமையால் ஒன்றும் பேசாம லிருந்தார்கள்.

அப்படியிருக்கையில் ஒருநாள் இராஜன் ஏகாந்த மாய் உதிஷ்டிரனைப் பார்த்து, 'உனக்குக் கத்திவெட்டு எந்தச் சண்டையில் நேரிட்டது?' என்றான்.

குசஸேவகன் 'ராஜனே! நான் சூளை போட்டுக் கொண்டிருக்கையில் ஓடு விழுந்து இக்காயம் உண்டா யிற்று' என்றான்.

இதைக்கேட்ட மாத்திரத்தில் இராஜன் நாணிக் குய வனைப் பார்த்து, 'நான் மோசம்போனேன்! இது மற்ற வர்களுக்குத் தெரிவதற்குள்ளே நீ ஓடிப்போ. சூரர்கள் கண்டால் உன்னுயிரை வைக்கமாட்டார்கள்' என்றான்.

குயவன் 'சுவாமி என் கைகால்களைக் கட்டிப் போர்க்களத்தில் போட்டு என் அஸ்த லாகவத்தைப் பார்த்தருளும்; வாய் புளித்ததோ மாங்காய் புளித்ததோ என்று சொல்லலாமோ' என்றான்.

இராஜன் 'நீ பிறந்தகுலம் போர்க்களத்தில் வருவ தன்று. அப்படி இருக்க நீ நரிக்குட்டி போல் ஏன் சும் மாத் துள்ளுகிறாய்; குலைக்கிற நாய் வேட்டை பிடிக் குமோ?' என்றான்.

குலாலன் நரிக்குட்டி யாரிடத்தில் தன்னைப் புகழ்ந்து கொண்டது சொல்லுமையா' என,

அரசன் சொல்லுகிறான்:—

## III. (3) (i) நரிக்குட்டி துள்ளியகதை.

“ஒரு வனத்தில் பெண்சிங்கத்தோடு கூடியிருந்த ஒரு சிங்கத்துக்கு இரண்டு குட்டிகள் பிறந்த வுடனே பலவிலங்குகளைக்கொன்று பெண் சிங்கத்துக்கு கொடுத்து அதைப்பார்த்து, ‘இப்பிள்ளைகளுக்கு விறைத்தெரி கிறவரையில் இவர்களை நம்பித் தனியே விட்டிராதே’ என்று சொல்லி, தினம் தான் மாத்திரம் போய் மிருகங்களைக் கொன்று கொணர்ந்து கொடுத்துக்கொண் டிருந்தது.

ஒருநாள் அதற்குத்தீனி ஒன்றும் கிடைக்காமல் திரும்பி வீட்டுக்கு வரும்போது, வழியில் கையிலகப் பட்ட ஒரு நரிக்குட்டியைக் கொல்லாமல் பிடித்துப் பெண்சிங்கத்தினிடம் கொண்டு வந்து ‘இன்றைக்கு இதைத் தவிர வேறொன்றும் கிடைக்கவில்லை என்றது

அது, இக்குட்டி மிகவும் சிறியதா யிருந்ததைப் பார்த்துத் தன் குழந்தைகளில் ஒன்றைப்போலக் காப் பாற்றிக்கொண்டு வந்தது.

அம்மூன்றும் பெரியனவாய் ஒருநாள் காட்டுக் குப் போனபோது அங்கொரு யானையைக்கண்டு அதனை கிட்டப் போகலாகாதென்று சொல்லிவிட்டு நரிக்குட்டி வீட்டுக்கு ஓடிப்போயிற்று. மற்றிரண்டும் அதைப் பார்த்து அதன் பின்னே வீட்டுக்குவந்து தம் தாயு டனே அந்த நரிசெய்த காரியத்தைச் சொல்லின.

நரிக்குட்டி மிகவும் கோபித்து, ‘நான் இவர்களி

னும் சௌரியத்தில் குறைந்தவனோ? இவர்கள் என்னைப் பழித்து நகைப்பதேன்? கூழுக்கு மாங்காய் தோற்குமா? நான் இவர்களைத் தண்டித்து என் பராக்கிரமத்தைக் காட்டுவேன்; கொட்டினால் தேள் கொட்டாவிட்டால் பிள்ளைப்பூச்சியா?' என்றது.

அதைக்கேட்டுப் பெண் சிங்கம் நரியைத் தனித்து ஓரிடத்தில் அழைத்துப்போய், 'நீ நரிக்குட்டி. உன் குலத்திற்கு யானையைக் கொல்லுகிற சக்தியில்லை. உன்னை நான் பால் கொடுத்து வளர்த்தமையால் இந்தப் பராக்கிரமம் சொல்லிக் கொள்ளுகிறாய். இவர்கள் உன்னை இன்னானென்று அறிகிறதற்கு முன்னமே நீ புறப்பட்டு ஓடிப்போ. இல்லாவிட்டால் அவர்கள் கையிலகப்பட்டு இறந்து போவாய்' என்றது. அதைக் கேட்டவுடனே நரி ஓடிப்போயிற்று.

---

ஆதலால் நீ குயவனென்று வெளிப்படுவதன் முன்னமே விரைவாய் இவ்விடம் விட்டுப்போ' என்றான். அவன் அந்த ராஜாவின் உத்தரவுப்படியே ஓடிப்போனான்' என்று முதலை சொன்னது.

---

இதைக்கேட்டு வானரமுகன் 'ஸ்திரீகளின் கிருத்திரமம் ஒருவருக்கும் தெரியாது, ஆகையால் அவர்கள் விசுவாஸத்தை நம்பலாகாது' என்று சொல்லிற்று.

முதலை 'எதனால் நீ இப்படிச் சொல்லுகிறாய்?' என, வானரம் சொல்லத் தொடங்கிற்று.

III (4) ஸ்திரீயின் மாயம் வெளிவந்த கதை.

"தாராநகரத்தில் குடும்பத்தோடு வசித்துக்கொண்

டிருந்த ஸத்தியவிரதன் என்னும் வேதியன், தன் மனைவி எல்லாரோடும் கலஹம் பண்ணிக்கொண்டிருந்ததால் அவள்மேலிருந்த மோஹத்தினால் தன் தேசத்தைத் துறந்து அவளை அழைத்துக்கொண்டு வேறுதேசம் போனான். வழியில் பார்ப்பனி, 'நாயகா! எனக்கு மிகவும் தாஹமெடுக்கின்றது, எங்கிருந்தாயினும் தண்ணீர் கொண்டுவா' என்றாள். அவன் அவளை அங்கேயே இருக்கச்சொல்லித் தண்ணீருக்குப் போய்வந்து பார்க்கையில் அவளிறந்து பிணமாய்க் கிடக்கக்கண்டு மிகவும் புலம்பி வருத்தப்பட்டான். 'உன் வயதில் பாதி இவளுக்கு நீ கொடுப்பாயானால் இவள் மீண்டெழுந்திருப்பாள்' என்று ஆகாசவாணி யுண்டாயிற்று அதைக் கேட்டுப் பார்ப்பான் பவித்திரத்தோடே பாதி வயதை மூன்றுதரம் உச்சரித்துக் கொடுத்தான். உடனே அவள் உயிரோடெழுந்து ஜலபானம் பண்ணி

பின்பு ஒரு பட்டணத்திற் போயிறங்கி அக்னன் ஸாமான் வாங்கக் கடைக்குப் போனபோது அங்கே ஒரு முடவன் நேர்த்தியாய் ஸங்கீதம்பாட. அதைக்கேட்டு அவள் மோஹித்து அவனருகிற்போ 'சிநேஹிதா! என்னை அங்கீகாரஞ் செய், இல்லாவிட்டால் உனக்கும் பெண் கொலைப்பாவம் வரும்' என்றாள்

அதைக்கேட்டு அவன் 'முடவனுக்குக் கொம்புத் தேன் கிடைத்ததே' என்று மிக ஸந்தோஷமுற்று அவள் கையைப் பிடித்துக்கொள்ள, அப்போதவள் 'இவ்வுடம்பை உனக்கு அர்ப்பணம் பண்ணினேன். இனி நீ ஐயமில்லாமல் என்னுடனே கூடவா' என்றாள்.

அப்படியே அம்முடவன் அவளுடன் போய் உட்கார்ந்திருந்தான்.

இதற்குள்ளே கடைச்சரக்குகள் வாங்கிக்கொண்டு அப்பிராமணன் வந்ததும், சமையல் பண்ணி இலை போட்டு, அம்முடவனுக்கும் கொஞ்சம் அன்னம் கொடுக்க வேண்டும் என்று சொல்லிப் போட்டு, இருவரும் சாப்பிட்டார்கள்.

பிறகு பார்ப்பனி, 'நாயகனே! நீர் என்னைத் தனியாகவிட்டுப் போகும் ஸமயங்களில் எனக்கு வேறு துணை இல்லாமையால் இம்முடவன் எனக்குத் துணையாக இருக்கட்டும்' என்றாள். அதைக்கேட்டு அந்த ணன் 'இம்முடவனை எப்படிக் கொண்டு போகலாம்?' என, அவள் 'நான் முதுகில் கட்டிக்கொண்டு வருகிறேன்' என்றாள். நல்லது என்று, அவள் கபடத்தை அறியாது நம்பி, அதற்குடன்பட்டான்.

பின்பு அவனைப புடைவையிற் கட்டி முதுகில் தூக்கிக்கொண்டு போகையில் வழியில் பிராமணன் இளைப்பினால் ஒரு கிணற்றங்கரையில படுத்துக் கண்ணயர்ந்தான். அதைப்பார்த்து, அம்முடவனிடத்துள்ள ஆசையினால் புருஷனைச் சனி தொலைந்ததென்று தூவிலுருட்டித்தள்ளிவிட்டு அம்முடவனை ஒரு பெட்டியில்வைத்து நோவாமலெடுத்துக்கொண்டு தேசாந்தரம் போனாள். அங்கே ஸேவகர்கள் அவள் தலைமேல் பெட்டியிருப்பதைக்கண்டு அவளைப் பெட்டித் தலையுடனே அரசன் ஸமுகத்தில் பிடித்துக்கொண்டுபோய் விட்டார்கள்.

அப்போது அரசன் பெட்டியைத் திறப்பித்துப் பார்த்து, அதில் முடவனைச் கண்டு, 'இவன் யார்?

என்ன செய்தி ?' என்று பார்ப்பனியைக் கேட்டான்.

அவள் ' இவர் என் பர்த்தா, இவ்வாறு முடமா யிருக்கிறதினால் இப்படித் தலையிற் சுமந்துகொண்டு போகிறேன் ' என்றாள். அரசன் அதைக்கேட்டு அவள் கற்புடைமையைக்கண்டு மகிழ்ந்து, அவளைத் தன் உடன் பிறந்தவளாக எண்ணி அவளைத் தன்னிடத்தில் இருக் கச் செய்தான்.

இங்கே இப்படி இருக்கையில், அங்கே அவ்வழி யிற்போன வழிப்போக்க னொருவன் தாஹத்துக்குத் தண்ணீர்குடிக்கக் கிணற்றினுள்ளே இறங்கினபோது அதில் விழுந்துகிடந்த பிராமணனைப் பார்த்து இறங்கி எடுத்து வெளியே விட, அவனங்கே முடவனையும் மனை வியையும் காணமல் எங்கும் திரிந்து தேடிக்கொண்டு இந்நகரத்திற்கு வந்து சேர்ந்தான்.

இவன் வருவதை அவ்விபசாரி பார்த்து வேந்தனு டனே ' இதோ வருகிற இச்சண்டாளன் என் பதிக்கு விரோதி ' என்று முறையிட்டாள். அவ்வேந்தன் ' இவ னைப் பிடித்துக் காவலில் வையுங்கள் என்று வேலகா ளுக்கு உத்தரவுசெய்தான். அவர்கள் அப்படியே செய்யத்தொடங்குகையில், அவன் இறைவனைப்பார்த்து 'ஓ அரசசிகாமணியே! நீர் தருமகுணம் உள்ளவரா யிருக்கின்றீர். ஆதலால் தோஷிசாரித்துச் செய்யும்' என்று தன் குறைகளையெல்லாம் சொன்னான்,

அரசன் அதைக்கேட்டு ஒரு பஞ்சாயத்து நிய மித்து அவர்களால் இப்பார்ப்பான் குற்றவாளியல்லன் அவளே துஷ்டை என்றறிந்து, அவளைத் தக்கதண்டனை செய்து வேதியனை வமாதானம் பண்ணினான்.

ஆதலால் ஸ்திரீகள் அனர்த்தங்களுக்கு மூலமாயிருக்கின்றார்கள். விவேகிகள் அவர்களுடைய பேச்சுக்குக் காது கொடுக்கலாகாது.

அவர்கள் பேச்சுக்குக் காதுகொடுத்து முற்காலத்திலே நந்தனராஜன் என்பவனும் வாருசி என்னும் அவன் பிரதானியும் ஸபைநடுவிலே அவமானம் அடைந்தார்கள்' என்றது குரங்கு.

முதலை 'அஃதெப்படி?' என,

வானரம் சொல்லலுற்றது :—

## III. (5) ஸ்திரீயால் அவமானம் விளைந்த கதை.

"பராக்கிரமசாலியான நந்தனராஜன் என்பவன் அரசாட்சி செய்துகொண்டிருக்கையில் அவன் மனையாட்டி ஏதோவொரு காரணத்தால் பிணங்கியதைக் குறித்து அரசன் எவ்வித ஸமாதானம் செய்தும் கேளாமல் 'நீ வாயிற் கடிவாளம் போட்டுக்கொண்டு உன் முதுகின்மேல் என்னை ஏற்றிக்கொண்டு குதிரை போலக் கனைத்தால் நான் உன் பேச்சிற்குச்செவிகொடுப்பேன்' என்றாள். அப்போது அரசன் அவள் பிரீதிக்காக அவ்வண்ணம் செய்தான்.

அதைப் பிரதானியின் மனைக்கிழத்தி கேட்டு அவளும் கோபமாய்த் தன் பதியுடனே பேசாமல் முறுக்காயிருக்க, அவ்வேளையில் முழுதும் அறிந்தவனாகிய வரருசி யென்னும் மந்திரி, தன் மனைவிக்கு எவ்வித ஆறுதல் சொல்லியும் அவள் ஸமாதானப்படாமல் 'நீ தலை மொட்டை அடித்துக்கொண்டு என்னை வலசாரி இடசாரியாகச் சூழ்வந்து சாஷ்டாங்க நமஸ்காரம் பண்ணினால் உனக்கு நானுடன்படுவேன்' என்றாள். மந்திரி

அவள் பிடிவாதத்துக்காக அவ்வாறு செய்து, மறுநா ளுதயத்தில் ஸபையில் வீற்றிருந்த அரசனிடத்திற்குப் போனுன்.

அரசன் பிரதானியைப் பார்த்து 'நீ எதற்காக முண்டனம் செய்துகொண்டிருக்கிறுய்?' என்றுன்.

மந்திரி 'மகாராஜா அவர்கள், குதிரையைப்போலக் கனைத்தபடியால் அடியேன் மழுங்க மொட்டையிட்டுக் கொண்டேன்' என்றுன்

இப்படி இருவர் பேச்சையும் கேட்டு ஜனங்கள் நடந்த செய்தியையெல்லாம் அறிந்துகொண்டார்கள்.

---

ஆதலால் மாதர்களுடைய அநுசித வார்த்தைகளைக் கேட்டு மௌனமாயிருக்கவேண்டும்.

அங்ஙனம் செய்யாது அவர்களோடு மறுமொழி சொல்லுகிறவன் புலித்தோலைப் போர்த்துக்கொண்ட கழுதையைப்போலக் கிலேசமடைவான்' என்றது.

அதெப்படி?' என்று முதலை வினவ,

குரங்கு சொல்லுகின்றது :—

III. (6) புலித்தோல் போர்த்த கழுதைக் கதை.

" நருமதையாற்றங்கரையில் பவானி என்னும் ஓர் ஏழை வண்ணுன், தன் கழுதை தீனி யில்லாமல் நாளுக்கு நாள் இளைத்துப் போவதைக்கண்டு வியசனப் பட்டுக்கொண்டிருந்தான். ஒருநாள் நினையாமற் கிடைத்த ஒரு புலித்தோலைக் கொண்டுவந்து களிப புடனே இரவில் அக்கழுதையின்மேல் போர்த்து ஊரா பயிர்களில் மேயவிட்டுக்கொண்டு இருக்கையில், குடி கள் அதைப் புலியென்று நினைத்து ஓடிப்போவார்கள்.

இப்படி நடந்து வருகையில் இப்பெருவாயன் மிகவும் பெருத்து ஒருநாள் பயிரைத் தின்றுகொண்டிருக்கும்போது பெண்கழுதையின் குரலைக்கேட்டு மிகவும் பெருங்கூச்சலிடத் தொடங்கிற்று. அப்போது அக்கொல்லைக்காரன் இது புலியன்று என்று நிச்சயித்து அதைப்பிடித்து இடுப்பொடிய அடித்தான்.

ஆதலால் ஸ்திரீகளுடனே வீணுகப் பேசலாகாது.

இப்படியிருக்க நீ அவளைக்குறித்து என்னைக் கொல்ல யத்தனித்தாய். இது உன் குற்றமன்று. விசுவாஸ காதகம் பண்ணுதல் உன் ஜாதிக்கே இயல்பாயிருக்கின்றது. அது ஸாதுக்களின் சேர்க்கையாலும் குணமாகாது. மேலும் துஷ்டர்களுக்கு உபதேசித்துப் பயனில்லை' என்று. இப்படிக் குரங்கு பேசிக்கொண்டிருந்தது.

## IV. முதலைக்கு வந்த துக்கங்கள்.

அப்பொழுது ஜலத்திலிருந்த ஒரு ஜலசரம் வந்து 'உன் மனையாள் உன்னை எதிர்பார்த்துக்கொண்டிருந்து பட்டினியால் இறந்தாள் என்றது.

அந்த ஸமாசாரம் நாராசம்போல் செவியில் ஏறினவுடனே முதலை "நான் கொடியோனுதலால் இத்தன்மைய இடரில் அகப்பட்டேன்; முதல் நண்பனுக்குப் பொல்லாதவனுனேன். இரண்டாவது மனைக்கிழத்தியும் இறந்தாள், வீடும் காடாயிற்று. இல்லக்கிழத்தியில்லாத இல்லம் சுடலையன்றே? ஆதலால் மித்திரா! என் பிழையை மன்னி; நான் உனக்குத் துரோஹம் நினைத்ததனுல் திக்குதிக்கிறேன்' என்றது.

அதைக்கேட்டு வானரம் 'எவனுடைய பேச்சைக் கேட்டு நீ கொலைத் தொழிற்கு ஏற்பட்டையோ அவன் இறந்ததைக்குறித்து இப்போது கிலேசித்து நீ உயிர் விட நினைக்கிறாய். இப்படிப்பட்ட துர்க்குணியின் சாவுக்குக் களிக்க வேண்டும். பதியை விட்டுப் பிறனுக்கு உடன்பட்டிருந்ததினால் முன் ஒருத்தியைப் பார்த்து நரியும் சிரித்தது' என்றது.

அப்போது மகரம் 'நரி யாரைப்பார்த்து நகைத்தது?' என,

ஸுமுகன் சொல்லுகிறது:—

IV. (1) சோரனைநம்பிப் புருஷனை கைவிட்ட கதை.

"ஜம்பகாவதி நகரத்தில் வயது சென்ற தேவதத்தன் என்னும் ஒரு ஸாவகாரியின் பெண்சாதி அந்நிய புருஷர்களிடத்தில் ஆசைகொண்டிருந்தாள். அதை அறிந்த ஒருவிடன் அவளைக்கண்டு 'பெண்ணே! என் பெண்சாதி இறந்த படியினால் நான் மிகவும் துக்கித்துக் கொண்டிருக்கிறேன். நீ என் துக்கத்தைப் பரிகரித்தால் உனக்குப் புண்ணியமுண்டு, உன்னைப் பார்த்து மிகவும் ஆனந்த மடைந்தேன்' என்றான். அதைக் கேட்டு அவள் 'உன் இஷ்டம் இவ்வாறிருந்தால் என் கிழக்கணவன் பணத்தை எடுத்துக்கொண்டு நீயும் நானும் பரதேசம் போய் வாழ்ந்திருப்போம் வா' என்றாள். அவன் 'இது மிகவும் நல்லயோசனை. இனிக் கணப்போதானாலும் தாமதமில்லாமல் இக்காரியத்தில் முயற்சி செய்யவேண்டும்' என்றான். அப்படியே மறுநாள் விடியற் காலத்தில் வெகு திரவியங்களை எடுத்துக் கொண்டு சங்கேதப்படி இருவருந்தேசாந்தரம் போகப்

புறப்பட்டு இருகாதவழி போனார்கள்.

அங்கே குறுக்கே ஒரு பேராறு இருக்கக்கண்டு அவன், இவளை யாராயினும் தேடிக்கொண்டு வந்தால் பணத்தையும் இவளையும் கொண்டு போவதுமன்றி நம்முடைய உயிரையும் வாங்கி விடுவார்கள். ஆதலால் இவளை விட்டு விட்டுப் பொருளை மாத்திரம் ஏமாற்றிக் கொண்டு போகவேண்டுமென்று மனதிலே நிச்சயித்து, பின்பு அவளை நோக்கி, 'இந்நதி மிகவும் கடுமையானது, தண்ணீரும் நிரம்ப இருக்கின்றது. ஆதலால் முந்தி எல்லாவற்றையும் அக்கரையில் வைத்து விட்டுப் பின்பு உன்னை அழைத்துக் கொண்டு போய் அக்கரை சேர்க்கிறேன்' என்றான். அவள் 'உன் மனதின்படி செய்' என, பின்பு அவளிடத்திருந்த பணமுழுவதையும் வாங்கிக் கொண்டு 'என் பிரியநாயகியே! உன் புடைவையையும் அவிழ்த்துக் கொடுத்தால் உன்னைப் பிறகு கொண்டு போவது சுலபமாயிருக்கும்' என்று சொல்ல, அவளப்படியே அவிழ்த்துக் கொடுத்தாள். அதையும் கைக்கொண்டு, இவள் வெட்கத்தினால் அங்கிங்கோடி ஒருவரோடும் சொல்லமாட்டாளென்று எண்ணிக்கொண்டு அபகரித்த பொருள்களோடு போய்விட்டான்.

அதைப் பார்த்து அவள் தன் மனதில் மிகவும் வியாகுலித்து நான் செய்தவேலைக்குப் பலனுடனே கிடைத்தது. இதை அக்கிழப்பிணம் அறிந்தால் என்ன செய்யுமோ என்று பயந்துகொண்டு நாணத்தினால் தண்ணீரில் இறங்கி நின்றுகொண்டிருந்தாள்.

ஒரிறைச்சி துண்டை வாயில் கௌவிக்கொண்டு

ஓடிவந்த ஒரு நரி தண்ணீரினின்று துள்ளிக் கரையில் விழுந்த மீனைப் பிடிக்க நினைத்து வாயிறைச்சியை பூமியில் போட்டு மீனைக் கௌவப்போகையில் அம்மீன் தண்ணீரில் குதித்துவிட்டது; திரும்பி அத்தசையண்டை வருவதற்குள்ளே அதை ஒரு பருந்து தூக்கிக்கொண்டு போயிற்று.

இதைப்பார்த்து அம்மாது சிரித்து, 'மாம்சமும் மச்சமும் போன பிறகு வானத்தைப் பார்த்து ஆவதென்ன?' என்றாள்.

அதைக்கேட்டு ஜம்புகம் குரோதத்தோடே, 'எனக்கு நேரிட்டது போலவே நீயும் உன் சொந்தப் புருஷனையும், சோரனையும் இழந்து நிர்வாணத்தோடு நின்றுகொண்டிருக்கிறாய்?' என்றது.

இப்படி இருவருக்கும் வாக்குவாதம் நடந்துகொண்டிருக்கையில் அவள் கணவன் வந்து நடந்தவற்றை அறிந்து, அவளை மிகவும் தண்டித்துத் துரத்திவிட்டான்

---

ஆதலால்அந்தத் துஷ்டையைக்குறித்துச் சோகமுறாமல், நீ உன் இடத்துக்குப்போ' என்றது.

மகரம் அப்படியே போய் தன்வீட்டில் வேறொரு முதலை இருக்கக்கண்டு, நம்மிடத்தையும் வேறொருவன் கைக்கொண்டான். இதற்குத்தகுந்தஉபாயம் செய்வதில நம்முடைய சிநேகிதனைவிட ஸமர்த்தர்களில்லை. அவனையே கேழ்க்கவேண்டுமென்று தீர்மானித்தது. மீண்டும் நாவல் மரத்தண்டை வந்து ஸுமுகனைப்பார்த்து, மித்திரா! பட்டகாலிலே படும் கெட்ட குடியே கெடும் என்றாற்போல என் துர்ப்பாக்கியத்தினால் என் வீட்டை

யும் வேறொருவன் பிடுங்கிக்கொண்டான். இனி நான் என்னசெய்வேன் ?' என்று முறையிட்டது.

வானரம் 'நன்றி கெட்டவனே, எனக்குப் பொல்லா ங்கு தேடின நீ திரும்பவும் அறிவில்லாமல் என்னிடத் தில் ஏன் வந்தாய் ? மூடனுக்கு உபதேசித்தால் அவன் வீடுடையவனை வீடிழக்கப்பண்ணுவான்' என்றது.

முதலே 'இதெங்ஙனம் ?' என,

குரங்கு சொல்லத் தொடங்கிற்று:—

IV. (2) மூடனுக்கு உபதேசித்த குருவி வருந்திய கதை.

"ஒரு மரத்தின்மேல் கூடுகட்டி அதில் வாழ் ந்துகொண்டிருந்தன இரண்டு தூக்கணங்குருவிகள். ஆலங்கட்டியுடனே பெருமழை பெய்ய அங்கு குளிரி னாலே பல்லுக்கிட்ட நடுங்கிக்கொண்டு ஒருமரத்தடி யில் ஒதுங்கியிருந்து வருந்தும் ஒரு வானரத்தைப் பார்த்து, 'உனக்குக் கால் கைகளிருந்தும் குளிர்காற்று முதலிய துக்கத்தை, ஐயோ ! நீ ஏன் அனுபவிக்கின் றாய் ? நீயேன் வீடுகட்டிக்கொள்ளக்கூடாது,' என்று இரக்கத்தால் சொல்லின. இதைக்கேட்டத் துஷ்டக் குரங்கு 'மூடா ! நீ வல்லவனுக்குப் புத்திசொல்லு கிறையா ? எனக்கு வீடுகட்டுகிற சக்தியில்லை, அதைப் பிரித்தெறிகிற ஸாமர்த்தியம் உண்டு, இதோபார்' என்று அதன்கூட்டைப் பிச்செறிந்தது.

ஆதலால் கீழானோர்களுக்கு உபதேசிக்கலாகாது என்றது.

முதலே 'அன்பனே ! நான் குற்றவாளியென் பது மெய்யே. ஆயினும் பழைய சிநேஹிதனுதலால்

உன்னைக் கேட்கின்றேன்' என்றது.

வானரம் 'நீ அங்கேபோய்ப் பகைவனோடு போர் செய். மடிந்தால் ஸொர்க்கமடைவாய், வென்றால் வீடு பெற்று ஸுகமுறுவாய். முன் ஒரு புத்திசாலி உத்தமனுக்கு ஸாமமும், சூரனுக்குப் பேதமும், காரிய காரனுக்குத் தானமும், ஈடானவனுக்குத் தண்டமும் செய்தாற்போலச் செய்யவேண்டும்' என்றது.

முதலை 'அது எங்ஙனம்?' என,

ஸுமுகன் சொல்லலுற்றது:—

IV. (3) ஆளுக்குத் தக்கபடி நடந்து காரியமுடித்தகதை.

"இமய மலையின்மேல் சதுரன் என்னும்ஒரு நரி பசியோடு அங்குமிங்கும் திரியுங்கால் ஒரு செத்த யானையைக் கண்டு அதன் தோலைக் கிழித்து இறைச்சியைத் தின்னும் வல்லமையில்லாமல் அங்குட்கார்ந்திருந்தது அப்போது அங்கேவந்த சிங்கத்தைக்கண்டு தண்டனிட அது 'நீ யார்?' என்று கேட்டது.

நரி 'நான் தங்களடியேன், தாங்களடித்த யானையைக் காத்து உட்கார்ந்திருக்கிறேன்' என்றது.

சிங்கம் இது நான் கொன்றதன்று, வேறொருவன் கொன்றெறிந்தானோ, அன்றித் தானாய் மடிந்ததோ. எப்படியிருந்தாலும் அதை நான் புஜியேன், உனக்கு வேண்டுமானால் இதை எடுத்துக்கொள்' என்றது.

நரி 'சுவாமி! இது யோக்கியந்தான், பெரியோர்கள் தம் ஆண்மையாலே ஸம்பாதிக்கிறார்கள்' என்றது

சிங்கம் அதைக்கேட்டு வேறொரு காட்டிற்குப் போயிற்று.

பிறகு அங்கே வந்த ஒரு புலியைப்பார்த்து, 'அம்

மான், நீ இக்காலன் முகத்தில ஏன் எதிரபபட்டாய் ? இவ்யானையைக் கொன்ற மிருகேநதிரன் இஙகே ஏதா வது புலிவநதால அதறகுத தெரியாமல எனககுவநது சொல்லுவாயானால நான அதைக கொனறெறிவேன நான முன்னே ஒரு யானையை அடிதது நீராடபபோன விடததில் ஒரு புலி அதை எசசில பணணிறறு. அது முதலாகப புலியைத் தேடிபபாாததும அகபபடவிலலை என்று என்னுடன சொலலியிருககிறான' எனறது

புலி அதைககேட்டு மிகவும பயநது 'மருமகனே எனககுப பிராணதானம கொடுததாய எனச சொல லிககொணடே ஓடிபபோயிறறு

பின்பு ஒரு வானரம் வரககணடு முதலில வநத துஷ்டனைக கும்பிட்டுப போககினேம், இரண்டாமவ னைபபேதிததோம, இபபோது இதன கையால இதைக கிழிபபிகக வேணடுமெனறு தனனுள்ளே நிசசயிததுப பின்பு 'வானரா' நீ நெடுநாளைககுப பின்பு வநதாய, மறறும பசிததிருககிறாய. எனககுச சிஙகம கொடுதத இவ்யானையிறைசசியை நீ கொஞசம தினறு சிஙகம வருவதறகு முனனே சீககிரமாயோடிபபோ' எனறது

குரஙகு அதைககேட்டு யானையைககிழிகக, அப பொழுது நரி, 'வானரா! சிஙகம ஸமீபததில வநதுவிட டது, விரைவாக ஓடிபபோ, எனறது

பின்பு பிளநத இடததிலிருநத மாமசததை நரி தின்னுகையில அஙகே வநத வேறொரு நரியைச சண டையிட்டுத துாததித தான வேணடுமட்டும இறைசசி யைத தின்றது.

ஆதலால் நீ அம்மகரத்தைக் கொன்று உன் வீட்டில் ஸுகமாயிரு. வேறொரு தேசத்தில் ஸௌக்கிய மெல்லாம் கிடைக்குமாயினும் தனக்குச் சிநேஹிதன் அங்கு ஒருவனும் இல்லாவிட்டால் சித்திராங்கன்போல் தீங்குகள் அனுபவிக்கவரும்' என்றது.

முதலை 'சித்திராங்கனுக்கு எப்படி அவஸ்தை நேரிட்டது?' என,

வானரம் சொல்லத்தொடங்கிற்று :—

## IV. (4) பரதேசம் போய் பாடுபட்ட கதை.

"அயோத்தியா நகரத்திலிருந்த சித்திராங்கன் என்னும் ஒரு நாய் பஞ்சத்தினால் சோறு கிடைக்காமல் மறுதேசத்திற்குச் சென்று ஒரு கிருஹஸ்தன் வீட்டுக்குப்போய் அவ்வீட்டுக்காரி சோறுபோட்டு ஆதரித்ததனால் அன்றுமுதல் வெகுநாள் வரைக்கும் அங்கேயிருந்தது. ஒருநாள் ஸஹஜமாய் வீட்டுக்கு வெளியே வந்தது. வந்தவுடனே அவ்வூர் மற்றைநாய்கள் இதன் மேலேவிழுந்து அநேகவிடத்தில் கடித்து அதனுதிர மாம்சங்களை வெளிப்படுத்தினதினால் சித்திராங்கன் மிகவும் துன்பமடைந்து என்ன பஞ்சம் வந்தாலும் ஸுய தேசத்தைவிட்டுப் போகலாகாதெனத் தனக்குள் தேறி மீண்டும் அயோத்திக்கு ஓடிவந்தது. அப்பொழுது, அதற்கு உறவாகிய நாய்கள் 'சித்திராங்கா! அத்தேசம் எப்படியிருக்கிறது?' என, சித்திராங்கன் 'அத்தேசம் செழிப்பாயிருக்கின்றது, மாதர்களும் தயையுடையவர்களாயிருக்கிறார்கள், ஸுஜாதிமித்திரத்துவமில்லை, ஆதலால் இவ்வவஸ்தை நேரிட்டது' என்றது.

ஆனதினால் தன்னிடத்திலிருப்பதைப்போல ஸுகம் வேறில்லை என்கின்றேன்' என்றது.

முதலை அவ்வார்த்தைகளைக் கேட்டுப்போய் அவ்வண்ணமே எதிரியுடனே பொருது தன் வீட்டை மீட்டுக்கொண்டு அங்கேயே வாழ்ந்திருந்தது.

ஆதலால் பராக்கிரமத்தினால், பாக்கியம் தானே வழி தேடிவந்து ஒருவனை அடைகின்றது.

லப்தஹானி முற்றிற்று.

ஐந்தாவது


## அவிமர்சியகாரித்துவம் அல்லது ஆராயாது செயல்.

### I சுருக்கம்

சோமசருமன் அரையன்மக்களை நோக்கி 'எவனொருவனுடைய தீச்செயல்களைக் கண்ணுற்றாயினும் செவியுற்றாயினும் அறிவுடையோன் அதைப்புரியலாகாது. அங்ஙனமாகையில் வெள்ளறிவன் என்னும் பெயரிய ஒரு மயிர்வினைஞன் மணிபத்திரன் என்போனது கருமங்கண்டுழி தேறாமல் அங்ஙனம் புரிந்து இடருற்றனன்' என்றான். அதைக்கேட்ட இளங்குமாரா 'அஃதெவ்வாறு இயம்புதி' என, ஆசிரியன் உரைக்கலாயினன் :—

### II அம்பட்டன் தீரவிசாரியாது செய்ததால் பட்டபாடு.

"அவாசிக் கண்ணதாய பைடணபுரி வாசியாகிய மணிபத்திரனென்போன் நன்னெறிபற்றி ஒழுகலானுளதாய நல்குறவால் துன்பமுற்றான். 'இவ்வறுமை மிகக் கெட்டது. தயை சாந்தி முதலாகிய குணங்கள் பொருளில்லாதாரிடத்தில் விபரீதமாகத் தோன்றுகின்றன என்று கணந்தோறும் வியாகுலித்துக் குடும்பப் பாதுகாப்பின் ஏக்கத்தினால் அறிவு மழுக்க மடைகின்றது; தானியமுதலிய பொருளில்லா வீடு சுடுகாடொக்கும்; அவன் கல்வி முதலிய குணச்சிறப் புற்றோனாயினும் மனிதர்களால் மதிக்கப்படான்; இவ்வாறு பல்வகையான கவலைகள் மிடியினால் எய்துகின்றன; ஆதலால்



பார்ப்பினி கீரியைத் தண்ணீர்க்குடத்தால் கொல்வது
—152-ம் பக்கம் பார்

பட்டினியிருந்து உயிர்துறத்தலே நல்' மென்று துணிந்து அவன தூங்கினான்.

பதுமநிதி ஒருதுறவி வடிவமாய் அவன் கனவிலடைந்து 'நான் உன்னொழுக்கத்தால் கட்புலனாக நாளை இவ்வுருவத்தோடு வருவேன். அப்போது என்சென்னிமேல் தண்டத்தால் புடைப்பையாயின் நான் குன்றாப் பொற் குவை ஆவேன்' என்று சொன்னதைக் கேட்டு அவன் துயிலொழிந்து, இக்கனவு உண்மையோ அல்லது எப்போதும் தனக்குள்ள பொருட்சிந்தையால் நிகழ்ந்த தோற்றமோ என்று தனக்குள் ஸந்தேகித்துக் கொண்டிருந்தான். அப்பொழுது தன் முன் துறவி வரக்கண்டு, நிகழ்ந்த கனவு மெய்யெனத் துணிந்து, அவ்வாறே அச்சன்னியாசி தலையில் ஒரு தடியெடுத்துப் புடைக்க அவன் பொன்மயமாய் ஒளிவிட்டு நின்றான்.

அப்பொற்குவியலை எடுத்து, மூடி, வீட்டில் வைத்து, தன் மனைவிக்கு நகம் களைந்து கொண்டிருந்த வெள்ளறியவன் என்னும் அம்பட்டனைப் பார்த்து, 'உனக்கு இதில் சிறிதுபாகம் தருகிறேன். நீ இவ்வதிசயத்தை ஒருவருக்கும் சிறிதேனும் வெளியிடாதே' என்று வற்புறுத்தி அனுப்பிவிட்டான்.

அறிவின் குறைவால், இவ்வம்பட்டன், இவ்வாறே விடியற்காலத்தில் தானும் ஒரு துறவியை அழைத்து வந்து அவன் மண்டையில் தண்டங்கொண்டு அடித்தால் அவனுடனே சுடர்விரி பொன்னாவன் என்று நினைத்தான். மறுநாள் உதயத்திலெழுந்து, ஒரு சந்நியாசிகள் மடத்துக்குச்சென்று, அவர்களை வணங்கிப் பணிந்து, 'நீங்கள் யாவர்க்கும் நல்லறிவு புகட்டிக் கரையேற்று

கின்றீர்கள். எல்லாருடைய வீட்டிற்கும் பிக்ஷைக்குப் போகின்றீர்கள். கிருபைகூர்ந்து இன்று என் மனையில் பிக்ஷைசெய்யவேண்டும்' என்று வருந்திவேண்டினன். அதற்கிணங்கி அவர்களுள் முதல்வர் வந்தார். அவரை அழைத்துக்கொண்டு வீடு வந்து சேர்ந்ததும், தெருக்கதவைத் தாளிட்டு ஒரு பெரும் உலக்கையால் அச்சந்நியாசி சிரத்தில் ஓயாமலடிக்க, அவர் களைத்து உணர்வற்றுத் தரையில் விழுந்தனர்.

இதற்குள் இவருடைய கூட்டத்தார்கள் இவரைத் தேடிக்கொண்டு நாவிதன் வீட்டில் வந்து பார்க்கையில் சந்நியாசி அடியுண்டு மூர்ச்சையற்றுக் கிடப்பதைக் கண்டு, பெருங்கூச்சலிட்டு, அரசன் சேவகர்களுக்கு இதைத்தெரிவிக்க, அவர்கள் உடனே அந்நாவிதனைப் பிடித்துக்கட்டி அரசனிடம் கொண்டு போய்விட்டார்கள்.

அவன் 'நீ இக்கொடுந்தொழில் ஏன் புரிந்தாய்' என்று அம்பட்டனை அச்சுறுத்தி வினவினன்.

அவன் 'நான் மணிபத்திரன் வீட்டில் நடந்ததைப் பார்த்து இவ்வாறு செய்தேன்' என்று சொன்னன்.

அரசன் உடனே மணிபத்திரனை அழைத்துவரச் சொல்லி அவனை 'உன் வீட்டில் நடந்தது என்ன?' என்று கேட்டான்.

அவன் ஒன்றுஞ் சொல்லாமல் மௌனமாயிருந்தான்.

அரசன் அம்பட்டனைப்பார்த்து, 'இவன் ஆராயாமல் இக்கருமம் புரிந்தானகையால் இவனைக் கழுவிலேற்ற வேண்டும், என்றான்.

## III. அரசன் உபதேசம்.

அரசன் எல்லோரையும் நோக்கி இவவாறே முன் ஒரு பிராமணஸ்திரி தீர விசாரியாமல தான் செய்த தொழிலால, ஒரு கீரிபபிள்ளையைககுறித்து மிகத்துககமுற்றாள் ' என்று சொன்னான்.

அதென்னவென்று மணிபத்திரன் பணிநது கேடக அரசன் சொலலததொடஙகினான் :—

## III. (1). ஆத்திரக்காரி அலமந்த கதை.

" உச்சயினிபுரத்தில் தேவசாமன் என்னும ஒரு பிராமணன் தன்மனைவியோடு வாழநதுவரும நாளில் அவாகளுககு மகவிலலாக குறைவால ஒரு கீரிப்பிள்ளையை மைநதனைபபோல கருதி வளாதது வநதாாகள் அபபொழுது அவாகளுககு ஒரு குழநதை பிறநதது. பிறகு ஒருநாள் குழநதை தொடடிலில தூங்குகையில் குழந்தையைப பாாத்துக் கொளளுமபடி தன் கணவனிடம்சொலலிவிடடு, மனைவி தண்ணீருககுபபோனாள். சற்று நேரங் கழிததுப பிராமணனும அவசரகாரியமாக வெளியே போனான்

அசசமயததில ஒரு பெருஙகிருஷ்ண சாபபம தொட்டிலின் மேல் வருவதை சமீபததிலிருநத கீரிபபிள்ளை பார்த்து, உடனே விரைநதுதாவி அதைப பறறி உதறிக்கொன்று கண்ட துண்டமாகச செய்து எறிநது விட்டுக் குருதி தோய்நத முகததோடு வீட்டின் வெளியே ஓடிவநதது.

அபபொழுது தண்ணீருக்குச சென்று திருமபி வரும் பார்ப்பனி அதைபபாாத்து, அது தன் குழநதையைக் கடித்துக் கொன்று விட்டதென்று எண்ணி

அடங்காக் கோபத்தோடு, உள்ளேபோய் உண்மையைத் தெரிந்து கொள்வதற்கு முன்னமே, தன்கையிலிருந்த தண்ணீர் குடத்தை அதன் தலையில் எறிந்து அதைக் கொன்றாள்.

பின்னர் உட்புகுந்து பார்க்கையில் மகன் தொட்டிலில் உறங்குவதையும் பக்கத்தில் கிருஷ்ண சர்ப்பம் துண்டு பட்டுக் கிடப்பதையும் கண்டாள்.

'ஐயோ! பொறுமையின்றி, மதிக்குறைவால், அருமையாய் வளர்த்த இக்கீரியை, அது செய்த பெரு நன்மையை அறியாது, இவ்வாறு கொன்றேனே! இதற்கு யான் என் செய்கேன் !!' என்று அனுதாபித்து அழுது கொண்டிருந்தாள்.

IV. ஆத்திரகாரி செய்த உபந்யாஸம்

வெளியே சென்ற புருஷன் வந்து என்னவென்று

அதற்கு அவள், 'நீர், என் வார்த்தையை மதியாது சென்றமையாலன்றோ, இப்பெரும் விபத்து நேரிட்டது. இது பேராசைக்காரன் தலையில் சக்கரம சுழன்றதை ஒத்திருக்கிறது' என்று சொன்னாள்.

அது என்ன வென்று புருஷன் கேட்க.

மனையாள் சொல்லத் தொடங்கினாள் :—

IV. (1) பேராசைக்காரன் தலையில் சக்கரம் சுழன்ற கதை.

"அமராவதி நகரத்தில் இன்புற்றிருந்த பிராமணர் நால்வர் மிடியால் மிகத்துன்புற்று, இனி இங்கிருப்பதிலும் வனநாடிச் செல்லுதலே நலம், அன்றி நம்முடைய தரித்திரத்தைத் தீர்த்துக் கொள்ளவே எவ்விடத்

திற்காவது செல்லவேண்டும் என்று நிச்சயித்து, நால்வரும் அவ்வூரைவிட்டுப் பாய்க்கொண் டிருந்தனர். க்ஷிப்பிரா நதிக் கரையோரத்தில் பைரவாநந்தி என்னும் யோகியொருவர் எல்லாம் வல்லாரா யிருப்பதைக் கேள்வியுற்று, அவரால் நன்மை பெறலாமெனக் கருதி அங்குச் சென்று அவருக்கு பணிவிடை செய்து பூசித்துவந்தனர். அவர் இவர்கள் வழிபாட்டிற் கிணங்கி, அன்புடன் 'நீங்கள் இங்கு வந்த காரணம் என்ன?' என்று கேட்டார்.

அவர்கள் 'அடிகளே! நாங்கள் நல்குரவால் மிக நலிந்து மெலிந்து, எங்கள் நாட்டைத் துறந்து, பொருளீட்டும் அவாவால் வெளிப்போந்துத்தங்களிடம் வந்து சேர்ந்தோம். விடாமுயற்சியாலன்றி பொருள் எய்துவதன்று. தயை கூர்ந்து தாங்கள் எங்கள் மனோபீஷ்டத்தை நிறைவேற்றி அருள வேண்டும்' என்று வணங்கி இறைஞ்சினர். அந்த சித்தர் அன்புடன் அவர்களை நோக்கி 'நான் கொடுக்கும் வர்த்திகளை உங்கள் தலையில் வைத்துக்கொண்டு, இமயகிரி நெறிபற்றி நேரே செல்லுங்கள். போகும்போது எவன் தலைவர்த்தி கீழே விழுகிறதோ அங்கே அவனுக்கு இஷ்டப்படி பொருட்பேறு கிடைக்கும்' என்று அனுக்கிரகித்து, நான்கு திரிச்சீலைகளை எடுத்து அவர்கள் தலைமேல் வைத்து, அவர்களை அனுப்பிவிட்டார். அவர்கள் அவரைத்தொழுது விடைபெற்றுக்கொண்டு அவரது ஆணையையும் திரிச்சீலைகளையும் தம் சிரமேல் தாங்கி இமயகிரி நோக்கிச்சென்றார்கள்.

சற்றுதூரம் போனதும் ஒருவன் தலைவர்த்தி கீழே

விழுந்தது. அவ்விடத்தில் அவர்கள் வெட்டிப்பார்க்கை யில் தாமரக்கனி இருக்கக்கண்டு அவனை அங்கே விட்டு, மற்றவர்கள் அதிக ஆசையோடு மேற்சென்றார்கள். அவன் வேண்டிய அளவு தாமரத்தை வாரிக்கொண்டு திரும்பிப்போய்விட்டான். இம்மூவர்களும் அவ்விடம் விட்டுப் போய்க்கொண்டிருக்கையில் மற்றொருவன் தலை யிலிருந்த திரி கீழே விழுந்தது. அவன் அவ்விடத் தில் தோண்டிப்பார்க்கையில் வெள்ளிக்குவியலிருக்கக் கண்டு, 'நாம் இதை எடுத்துக்கொண்டு திரும்பிப்போய் விடுவோம்' என்று சொல்ல மற்றவர்கள் அதற்குடன் படாது அவனை அங்கே விடுத்துச் சென்றார்கள். அவர் கள் போகவும், அவன் இயன்றளவு வெள்ளியை எடுத் துக்கொண்டு தன்னூருக்குத் திரும்பிவிட்டான். மற் றிருவரும் மேனோக்கிச் செல்கையில் ஒருவன் தலையி லிருந்த திரிச்சீலை கீழே விழுந்தது. அங்கே சோதித் துப் பார்க்கையில் பொற்குவை இருக்கக்கண்டு, மிக ஆனந்தங்கொண்டு, 'நாம் இதில் வேண்டிய அளவு தூக் கிக்கொண்டுபோய், நம்முடைய கஷ்டந்தீர்ந்து, சுக மாய் வாழ்வோம், வா' என்று தன் துணைவனைக்கூப்பிட, பேராசைகொண்ட அத்தெளர்ப்பாக்கியன், இதற்கிணங் காது, இன்னும் மேற்சென்றால் விசேஷப்பொருள் களைப் பெறலாமென்ற அவாவுடன் தன் தோழனை பொன்னையெடுத்துக்கொண்டுப் போகும்படி விடுத்து, தான் விரைவாய்த் தனியே நடந்து சென்றான்.

வெயிலால் வருந்தி பசிதாகத்தால் களைத்து வெகு தூரம் நடந்து நெறிதவறி இவன் உழல்கையில், அங்கே உடல் முழுதும் குருதிதோய்ந்து தலையில் ஒரு சக்கரம்

சுழன்றுகொண்டிருக்க மிக வருத்தமுற்று நிற்கும் ஒருவனைக்கண்டு, 'நீ யார்; உன் தலைமேல் இந்நேமி இவ்வாறு சுழல்வதேன்' என்றுகேட்டவளவில் அச்சக்கரம் அவன் தலையைவிட்டு நீங்கி இவன் தலையில் வந்து சுற்ற ஆரம்பித்தது. இதைக்கண்டு துணுக்குற்று, 'கிணறு வெட்டப் பூதம் புறப்பட்டதே' என்று மிகக் கலங்கி, முன்னின்றவனை நோக்கி 'இந்நேமி உன் தலையைவிட்டு என் சிரத்தின்மேல் வந்ததின் காரணமென்ன, என்று கேட்டான்.

அவன் 'இச்சக்கரம், நிதிக்கோனால் தன்னிதியைக் கவர்தற்கு வருவாரைபபற்றி அச்சுறுத்துவதற்காக, இங்கு வைக்கப்பெற்றுளது. இதனால் பீடிக்கப்பட்டவர்கள் பசிதாகமின்றி எப்பொழுதும் இத்தீராத் துன்பத்தை அனுபவிப்பார்கள். நான் இராமன் அரசாட்சி காலத்தில் மிடிநோயால் வருந்தி, இருநிதி பெறும் பேராசையால், இவ்விடம் வர இங்ஙனம் நேர்ந்தது. வெகு நாளுக்குப்பின் மற்றொருவன் தலையில் சித்தித்திரியோடு இவ்விடம் வந்து உலாவுவான். அப்பொழுது இவ்வாழி அவன் தலையைப்பற்றிக்கொள்ளும் என்று குபேரன் எனக்குச் சொல்லி இருந்தான். அந்தப்படியே இவ்வளவு காலத்திற்குப் பின்பு நீ இன்று இங்குவந்து என்னைக் கேட்டாய். அதனால் இதுசம்பவித்தது. இதுகாறும் நான் பட்ட துன்பத்துக்கு அவதியில்லை,' என்றுசொல்லித் தன்வழியை நோக்கிச் சென்றனன்.

பிறகு பொன்பெற்றவன் தன்தோழன் திரும்பி வாராமையைக்குறித்து ஐயமுற்று, அவனைத்தேடி

கொண்டுவந்து, தலையிற்சுற்றும் சக்கரத்தோடு நிற்கும் தோழனைக்கண்டு, அஞ்சி அருகு செய்தி, இது என்ன வென்று கேட்க அவன் ‘இது பேராசையின் பலன்’ என்று சொன்னான்

சுவர்ணசித்தி பெற்றவன், மனம் வருந்திக் கலங்கி பின் சற்றுத் தேறி, ‘வெள்ளறிவுடையோர்க்குக் கல் விப்பயிற்சி சிறிதுளதாயின் பிறர் சொல்வதைக்கேளாது, செத்த சிங்கத்தை உயிர்ப்பித்தவரைப்போல, கெடுவார்கள்’ என்றான். அதைக்கேட்டு சக்கரத்தலையன் அது என்னவென்று கேட்க,

சுவர்ணசித்தி சொல்லலுற்றான்:—

IV (1) (i) கற்றறி மூடர் மாண்ட கதை.

“ துளசாபுரி என்னும் ஒருமூதூரில் நான்கு மாணாக்கர்கள் ஒருசாலையில் கல்வி பயின்று அவர்களில் மூவர்க்கு மந்திரவித்தை கைவர, அவர்களில் ஒருவன் ‘நாம்சென்று அரசனை அடுத்துப் பெரும் பொருள் ஈட்டுதலன்றோ நாம்வித்தை கற்றதற்குப் பிரயோசனம்’ என்று சொல்ல மற்றவர்கள் அப்படிச் செய்வதே உசிதமென்று சொன்னார்கள். ஒருவன் ‘நம்முள் இவ்வொருவன் கல்வியறிவு சிறிதுமிலன். ஆதலால் நாம்சம்பாதிக்கும் பொருளில் இவனுக்குப் பங்கு கொடுக்கக் கூடாது. ஆதலால் இவன் இப்பொழுது நம்மோடு வராது தன் வீட்டுக்குப் போய் விடட்டும்’ என்று சொன்னான். மற்றவர்கள் ‘அது நியாயமன்று, இவன் கல்வித்தேர்ச்சி இல்லானாயினும், இளமைதொட்டு நம்முடனிருந்து பழகி வளர்ந்தவன். அன்றியும், உலக நடையில் நம்மினும் தேர்ந்தவன். அரசனிடத்தில் உலகநடை அறி

யாது கல்விமாத்திரம் பயின்றோர் புகழெய்தப்பிரகாசிக்கமாட்டார்கள். ஆகையால் இவனையும் கூட அழைத்துக்கொண்டுபோய் இவனுக்கும் ஒருபங்கு கொடுக்க வேண்டும்' என்று சொன்னார்கள்.

அந்தப்படியே எல்லோரும் சம்மதித்து, அவனிடம் விட்டு புறப்பட்டு வேறூரை நோக்கிச் சென்றார்கள்.

போகும்வழியில் ஒரு காட்டில் ஒரு சிங்கம் இறந்துகிடந்ததை அவர்களில் ஒருவன் பார்த்து, 'நாம் இறந்ததைப் பிழைப்பிக்கக் கற்றுள்ள மந்திர வித்தையை இப்பிராணியிடத்துப் பிரயோகித்துப் பார்ப்போம்' என்றுசொல்ல, உலகவியல்பு அறிந்தவன் அதைக்கேட்டு 'இவ்வாறு செய்தல் தகாது. நம் வித்தையால் இச்சிங்கத்தை உயிர்ப்பித்தாலுடனே அது நம்மெல்லோரையும் கொன்று தின்று விடும்' என்று சொல்லித் தடுத்தனன். வித்தியாகர்வங் கொண்ட அவ்வறிவிலிகள் அதற்குடன் படாது மந்திரப்பிரயோகத்திற்கு ஆரம்பிக்க, மற்றவன் 'இத்தகாத காரியத்தினால் இவர்கள் உயிரிழப்பது திண்ணம், நாமாவது இவ்வாபத்திலிருந்து தப்பவேண்டும்' என்றெண்ணி, தூரத்திலுள்ளதோர் மரத்தினுச்சியிலேறி மேல் நடக்கும் விஷயங்களைக் கவனித்துக்கொண்டிருந்தான்.

மந்திர சக்தியினால் அச்சிங்கம் உயிர்பெற்றெழுந்ததும், அது ஒரே பாய்ச்சலாய்ப் பாய்ந்து, பக்கத்திலிருந்த அம்மூன்று வித்யா சமர்த்தர்களையும் அடித்துக் கொன்றது.

ஆதலால் கல்வியினும் அறிவே மிக விசேஷமானது' என்று சொன்னான்.

அதற்குச் சக்கரத்தலையன் இது சரியானகாரணம் அன்று. அறிவுமாத்திரமேயும் அவ்வளவு பயன்படாது. தன் வீட்டுக்குப் பல காவல்கள் அமைத்திருப்பினும் அறிவுடையோன் நாசமுறுகின்றான். பேதையானவன் காட்டகத்தில் தனித்திருந்தும் உய்கின்றான். முன் ஆயிரம்புத்தி மல்லாந்ததையும், நூறுபுத்தி தொங்கினதையும், ஒரு புத்தி சுகமாய் நீரில் விளையாடி வாழ்ந்து கொண்டிருந்ததையும் நீ கேட்டிலையோ' என்றான்.

அவன் 'நான் இதை அறிந்திலேன், சொல்' என்று வேண்ட நேமித்தலையன் சொல்லத்தொடங்கினான்:—

IV. (1) (ii) மிகுந்த அறிவு விதியால் திண்டாடிய கதை.

"மகததேசத்தில் ஒரு மலர்ப்பொய்கையில் அறிவாயிரத்தன், நூறறிவன் என்னுமிரண்டு மீன்களும், ஓரறிவன் என்னுந்தவளையும், மிக்க நண்புடன் வாழ்ந்து வந்தன. ஒருநாள் அங்கு ஒரு வலைபன் வந்து, 'நாளைக்கு இக்குளத்திலுள்ள கொழுமீன்களைப் பிடிக்கவேண்டும்' என்றுசொன்னதைக்கேட்ட அந்த தவளை தன்னுயிர்த்தோழராகிய மீன்களிடம் சென்று செம்படவன் உத்தேசத்தை அறிவித்து, அப்பொய்கையை நீங்கி வேறிடத்துக்குப்போகவேண்டுமென்று சொல்லிற்று.

அறிவாயிரத்தன் 'நான் நீர்நடையாவும் கற்றுவல்லேன்' என்றும், நூறறிவன் 'எது வரத்தக்கதோ அது இங்கேயே வரட்டும்; யான் இவ்விடம் விட்டுப்பெயரேன்' என்றும் சொல்லக்கேட்டுத் தவளை 'நான் இதோ வேறிடம் போகிறேன். உயிர்தப்ப விரும்பிவீ

ராயின், நீங்களும் என்னுடன் வாருங்கள்' என்று சொல்ல, அவைகள் அதை மதியாது மறுத்தன. பிறகு தவளை தன் பரிவாரத்தோடு வேறோர் தடாகத்துக்குப் போயிற்று.

தன் உத்தேசப்படி மறுநாள் செம்படவன் அப் பொய்கைக்கு வந்து, வலையெறிந்து அதிலுள்ள மச்சங் களையெல்லாம் பிடித்து, அவற்றுள் அறிவாயிரத்தனை தன் தலைமேல் போட்டுக்கொண்டும், நூறறிவனை வாலைப்பற்றித் தலைகீழாகத் தூக்கிக்கொண்டும் போவ தைக்கண்டு ஓரறிவனாகிய தவளை தன் பரிவாரத்தைப் பார்த்து 'அறிவாயிரத்தனும், நூறறிவனும் இவ்வாறு அவஸ்தைப்பட ஓரறிவனான நான் சந்தோஷமாய் நீரில் விளையாடுகின்றேன். பாருங்கள்' என்று குதுகுலித்துச் சொல்லிற்று.

ஆதலால் மிக்கறிவோனுக்கும் 'ஊழ்வினையால் துன்பம் வந்தெய்தும்' என்றுசொன்னான்.

அப்பொழுது பொன்பெற்றவன் 'நீள்செவியன் என்னுங்கழுதை சுமதியென்னும் நரி தடுத்துச்சொல் லியும் கேளாது, உரத்த குரலெடுத்துப்பாடி எவ்வாறு கட்டுண்டு அடிபட்டதோ அவ்வாறு உனக்குத் துன்பம் நேரிட்டது' என்றான்.

சக்கரத்தலைவன் 'அதெப்படி நிகழ்ந்தது?' என்று கேட்க,

சுவர்ணசித்திபெற்றவன் சொல்லுகின்றான் :—

IV. (1) (iii) ஹிதோப தேசம் மீறித் திண்டாடியகதை.

"நீள்செவியன் என்னும் கழுதையும், சுமதி என்

னும் நரியும் வெகு அந்நியோன்யமாய் ஊரிலுள்ள பயிர்களை மேய்ந்து வாழ்ந்து திரியுநாளில் ஒருநாள் விலாப்புடைக்கத் தீனிதின்று தேக்கெறிந்து தங்கியிருந்தன. நீள்செவியன் 'நேர்த்தியாய் நிலவு எரிக்கும் இன்றிரவு என் தீங்குரலோடு கானம் செய்யவிரும்புகிறேன்' என்றுசொல்ல, சுமதி 'இப்படிச்செய்யாதே. உன் குரலைக்கேட்டு உழவர் துயிலொழிந்து ஓடிவந்து உன்னைப்பிடித்துப் புடைப்பார்கள். ஆகையால் மௌனமாயிரு' என்று சொல்லிற்று. நீள்செவியன் 'இன்னிசை அறியும் ஞானம் உனக்கின்மையால் நீ இவ்வாறு தடுக்கிறாய்' என்று நரியை இழித்துப்பேசி, தன் பெருங்குரலை முழுதுங்காட்டிப் பாடிற்று.

அதைக்கேட்டு, தம் பயிரை தினம் மேய்ந் தழிக்கும் பிராணி இதுதானென்று துணிந்து உழவர் வந்து நகழுதையைப் பிணித்து நன்றாய் நலியப்புடைத்தார்கள். அப்பொழுது நரி அதைப்பார்த்து 'சிநேகிதா, என் வார்த்தையை உதாசினஞ்செய்து இசைபாடினதினாலன்றோ இவ்விபத்துக்குள்ளானாய்' என்று இகழ்ந்துரைத்தது' என்றான்.

நேமிச்சிரத்தன் 'நன்மொழிபெற்றும் அதிருஷ்டக் குறைவால் மந்தரன் என்னும் தந்துவாயன் மரணமுற்றனன்' என்று பின் வருமாறு சொல்லலுற்றான்:—

## IV. (1) (iv) அதிர்ஷ்டக் குறைவால் மாண்ட கதை.

"நாராயணநகரத்தில், மந்தரன் என்னுமொரு தந்துவாயன் பலவகை வஸ்திரங்கள் நெய்து விற்றுக் கிடைக்கும் ஊதியத்தால் தன் மனைவியுடன் சுகமாய்

ஜீவனம் செய்துவந்தான். ஒருநாள் அவன் தறி முறிந்து போனமையால் அதற்கு மரம் வெட்டவேண்டி ஒரு காட்டிற்சென்று தேடிப்பார்க்கையில் அங்கொருபெரிய வாகைமரம் இருக்கக்கண்டு அதை வெட்டத் தொடங் கும்போது அம்மரத்தில் வசித்துக்கொண்டிருந்த இய க்ஷன் ஒருவன் அவன் முன் தோன்றி ‘ இது யான் வசிக்குமிடம், இதை வெட்டாதே. உனக்கு வேண் டிய வரத்தை தருகிறேன் ’ என்று சொல்லச் சாலியன் அவ்வாறே சம்மதித்து ‘ நான் என் வீட்டிற்குப்போய் யோசித்துக்கொண்டு நாளை வந்து என்னிஷ்டத்தைத் தெரிவிக்கிறேன் ’ என்று விடைபெற்றுப்போனான்.

போகும் வழியில், எதிர்ப்பட்ட தன் மித்திரனை நாவிதனிடம் நடந்த விஷயங்களைத் தெரிவித்து என்ன வரம் கேட்கலாமென்று வினவ அதற்கவன் ‘ நீ அரச னாகவும் நான் உன் மந்திரியாகவும் வேண்டிக்கொள் ’ என்று சொன்னதைக்கேட்டுப பின் தன் வீட்டுக்குப் போய் எல்லாவற்றையும் தன் மனைவிக்குத் தெரிவித்து அவளுடைய அபிப்பிராயம் என்னவென்று கேட்டான். அவள் ‘இராஜ்யம்பெற்றால் அது அளவற்ற துன்பங் களுக்கு ஏதுவாயிருக்கின்றது. மன அமைதி சற்று மிராது. ஆகையால் அது விரும்பத்தக்கதன்று. நம் சாதித்தொழிற்கேற்ப நடப்பதே தகுதி. உனக்கு இரண்டு முகமும் நான்கு கைகளும் இருந்தால் நீ இரு மடங்கு வேலைசெய்து இரட்டிபபு வரும்படி சம்பாதிக்க லாம். ஆகையால் அவ்வியக்கனிடம் சென்று இவ்வரத் தைப் பெற்றுவா ’என்றாள்.

அதற்கிசைந்து அவ்வாறே சென்று இயக்கனை

வேண்ட, அவன் அவ்வாறே ஆகுக என்று சொல்லிய அளவில் இவனுக்கு இரண்டு வதனமும் நான்கு கரங்களும் உண்டாயின. இவ்வுருவத்தோடு சந்தோஷத்துடன் விரைவாக வீட்டை நோக்கி இவன் வருகையில் கண்டோர் யாவரும் இவனை ஒரு அரக்கனென்றெண்ணி வெருவி அவன்மேல் கல்லையெடுத்து எறிந்து புண்படுத்திக்கொன்றார்கள்.

ஆதலால் வரற்பாலது வந்தெய்தாது ஒழியாது என்று நம்பிக் கற்றுணர்ந்தோர் வீணாசை கொள்ளார். கொண்டால் 'கிருபணனைப்போல் கேடுறுவார்கள்; என்றான்.

பொன்பெற்றவன் அச்செய்தி என்ன என்று கேட்க,

சக்கரச்சிரத்தன் சொல்லலுற்றான் :—

(IV) (1) (v) வீண்மனோராஜ்ய விஷய கதை.

"பண்டரபுரத்தில் கிருபணசருமன் என்றொரு வேதியனிருந்தான். அவன் நாடோறும் பிச்சையேற்றுக் கிடைத்த அரிசியில் உண்டதுபோக எஞ்சியதை ஒரு மண்பானையிலிட்டுச் சேர்த்து வைத்துக்கொண்டிருந்தான். ஒருநாள் பானையினருகே படுத்து மனம் போனவாறு எண்ணமிட ஆரம்பித்தான்.

'ஒருசமயம் பஞ்சகாலம் வரும்போது இப்பானையிலுள்ள தானியத்தை நல்ல விலைக்கு விற்று அதற்கு ஒருகாராடு வாங்கிவளர்த்து விருத்திசெய்வேன். பின்பு அவைகளை விற்று ஒரு பசுவைவாங்கி வளர்த்துப் பின்னர் பசுவையும் கன்றுகளையும் விற்று ஒரு குதிரையை

வாங்குவேன். பின்பு அக்குதிரையின் குட்டிகளைவிற்று தனவந்தனுவேன். பிறகு தக்க கன்னியைநாடி மணம் புரிந்து சுகித்து வாழ்ந்திருப்பேன். அவள் வயிற்றில் குழந்தை தோன்றும். அது தவழ்ந்து விளையாடும் காலத்து ஒருசமயம், என் மனைவியைநோக்கிக் குழந்தையை எடுஎன்பேன். அவள்வேலைநிர்ப்பந்தத்தால் நான் சொன்னதை கவனியாமலிருக்கச் சினந்து அவளை இவ்வாறு உதைப்பேன்' என்று தனக்குள் சொல்லிக் கொண்டு வலுவாயுதைத்தான். அது பானையிற்பட்டு அது உடைந்து உள்ளிருந்த பண்டமுழுவதும் கீழே கொட்டுண்டு சிதறி வீணுயிற்று.

---

ஆகையால் வீண்கற்பனை கற்பித்து வீணெண்ணம் எண்ணுவது தகாது' என்றான்.

அப்பொழுது சுவர்ணசித்திபெற்றவன் ' இது உன் குற்றமன்று, பற்றுள்ளத்தின்செயல். கிருபணத்துவத்திஞல் சித்திரசேனன் என்னும் அரசன் மிகத்துன்புற்றனன் ' என்றான்.

சக்கரதரன் ஆவலோடு அதெப்படியென்று கேட்க சுவர்ணசித்தி சொல்லுகின்றனன் :—

## (IV) (I) (vi) பேராசை பெருங்கேடு விளைத்த கதை

" அயோத்யாநகரத்தில் அரசாண்ட சித்திரசேனன் என்னுமரசன் தன்மகன் குரங்குகளோடு விளையாடுவதில் மிக்க விருப்புடைமையை அறிந்து, அநேக வானரங்களைக்கொணர்ந்து சாலையில்வைத்து வளர்த்து வந்தான். அவ்வரசனுடைய அரண்மனையில் சமையக்காரருக்குள் பகையுண்டாகி ஓயாமல் சண்டையிட்டு வருவதை அவ்

வானரங்களில் மூதறிவுடைய ஒன்று அறிந்து மற்றவை களைப் பார்த்து 'இவ்விடத்தில் தீராக்கலகமுண்டாய் விட்டபடியால் நாம் இங்கே இருத்தல் நன்றன்று. சீக்கி ரமாக நீங்கிக் காட்டுக்குப்போய் வசிப்பதே நலம்' என்று சொல்லிற்று.

அவைகள் 'நீ கிழத்தனத்தால் மதியிழந்து இவ் வாறு பிதற்றுகிறாய். இவ்வரசனிடத்திலிருந்து நன் றாயாதரிக்கப்பெற்று, நல்லுணவுண்டு, கவலையின்றி இ ருப்பதைவிட்டு, காட்டிற்சென்று கெட்டலைந்து கண்ட தைத்தின்று உழல்வது மிகவும்மூடத்தனம். வறற்பா லது இங்கேயே வரட்டும்' என்று மறுத்துச் சொன்ன தைக்கேட்டு அக்கிழக்குரங்கு தன் குடும்பத்தோடு வேறிடம்போய்விட்டது.

பின்பொரு நாள் அரண்மனை வேலைக்காரர்கள் வ ழக்கப்படித்தங்களுக்குள் சண்டையிட்டு ஒருவரையொ ருவர் தாக்கவும், சமையற்காரன் அடுப்பினின்றும் ஒரு எரிகொள்ளியை எடுத்தெறிந்தான். அதின் தீப்பொறி பக்கத்திலிருந்த வைக்கோற்போரில்பட்டு தீப்பற்றி, அதைச்சார்ந்த குதிரைச்சாலையும் தீக்கொண்டெரிய ஆரம்பித்தது. அதிலுள்ள குதிரைகளில் சில எரிந்து இறந்தன. மற்றவைகள் உடலுமுறுப்புக்களும் வெந்து புண்பட்டு அல்லலுற்றன.

இச்செய்தியை அரசனுக்கு அறிவிக்கவும், அரசன் குதிரைவைத்தியரை அழைத்து, அக்குதிரைகளின் வேக்காடொழித்தற்குச் செய்யலாவது என்னவென்று வினவ, அதற்கு அவர்கள் குறங்கின் நெய் பூசினால் குணமாய் விடுமென்று சொன்னார்கள். உடனே

அரசன் தன் வேலைக்காரர்களை நோக்கி நம் அரண்மனை யிலுள்ள வானரங்களைக்கொன்று, அவற்றின் நெய்யை யெடுத்து அம்மருத்துவர் சொல்லிய வண்ணம் செய்து எனக்கு தெரிவியுங்கள் என்று ஆக்ஞாபிக்க, அவர்கள் அவ்வாறே செய்தனர். இவ்வண்ணம் குரங்குகளெல் லாம் கொலையுண்டதைக் காட்டிற் சென்றிருந்த முதுக டுவன் அறிந்து, மிகக்கோபமும் விசனமுமடைந்து, இப்பழிக்குப்பழி வாங்கவேண்டு மென்னும் உறுதி யோடு தக்கசமயத்தை எதிர்பார்த்துக்கொண்டிருந்தது.

ஒருநாள் தான் காட்டில் போகையில் அங்கே மிகநேர்த்தியான ஒரு தடாகத்தைக்கண்டு, அக்குள த்தின் பக்கங்களில் ஜனப்பிரசிரின் குறிகள் சிறிது மில்லாமையினால் அவ்விடத்தில் ஒரு பெரும்பேய் இருக்கவேண்டுமென்று ஊகித்தறிந்து, தூரத்திலே யிருந்து ஒரு தாமரைத் தண்டைக்கொண்டு நீரை உறிஞ்சிக் குடித்தது. இதைப்பார்த்து அங்கு வசித்த பூதம் வெளிவந்து அக்குரங்கைப் பார்த்து, 'நான் உன் புத்திகூர்மையையும் சாமர்த்தியத்தையும் கண்டு மிக மெச்சினேன். சம்மானமாக நான் கொடுக்கும் இமமணிவடத்தை ஏற்றுக்கொள்' என்றுகொடுத்தது. அதைப்பெற்றுக்கொண்டு, அப்பூதத்தை 'நீரில் உனக் குள்ளவலி எவ்வளவு, என்றுகேட்க அது ' ஆயிரம் மனிதர்கள் இறங்கினாலும், அவர்களை வெளியேற விடாமல் தடுக்கும் ஆற்றல் உடையேன்' என்றுசொல் லிற்று. அதைக்கேட்டு அக்குரங்கு 'உனக்குச் சீக்கி ரத்தில் மிக்க உணவு கொண்டுவந்து தருகிறேன்' என்று சொல்லி, அவ்விரத்தினமாலையைத் தன் கழுத்தி

லணிந்துகொண்டு சித்திரசேன அரசனிடம்போயிற்று அவரை 'சுவாமி, தங்கள் அரண்மனையில் வெகு நாளிருந்து தங்கள்சோறுஉண்டுவளர்ந்தேன். ஆகலால் தங்களைக்கண்டு வணங்கிவிட்டுப்போக வந்தேன்' என்று சொல்லிற்று.

அரசன் 'உனக்கு இம்மணிவடம் எங்கு கிடைத்தது' என்றுகேட்டான்.

இக்குரங்கு 'நான் திரியுங் காட்டில் ஒரு அழகிய மலர்த்தடம் இருக்கின்றது. வைகரையிற்சென்றுஅதில் முழுகுகிறவனுக்கு இவ்வாறு நவரத்தினங்கள் கிடைக்கின்றன' என்று சொல்லிற்று.

பேராசையுற்ற அவ்வரசன் 'எனக்கு அப்பொய்கையைக் காண்பி' என்று சொன்னான்.

அக்குரங்கு சம்மதித்தது. உடனே அரசன் தன் சேனையோடு புறப்பட்டு அக்குரங்கின் பின்னேசென்று அப்பொய்கையை அடைந்து அங்கே இராத்தங்கினான். பின்பு விடியற்காலத்தில் குரங்கு அரசனை எழுப்பி, மணி பெறவேண்டின் முழுகவேண்டிய சமயம் வந்தவெனத் தெரிவிக்க, அரசன் தன் பரிவாரங்களுடனே தடாகத்திற்சென்று இறங்கயத்தனிக்கையில், அக்குரங்கு அரசனை தனித்தழைத்து 'உன் பரிவாரசனங்கள் முந்தி முழுகி மணிகளை வாரிக்கொண்டு வரட்டும். பிந்தி நாமிரு வரும் முழுகலாம்' என்று சொல்லிற்று. அரசன் அதற்குச் சம்மதித்து வெளியே தங்க, அவனுடைய சேனையாட்கள் பொய்கையிற் புகுதலும், அங்குள்ள பூதம் அவர்களை நீரில் அழுத்தி எல்லோரையும் கொன்றுவிட்டது. குளத்துக்குச் சென்றவர்கள் வெகு

நேரமாகியும் திரும்பிவராததைக்கண்டு குரங்கை வினவினன்.

அது உயர்ந்த ஒரு மரத்தின் உச்சியிலேறி அரசனைப் பார்த்து 'நீ முந்தி என் குலம் முழுவதையும் கொன்றாய். அதற்குப் பதிலாக நான் இன்று இப்பழி வாங்கினேன். நீ எனக்கு உணவளித்து உதவியதால் உன்னை மாத்திரம் உய்வித்தேன்' என்று சொல்லக் கேட்டு மனம் வருந்தி, அதிக ஆசைகோண்டு முயலும் கருமம் இவ்வாறு கேட்டைத்தான் தரும் என்று தெளிந்து திரும்பித் தன் அரண்மனை சேர்ந்தான்.

இதுபோலவே நீயும் நடந்தமையால் உனக்கு இத்துன்பம் நேர்ந்தது. இனி யான் செய்யத்தக்கது ஒன்றுமில்லை. நான் திரும்பிப் போகிறேன்' என்று சொல்லித் திரும்பினன்.

நேமித்தலையன் தன் சிநேகிதனைப் பார்த்து, துனபமுற்று வருந்துங் காலையில் வநது உதவுதலன்றோ மெய்ந நண்பர்களின் கடைமை. அவ்வாறின்றி இசசமயத்தில் என்னைக் கைவிட்டுப் போதல் தருமம் அன்று' என்று வருந்திச் சொன்னன்.

அதற்கு அவன் 'கள்வன் அரக்கனைவிட்டு விலகும் போது தான் பேசினமையால் வானரம் பிடிக்கப்பட்டது. இங்கிருந்தால் எனக்கும் துன்பம் நேரிடுமென்று நான் அஞ்சுகிறேன்' என்று சொன்னன்.

சக்கரத்தலையன் 'வானரம் எப்படிப் பிடிபட்டது' என்று கேட்க,

சுவர்ணசித்தி சொல்லுகிறன்:—

## 1V. (1) (vii) ஒருவன் ஆபத்து, வேறு ஒருவனை பற்றிய கதை.

"மதுரைப்பதிக் காவலனாகிய பத்திரசேனக் கோமானுடைய மகளாகிய இரத்தினவதி என்னும் கட்டழகியைக் கவரக்கருதி ஒராக்கன் அவ்வூருக்குச சென்று பலநாள் இருந்து பார்த்தும் தக்கசமயம் வாய்க்காமையால் அவளுடைய சயன அறையில் புகுந்து ஒளிந்து பதுங்கி இருந்ததை அவளறிந்து தன் பாங்கியை விளித்து 'இவ்வரக்கன் என்னை இரவும் பகலும் வருத்துகின்றனன். இவனைக் கொல்வதற்கு யாதேனும் சூழ்ச்சி செய்யவேண்டும்' என்றாள். இதை செவியுற்ற இராட்சதன் தன்னைப்போலவே அவளைக் கவருமெண்ணத்தோடு அங்கே மற்றுமொரு வல்லரக்கன் வந்திருப்பதாக நினைத்து வெருவி வெளிப போநது ஒரு குதிரை யுருக்கொண்டு குதிரைச சாலையில் கரநது உறைந்தான்.

அப்பொழுது குதிரையைக் திருடும் எண்ணத்தோடு அங்குவந்த கள்வனொருவன், இவ்வரக்கனாகிய குதிரை மற்றவைகளைக் காட்டிலும் மிக அழகாயிருக்கக் கண்டு, அதை வெளிப்படுத்தி அதின்மீதேறி விரைந்து தன் வீட்டை நோக்கிச் செல்லுகையில், அக்குதிரை அடங்காமல் அங்குமிங்கும் இழுக்தோட, அக்கள்வன் சவுக்கால் அடிக்கவும அதையும் சட்டை பண்ணாது அது மிக முறட்டுத்தனமாய் ஓட ஆரம்பித்தது. அப பொழுது அக்கள்வன், இது ஒரு சாதாரணக் குதிரை அன்று. இதில் ஏதோ கிருத்திருமம் இருக்கவேண்டும என்று நினைத்துப் பயந்து, தப்பித்துக்கொள்ளும் வழி

பார்த்துக்கொண்டிருக்கையில், அக்குதிரை அவனை இழுத்துக்கொண்டு ஒரு ஆலமரத்தினருகே சென்றது. அக்கள்வன் தொங்கிய அம்மரத்தின் விழுதொன்றைப்பற்றி மரத்தின்மேலேறிவிட்டான்.

இவனிடத்துப் பயங்கொண்டு தப்பவழிபார்த்துக் கொண்டிருந்த அக்குதிரையாகிய அரக்கன் உடனே சந்தோஷத்தோடு விரைந்து ஓடுவதை, அம்மரத்திலிருந்த ஒரு குரங்கு பார்த்து, அவ்வரக்கனை நோக்கி, 'நீ ஏன் இவ்வாறு பயந்தோடுகிறாய். இவன் ஒரு சாமான்ய மனிதன்' என்றுசொல்ல, அக்கள்வன் உடனே அக்குரங்கின் வாலைப்பற்றி முறுக்கி வருத்தினான். அக்குரங்கு படும் பாட்டைப்பார்த்து அவ்வரக்கன் முன்னிலும் மிகவெருவி விரைந்தோடிப் போய் விட்டான்.

ஆதலால் அக்குரங்குக்கு எய்தியதுபோல் எனக்கும் இன்னல் வருமென்று அஞ்சுகின்றேன்' என்று சொன்னான்.

அதற்கு அச்சக்கரத் தலையன் "தெய்வம் நினைத்தால் யாவரும இங்ஙனம் இடுக்கண் எய்துவது சகஜம். தெய்வபலமில்லாவிட்டால் மற்றொன்றும் பயன் படா. கடலையே அகழாகவும், சுக்கிரனை குருவாகவும் பெற்று புஜபல பராக்ரமத்தோடு கூடியிருந்த இலங்கேசனாகிய இராவணனையும் ஒரு குரங்கு அவமானப் படுத்தவில்லையா! விதிவலி முன் யார்வலிதான் செல்லும். விதியின் சகாயமிருந்தால் தீயவும் நல்லன ஆய்விடும். இவ்வாறே குருடன், கூனன், முக்கட்பெண் இவர்களுக்கு

முன்மேனார்ந்ததைக் கேள் ?' என்று பின்வருமாறு சொல்லத் தொடங்கினன் :—

IV (1) (viii) விதியால் தீயவை நல்லவையான கதை.

"மதுபுரக்காவலனுகிய மதுசூதனன் என்பவனுக்கு ஒரு முக்கட்பெண் பிறக்க, அவன் சோதிடர்களை அழைத்து 'இதற்குச் செயற்பாலது யாது' என்று கேட்டான். அதற்கு அவர்கள் 'சுவாமீ, சொலவது எதையும் நன்காராய்ந்தறிந்து சொல்ல வேண்டும். அங்ஙனம் யோசியாது சொன்னல் சண்டகருமனுக்கு நேரிட்டதுபோலாகும்' என்று முதலவன் சொன்னன்

அரசன் அவன் செய்தது என்னவென்று கேட்க, சோதிடம் வல்லோன் சொல்லுப்றுன் :—

IV. (1) (viii) (1.) ஆலோசியாமல் ஒன்றைச் செய்து ஏமாந்த கதை.

"தண்டகாரண்யத்தில் சஞ்சரிப்பவனுகிய சண்டகருமன் என்னுமோர் இராட்சதத்தலைவன் அங்கு எதிர்ப்பட்ட ஓர் அந்தணன் மேல்மேலேறி நடத்திக்கொண்டு போனுன். அப்பொழுது அப்பிராமணன் அவ்வரக்கனுடைய பாதங்கள் மிகமெல்லியவைகளாய் இருப்பதைப்பார்த்து 'ஏ, இராட்சதத்தலைவ! உன் பாதங்கள் ஏன் இவ்வாறு இருக்கின்றன' என்று கேட்டான். அவன் 'நீராடி, ஈரம் புலருமளவு நான் பூமியில் நடக்க மாட்டேன்' என்று சொல்லிச் சிறிது தூரம் சென்று, பார்ப்பான் தோளினின்றும் கீழிறங்கி, அருகிலுள்ள குளக்கரையில் பார்ப்பானை இருக்கச் சொல்லித் தான் நீராடப்போனுன்.

அப்பொழுது அப்பிராமணன் நீராடிவந்தால்

இராட்சதன் தன்னைக்கொன்றுதின்றுவிடுவான்; அவன் கால் ஈரமபுலாவதற்குள்ளே தப்பித்து ஓடவேண்டு மென்று நினைத்து, உடனே அவ்விடம்விட்டு விரைவாக ஓடிப்போனான் நீராடி வெளிவந்து பார்க்கையில் பிராமணனைக்காணாது, யோசியாமல் நம்முடைய மர்மத்தை இவனுக்கு உரைத்ததினாலன்றோ, இவன் நம்மை ஏமாற்றிப் போய்விட்டான் என்று வருந்தமுற்று வாளாவிருந்தான்

ஆதலால் "தீர ஆலோசியாமல் ஒன்றையும் சொல்லக்கூடாது" என்று சொல்லி விடைபெற்றுச் சென்று பல நூல்களையும் நன்காய்ந்தனர்.

பின்பு அரசனிடம் வந்து, 'விரூபியாகையால் இப்பெண்ணைப் பார்க்கக்கூடாது. ஒருவர் கண்ணிலும் படாமல் தனியே வைக்கவேண்டும்.' என்று சொல்ல அவனும் அவ்வாறே செய்தனன். பின்பு அவளுக்கு விவாககாலம் வரவும், தன்பெண்ணை மணஞ் செய்து கொள்பவனுக்கு மிகுந்த திரவியம் தருவதாக எங்கும் தெரிவிக்க, அதைக்கேட்டு இரந்துண்ணும் சிநேகிதர்களாகிய ஒரு குருடனும் ஒரு கூனனும் அரசனிடம் வந்தெய்தி, அவர்களில் குருடன் கன்னியை விவாகத்தில் விரும்ப, அரசன் அதற்கு நேர்ந்து, மணமுடித்துப் பொருளுந் தந்து 'நீங்கள் இங்கே தங்காமல் வேற்றிடம் போங்கள்' என்று சொல்லி அனுப்ப, அவர்கள் அவ்வாறே வேறுதேசத்திற் சென்று வசித்து வந்தார்கள்.

இப்படி இருக்கையில் அந்த ராஜகுமாரத்திக்கு

அவன் கணவனாகிய குருடனிடத்து நேயங்குறைந்து கூனனை நேசிக்கத்தலைப்பட்டாள். இவ்வாறிருந்து வருகையில் ஒருநாள் அவள் தன் நேயபுருஷனாகிய கூனனிடம் 'இக்குருட்டுச்சவத்தை நஞ்சிட்டுக்கொன்று விட்டால் நாம் கவலையின்றி சுகமாய் இருக்கலாம் என்று சொன்னாள். அவன் அதற்குச் சம்மதித்து ஒரு செத்தபாம்பைக் கொண்டுவந்து கொடுத்து, இதைச சமைத்துக் குருடனுக்கிட்டால், அவன் அதைத்தின்று உடனே இறந்துவிடுவான்' என்றுசொன்னான். அவள் அதைவாங்கி அடுப்பில் வைத்து, அடுப்பைச்சரிவர எரியவிட்டுப் பார்த்துக்கொள்ளும்படி சொல்லித் தன் கணவனை வைத்து தான் கூனனோடு உல்லாசமாய் விளையாடிக்கொண்டிருந்தாள்.

அப்போது அடுப்பில் வெந்துகொண்டிருந்த கிருஷ்ண சர்ப்பத்தின் விஷப்புகையால் குருடன் கண்ணின் துர்நீர் நீங்கி வெகு நாளாய்த் தெரியாமலிருந்த கண் தெரிய ஆரம்பித்தது. பார்க்கையில் தன்மனைவியும் கூனனும் நகைத்து விளையாடிக்கொண்டிருப்பதைக்கண்டு, மிகக் கோபங்கொண்டு, பழையகுருடன்போலத் தடவித்தடுமாறி அவர்களருகேசென்று, கூனனை வலியப் பற்றித் தூக்கி அவள் முகத்தில் எறிந்து மோத, உடனே அவனுடைய கூனலும் நீங்கி அவளுடைய முகத்திலிரு மூன்றாவது கண்ணும் மறைந்து விட்டது.

ஆகையால் தெய்வத்தின் ஒற்றுமையிருந்தால் யாவும் நலமாய்முடியும்' என்றுசொன்னான்.

நேமித்தலையன் 'நல்லது, நீ கிடைத்தபொருளை எடுத்துக்கொண்டு ஊருக்குப்போ. போகும்போது யாதாவது வழித்துணையோடுபோ, ஊர்வழித்தனித்துச் செல்லுதலும், எல்லாரும் உறங்குங்காலத்தில் விழித்திருத்தலும், சிறந்த இன்பமும் பொருளும் தனக்கே உண்டாக வேண்டுமென்ற விருப்பமும், ஒழியற்பாலன என்று நூலறைகின்றது. இவ்வாறு நூனெறியை அனுசரித்து ஒருவன் ஒழுகின் அவன், ஒருபிராமணன் பாம்பினின்றும் தப்பிப் பிழைத்ததுபோல், உய்வன்' என்றுசொல்லி விடைகொடுத்தனுப்பினன்.

அப்போன்பெற்றவன், 'பிராமணன் எவ்வாறு பிழைத்தான்' என்று கேட்க மற்றவன் சொல்லலுற்றான்:—

IV. (1) (ix) வழித்துணை பயன் பட்ட கதை.

"நாசிக தேயத்திலிருந்த தத்தன் என்னுமொரு பிராமணவாலிபன் ஒருநாள் தன் தாயிடம் சென்று, 'ஆசிரியன் காரியமாக ஓரூருக்குப்போக வேண்டியிருப்பதால் விடைதரவேண்டும்' என்றுகேட்டான். அவள் 'மகனே நீ தனியே செல்லாதே' என்றுதடுக்க அதற்கு அவன் 'அன்னாய், இந்நெறி ஊறின்றி நன்றாயிருக்கின்றதே' என்றான். அவள் மீண்டும் 'மகனே, எவ்வாறிருப்பினும் வழித்துணையின்றி நெடும்பிரயாணம் போதல் தகாது' என்றுசொல்லி, வேறொன்றையுங் காணாமல், கூபத்திலிருந்து ஒரு நண்டைப்பிடித்து ஒரு கலயத்தில் வைத்து மகன் கையிற்கொடுத்து 'நீ இதையாயினும் துணையாக எடுத்துப்போ' என்றுசொன்னாள். அவனும் அவ்வாறே தாய்மொழி மேற்கொண்டு சென்றான்.

போகும் வழியில் வெய்யிலால் களைத்து, ஒரு மரத்தடியில் படுத்து உறங்கும்பொழுது, மரத்திலிருந்து ஒரு சர்ப்பம் அங்கே அவனைத் தீண்டவந்தது. பக்கத்திலிருந்த மட்கலயத்தைப் பார்த்து அதனுள் தலையையிட உடனே உள்ளிருந்த நண்டு அது அரவென்று அறிந்து தன்கொடுக்கால் அவ்வரவின் தலையைத் துண்டித்தெறிந்துவிட்டது.

சற்றுநேரம் கழித்து பிராமணன் எழுந்து தலையற்ற பாம்பின் உடலைக்கண்டு இது எவ்வாறிறந்ததென்று யோசித்துப்பார்க்கையில் மட்கலயத்தில் தலையிருந்ததைக்கண்டு இந்நண்டே இவ்வாறு இதைக் கொன்று நம்முயிரைக்காப்பாற்றிற்று; தாய்கொடுத்த வழித்துணையால் பிழைத்தேன், என்று அந்நண்டுடன் வீடுசென்று அன்னையைக்கண்டு வணங்கி வாழ்த்தி, நிகழ்ந்த சங்கதிகளைச்சொல்லி மனமகிழ்ந்து இருந்தனன்’ என்றான்.

பொன்சித்திபெற்றவன், ‘இது தக்கதேயாம். மந்திரம், தீர்த்தம், பெரியோர், சோதிடர், மருத்துவர், குரு இவர்களிடத்தில் ஒருவன் எவ்வாறு பாவனை புரிகிறானோ அவ்வாறே பேறுபெறுவான்’ என்று நேமியனைத்தேற்றித் தான் தன்வழிநோக்கிச் சென்றனன்.

இவ்வாறு உரைத்துத் தான் ஆராயாது செய்த செயலைப்பற்றி இரங்கினாள் அந்தப் பார்ப்பினி என ஊர்க்காவலனுரைத்தான்.

---

அஸம்பிரேக்ஷிய காரித்துவம் முற்றிற்று.

---

**இங்ஙனம் சோமசன்மன் ராஜகுமாரர்களுக்குரைத்த பஞ்சதந்திரமும் முற்றிற்று.**

# பஞ்சதந்திரப் பெயர் அகராதி

அமராவதி—ஒரு பட்டணம்
(152)
அயோத்தி—ஒரு பட்டணம்
(146) (163)
அவாசி—ஒரு தேசம் (148)
அவிபுச்சன்—ஒரு நரி (112)
அறிவாயிரத்தன்—ஒரு மீன்
(158)
ஆஷாடபூதி—ஒரு பிராம
ணன் (16)
இரத்னவதி—ஒரு அரசன்
பெண் (168)
உச்சயினி—ஒரு பட்டணம்
(151)
உதிஷ்டிரன்—ஒரு குயவன்
(130)
உத்தமஜீவி—ஒரு காகமந்திரி
(78)
உருமர்த்தனன்—கோட்டா
ன் ராஜா (77)
ஓரறிவன்—ஒரு தவளை (158)
கங்காதத்தன்—ஒருதவளை
(124)
கபிஞ்சலன்—ஒரு ஆந்தை
(89)
கம்புக்கிரீவன்—ஒரு ஆமை
35)
கரடகன்—ஒரு நரி (7)
காளகேசரி—ஒரு சிங்கம்
(128)
கற்பூரகௌரம்—ஒரு தடா
கம் (67)
கிரிகரன்—ஒரு சிங்கம்(112)
கிருபணசர்மன்—ஒரு பிராம
ணன் (162)
குத்திர புத்தி—ஒரு நரி (59)
குருதிக்கண்ணன்—கோட
டான் மந்திரி (99)
குரூரநாசன்—புத்திமானை
கோட்டான் மந்திரி (99)
குளிரன்—ஒரு நண்டு (44)
கூர்ம பல்லன்—ஒரு பூனை
(89)
கொடுங்கண்ணன்—கோட்
டான் மந்திரி (99)
கொள்ளிக்கண்ணன்—கோட்
டான் மந்திரி (99)
சக்கரத்தலையன்—ஒரு பேரா
சைக்காரன் (156)
சண்டகருமன்—ஒரு ராக்ஷஸ
ன் (170)
சதுரன்—ஒரு நரி (144)
சதுரதந்தன்—ஒரு யானை
அரசு (83)
சரத்கவன்—ஒருகிழக்கழுகு
(60)
சித்திரக்கிரீவன்—ஒரு புரு
வரசு (51)
சித்திரசேனன்—ஒரு அரசன்
(163)
சித்திரவனம்—ஒரு காடு (55)
சித்திராங்கன்—ஒரு நாய்
(146)
சிததிராங்கன்—ஒரு மான்(72)
சிரஞ்ஜீவி—காகக் கிழமநதிரி
(82)
சூடாகர்ணன்—ஒரு சந்நியாசி
(68)
ஜம்பகாவதி—ஒரு பட்டணம்
(68) (140)
டிண்டிபன்—ஒரு மூட்டைப்
பூச்சி (27)

தத்தன்—ஒரு பிராமணவாலிபன் (173)
தமனகன்—ஒரு நரி (7)
தாரா—ஒரு நகரம் (133)
துளசாபுரி—ஒரு பட்டணம் (156)
துஷ்டபுத்தி—ஒரு செட்டிப் பிள்ளை (42)
தூசரன்—ஒரு நரி (128)
தேவசர்மா—ஒரு சந்நியாசி (16)
தேவதத்தன்—ஒரு ஸாவகாரி (46) (140)
தேவநாமன்—ஒரு பிராமணன் (151)
நந்தகன்—ஒரு எருது (6)
நந்தனன்—ஒரு ராஜா (137)
நாசிகை—ஒரு பட்டணம் (173)
நாராயணநகரம்—ஒரு பட்டணம் (160)
நீள்செவியன்—ஒரு கழுதை (159)
நூறறிவன்—ஒரு மீன் (158)
நெடுஞ் செவியன்—ஒரு கழுதை (127)
நெடுஞ்செவியன்—ஒரு பூனை (60)
நெட்டைக்காதன்—முயல் தூதன் (87)
பண்டாபுரம—ஒரு பட்டிணம் (162)
பத்திரசேனன்—ஒரு அரசன் (168)
பலி—ஒரு அரசன் (103)
பவானி—ஒரு வண்ணான் (138)
பாடலிபுரம்—ஒரு பட்டணம் (1)
பிங்களன்—ஒரு சிங்கம் (7)
பிராகாரநாசன்—கோட்டான் மந்திரி (99)
பிரியதர்சனன்—ஒரு பாம்பு (124)
பெருவாயன்—ஒரு கழுதை (139)
பைடணபுரி—ஒரு பட்டணம (148)
பைரவாநந்தி—ஒரு வித்தர் (153)
மகத—ஒரு தேசம் (58) (158)
மகிழாரூப்யம்—ஒரு பட்டணம் (5)
மணிபத்திரன்—ஒரு ஏழை (148)
மதுபுரம்—ஒரு பட்டணம் (170)
மதுரை—ஒரு பட்டணம் (168)
மதுஸூதனன்—ஒரு அரசன (170)
மதோற்கடன்—ஒரு சிங்கம (30)
மதோன்மத்தன்—ஒரு சிங்கம (22)
மந்தரன்—ஒரு ஆமை (67)
மந்தரன்—ஒரு நெசவுகாரன (160
மந்தவிஷன்—ஒரு பாம்பு (115)
மந்தவிஸர்ப்பிணி—ஒரு சீலைப் பேன் (27)
மந்தானகன்—ஒரு ஒட்டகம் (31)
மயிலை—ஒரு நகரம் (77)

முது கடுவன்—ஒரு கிழக் குரங்கு (165)
மேகவர்ணன்—காகராஜன் (77)
லகுபதனன்—ஒரு காகராஜன் (50)
வந்தபின் காப்போன்—ஒரு மீன் (37)
வாருசி—ஒரு மந்திரி (137)
வருங்கால் காப்போன்—ஒரு மீன் (37)
வருமுன் காப்போன்—ஒரு மீன் (37)
வர்த்தமானன்—ஒரு வியாபாரி (5)
விகடம்—ஒரு அன்னம் (35)
விஜயதந்தன்—சந்திரமண்டலத்திலிருக்கும் முயலரசு (86)
வீணைகர்ணன்—ஒரு சந்நியாசி (69)
விஷ்ணுவர்மன்—ஒரு அரசன் (103)
வெள்ளறிவன்—ஒரு அம்பட்டன் (148)
ஸங்கடம்—ஒரு அன்னம் (35)
ஸஞ்ஜீவகன்—ஒரு எருது (6)
ஸத்யவிருதன்—ஒரு பிராமணன் (134)
ஸுதத்தன்—ஒரு தர்மவான் (7)
ஸுதர்சனன்—ஒரு ராஜன் (1)
ஸுபுத்தி—ஒரு காகம் (59)
ஸுபுத்தி—ஒரு செட்டிப்பிள்ளை (42)
ஸுமதி—ஒரு நரி (159)
ஸுமுகன்—ஒரு குரங்கு (119)
ஸுமுகன்—ஒரு கொக்கு (41)
ஸுவர்ணஸித்தி—பொன் பெற்றவன் (156)
ஸோமசர்மா—பஞ்சதந்திர ஆசார்யர் (2)
ஹிரண்யகன்—ஒரு எலி (55)
க்ஷிப்பிரா—ஒரு நதி (153)

# பஞ்சதந்திர விஷய அகராதி


அடுத்தவனைக் கெடுக்கலாகாது (105)
அடுத்துக்கெடுத்தல் (78-79)
அதிர்ஷ்டக்குறைவு (161)
அனுபவஞானம் (173)
அரசன் உதாரம் (87)
அரசன் கடமை (83)
அரசன் காரியம்பார்த்தல் (9)
அரசன் ரஹஸ்யம் (28)
அரசன் லக்ஷணம (48-49)
அரசன் ஸேவகம (11,40,41)
அருமையான பொருள்கள (74)
அல்ப ஸஹவாஸத்தின் தீமை (27)
அவஸரமாகாது (122)
அறியாமை சர்வகாரணம் (133)
அறிவும விதியும் (158)
ஆராயாது செயல் (150,151)
இடம் விட்டுப்போகாமை (80,81)
இடம்விட்டோடுதல (80)
இஷ்டதேவதாராதனம் (102)
உத்தம மத்தியம அதமாள் (117)
உபாயமும் பராக்கிரமும் (18)
உபாயம்—நான்கு ஆராயச்சி (40)
உபாயம்--பிரயோகரஹஸ்யம் (144,145)
உபாயம்—தண்டம் (79,80,105)
உபாயம்—தானம் (102)
உபாயம்—பேதம் (100)
உபாயம்—ஸாமம் (40, 99)
உலக இயல்பு (29)
எண்ணித்துணிக கருமம் (36,38)
ஒருவன் ஆபத்து வேறொருவனைப் பற்றியது (168)
ஒற்றுமையின் சிறப்பு (55)
கல்வியும் உலக அறிவும (156,157)
காவபங்கம தீராப் பகை (93)
காலத்துக்கு ஏற்றகோலம (115)
குணத்தை கொள்ளுவது (12)
குருநாசன் சிறப்பு (109)
குறிப்பறிதல் (10)
கூடாய விருத்தி (79)
கெடுவான் கேடு நினைப்பான் (41—46) (139)
கெட்டவாக்குதவினால் கேடு வரும் (46)
கேடுவர மதி அவ்வழிப்படுவது (109)
கொடியவன் நல்லவனனைத (108)
கொல்லாமையின் சிறப்பு (91,92)
சிஷ்யன் முறைப்பாடு (16)
செல்வவான்கள குற்றம் (29)
ஜீவன்னோக்கம் தாழ்ந்தது (8,9)
தகாதவிஷயம செய்வது அபாயம் (7,8)
தர்மத்தின் சிறப்பு (90,91)
தீமையால் தீமையே வரும (44,45)

தீரர் பிழைப்பர் (122)
தீயோர் நேசம் கேடே (127)
துக்க காரணம் (54)
துக்கத் தொடர்ச்சி (75)
துணிந்த காரியத்தை விடலாகாது (114)
துஷ்டரால்வரும் தீங்கு 89)
துஷ்டர் குணம் (26)
துஷ்டர்ஸஹவாஸத்தால்கேடு(30, 34)
தூதர் சிறப்பு (87)
தெய்வச் செயல் (65)
தேசாந்தரம் ஸுகம் தாராது (146
தொழிலுக்கு ஏற்றமதி (161)
தோழர் கூட்டம் (72)
தோழர் ஸல்லாபம் (56, 57)
தோற்றம் கண்டு மயங்காமை (14)
நட்பு (67)
நட்பு விரும்புவோர் நிலை (66)
நம்பி ஏமாறுவது (15, 17)
நம்பிக்கைத்துரோஹம்(121)
நன்றியறிவு (167)
நீக்க வேண்டியவை (173)
பகைவன் வலி ஆராய்தல் (34, 39)
பகைவனை வெல்லும் விதம் (82)
பச்சாத்தாபம் (42)
பட்டும் தெரியாதவன் மாளுவது (129)
பண விஷய (5,6)
பணமில்லாதவன் குறைகள் (148)
பணமுடையோர் குணம்(69)
பணம் நீங்கினோர் பாடு (70)
பராக்கிரமம் பாக்கியகாரணம் (1:7)
பழிக்குப்பழி வாங்குவது (165,166)
பாசாங்கு (17)
பாப பலன் (141)
பாவனையின் பலம் (174)
பிடிபட்ட மிருகங்கள் நிலை (73)
பிரதானிகள் துர் நடத்தை (25)
பிள்ளைகள் விஷயம் (1,2)
பின் புத்தி (53)
புண்ணியபாப பலன் (65)
புதியவனை நம்பலாகாது (59,65)
புத்தி கேளாமையின் பலன் (35,36,160,164)
புத்திமான் பலவான் (24)
புத்திமான் முன் ஜாக்கிரதை (116
புத்தியின் தோஷம் (25)
பூர்வகர்ம பலன் (118)
பெண்கள் கொடுமை (135)
பெண்கள் தர்மம் (103)
பெண்கள் பிடிவாதம் (120,121) (137,138)
பெண்கள்மாயம் (134,137)
பெரிய காரியங்களில் முயலுதல் (10)
பெரியோர் சிறபபு (84,85)
பேசும் திறன் (11)
பேராசை பெருங்கேடு (51,53.77,153)
மந்திரி லக்ஷணம் (18,24)
மித்திரபேதம் (39)

முகஸ்துதியின தீமை(116)
முன் யோசனையின் சிறப்பு (113)
மூடத்தனம் (111)
மூடர்கள் உபகாரிகளை கொல்வர் (41,42)
மூடர்களுக்கு புத்தி கூறலாகாது(48,143)
மெய்நண்பர் கடமை (167)
யாகவிஷயம் (92)
ரஹஸ்யம் வெளிப்பட்டால் கேடு (104,170,171)
ருத்ராக்ஷப் பூஜை (52,53,61,63)
வஞ்சகம்(95)
வருவதுவரும் (162)
விதியின்பலம் (30,56,169,172)
விருந் தோம்பல் (107)
விரோதிநேசம் குடிகேடு (125)
விவேக விசாரம் (71)
விஷயங்கள்சோபிக்கும்விதம் (13)
வீண்கர்வம்(131)
வீணமனோராஜ்யம்(162,163)
வீண்வாதத்தின் தீங்கு(101)
ஸபாநிந்தனத்தின் தீமை(94)
ஸமயோசித புத்தி (65,76,130)
ஸூக்ஷ்ம புத்தி(165)
ஸேவகர் நிலை(28)
ஸேவகர் தாமம் 97)
க்ஷத்திரிய தர்மம் (34)

# அரும்பதவிளக்க அகராதி

அகங்காரம் (39)—கர்வம்
அக்கணமே (116)—உடனே அப்பொழுதே.
அங்குசம் (15)—யானைத் துறடு.
அசட்டை (36)—அலக்ஷியம், மதியாமை.
அசதி (14)—சீக்கிரம்.
அச்சுறுத்தி (150—பயப்படுத்தி
அஞ்ச (86)—பயப்பட
அடுத்தவர் (57)—கதி யென்று வந்தவர், சரணமடைந்தவர்.
அடைக்கலம் (32)—நம்பி விடுவது.
அதிதி (61—விருந்து, தற் செயலாய் வருபவன்.
அத்யந்தம் (67)—முற்றும் மிச்ச மில்லாமல்
அநாதரவு (69)—அலக்ஷியம்
அந்நியோந்நியமாய் (119)—ஒன்றுபட்டு
அந்தணன் (96—குளிர்ந்தகுணமுடையவன்பிராமணன்
அந்தரமாய் (82)—தாங்கலில்லாது
அந்தி (86)—ஸந்தி, மாலை
அபயம் கொடுத்தல் (31)—பயப்படாதே என்று தேற்றுதல், காபாற்றுதல்
அபயதானம் (32)—காப்பாற்றுவதாக உறுதி கூறல்
அபிநயித்தல் (90)—பாசாங்கு பண்ணுதல்
அப்பியங்கனம் (79)—எண்ணெய் தேய்த்தல்
அமைச்சன் (100)—மந்திரி
அரக்கன் (101)—ராக்ஷஸன்
அரண் (109)—சபை, இடம்
அரவம் (101)—சப்தம்.
அரவு 104)—பாம்பு
அருகெய்தி (156—கிட்டே போய்
அரையன் மக்கள் (148)—ராஜ குமாரர்கள்
அல்லலுற்றன (164)—வருத்தப்பட்டன
அவஸ்தை (72)—நிலை—கஷ்டம்
அவா (153)—ஆவல், ஆசை
அறம் (57)—தருமம
அறிவிலிகள் (157)—அறிவில்லாதவர்கள்
அன்னாய் (173)—தாயே
அன்னிதா (120—வேறாக மாறாக.
அஸம்பாவிதம் (46)—நடக்கக் கூடாதது
ஆசாரம் (61—நடத்தை ஒழுங்கு
ஆதித்யம் (106)—விருந்திடுதல்
ஆராய்கிறவன் (36)—யோசிப்பவன், எண்ணுபவன்
ஆற்றல் (165)—சக்தி
ஆஷாடபூதி (15) ஆடிக்காற்று. இதுஎல்லாப்பக்கங்களிலிருந்தும் அடிக்கும்.இது போல் மாறும்சுபாவமுடை

யபாசாங்குக்காரன்
இங்கிதம்(11)—குறிப்பு, ஜாடை இனிமை
இசை(160)—பாட்டு
இடர்(119)—துன்பம்
இடர்உற்றனன் (148)—துன்பத்தில் அகப்பட்டுக் கொண்டான்
இடுக்கண்(169)—கஷ்டம்
இடையூறு (117)—(நடுவே வரும்)தடை
இம்மை (1)—வாழுங் காலம்
இயக்கன்(161)—யக்ஷன்
இயம்புதி (148)—சொல்லு
இரௌரவம் (105)—அழச் செய்யும்பயங்கரமானநரகம்
இல்லறத்தார் (61)—கிரஹஸ்தர்
இல்லாள்(106)—மனைவி, பெண்சாதி
இளவிள(63)—வெகு இளசாக, குருத்தாக
இறைஞ்சினர் (153)—வணங்கினர்
இறைவன் (83)—அரசன்
இன்புறும்(106)—ஸுகப்படும்
இன்னல் (169)—துன்பம்
இன்னிசை(160)—இனிமையான குரல்
ஈட்டுதல் (156)—ஸம்பாதித்தல்
உசிதம்(105)—தகுந்தது
உதாசினம்(160)—அசட்டை அலக்ஷியம்
உத்தரம்(11)—பதில், விடை
உப்புக் கண்டம் (18)—உப்பிட்ட மீன் துண்டு.—கருவாட்டுத்துண்டு
உய்வித்தல் (167)—பிழைப்பித்தல்
உலூகம் (114) —கோட்டான்
உலோபகுணம்(5)-தன்னதை பிறருக்குக்கொடுக்காமை
உழல்கையில் (154)—வருந்துகையில்
உளை(53)—சேற்றுக்குவியல்
உறவுகொண்டு(78)—சிநேகித்து, பழகி
உறற்பாலது (164)—வரக்கூடியது
உறைந்தான்(168)—இருந்தான்
உறைவிடம்(1)—இருப்பிடம்
ஊஹித்தல் (87)—யுக்தியால அறிதல்
ஊதியம் (160)—வரும்படி
ஊர்க்காவலன்(174)—அரசன்
ஊரதிகாரி (47)—ஊர்த்தலைவன்
ஊழ்வினை 159)—விதி
ஊன் 108)—மாம்சம்
எஞ்சியதை (162)—மிஞ்சியதை, மிகுந்ததை
எய்துகின்றன (148)—வந்து சேருகின்றன
எளியவர்கள் 85)—ஏழைகள
ஏங்கி (20)—மனமழிந்து
ஒக்கும்(148)—போல ஆகும்
ஒலி(103 —சப்தம்.
ஒழியற் பாலன (173)—தள்ளத் தக்கவை
ஒழுகலான் உளதாய (148)—நடப்பதால் ஏற்பட்ட

ஓதல (52)— (வேதம)படித
தல்
ஒம்புகிறது(107)—காபபாற்
றுகிறது
கடாவிய(7)—அடிதத
கடுமை(48)—கஷ்டம
கடையானவாகள (117)—அ
தமர்கள,தாழ்நதவாகள
கட்புலனுக(149)—கண்ணுக
குததோனற
கணந்தோறும(83)—க்ஷணம
க்ஷணம, அடிககடி
கண்ணதாய (148)—இடததி
லுள்ள
கணணி(106 —வலை
கணக்ேனாடா(83)—மேலபாா
வையில்லா
கதாப பிரஸங்கம(69)—கதை
சொலவது
கபடி (40)—சூதககாான,
பாசாங்குககாான்
கபபறை(69)—பாப்சசைப
பாததிரம
காநது (168)—மறைநது
காமமகணமுழி(14)—
செயலைப்பாாததவுடன்
காவியாயல் 41)—தன்பெரு
மை பாராட்டாமல
கலஹபபட்டு(43)—சணடை
யிட்டு
களஙகம(71)—குறறம
களைந்து(149)—எடுத தெறிந
து
கறபனை (161)—மனோராஜ
யம
காகபலி(8)—காகதைககு
இடும் உணவு
காட்டகம்(158)—காடு

காதகம (109)—கொலைதுன்
பம்
காதலி(120)—மனைவி
காராடு(162)—வெள்ளாடு
காலடி பிட்டததிற் படுமபடி
(17)— குதிகால் குணடி
யில்தட்டும படி
காலன் 122)—யமன் மரணம
கிருஹசிததிரம(70)—வீட்டுக
குழப்பம
கிருததிரமம (45) சூதுபுரட்டு
கிருபணன்(162)—கொ
டாதுசோதது வைபப
வன, லோபி
கிருஷணஸாபபம(19) —கரு
மபாமபு
கிலேசம(122)—மனககுழ
ப்பம
குணககெடுககலாமா(26)
கோணல நிமாததலாமா
குணவநதாகள (40) —நற
குணமுடையவாகள
குதுகுதுபபு 150)— மனப
பரபரபபு
குருதி தோயநத(151)—ரத
தமபடிநத
குரூபி (84)—அவலக்ஷணமா
யிருபபவன
குரோதம (54)—கோபம,
சினம
குல முதலற (80)—குலம
வேரோடு நீஙக
குற்றி (88)—கட்டை
குன்றுப பொற்குவை (169)
குறையாத பொன் குவியல்
கூகை (84)—கோட்டான்
கூட்டுறவு (15)—சிநேகம,
பழக்கம

கூபம (173)—கிணறு
கூாமம (68 —ஆமை
கைபபு (99)—கசபபு
கோட் சொல்லுதல் (5)—ஒருவனுககுத தெரியாது அவனைபபற்றி மேற்பட்டவரிடம பழித்துச சொல்லுதல்
கோமான (168)—அரசன்
கோயிற்றிருபபணி (7,—கோயில் வேலை
சசம (89,—முயல
சதுரன (10,—புததிமான்
சாதுரியவான் (87)—சமயததுககுஏற்றபுததித தெளிவையுடையவன்
சாநதிராயணம (61)—சநதிரன் வளருஙகால் ஆகாரததை ஒவவொரு கவளமாக ஒழுஙகாக ஏறறி அது குறையுங்கால அதே ஒழுஙகாக குறைதது ஒரு மாதததிலஅனுஷ்டிககும விரதம
சாாபு (12)—ஆதாரம
சாலியன் (161,—நெசவுகாரன்
சிரம் (150)—தலை
சினநது (163 —கோபித்து
சீலன் (95)—குணமுடையவன்
சுடர்விரி (149)—ஒளி வீசும
சுள்ளாணி,12)—சிறு ஆணி கடையாணி
சுற்றம் (75)—உறவு
சூழ்ச்சி (168)—ஆலோசனை
செம்படவர் (37)—மீன் பிடிபபவர்
செருககு (80)—கர்வம்

சென்னி (149)—தலை
சேதி (76)—வெட்டு
சோஙகை (9)—சேர்ததுப் பிடிதத உள்ளங்கை
சேஷம் (118)—மிசசம்
சடிதி (55)—சீக்கிரம்
ஜலககிரீடை (86)—தணணீர விளையாட்டு
ஜலசரம (139)—நீர பிராணி (நீரில நடமாடுவது)
ஜனப்பயிரசி (165)—ஆள நடமாட்டம
ஜீவகாருணயம (20,—பூததயை, தன் னுயிர போல மன் னுயிரைப பாாததல
தசை (108 —சதை, மாமசம
தணடம (40)—சண்டை
தணடம் (79)—தணடனை.
தணடம (149 —தடி
தநதுவாயன் (160 —கைககளவன், நெசவுகாரன், நூலை வாயில் தேயபபவன்
தன்னலம்(24)—தனஸுகம
தழல (107)—நெருபபு, தணல
தளை (107,—கட்டு
தரி (161)—கைககளவா மரததுணடு
தன்வலி(35)—தன்பலம
தாமரைகணி(154)—தாமரைச சுரஙகம
தாரதம்யம (35)—ஏற்றததாழ்வு: மாறுபாடு
தானம(40)—கொடை
தாஷிதது (85)—தாஹமெடுதது
திரவியஹீனன் (46)—பணமில்லாதவன்
திருவடிகள (99)—பாதஙகள

தீங்கனி(120)–தித்திப்பான பழம்
தீங்குறல் (56)—இனிமையான சப்தம்
தீண்ட(174)—கடிக்க
தீயவும் (169)—கெட்டவைகளும்
தீயொழுக்கம் (108)— கெட்டநடத்தை
தீவினை(107)·கெட்டசெயல்
துணி(57)—அறு
துணுக்குற்று (155)—கஷ்டப்பட்டு
துயிலொழிந்து (149 —தூக்கம்நீங்கி
துராத்மா (50)—கெட்டவன்
தூர்க்கம் (81)—அணுகமுடியாதஇடம்
தூர்ச்சனன்(86)—கொடியவன்
துறக்கலாம்—(32)விட்டுவிடலாம்
துறவி 149 —சந்நியாசி
தெய்வீகமாக (45 —விதிவசமாக
தேக்கெறிந்து (160 —எப்பம்விட்டு
தேச பாலனம்(32)—அரசாட்சி
தேசாந்தரம்(42)—வேறு தேசம்
நஞ்சிட்டு(172)—விஷம் வைத்து கொடுத்து
நஞ் சில்லா(86)—விஷ மில்லாத
நட்பு 58 —சிநேகம்
நலிய(160)-நைந்துபோக,சரிந்துபோக
நல்குரவு(148) —தரித்திரம்
நறுங்கனி(122)—புதிய வாசனையானபழம்
நன்காய்ந்தனர் (171)—நன்றாக ஆராய்ந்தனர்
நன் மொழிபெற்றும்(160)—புத்திமதி கேட்டும்
நாணம் (88)—வெட்கம்
நாவிதன் (84)—அம்பட்டன்
நிதிக் கோன் (155 -குபேரன்
நிபுணன் 87 —தேர்ந்தவன்
நிருமித்தான் (30)—உண்டாக்கினன்; ஏற்படுத்தினன்
நிவிருத்தி பண்ணு (71)—விட்டுவிடு, நீக்கு
நிஷித்தம் (96 —தள்ளியது; கூடாதது; தகாதது
நிஸ்ஸாரம் 14)—ஸாரமற்ற சுகமில்லாதது
நீர் நடை 158 —நீச்சல்
நீர்நிலை (86)—தண்ணீர் சேருமிடம்
நுணல் (94)—தவளை
நூலறைகின்றது (173)—சாஸ்திரம் சொல்லுகிறது
நூநெறி (173 —சஸ்திரவழி
நெறி பற்றி (153)—வழியை பிடித்துக் கொண்டு
நேமி (155)—சக்கரம்
நொடியளவில் (17)—சீக்கிரத்தில்
பங்கம் (88)—சிதைவு தடை
பசப்பு (92)—ஆசை மூட்டும் குணம்
பசு (95)—(ஆடு மாடு முதலிய) கிராம்ய மிருகங்கள் யாகத்துக்கு தகுந்த மிருகங்கள்

பஞ்சகவ்வியம் (96)—பசுவி லிருந்து உண்டாகும் தயிர் பால், நெய், சாணி, மூத்தி ரம் ஆகிய ஐந்து சேர்ந்த கலப்பு, தேக சுத்தத்துக் காக சாப்பிடுவது
பஞ்சணை (27)—பஞ்சு மெத் தை
பஞ்சாயத்து (43)—ஐந்து பெயர் சேர்ந்து நியாயம் தீர்ப்பது, நியாய விசாரம்
பணிப்பெண் (84)—வேலைக் காரி
பணி விடைகள் (103)— தொண்டுகள், சிச்ருஷை கள்
பதுமநிதி (149)—குபேரன் செல்வக் களஞ்சியம் இர ண்டுள் ஒன்று. மற்றதற்கு சங்கநிதி என்று பெயர்
பறிகொடுத்து (44 —இழந்து நஷ்டப்பட்டு
பற்று விக்கிறது (45)—மூட் டுகிறது
பற்றுள்ளவன் (12)—ஆசை யுள்ளவன்
பாங்கி (168)—தோழி
பாசம் (72)—கயிறு, கட்டு
பாதகம் (32)—கொடுந் தொ ழில்
பார்ப்பினி (151)—பிராமண ஸ்திரி
பாலனம்(57)—ஆளுவது
பிணித்து(160)—கட்டி
பிணியாளி (103)—நோயா ளி
பிரயோகம்(99)—உபயோ கம்

பிரவர்த்திக்கிறது(48)—தொ ழிற்படுகிறது
பிரளயகாலம்(106)—எல்லா ம்ஒடுங்கும்காலம்
புகழெய்தி (187)—கீர்த்தி பெற்று
புரியலாகாது (148) செய்ய லாகாது
புரைசல்கள்(83)—உளவுகள்; ரகசியங்கள்
புலருமளவு (170)—உலரும் வரை
பெயரிய (148)—பெயரையு டைய
போதம் 40)—கோட்சொ ல்லிசண்டைமூட்டல்
பேதித்தல் (145)—பயபபடு த்தி ஓட்டுதல்
பேரிரைச்சல்(86)—பெரி யசபதம்
பேறு(177)—பெறத்தகுந்தது
பொய்கை(166)—குளம்
பொய்யாமை (87)—பொய் சொல்லாமை
பொரிக கும்(44)—குஞ்சுகள முட்டையை யுடைத்துக கொண்டு வெளி வரும்படி செய்யும்
பொருட்பேறு(153)—செல் வங்கிடைபபது
பொருது(147)சண்டைசெய் து
பொல்லாங்கு(29)தீமை,கேடு
பொல்லாப்பு(40)—பழி, தீமை,
மகரம் —(146 மீன்
மஞ்சனச்சாலை(21)—குளிக குமிடம்

மத்தகம் (15)—யானைமண்டை
மனோரதம் (64)—விருப்பம், உள்ளாசை
மந்தகதி (116)—தளர்நடை
மயிராவணன் (148)—அமபட்டன்
மரப்பாவை(90)—மரப்பொம்மை
மருத்துவா (165)—வைத்தியா
மாமங்கள (102)—உளவுகள, ரகசியங்கள
மலாத்தடம(166)—பூந்தடாகம்.
மலர்ப்பொய்கை (158)—பூங்குளம
மறுமை (1)—மரணத்துக்கு பிந்திய நிலை
மனத்தழுக்கு(110)—சித்தமலம
மாதாகள(84)—பெணகள
மாமச பக்ஷிணிகள்(36)—பிராணிகள சதையையத்தின்பவாகள், எதிரப பதம் சாகபக்ஷிணிகள காய கிழங்கு இலை முதலியவைகளை தின்பவாகள
மாலுமி (2)—கப்பலோட்டி
மாற்றான் (79)—பகைவன் விரோதி
மிடி (152)—தரித்திரம்
மித்திரன் (28)—தோழன்
மீகான் (84)—கப்பலோட்டி
முகமலாந்து (72)—சந்தோஷித்து
முக்கட் பெண் (169)—மூன்று கண்ணுடைய பெண்
முக்காரம் (7)—எருதின் சப்தம்
மூப்புச் சாவுகள் (?)—வயது சென்று வரும மரணங்கள்
மூதறிவு (164)—பழக்க அறிவு
மென்மை (48)—மிருதுத்தன்மை
மௌட்டியம் (87)—மூடத்தனம்
யத்தனம (50)—முயற்சி
ராஜசயனம் (27)—அரசன் படுக்கை
ராட்டினம் (124)—தண்ணீர் இழுக்கும் கயிறு ஓடும சக்கரம்
ராஜத்துவம் (69)—ராஜன் நிலை
ரோகி (25)—நோயாளி
லயம் (104)—அடங்குவது
லோகாபவாதம (52)—ஊரார் பழிப்புச் சொல்
வரங்கள் (85)—வேண்டுகோள்கள்
வராகவடிவு (12)—பன்றி உருவம
வலி (28)—பலம்
வலிவு (56)—பலமுள்ளது
வலியக் கிடைக்கிறது (51) முயலாது கிடைக்கிறது, தானே வந்து சேருகி—றது
வலைக்காரர் (37)—மீன் பிடிப்போர
வல்லரக்கன் (168)—கொடிய ராக்ஷஸன்

வல்லாராய் (153) திறனுடையவராய்
வழக்கார (93)—வழக்கு ஓய
வறியன் (101)—ஏழை
வறுமை (56)—தரித்திரம்
வன்னி மரம (50)—நெருப்பி நக்கும் ஓர்மரம்
வாக்குவாதம் (104)—தர்க்கம்.
வாவி (90)—வாபி, கிணறு
வாளாவிருந்தான் (171)—சும்மா விருந்தான்
விக்கிரஹம் (78)—உருவம்
விக்கினம் (18)—தடை
விச்சகம் (78)—வித்தகம் கல்வியறிவு
விட்டில் (98)—விளக்கில் விழும் பூச்சி
விபத்து (35)—ஆபத்து
வியபசாரி (66)—கற்பு நிலை தவறியவள்
வியாகுலம் (44)—வருத்தம்
விருத்தாந்தம் (44)—வரலாறு, கதை
விருப்புடமை (163)—இஷ்டம்
விரூபி (171)—அவலக்ஷணமுடையவள்
விலங்கு (66)—மிருகம்
வில்லி (107)—வேடன்
விஹிதம் (82)—ஒழுங்குப்படி ஏற்பட்டது; நியாயம்
வீழ்வித்தாய் (40)—அகப்பட்டுக் கொள்ளும்படி செய்தாய்
வெருவி (162)—பயந்து
வெளிப் போந்து (168)—வெளியே வந்து
வேக்காடு—(164) சுட்டெரிச்சல்
வேட்டல் (52)—யாகம் செய்தல்; விரும்புதல்
வேதியன் (101)—பிராமணன்
வைகறை (52)—காலை
வைராக்கியம் (62)—விருப்பு வெறுப்பின்மை, பற்றின்மை
வைரிகள் (79)—பகைவர்
ஸங்கடம் (40)—கஷ்டம்
ஸங்கேதம் (97)—குறிப்பு
ஸசேலஸ்நாநம் (96)—கட்டின துணியுடன் குளித்தல்
ஸத்பாத்திரம் (6)—நல்ல குணமுடைய தானம் வாங்குபவன்
ஸந்தி (78)—ஸமாதானம்
ஸம்மானம் (28)—வெகுமதி, நல்ல மதிப்பு
ஸாதனம் (50)—உதவி
ஸாமம் (40)—நயவாக்கு
ஸாவகாரி (46)—பணத்தில் வியாபாரம் செய்பவன்
ஸ்வதந்திரன் (25)—தன் இஷ்டப்படி நடக்கும் திறனுடையவன்
ஸ்வபாவம் (63)—இயற்கை
ஹடம் பண்ணல் (120) பிடிவாதம்பிடித்தல்
ஹிதம் (36)—நன்மை

# சத்தியவல்லி

## ஓர் சிறந்த தமிழ் நாவல்

மிஸ்டர் ஆர் பி குழந்தைசாமிப் பிள்ளை, பி ஏ., எல் டி, அவர்கள் எழுதியது சென்னை சர்வகலாசாலை முக்கிய பரீக்ஷகரான ராவ் ஸாஹேப் மிஸ்டர் T ராமகிருஷ்ண பிள்ளை, பி ஏ, அவர்கள் எழுதிய சிறந்த முகவுரையுடன் கூடியது விலை அணு 12.

[illegible] கடவுளை நம்பினோர் கைவிடப்படார் என்பது [illegible] தாயங்களிலும், கஷ்டத்திலும், [illegible] பிடிக்கவேண்டும் என்னும் நிலைமை [illegible] நடைபெற்றிருக்கிறது தவிர, அக்காலங்களில் [illegible] விபரீதம் [illegible] பாஷை போக்கு, பக்தி [illegible] எவரும் வியக்கத்தக்கவை இப்புத்தகம், அனேகம் பாடசாலைகளில் 3, 4, 5 ம் பாரங்களுக்குப் பாடப்புத்தகமாக [illegible] வருகிறது மிக [illegible] அவசியம் ஒவ்வொரு பெண்டிரும் வாசிக்கவேண்டிய புத்தகம்.

இப்புத்தகத்தைப்பற்றிய சில முக்கிய அபிப்பிராயங்கள்.

*The Standard* "Situations are contrived with skill and the plot is constructed in an appealing way

*The Hindu* — *We commend the book for ladies and boys*

*Rev D Devapriam B A L T*, Head Master L M. High School Shiyali —Your Tamil Novel *is simply excellent in matter and style It deserves to be introduced as an extra reading book in Schools*

சுதேச மித்திரன் —*** கதாநாயகியான சத்தியவல்லி எவ்வளவோ கஷ்ட தசைக்கு வந்தகூடத் தனது சத்தியத்தையும், பிதாவின் ஆக்கினையையும் தளரவிடாமல் பாதுகாத்த விதத்தை நூலாசிரியர் மிக நன்றாய் எடுத்துச் சொல்லுகிறார்.

பூர்ண சந்திரோதயம்.—*** பெண்பாலார் இப் புத்தகத்தை வாசிப்பார்களாகில் மனத்தூய்மை எய்துவார்கள். நன்மதியும் பெறுவார்கள்

ஜனரல் ஸப்ளைஸ் கம்பெனி, மயிலாப்பூர், மதராஸ்.

INDISPENSABLE TO EVERY INDIAN HOME.

THE LATEST AND BEST OF ITS KIND

# A Complete Library of Shakespeare (In Tamil)

The plays of Shakespeare have not in their entirety been translated for Indian Homes. Such translations as exist, are in stilted verse or in dramatic form alike unpalatable to the ordinary reader. The object of the present series is to afford an entire set of Shakespeare stories in an easy narrative form, with such matter critical and explanatory as may be needed for a full and thorough understanding of the work. The three parts of Henry VI, discursive and diffuse, have been compressed into one, and the following papers have been added:

(1) An appreciation of Shakespeare (Vol. I, Part I)

(2) English History (Vol IX)

(3) Roman History (Vol XIV, Part I)

(4) Characters of Shakespeare's plays (Vol. XX Part II)

The work is complete in twenty volumes and when the entire set has been issued, the record will be unique and the achievement without its parallel in the history of Modern Tamil publications.

## CONTENTS OF THE 20 VOLUMES.


I. Shakespeare (ஷேக்ஸ்பி
யர்) Tempest பெரும்புயல்)
II. Two Gentlemen of
Verona
வெரோனா நகரத்து இரு கன
வான்கள்.
Merry Wives of Windsor
வின்ஸர் நகரத்து குதூகல
மனைவியர்.
III. Measure for Measure
சரிக்குச் சரி.
The Comedy of Errors
பிழையின் வேடிக்கை.
IV. Much ado about
வீண் அமக்களம். [Nothing
Love's Labour Lost [டது.
அன்பின் முயற்சி வீண்பட்
V. A Midsummer Night's
நடுவேனிற் கனவு. [Dream.
The Merchant of Venice
வெனிஸ் வர்த்தகன்.
VI. As you like it
உன் மனம்போலே.
The Taming of the Shrew
அடங்காப் பிடாரியை அடக்
கியது. [well
VII. All is well that ends
நன்றாய் முடிவது முற்றிலும்
Twelfth Night [நன்றாம்.
பன்னிரண்டாம் இரவு
VIII. The Winter's Tale
மாரிகாலக் கதை.
Troilus and Cressida
டிராயில்ஸும் க்ரேஸிடாவும்
IX English History
ஆங்கிலேய சரித்திரம்.
X. King John
ஜான் என்னு மரசன்.

Richard II.
ரிச்சேர்ட் இரண்டாவர்.
XI. Henry IV, Part I
ஹென்றி நாலாவர், 1-பாகம்.
Henry IV, Part II
XII. Henry V
ஹென்றி ஐந்தாவர், 2-ம்பாகம்
Henry VI (3 parts in one)
ஹென்றி ஆறாவர்,
XIII. Richard III
ரிச்சர்ட் மூன்றாவர்.
Henry VIII
ஹென்றி எட்டாவர்.
XIV. Roman History
ரோமாபுரியின் சரித்திரம்.
Coriolanus
கொரியலேனஸ்.
XV. Julius Caesar
ஜூலியஸ் ஸீஸர்.
Antony and Cleopatra
அன்டோனியும் கிளியோ
பேட்ராவும்
XVI. Titus Andronicus
டைடஸ் அன்ட்ரோனிகஸ்.
Timon of Athens
அதென்ஸிலிருந்த டைமன்.
XVII. Romeo and Juliet
ரோமியா, ஜூலியற்று.
Cymbeline (சிம்பலின்)
XVIII Macbeth (மாக்
Hamlet (ஹாம்லட் [பெத்).
XIX. Lear (லீயர்)
Othello (ஒதெல்லோ).
XX. Pericles பெரிகிளிஸ்.
Character of Shakes-
pear's plays
ஷேக்ஸ்பியர் நாடக புருஷ
ரைப் பற்றிய குறிப்பு.


மானேஜர், "விவேக போதினி." மயிலாப்பூர்.

# HIMARJUNAI

ஹிமார்ஜுனை

**An adaptation of Shakespeare's Cymbeline**
**(In Tamil)**

By Mr. R. GOPALA AIYANGAR, B A.

The book closely follows the original, only with some alterations to suit Indian tastes

**Has an Introduction**

BY MR. K. G. SESHA AIYER, B. A, B. L., & M. R. A. S.

**SOME SELECT OPINIONS.**

**Rao Saheb Mr. T. Ramakrishna Pillai, B. A., F. R. H. S, F. M. U., Chief Examiner in Tamil to the University.** * * * Himarjunai is written in excellent Tamil and I congratulate you upon it.

***

**M. R. Ry. T. Chelvakesavaroya Mudaliar Avl., M. A., Lecturer in Tamil, Pachayappa's College.** * * * It can be placed safely in the hands of our sisters and daughters.

***

**M. R. Ry. S. Anavaratavinayakam Pillai Avl., M. A., L. T, Lecturer in Tamil, Christian College.** * * * Judging from the elegant and popular style in which it is presented one must regard it as a useful addition to Tamil Literature.

**PRICE ANNAS 8**

**The General Supplies Co. Mylapore, Madras**

# சிறந்த தமிழ் நாவல்கள்

**ஒரு ரூபாய் விலையுள்ள புத்தகங்கள்**

**ஸ்ரீமத் பாகவத வினா விடை 1-ம் பாகம்**
**ஷை ,, 2-ம் ,,**
**மோகனாங்கி** (3-ம்பதிப்பு)
**ஸ்திரீரத்னம்**
மதனகாந்தி
வசீகரி [3-ம்பாகங்கள்
ஜீவவர்க்க போதினி, 2-ம்,
பழமொழித் தொகுதி
மதிகெட்ட மனைவி [த்திரம்
விக்டோரியாமஹாராணி, சரி
கனகவல்லி
பத்மாவதி சரித்திரம்,
சுசீலா
சந்திரோதயம்
வெனீஸ் வர்த்தகன்
பிருதிவி ராஜன் [கள்
தக்காணத்து பூர்வகாலக்கதை
பிரபோதசந்திரோதயவசனம்
பிரபுலிங்கலீலை வசனம்
தாயுமானவர் பாடல் [களும்
ஞானத்திரட்டு, 1, 2-பாகங்
புதிய ஜப்பான்
சீதாராம்
திருவாசகம்
பட்டணத்தார் பாடல்
ஸ்ரீ சங்கர விஜயம்
காதம்பரி 1-ம் பாகம்
குணபூஷணி
துர்க்கேச நந்தினி
மரகதமணி
அமலாதித்யன்
மனோரஞ்சிதம்

**12 அணா விலையுள்ள புத்தகங்கள்**

**ஸ்ரீ மஹாபாரத வினா விடை**
ஷை 1-ம் பாகம் } மஹாபாரதம்18பர்வங்களும்
ஷை 2-ம் ,,
ஷை 3-ம் ,,
திக்கற்ற இருகுழந்தைகள்
**கமலலோசனி,** (ஒருதுப்பறியும் நாவல்)
இராஜாம்பாள் ,,
சந்திரகாந்தா ,,
மோஹனசுந்தரம் ,,
கண்ணகி
தனபாலன், 1-ம்பாகம்: ஷை 2-ம பாகம்
லீலா அல்லது மங்கைபுர மாணிக்கம்
அயாஷா, 1-ம் பாகம்: ஷை 2-ம் பாகம்
நளோபாக்யானம்
டெல்லி இம்பீரியல் தர்பார்
பானுமதி
சத்தியவல்லி
குமாரஸம்பவம்
சுந்தரன்
ஆங்கில சிரோமணிகள்
கன்னியின் முத்தம், 1-ம் பாகம்: ஷை 2-ம் பாகம்
சுந்தரி மனோஹரன்
ஹனுமான்ஸிங்
பிரேமகலாவதீயம்
அழகம்மாள் சரித்திரம்
ஐவன்ஹோ
பத்மரேகை
ஞானகாந்தி

**ஜனரல் ஸப்ளைஸ் கம்பெனி, மயிலாப்பூர், மதராஸ்.**

## 12 அணு விலையுள்ள புத்தகங்கள்

மகபதி
லீலாவதி ஸுலோசனை
சத்ருஜித்
இரண்டு நண்பர்கள்
மனோஹரன்
ரத்னவளி
காதலர் கண்கள்
என்னிஷ்டப்படியே
ஞானகிபரிணயம்
பதிவிரதைகள் சரித்திரம்
பிரேமகாந்தன்
சச்சிதானந்தசிவம்
ஸாரஸநேத்ரி
அம்பாலிகை
காதம்பரி, 2-ம் பாகம்
கிருஷ்ணவேணி
பத்மலோசனி
இந்திரஜித்தன்
அகஸ்தியர் தேவாரத்திரட்டு (மூலமும் உரையும்)
தேசபக்தர்கள் சரித்திரம்

## 4 அணு விலையுள்ள புஸ்தகங்கள்

ஆரியமத உபாக்யானம், 5-ம் பதிப்பு (முதல் பாகம்)
பிரபாவதி
சகுந்தலை, படங்களுடன்
கம்பனும் கலைமகளும்
இரமணீயம்
சாரதானந்தர்
ஔவையார் சரித்திரம்
பிரகலாத சரித்திரம்

## 8 அணு வி... புத்த...

ஹிமாம்ஜு...
இயற்கை
பூதத்வ
நீலி வசீக...
திரௌபதி
சந்திரசேகரன்
இளமையும் ஒழுக்கமும்
பங்கஜாக்ஷி
காமாக்ஷி
மாண்டவன் மீண்டமாயம்
வாஸந்திகை
சபலை
ராஜம் ஐயர் சரிதை
வத்ஸலா
சாரதாம்பாள்
ஜகஜ்ஜோதி
மாமிகொலுவிருக்கை
கோமளம் குமரியானது
நன்றியறியா மகன்
அமிருதவல்லி

## 10 அணு விலையுள்ள புத்தகங்கள்

ரோஜா
சற்குணசந்திரன்
கமலினி
புருஷோத்தமன்
மாலிகா பூஷணி
பன்னிரு நீதிக்கதைகள்
விஜயலக்ஷ்மி
அற்புத ராமாயணம்
பத்மநாபன்
ராமாயண விஞவிட...
குணசீலன்

ஜனரல் பப்ளிஷிங் கம்பெனி, மயிலாப்பூர், சென்னை